# TNPSC தேர்வுப் பெட்டகம்


## நடப்பு நிகழ்வுகள் - டிசம்பர் 2022


www.tnpscthervupettagam.com











SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 11
தமிழ்நாடு செய்திகள் ........ 16
மாற்றுத் திறனாளிகளுக்கான வழித்தடம் ........ 16
சுகாதார நிறுவனங்களின் தரவரிசைகள் ........ 17
தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாடு 2022 ........ 17
தமிழ்நாடு பருவநிலை மாற்றத் திட்டப் பணி ........ 17
சுகாதார மையங்களின் விரிவாக்கம் ........ 18
வானவில் மன்றம் ........ 18
மதுரை அமர்வு நீதிமன்றத்தின் முதல் பெண் சோப்தார் ........ 19
பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் ........ 20
தேவாங்கு மற்றும் கடல்பசு வளங்காப்பு மையங்கள் ........ 20
தமிழகப் பொருளாதாரத்தின் தரவு ........ 21
TrackKD செயலி ........ 21
தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் ........ 22
மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சிலை ........ 22
இந்தியா டுடே இதழின் சிறந்த மாநிலங்களுக்கானப் பட்டியல் ........ 22
நூலகங்களின் நண்பர்கள் திட்டம் ........ 23
நம்ம பள்ளி அறக்கட்டளை ........ 24
உலக ஆணழகன் பட்டம் 2022 ........ 25
கிசான் ஆளில்லா விமானங்களுக்கு வான்வழிப் போக்குவரத்திற்கான தலைமை இயக்குநரகத்தின் ஒப்புதல் ........ 25
குப்பைகள் இல்லாத மன்னார் வளைகுடா ........ 26
நீலகிரி வரையாடு வளங்காப்புத் திட்டம் ........ 27
தேசியச் செய்திகள் ........ 28
'போர்க்களச் சீருடைக்கான' அறிவுசார் சொத்து உரிமை ........ 28
குடியரசு தின விழா சிறப்பு விருந்தினர் ........ 28
மூன்றாவது ஆய்வுக் கப்பல் 'இக்சாக்' ........ 29
பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் குறைவு ........ 30
ஒட்டும் வகையிலான முதல் பற்று அட்டை ........ 31
MGNREGA திட்டத்திற்கான மறுஆய்வுக் குழு ........ 31
7வது உலகத் தொழில்நுட்ப உச்சிமாநாடு ........ 32
கார்பன் பற்றுகைப் பயன்பாடு மற்றும் சேமிப்புக் கொள்கை கட்டமைப்பு - நிதி ஆயோக் ........ 32
சமன்வே பயிற்சி - 2022 ........ 33
இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வரலாறு திட்டம் ........ 33
தேர்தல் பத்திரங்களின் விற்பனை குறித்த தரவு ........ 34
கிரித் பரிக் குழு ........ 35

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்திய அரசின் தலைமை ... 36
அனைத்து மகளிர் நீதிமன்ற அமர்வு ... 37
மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் Mk-III படைப் பிரிவு ... 37
உள்ளடக்க மாநாடு ... 38
பழங்குடியினர் குளிர்கால விழா ... 38
இந்தியக் கடற்படைக்கான குடியரசுத் தலைவரின் நிலையான நிறம் மற்றும் முத்திரை ... 39
அரசியலமைப்பு - ஒரு பெண்ணிய ஆவணம் ... 39
சங்கம் - கடற்படைப் பயிற்சி ... 40
அச்சகம் மற்றும் எண்ணிம ஊடகச் சங்கம் ... 40
தேசியக் கட்சி அந்தஸ்து - ஆம் ஆத்மி கட்சி ... 41
வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதா 2021 ... 42
6வது வந்தே பாரத் இரயில் ... 43
முப்பரிமாண முறையில் உயிரி அச்சிடல் முறைக்கான சிறப்பு மையம் ... 43
21 பசுந்தட விமான நிலையங்களுக்கு ஒப்புதல் ... 44
இந்தியாவில் தினசரி ஊதியம் ... 44
PM VIKAS திட்டம் ... 45
BOLD திட்டம் ... 46
நமாமி கங்கைத் திட்டத்திற்குக் கிடைத்த அங்கீகாரம் ... 47
20 அணுசக்தி நிலையங்கள் ... 47
முதல் கார்பன்-நடுநிலை ஆற்றல் பரிமாற்றம் ... 48
பெருந்திரள் அளவில் உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது ஃப்ளெக்ஸ் எரிபொருளில் இயங்கும் மகிழுந்து ... 48
உலக சுகாதார அமைப்பின் உலகப் பாரம்பரிய மருந்துகள் மையம் ... 49
சூர்ய கிரண் XVI பயிற்சி ... 49
PathoDetect சோதனைக் கருவி ... 50
எண்ணிம இந்தியா விருதுகள் 2022 ... 50
A தரநிலைப் பெற்ற பல்கலைக்கழகம் ... 51
வாத்நகர் நகரம் ... 52
நகர்ப்புறம் 20 நிகழ்ச்சி ... 52
மாநிலங்களவையின் விதிமுறைப் புத்தகத்தின் 267வது விதி ... 53
குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பினை செயல்படுத்துதல் ... 53
முதல் பசுமை எஃகு தயாரிப்பு ... 54
மாநிலங்களவைத் துணைத் தலைவர் குழு - P.T. உஷா ... 54
தினை வகைகள் ஊக்குவிப்பு திட்டம் ... 54
அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் புதியத் தலைவர் ... 55
முதல் காலாட்படை அருங்காட்சியகம் ... 56
மிக நீளமான 'escape' சுரங்கப் பாதை - T49 ... 56
AIM-UNDP Youth Co:Lab முன்னெடுப்பு ... 56
சிங்கம் @ 47: அம்ருத்காலுக்கான தொலைநோக்குத் திட்டம் ... 57

நாசி வழி செலுத்தும் கோவிட் தடுப்பூசி ..... 58
PMGKAY மற்றும் NFSA திட்ட இணைப்பு ..... 58
'நேரடி மற்றும் செயல்பாடு சார்ந்த அணுகல்' குறித்த தணிக்கை ..... 59
ஆக்கிரமிக்கப்பட்ட மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் ..... 59
வாணி திட்டம் ..... 60
தேசிய கைபேசிவழி கண்காணிப்பு அமைப்பு ..... 60
AVGC மேம்பாட்டுப் பணிக்குழுவின் அறிக்கை ..... 61
'PRASAD' திட்டம் ..... 62
இந்தியாவில் பதிவான சாலை விபத்துகள் – 2021 ..... 62
மின்னணு விளையாட்டுகளுக்கு அங்கீகாரம் ..... 63
அம்ரித் பாரத் இரயில் நிலையத் திட்டம் ..... 64
**சர்வதேசச் செய்திகள் ..... 65**
'நசீம் அல் பஹ்ர்' பயிற்சி ..... 65
அக்னி வாரியர் பயிற்சி ..... 65
வாசெனார் அமைப்பின் தலைமை ..... 66
சர்வதேச வரி ஒத்துழைப்புக் கட்டமைப்பு ..... 66
மத்திய ஆசிய நாடுகளுடன் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரின் சந்திப்பு ..... 66
ஈரானின் அறநெறிக் காவல்துறை ..... 67
இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் அமைச்சர்கள் மாநாடு ..... 68
சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணையம் ..... 68
சீன-இந்தியப் பெருங்கடல் விளிம்புப் பகுதி நாடுகள் மன்றம் ..... 69
உலக செயற்கை நுண்ணறிவு கூட்டாண்மை அமைப்பின் தலைமை ..... 70
ஆப்பிரிக்காவில் மலேரியா எதிர்ப்பு மருந்தின் எதிர்ப்புத் திறனை எதிர் கொள்ள செய்வதற்கான புதிய உத்தி ..... 70
ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாடு 2022 ..... 71
நியூசிலாந்தின் புகையிலைச் சட்டம் ..... 71
Group of Friends ..... 72
வங்காளதேசக் கடற்படையின் முதல் சர்வதேச கடற்படை ஆய்வு ..... 73
ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் அந்தஸ்து ..... 73
ஐரோப்பிய ஒன்றியத்தில் கொசோவோ ..... 74
ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களின் நிலை தொடர்பான ஆணையம் ..... 75
விண்வெளி ஆய்வுகளுக்கான ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கை ..... 75
சிங்கப்பூர் பிரகடனம் ..... 76
மியான்மர் மீதான முதல் தீர்மானம் ..... 76
புதிய பாலின அங்கீகார வழங்கீட்டு மசோதா ..... 77
பாம்ப் புயல் - குளிர்காலப் புயல் ..... 77
மாலத்தீவு முன்னாள் அதிபருக்கு சிறை ..... 78
**பொருளாதாரச் செய்திகள் ..... 79**
ஏர் இந்தியா நிறுவனத்துடன் விஸ்தாரா நிறுவனம் இணைப்பு ..... 79

இந்தியாவின் முதல் தனியார் வேளாண் மண்டி ..... 79
இருப்பிடக் குளிரூட்டலில் முதலீட்டு வாய்ப்புகள் ..... 80
இந்திய ரிசர்வ் வங்கியின் சில்லறை எண்ணிம நாணயம் ..... 80
இந்தியாவின் முதல் செயல் சாரா வரிச் சேமிப்பு நிதி ..... 81
புதிய நிஃப்டி பாரத் பத்திரக் குறியீடு ..... 81
100 பில்லியன் டாலர் பண வரவு ..... 81
இந்தியாவின் முதல் தங்க நாணய தானியங்கு வழங்கீட்டு எந்திரம் ..... 82
8வது பெரிய விளம்பரச் சந்தை ..... 82
இந்திய நாட்டிற்கான எண்ணெய் வழங்கீட்டில் முன்னணியில் உள்ள நாடு ..... 83
உத்தரவாதப் பத்திரக் காப்பீடு ..... 83
விவசாயிகளின் வருமானம் ..... 84
2022 ஆம் ஆண்டில் 32 டிரில்லியன் டாலர் வர்த்தகம் ..... 85
பெண்களின் கையெழுத்துடன் பண நோட்டுகள் ..... 85
எரிவாயு விலைக் குறியீடு ..... 86
பொருளாதார மற்றும் வணிக ஆராய்ச்சி மையத்தின் இந்தியப் பொருளாதாரம் குறித்த கணிப்பு ..... 86
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 87
PSLV-C54 ஏவுகலம் ..... 87
இந்தியாவின் முதல் தனியார் துறை விண்வெளி வாகன ஏவுதளம் ..... 88
குரங்கம்மை நோய்க்குப் புதிய பெயர் ..... 89
பாரத் பயோடெக் நிறுவனத்தின் நாசி வழி உட்செலுத்தக் கூடிய கோவிட் தடுப்பு மருந்து ..... 90
முதல் வகை நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தாமதப்படுத்தும் முதல் மருந்து ..... 90
செயற்கை ஒளிச்சேர்க்கை முறை ..... 91
ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் விமான இயந்திரம் ..... 91
நீராவி மூலம் இயக்கப்படும் விண்கலம் ..... 92
எலாலைட் மற்றும் எல்கின்ஸ்டன்டோனைட் ..... 93
அண்டவெளி புழுத்துளை ..... 94
ரேடாருக்குப் புலப்படாத அணுசக்தி குண்டுவீச்சு விமானம் ..... 94
கடல் அலை ஆற்றல் மாற்றி ..... 95
ஐஎன்எஸ் மோர்முகோவா ..... 95
ஐஎன்எஸ் அர்னாலா ..... 96
'வாகீர்' ..... 97
வைனு பாப்பு தொலைநோக்கி ..... 97
'பிரலய்' உந்துவிசை ஏவுகணை ..... 98
BF.7 ..... 99
சந்திரனுக்கான வர்த்தகரீதியான முதல் தரையிறங்கு வாகனம் ..... 100
ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி "உலகின் முதல்" அறுவைசிகிச்சை ..... 100
அணுக்கரு இணைவில் திருப்புமுனை ..... 101
முதல் உலகளாவிய நீர் ஆய்வு செயற்கைக்கோள் ..... 101
செயற்கை இதயம் ..... 102

சுற்றுச்சூழல் செய்திகள் ........ 103
மௌனா லோவா எரிமலை ........ 103
புதிய கரும்பவளப்பாறை இனங்கள் ........ 103
ஆபத்து நிலையில் உள்ள உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியல் ........ 104
நேட்டோவெனேட்டர் பாளிடோண்ட்டஸ் ........ 104
பறவைகள் கணக்கெடுப்பு - சத்தீஸ்கர் ........ 105
கொரோனிவியா வேளாண் கூட்டுப் பணி ........ 106
துங்கரேஷ்வர் வனவிலங்கு சரணாலயம் ........ 107
இயற்கைக்கான நிதி நிலை அறிக்கை 2022 ........ 107
மெலனோக்லமிஸ் பெங்காலென்சிஸ் ........ 109
உலகளவில் கரிசல் மண்ணின் நிலை ........ 109
தெற்கு வெள்ளை காண்டாமிருகங்களின் நிலை ........ 110
அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் பட்டியல் ........ 111
உயிரியல் பன்முகத் தன்மை குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு - COP 15 ........ 112
குன்மிங்-மாண்ட்ரீயல் உலகப் பல்லுயிர் கட்டமைப்பு ........ 113
உறைந்த நிலையில் பவளப் பாறைகள் ........ 113
கார்பன் எல்லை சீரமைப்புச் செயல்முறை ........ 114
"காலநிலை மாற்றம் மற்றும் நிலம்" பற்றிய அறிக்கை ........ 115
துருவக் கரடிகள் எண்ணிக்கை சரிவு ........ 116
மாசுபட்ட நதிகள் பற்றிய தரவு ........ 116
அண்டார்டிகாவின் பேரரசப் பெங்குயின் ........ 117
வரித்தலை வாத்து ........ 117
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 118
GEURS - கணக்கெடுப்பு ........ 118
உலக முதன்மை நகரங்கள் குறியீடு ........ 119
பழங்குடியினர் மேம்பாட்டு அறிக்கை 2022 ........ 120
உலக நீர் வளங்களின் நிலை 2021 ........ 120
உலக வங்கியின் இடம்பெயர்வு மற்றும் மேம்பாட்டு ஆய்வு அறிக்கை ........ 121
சமூக மோதல்கள் குறியீடு ........ 122
உலக விமானப் பாதுகாப்புத் தரவரிசை 2022 ........ 123
உலகின் அதிகாரம் மிக்க 100 பெண்கள் பட்டியல் ........ 124
ஆர்டன் கேபிடல் நிறுவனத்தின் கடவுச் சீட்டுக் குறியீடு 2022 ........ 125
EIU நிறுவனத்தின் வாழ்க்கைச் செலவினக் குறியீடு 2022 ........ 125
உலக ஊதிய அறிக்கை 2022-2023 ........ 126
புதிய எரிசக்தி கண்ணோட்ட அறிக்கை 2022 ........ 127
இந்தியச் சமத்துவமின்மை அறிக்கை 2022 - மின்னிலக்கத் தலைமுறை இடைவெளி ........ 128
100 முன்னணிப் பாதுகாப்பு நிறுவனங்களின் பட்டியல் ........ 129
காயங்கள் மற்றும் வன்முறையைத் தடுத்தல் : ஒரு கண்ணோட்டம் ........ 129
Who is Financing Fossil Fuel Expansion in Africa? - அறிக்கை ........ 131

கட்டாய இடப்பெயர்வு பற்றிய ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் அறிக்கை....131
மாற்றுத் திறனாளிகளுக்கான சுகாதார சம பங்கு குறித்த உலக அறிக்கை....132
WASH பிரிவுகள் பற்றிய உலக சுகாதாரம் மற்றும் குடிநீர் பற்றியப் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு அறிக்கை....133
உலக மலேரியா அறிக்கை 2022....134
உலக உணவுப் பாதுகாப்புக் குறியீடு (GFSI) – 2022....135
சமூக முன்னேற்றக் குறியீடு....136
நிலக்கரி 2022: 2025 ஆம் ஆண்டிற்கான பகுப்பாய்வு மற்றும் முன்னறிவிப்பு....136
ஹுருண் நிறுவனத்தின் உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் தரவரிசை....137
சமூக முன்னேற்றக் குறியீடு 2022....138
மறுசீரமைப்பு பாரோமீட்டர் அறிக்கை 2022....139
சர்வதேச கடன் அறிக்கை 2022....139
வீபாக்ஸ் இந்தியா திறன் அறிக்கை 2023....140
மாநிலச் செய்திகள்....141
இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த ஏவுகல சோதனை மையம்....141
அனைத்து மாவட்டங்களிலும் 5ஜி சேவை....141
முதல் மகளிர் காவல்துறை ஆணையர்....142
சூரியசக்தி ஆலைக்கான சில்லறை விலை நகராட்சி பசுமைப் பத்திரம்....142
23வது இருவாட்சிப் பறவை திருவிழா....142
ஒரு முறைமைக்கென குறிப்பிட்ட அமைப்பிற்கு உட்படாத வகையிலான பயணச் சீட்டு வழங்கீட்டு முறை அறிமுகம்....143
குஜராத் வாக்குச் சாவடிகள்....143
ஆளில்லா விமானங்களுக்கான முதல் நிலையம்....144
திவ்யாங் துறை....144
இந்தியாவின் முதல் செயற்கை ஒளியூட்டல் அற்ற பகுதி....145
இமாச்சலப் பிரதேசத்தின் புதிய முதல்வர்....145
கொச்சி-முசிரிஸ் மாபெரும் கண்காட்சி....146
குஜராத்தின் புதிய முதல்வர்....146
செய்தித்தாள்களின் எழுத்து வடிவத்தினை மாற்றுதல் - மணிப்பூர்....146
அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம்....147
சிறந்த காசநோய்க் கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கான விருது....147
இந்தியாவின் முதல் கார்பன் நடுநிலைப் பண்ணை....147
மிகப்பெரிய வணிக வகுப்பு அதிவேக விமான முனையம்....147
புவிசார் குறியீடு பெற்ற புதிய கேரளப் பொருட்கள்....148
நுபி லால் தினம்....148
வடகிழக்கு சபையின் 50வது ஆண்டு நிறைவு கொண்டாட்டம்....148
லோசர் திருவிழா....149
சிறை உணவுகளுக்கு 5 நட்சத்திர மதிப்பீடு....149
தனு யாத்ரா....150
அனைத்து வார்டுகளிலும் நூலகத்தினைக் கொண்ட முதல் தொகுதி....150

பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ..... 151
அகாடமி புரஸ்கார் விருது பெற்ற நபர்கள் ..... 151
தேசிய கோபால் ரத்னா விருது ..... 151
பிரசார் பாரதி நிறுவனத்தின் வெள்ளி விழா ..... 152
கட்டாக் பலியத்ரா - கின்னஸ் சாதனை ..... 152
ஆஸ்திரேலியாவின் "STEM துறைகளின் சூப்பர் ஸ்டார்கள்" ..... 153
புவி அழகிப் பட்டம் 2022 ..... 153
இந்தியாவின் 100 முன்னணி பணக்காரர்கள் பட்டியல் 2022 ..... 154
சர்வதேச ஹூசோபோன் திருவிழா ..... 154
கமலாதேவி சட்டோபாத்யாய் NIF புத்தகப் பரிசு 2022 ..... 154
தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையத்தின் தலைவர் ..... 155
G20 அமைப்பின் முதல் ஷெர்பா கூட்டம் ..... 155
பேங்கர்ஸ் இதழின் ஆண்டின் சிறந்த வங்கியாளர் விருது ..... 156
உலகின் முதல் மாற்றுத் திறனாளி விண்வெளி வீரர் ..... 156
முன்னாள் மத்திய அமைச்சர் யோகிந்தர் K. அலக் ..... 157
City of Joy கவிதை நூலின் ஆசிரியர் டொமினிக் லேபியர் ..... 157
TIME இதழின் 2022 ஆம் ஆண்டின் சிறந்த நபர் ..... 158
BBC நிறுவனத்தின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 பெண்களின் பட்டியல் ..... 159
எர்த்ஷாட் பரிசு 2022 ..... 159
SHE STEM 2022 ..... 160
உள்ளூர் ஏற்பு சாம்பியன்கள் விருதுகள் ..... 160
நுண்ணுயிர் எதிர்ப்பு தொடர்பான 3வது உலக உயர்மட்ட அமைச்சர் மாநாடு ..... 160
உலக இரைப்பைக் குடலியல் அமைப்பின் மாஸ்டர்ஸ் விருது 2022 ..... 161
இந்திய இணைய ஆளுமை மன்றம் (IGF) 2022 ..... 161
7வது இந்திய நீர்வளப் பாதிப்பு உச்சி மாநாடு ..... 161
தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருது ..... 162
ஆண்டின் சிறந்த பாதுகாப்பு செயல்திறன் கொண்ட நிறுவனம் ..... 162
2022 ஆம் ஆண்டின் சிறந்த உலக தடகள வீரர் ..... 163
டியர் மூன் ஆய்வுப் பணி ..... 163
அமெரிக்க அதிபர் வாழ்நாள் சாதனையாளர் விருது ..... 164
ஜம்னாலால் பஜாஜ் விருது 2022 ..... 164
திருமதிக்கான உலக அழகிப் பட்டம் 2022 ..... 165
H.R. கேசவ மூர்த்தி ..... 165
சாகித்ய அகாடமி விருது 2022 ..... 166
சாகித்ய அகாடமி சிறந்த மொழிப்பெயர்ப்பு விருது ..... 167
ரவீந்திரநாத் தாகூர் இலக்கியப் பரிசு ..... 167
ASEAN-இந்திய நாடுகளின் 3வது கடைமட்டப் புத்தாக்க மன்றம் ..... 167
VinFuture சிறப்புப் பரிசு ..... 167
முதல் ரோகிணி நய்யார் பரிசு ..... 168

விளையாட்டுச் செய்திகள் ........ 168
வருடாந்திர சென்னை-கொழும்பு துடுப்புப் படகுப் போட்டி ........ 168
இளையோர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி ........ 169
டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் 500 ரன்கள் ........ 169
அதிவேக இரட்டை சதம் ........ 170
65வது தேசியத் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டிகள் ........ 170
ICC அமைப்பினுடைய மாதத்தின் சிறந்த வீரர் பட்டம் ........ 171
அரையிறுதியில் மொராக்கோ அணி ........ 171
FINA உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டி 2022 ........ 171
FIFA 2022 - சிறப்புச் செய்திகள் ........ 172
FIFA உலகக் கோப்பைப் போட்டி – 2022 ........ 174
பார்வையற்றோருக்கான 3வது டி20 உலகக் கோப்பை போட்டி 2022 ........ 175
மகளிருக்கான FIH தேசியக் கோப்பை போட்டி 2022 ........ 175
9வது புரோ கபடி லீக் பட்டம் ........ 175
IPL – டெகாகார்ன் ........ 176
அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீராங்கனைகளின் பட்டியல் 2022 ........ 176
FIFA உலகத் தரவரிசை 2022 ........ 177
ICC ஆடவர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் தரவரிசை 2022 ........ 177
முக்கிய தினங்கள் ........ 178
செந்நிறக் கோள் தினம் - நவம்பர் 28 ........ 178
சர்வதேச ஜாகுவார் தினம் - நவம்பர் 29 ........ 178
எல்லைப் பாதுகாப்புப் படையின் 58வது எழுச்சி தினம் - டிசம்பர் 01 ........ 179
உலக எய்ட்ஸ் தினம் - டிசம்பர் 01 ........ 179
தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினம் - டிசம்பர் 02 ........ 180
அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 02 ........ 180
அசாம் தினம் - டிசம்பர் 02 ........ 180
சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் - டிசம்பர் 03 ........ 181
இந்தியக் கடற்படை தினம் - டிசம்பர் 04 ........ 181
சர்வதேச சிவிங்கிப் புலிகள் தினம் - டிசம்பர் 04 ........ 182
சர்வதேச வங்கி தினம் - டிசம்பர் 04 ........ 182
உலக மண் தினம் - டிசம்பர் 05 ........ 183
சர்வதேசப் பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான தன்னார்வலர் தினம் - டிசம்பர் 05 ........ 183
தேசிய ஆயுதப்படை கொடி தினம் - டிசம்பர் 07 ........ 184
சர்வதேச பொது விமானப் போக்குவரத்து தினம் - டிசம்பர் 07 ........ 184
சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் - டிசம்பர் 09 ........ 185
இனப் படுகொலை குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவு மற்றும் கண்ணியத்தினைப் போற்றுதல் மற்றும் இந்தக் குற்றத்தைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 09 ........ 185
மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10 ........ 186
சர்வதேச மலை தினம் - டிசம்பர் 11 ........ 186

ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதிய தினம் - டிசம்பர் 11 .......... 187
சர்வதேசப் பொது சுகாதார வழங்கீட்டுத் தினம் - டிசம்பர் 12 .......... 188
சர்வதேச நடுநிலைமை தினம் - டிசம்பர் 12 .......... 188
தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் - டிசம்பர் 14 .......... 189
விஜய் திவாஸ் - டிசம்பர் 16 .......... 189
பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 17 .......... 190
தேசிய சிறுபான்மையினர் உரிமைகள் தினம் – டிசம்பர் 18 .......... 190
சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18 .......... 190
கோவா விடுதலை தினம் - டிசம்பர் 19 .......... 191
சர்வதேச மனித ஒற்றுமை தினம் - டிசம்பர் 20 .......... 191
ஐக்கிய நாடுகள் சபையின் அரபு மொழி தினம் – டிசம்பர் 18 .......... 191
நல்லாட்சி வாரம் 2022 .......... 192
தேசிய கணித தினம் – டிசம்பர் 22 .......... 192
இந்திய தேசிய விவசாயிகள் தினம் - டிசம்பர் 23 .......... 193
தேசிய நுகர்வோர் உரிமைகள் தினம் - டிசம்பர் 24 .......... 194
நல்லாட்சி தினம் - டிசம்பர் 25 .......... 195
வீர் பால் திவாஸ் - டிசம்பர் 26 .......... 195
சர்வதேச தொற்றுநோய் தயார்நிலை தினம் - டிசம்பர் 27 .......... 195
இதரச் செய்திகள் .......... 196
காட்டு எருதுகள் - உணவு விலங்கு .......... 196
சமஸ்கிருத மொழியில் வெளியாகும் முதல் அறிவியல் ஆவணப்படம் .......... 196
ரஷ்யாவில் ஜாம்பி வைரஸ் .......... 197
2022 ஆம் ஆண்டின் சிறந்த வார்த்தை .......... 198
பிரஞ்சு ரொட்டிகள் .......... 198
அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்குப் பெயரிடுதல் .......... 199
மிக நீளமான இரட்டை அடுக்கு மேம்பாலம் .......... 200
மாண்டஸ் புயல் .......... 200
ஆக்ஸ்போர்டு அகராதியின் 2022 ஆம் ஆண்டின் சிறந்த வார்த்தை .......... 201
கூகுள் நிறுவனத்தின் "2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தேடல்கள்" அறிக்கை .......... 201
பன்சிலால்பேட்டை படிக்கிணறு .......... 201
IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் இமயமலை மருத்துவத் தாவரங்கள் .......... 202
அங்கோர் வாட் கோவிலின் மறுசீரமைப்புப் பணி .......... 203
புதிய புவிசார் குறியீடுகள் .......... 203
இலக்கணத்தின் மிகப் பெரிய புதிர் .......... 204
அறிவியல் கட்டுரைகளின் வெளியீடு .......... 204
ஜாய்நகரின் மோவா தயாரிப்பு (மேற்கு வங்கம்) .......... 205
உலகின் சிறந்த உணவு வகைகளின் பட்டியல் .......... 206
வேலை செய்வதற்கான சிறந்தப் பணியிடம் .......... 206

**காசநோய் ஆராய்ச்சி நிதி வழங்கீட்டுப் போக்குகள் 2005-2021 ........................................................................207**

# TNPSC துளிகள்

- இராணுவப் படைத்தலைவர் தளபதி மனோஜ் பாண்டேவிற்கு, பாரீஸ் நகரில் உள்ள லெஸ் இன்வாலிடிஸ் என்ற இடத்தில் தேசப் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படும் ராணுவ மரியாதை வழங்கப்பட்டது.
- இந்திய-மலேசியக் கூட்டு இராணுவப் பயிற்சியான "ஹரிமௌ சக்தி-2022" என்ற பயிற்சி மலேசியாவில் தொடங்கப்பட்டது.
- இந்திய இராணுவம் மற்றும் ஆஸ்திரேலிய இராணுவம் இடையேயான "AUSTRA HIND 22" எனப்படும் இருதரப்புப் பயிற்சியானது ராஜஸ்தானில் தொடங்கியது.
    - ஆஸ்ட்ரா ஹிண்ட் தொடரின் முதல் பயிற்சியான இதில் இரு நாட்டுப் படைகளின் அனைத்து ஆயுதப் பிரிவுகள் மற்றும் படைகள் பங்கேற்கின்றன.
- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் திட்ட முறைமையிலான இணையவழி பஞ்சாயத்து திட்டங்களானது, (eGramSwaraj மற்றும் AuditOnline) மின் ஆளுமைக்கான தேசிய விருதுகளின் "எண்ணிம மாற்றத்திற்கான அரசு மறு-பொறியியல் செயல்முறையில் சிறந்து விளங்குதல்" என்ற பிரிவின் கீழ் தங்க விருதை வென்றுள்ளது.
- மத்தியக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள், இந்திய வரலாற்று ஆராய்ச்சி சபையால் தயாரித்து வெளியிடப்படும் 'India: The Mother of Democracy' என்ற புத்தகத்தை புதுடெல்லியில் வெளியிட்டார்.
- மகாராஷ்டிரா அணிக்காக விளையாடிய ருதுராஜ் கெய்க்வாட் ஒரு ஓவரில் 7 சிக்ஸர்களை அடித்து A கிரிக்கெட் பிரிவில் உலக சாதனையினைப் படைத்தார்.
- P.T. உஷா, இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முதல் பெண் தலைவராக பதவியேற்க உள்ளார்.
- 2020 ஆம் ஆண்டில் டோக்கியோவில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற அவனி லெகாரா, ஆண்டின் சிறந்த மாற்றுத் திறனாளி வீரராகவும், ஷ்ரே காத்யன் ஆண்டின் சிறப்பு விளையாட்டு வீரராகவும் அங்கீகரிக்கப் பட்டுள்ளனர்.
- போர்ச்சுகல் அணித் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, பிபா கால்பந்து உலகக் கோப்பைப் போட்டியின் ஐந்து வெவ்வேறுப் பதிப்புகளில் கோல் அடித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
    - FIFA உலகக் கோப்பைப் போட்டிகளின் வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றதன் மூலம் அவர் லியோனல் மெஸ்ஸியை விஞ்சியுள்ளார்.
- ஸ்பெயின் நாட்டினைச் சேர்ந்த கார்லோஸ் அல்கராஸ், இந்த ஆண்டு இறுதி ATP டென்னிஸ் போட்டிகளின் முன்னணி இளம் நபர் என்ற பெருமையினைப் பெற்றதோடு, இந்த சாதனையை எட்டிய முதல் இளைஞர் என்ற சாதனையினைப் படைத்துள்ளார்.
- முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ப்ரீத்தி சுதன், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராகப் பொறுப்பேற்று அதற்கான பதவிப் பிரமாணம் மற்றும் இரகசிய காப்புப் பிரமாணம் ஆகியவற்றினை ஏற்றார்.
    - அவருக்கு மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மனோஜ் சோனியால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் பட்டது.
- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்டெபானி ஃப்ராபார்ட், ஆடவர் உலகக் கோப்பைப் போட்டியின் நடுவராகப் பொறுப்பேற்க உள்ள முதல் பெண் என்று FIFA அறிவித்து உள்ளது.

- அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்ற குஜராத் டைட்டன்ஸ் மற்றும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகளுக்கு இடையேயான 2022 ஆம் ஆண்டு IPL இறுதிப் போட்டியில் 1,01,566 பேர் கலந்து கொண்டதன் மூலம் புதிய கின்னஸ் சாதனையானது படைக்கப் பட்டுள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தின் செனானி தாலுக்காவில் உள்ள மண்டலை என்ற கிராமத்தில் இந்தியாவின் மிகப்பெரிய யோகா மையமானது கட்டமைக்கப் பட்டுள்ளது.
- உலகக் கணினி கல்வியறிவு தினமானது ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 02 ஆம் தேதி அன்று கொண்டாடப்படுகிறது.
- ராஜஸ்தானின் பாலைவனப் பகுதிகளில் சுதர்சன் பிரஹார் எனப்படும் பயிற்சியினை இந்திய இராணுவம் மேற்கொண்டது.
- சௌராஷ்டிரா அணியானது ரஞ்சி ஒரு நாள் கோப்பைப் போட்டி என்றும் அழைக்கப் படும் ஹசாரே கிரிக்கெட் கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டியில் மகாராஷ்டிரா அணியினை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி விஜய் ஹசாரே கோப்பையை வென்றது.
- விக்ரம் சம்பத் என்பவர் எழுதிய 'Brave Hearts of Bharat, Vignettes from Indian History' என்ற தலைப்பிலான ஆண்கள் மற்றும் பெண்கள், மற்றும் அவர்களின் கட்டுக்கடங்காத சுதந்திரம் மற்றும் தைரிய உணர்வு ஆகியவற்றினை விளக்கும் 15 கதைகள் அடங்கியத் தொகுப்புப் புத்தகமானது டெல்லியில் வெளியிடப்பட்டது.
- எகிப்தின் கெய்ரோ நகரில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பின் பிரெசிடென்ஸ் கோப்பையை இந்தியத் துப்பாக்கி சுடுதல் வீரர் ருத்ராங்க்ஷ் பாட்டீல் வென்றார்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது ரெப்போ வட்டி விகிதத்தை தொடர்ந்து ஐந்தாவது முறையாக 35 அடிப்படைப் புள்ளிகள் (6.25%) அளவிற்கு உயர்த்தியுள்ளது.
- தீபிகா படுகோனே, FIFA போட்டிகளின் வரலாற்றில் முதல் முறையாக FIFA உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியின் போது உலகக் கோப்பையினை வெளியிட உள்ள முதல் உலகளாவிய நடிகராக உள்ளார்.
- பல்வேறு வகை மாற்றுத் திறனாளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர நிதியுதவியை 1,000 ரூபாயில் இருந்து 1,500 ரூபாயாக உயர்த்தி தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற மீராபாய் சானு, கொலம்பியாவில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு உலக பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- மும்பையைச் சேர்ந்த ஆதித்யா மிட்டல் ஸ்பெயினில் நடைபெற்று வரும் போட்டியில் வெற்றி பெற்று இந்தியாவின் 77வது செஸ் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தினைப் பெற்றார்.
- IDFC சொத்து மேலாண்மை நிறுவனமானது பந்தன் AMC என்றும், IDFC பரஸ்பர நிதி நிறுவனமானது பந்தன் பரஸ்பர நிதி என்றும் மறுபெயரிடப்பட உள்ளது.
- ராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டத்தில் தனது மூன்றாவது காற்றாலை-சூரியசக்தி கலப்பின மின் உற்பத்தி நிலையத்தைத் தொடங்கியதன் மூலம் உலகின் மிகப்பெரிய காற்றாலை-சூரியசக்தி கலப்பின எரிசக்தி உற்பத்தி நிறுவனமாக அதானி க்ரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனம் மாறியுள்ளது.
- பெருவில் நடந்த மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் உலகின் முன்னணி பேட்மிண்டன் வீரர்களுள் மூன்றாம் இடத்தில் உள்ள இந்தியாவைச் சேர்ந்த வீரரான சுகந்த் கடம் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

- இந்தப் போட்டியில் இந்திய அணி மொத்தம் 14 பதக்கங்களை (6 தங்கம், 1 வெள்ளி மற்றும் 7 வெண்கலம்) வென்றுள்ளது.

❖ உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது அதன் புதிய தலைமை அறிவியலாளராக டாக்டர் ஜெர்மி ஃபாரார் செயல்படுவார் என்று அறிவித்துள்ளது.

❖ ருவாண்டாவைச் சேர்ந்த முகன்சங்கா 2022 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் தேதியன்று நடைபெற்ற ஆடவர்களுக்கான கால்பந்துப் போட்டியில் நடுவராகப் பணியாற்றிய முதல் ஆப்பிரிக்கப் பெண் என்ற பெருமையினைப் பெற்றார்.

❖ இந்தியாவின் முதல் 5G சேவை மூலம் இயக்கப்படும் வாகன உற்பத்தி மையத்தினை நிறுவுவதற்காக டெக் மஹிந்திரா நிறுவனத்துடன் ஏர்டெல் நிறுவனம் கூட்டாண்மை ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.

❖ மகாராஷ்டிராவின் புனேவில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு 4வது டென்னிஸ் பிரீமியர் லீக் போட்டியில் மும்பை லியோன் ஆர்மி என்ற அணியினை வீழ்த்தி ஹைதராபாத் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி சாம்பியன் பட்டத்தினை வென்றுள்ளது.

❖ ஜம்மு மற்றும் காஷ்மீர், ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கு அடையாளக் குறியீடு உருவாக்கம் என்ற பிரிவில் முதல் பரிசினையும், தொலைத்தொடர்பு சேவை வழங்கீடு என்ற பிரிவில் 2வது பரிசினையும் பெற்றுள்ளது.

❖ அக்னி V எனப்படும் அணு ஆயுதத்தினை ஏந்திச் செல்லும் ஏவுகணையின் இரவு நேரச் சோதனைகளை இந்தியா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

- இது 5,000 கிமீ வரையிலான தொலைவில் உள்ள இலக்கை மிக அதிக துல்லியத்துடன் தாக்கும் திறன் கொண்டது.

❖ டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் N.சந்திரசேகரன், ஒட்டு மொத்த G20 நாடுகளின் வர்த்தகச் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் B20 இந்தியா என்ற பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ இந்தியாவின் முதல் ஆளில்லா விமானத் திறன் உருவாக்கம் மற்றும் பயிற்சிக்கான இணைய வழி கற்றல் தளமானது இந்தியாவின் ஆளில்லா விமான உற்பத்தி சார்ந்த புத்தொழில் நிறுவனமான கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் சென்னை உற்பத்தி மையத்தில் திறக்கப்பட்டது.

❖ 2022 ஆம் ஆண்டு உலக ஆயுர்வேத மாநாடு & ஆரோக்யா கண்காட்சியானது கோவாவில் நடத்தப் பட்டது.

❖ உணவு மற்றும் வேளாண் அமைப்பானது, சர்வதேச தினை ஆண்டிற்கான (2023) தொடக்க விழாவை இத்தாலியின் ரோம் நகரில் ஏற்பாடு செய்துள்ளது.

❖ போர்ச்சுகல் நாட்டின் லிஸ்பனில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு உலக நீரிழிவு மாநாட்டின் தொடக்க விழாவில் வங்காளதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா அவர்களை சர்வதேச நீரிழிவுக் கூட்டமைப்பினால் (IDF) "உலகளாவிய நீரிழிவு நோய்த் தூதராக" நியமித்துள்ளது.

❖ அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெறத் தகுதியுடைய அனைவரும் ஆதார் எண் வைத்திருப்பதற்கான ஒரு சான்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என தமிழக அரசு அறிவித்து உள்ளது.

❖ பாலிவுட் நடிகை சோனாக்சி சின்ஹா PETA இந்தியா அமைப்பின் 2022 ஆம் ஆண்டின் சிறந்த நபர் என்ற பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

- விலங்குகளை நன்முறையில் நடத்துவதற்கான மக்கள் சமுதாயம் (PETA) என்பது ஒரு அமெரிக்க விலங்கு உரிமைகள் சார்ந்த இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

- மத்திய இரயில்வேத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் குஜராத் மாநிலத்தின் வடோதராவில் உள்ள கதி சக்தி விஸ்வ வித்யாலயாவின் வேந்தராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
  - இவர் இந்த நிறுவனத்தின் முதல் வேந்தராகத் திகழ்வார்.
- "The Light We Carry: Overcoming In Uncertain Times" என்ற தலைப்பிலான நூலானது மிச்செல் ஒபாமா அவர்கள் எழுதிய ஒரு புத்தகமாகும்.
- உலக தடகளத் தரவுகளின் படி, டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, 2022 ஆம் ஆண்டில் தடகளத் துறையில் எழுதப் படும் வீரர்களைப் பற்றிய கட்டுரைகளில் அதிகம் குறிப்பிடப் பட்டவர் ஆவார்.
  - இவர் இப்பட்டியலில் முதல் இடத்தில் இருந்த ஜமைக்காவின் ஸ்பிரிண்ட் (மின்னல் வேக வீரர்) ஜாம்பவான் உசைன் போல்ட்டினை விஞ்சியுள்ளார்.
- உலக வர்த்தக அமைப்பின் அடுத்த அமைச்சர்கள் மாநாடானது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி நகரில் நடைபெற உள்ளது.
  - அடுத்த ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்ற அமைப்பின் 28வது பங்குதாரர்கள் மாநாட்டினையும் ஐக்கிய அரபு அமீரகம் நடத்த உள்ளது.
- ஜம்மு காஷ்மீரின் பந்திப்போரா மாவட்டத்தில் முதன்முறையாக பழங்குடியினர் குளிர் கால விழா நடத்தப் பட்டது.
  - இந்த விழாவில் காஷ்மீரிச் சமூகத்தைச் சேர்ந்த குஜ்ஜர்கள் மற்றும் பேக்கர்வால் இன மக்கள் முரசு (டிரம்) ஒலிக்கு ஏற்ப ஒன்றாக நடனமாடினர்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 2028-29 ஆம் ஆண்டிற்கான ஒரு நிரந்தரமற்ற உறுப்பினர் பதவிக்கான வேட்புமனுவை இந்தியா அறிவித்துள்ளது.
  - இந்தியாவின் 2021-2022 ஆம் ஆண்டு பதவிக் காலம் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகிறது.
- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதி அன்றைய நிலவரப்படி, புழக்கத்தில் உள்ள காகிதப் பணங்களின் (NiC) வருடாந்திர வளர்ச்சி அளவானது 7.98 சதவீதம் அதிகரித்து, ரூ.31.92 லட்சம் கோடியாக உள்ளது என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தெரிவித்துள்ளார்.
  - இது பணமதிப்பு இழப்பிற்கு முந்தையக் காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டு நவம்பர் 04 ஆம் நாளன்று பதிவான ரூ.17 லட்சம் கோடியிலிருந்து 72 சதவீதம் (மதிப்பு மற்றும் 45% அளவு அதிகரிப்பு) அதிகரித்துள்ளது.
- Viacom18 மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது பாரீஸ் நகரில் நடைபெற உள்ள 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான பிரத்தியேக ஊடக உரிமைகளையும், கேங்வான் 2024 ஆம் ஆண்டு குளிர்கால இளையோர் ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான ஒரு பிரத்தியேகம் சாராத உரிமைகளையும் வங்க தேசம், பூடான் இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்காகப் பெற்றுள்ளதாக சர்வதேச ஒலிம்பிக் குழுவானது, (IOC) அறிவித்து உள்ளது.
  - 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் ஆனது ஜூலை 26 ஆம் தேதியன்று தொடங்கி ஆகஸ்ட் 11 ஆம் தேதி வரை பாரீஸ் நகரில் பிரான்சு அரசினால் நடத்தப் பட உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஆஸ்கார் விருதிற்கு 'நாட்டு நாட்டு' என்ற பிரபலத் தெலுங்குப் படப் பாடல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

- இதன் மூலம், ஆஸ்கார் அகாடமி விருதிற்குப் பரிந்துரைக்கப்பட்ட முதல் இந்தியப் பாடலாக நாட்டு நாட்டு என்ற பாடல் ஆனது.

❖ உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஹேமந்த் குப்தா, புது டெல்லி சர்வதேச நடுவர் மையத்தின் (NDIAC) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- நிறுவனமயமாக்கப்பட்ட ஒரு நடுவண் மன்றத்தினைக் கட்டமைப்பதற்கான ஒரு சுயாதீனமான மற்றும் தன்னாட்சி கட்டமைப்பை உருவாக்குவதற்காக புது டெல்லி சர்வதேச நடுவர் மையமானது உருவாக்கப்பட்டது.

❖ பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவானது 2023 ஆம் ஆண்டிற்கான கொப்பரைத் தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு (MSP) தனது ஒப்புதலை அளித்துள்ளது.

- அரைக்கும் நிலையிலுள்ள கொப்பரைத் தேங்காயின் சராசரி தரத்திற்கான விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.10860/- ஆகவும், முழுக் கொப்பரை ஒரு குவிண்டாலுக்கு ரூ.11750/- ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

❖ உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சானியா மிர்சா, தேசிய பாதுகாப்பு அகாடமி (என்டிஏ) தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு, இந்தியாவின் முதல் முஸ்லீம் பெண் போர் விமானி ஆகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

❖ தேசிய புனல் மின்னாற்றல் நிறுவனம் இந்தியாவின் சிறந்த உலகளாவியப் போட்டித் தன்மை கொண்ட ஆற்றல் நிறுவனம் என நீர்மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தித் துறை பிரிவில் வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

❖ யூரோ 2022 பெண்கள் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டிகளில் அதிகப் புள்ளிகள் மற்றும் போட்டியின் சிறந்த வீராங்கனை என்ற பட்டம் பெற்ற பெத் மியாட் 2022 ஆம் ஆண்டிற்கான பிபிசி சிறந்த விளையாட்டு ஆளுமைக்கான விருதைப் பெற்றுள்ளார்.

❖ ஒடிசா மாநிலம் பூரியில் உள்ள மத்திய சமஸ்கிருதப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும் சாகித்யத் துறையின் தலைவருமான டாக்டர் உதய நாத் ஜா, 2022 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி பாஷா சம்மான் விருது பெறுநராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

❖ மலேசியாவில் நடைபெற்ற டாப் அரேனா இளையோர் சர்வதேச பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியின் 9 வயதிற்குட்பட்ட நபர்களுக்கானப் போட்டிப் பிரிவில் அருணாச்சலப் பிரதேசத்தின் கெட்டா சோரா வெற்றி பெற்றார்.

❖ இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) ஆனது அரசுத் துறையில் சிறந்த நடைமுறைகளுக்கான சிறந்த தரவுப் பாதுகாப்பு விருதைப் பெற்றுள்ளது.

❖ புது டெல்லியில் அமைந்துள்ள இந்தியத் தனித்துவ அடையாள ஆணையத்தின் தலைமையகமானது, தேசிய அளவிலான உயரிய பசுமைக் கட்டிட விருதான 2022 ஆம் ஆண்டிற்கான GRIHA எனப்படும் மகத்தான செயல்திறன் விருதினை வென்றுள்ளது.

❖ பாலிவுட் நடிகர் ஷாருக்கான் ஒரு பிரபல இங்கிலாந்து பத்திரிகையின் சர்வதேச அளவில் எல்லா காலங்களிலும் சிறந்து விளங்கும் 50 நடிகர்களின் பட்டியலில் இடம் பிடித்த ஒரே இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.


❖ 2021 ஆம் ஆண்டில் தங்கக் கட்டிகள் கொள்முதல் செய்யும் உலக நாடுகளின் மத்திய வங்கிகளில் தாய்லாந்தின் மத்திய வங்கிக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய கொள்முதல் நிறுவனமாக இந்திய ரிசர்வ் வங்கி (RBI) உருவாகியுள்ளது.

- முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் பிறந்தநாள் ஆனது குவாலியர் கௌரவ் திவாஸ் ஆக கொண்டாடப்பட உள்ளதாக மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌகான் அறிவித்துள்ளார்.
- போபாலில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு மகளிர் தேசியக் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் லோவ்லினா போர்கோஹைன் மற்றும் நிகத் ஜரீன் ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு FINA உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 100 மீட்டர் பிரஸ்ட் ஸ்ட்ரோக் பிரிவில் இந்திய நீச்சல் வீராங்கனை சாஹத் அரோரா ஒரு தேசியச் சாதனையினை (1 நிமிடம், 13.13 வினாடிகள்) படைத்துள்ளார்.
- இந்திய சைக்கிள் வீராங்கனை ஸ்வஸ்தி சிங் 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க 30வது ஏகலப்ய புரஸ்கார் விருதினைப் பெற்றுள்ளார்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் 19வது ஆளுநர் C. ரங்கராஜன் "Forks in the Road: My Days at RBI and Beyond" என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## மாற்றுத் திறனாளிகளுக்கான வழித்தடம்

- சென்னையில் மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான பிரத்தியேக நிரந்தர வழித் தடமானது சமீபத்தில் திறக்கப் பட்டது.
- "கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்காக திறக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் நிரந்தர சாய்தள வழித் தடம்" இதுவாகும்.



## சுகாதார நிறுவனங்களின் தரவரிசைகள்

- தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையானது, அரசிற்குச் சொந்தமான சுகாதார நிறுவனங்களைத் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- இது பேறு காலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் (MMR), பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (IMR) மற்றும் வெளிநோயாளிகள் சிகிச்சை ஆகியவை உள்ளிட்ட 17 அளவுருக்களின் அடிப்படையில் மாவட்டங்களை மதிப்பீடு செய்தது.
- ஆரம்ப சுகாதார நிலையங்கள், சுகாதார துணை மையங்கள், மாவட்டத் தலைமையக மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி சார்ந்த மருத்துவமனைகள் ஆகியவற்றினைத் தமிழக அரசு தரவரிசைப் படுத்துவது இதுவே முதல் முறையாகும்.
- காஞ்சிபுரம், நாமக்கல், தூத்துக்குடி மாவட்டங்கள் சிறந்த செயல்திறன் கொண்டவை ஆகும்.
- தென்காசி, திருப்பத்தூர், திண்டுக்கல் ஆகியவை இப்பட்டியலில் கடைசி இடங்களில் இடம் பெற்றுள்ளன.

## தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாடு 2022

- 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாட்டினைத் தமிழ்நாடு அரசு சென்னையில் தொடங்கியுள்ளது.
- பருவநிலை நெகிழ்திறன் மிக்க திறன்மிகு கிராமங்கள், பசுமைப் பள்ளிகள் மற்றும் பசுமைக் கோயில்கள் போன்ற பிற முன்னெடுப்புகளையும் முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- பருவநிலை உச்சி மாநாட்டில் அம்மாநில அரசின் மூன்று முக்கியப் பணிகளாவன - பருவநிலை மாற்ற திட்டப் பணி, பசுமைத் தமிழ்நாடு திட்டம், மற்றும் தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் திட்டம் ஆகியவை குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

## தமிழ்நாடு பருவநிலை மாற்றத் திட்டப் பணி

- தமிழ்நாடு பருவநிலை மாற்றத் திட்டப் பணி அமைப்பானது (TNCCM), அண்ணா பல்கலைக் கழகத்தின் பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்துடன் இணைந்து 'பருவநிலை அரங்கத்தினை' அமைக்க உள்ளது.
- இது அனைத்துப் பருவநிலை சார்ந்த நடவடிக்கைகளுக்கும் ஒற்றை மூல ஆதாரத் தரவு மையமாக இருக்கும்.
- பசுமை பருவநிலை மாற்ற நிறுவனமானது, தமிழகத்தைப் பருவநிலை சார்ந்த திறன் மிகு மாநிலமாக மாற்றுவதற்கான சிறப்பு நோக்கத்திற்கான ஒரு செயற் கருவியாக உருவாக்கப் பட்டது.
- தமிழ்நாடு பசுமைப் பருவநிலை மாற்ற நிறுவனமானது கீழ்க்காணும் பகுதிகளில் கவனம் செலுத்தும்
  - பல்வேறு துறைகளுக்கான கார்பன் நீக்க படிநிலைகளைத் தயாரித்தல்
  - நிதி மாதிரிகள் மற்றும் ஒரு பருவநிலை அரங்கங்களுக்கான கருத்துருவாக்கம் செய்தல் மற்றும் அவற்றை நிறுவுதல்
  - பருவநிலை சார்ந்த வரவு செலவு அறிக்கை மற்றும்

   - உள்ளூர் நிறுவனங்களுடனான கூட்டாண்மை.
- 23.71 சதவீதமாக உள்ள மாநிலத்தின் பசுமைப் பரவலை 33 சதவீதமாக உயர்த்துவதே பசுமைத் தமிழ்நாடு திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- தமிழ்நாடு பருவநிலை மாற்றத் திட்டமானது, கடலோரப் பகுதிகளில் உயிர் வேலி அமைத்தல், பசுமைக் கூட்டுறவு, பருவநிலை சார்ந்த திறன்மிகு கிராமங்கள், தொழிற் சாலைகள் மற்றும் கட்டிடங்களின் பசுமை மதிப்பீடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- தமிழ்நாட்டை ஒரு திறன்மிகு பருவநிலை மாநிலமாக மாற்ற தனக்கெனத் தனியாக ஒரு பருவநிலை மாற்றத் திட்டத்தினை ஆரம்பித்திடும் முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

## சுகாதார மையங்களின் விரிவாக்கம்

- 100 ஆண்டு கால சேவையைக் குறிக்கும் வகையில், DPHICON 2022 எனப்படும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குனரகத்தின் மாநாடு சென்னையில் நடைபெற்றது.
- தமிழ்நாடு அரசானது, மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் மேலும் 200 முதல் 250 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் (PHC) 2,000 முதல் 2,500 கூடுதல் சுகாதார துணை மையங்களையும் (HSC) அமைக்க உள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்தில் 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்கள் மற்றும் 8,713 சுகாதார துணை மையங்கள் உள்ளன.
- விதிமுறைகளின்படி, 5,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சுகாதார துணை மையங்கள் அமைந்திருக்க வேண்டும்.
- மக்கள்தொகையின் அடிப்படையில், மாநிலத்திற்குக் குறைந்தபட்சம் 2,000 முதல் 2,500 துணை சுகாதார மையங்கள் அமைக்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கும்.
- தமிழக மாநிலத்தில் 12,525 கிராமப் பஞ்சாயத்துகள் உள்ளன.
- எனவே, தற்போது 8,713 சுகாதார துணை மையங்கள் இருப்பதன் பட்சத்தில் மேலும் 10,000க்கும் மேற்பட்ட சுகாதார துணை மையங்கள் அமைக்கப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.
- கிராமப் பகுதிகளில் 30,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், மலைப் பகுதிகளில் 20,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், நகரங்களில் 50,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் இருக்க வேண்டும்.
- தமிழக அரசின் சுகாதார இயக்குனரகம் ஆனது நலம் 360 என்ற யூடியூப் ஊடகத்தினை விரைவில் தொடங்கவுள்ளது.

## வானவில் மன்றம்

- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் வானவில் மன்றம் என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இது மாநிலம் முழுவதும் உள்ள VI முதல் VIII ஆம் வகுப்பு வரை பயிலும் வகுப்பு மாணவர்களை மனப்பாடம் செய்வது மூலம் கற்கும் முறையில் இருந்து செயல்பாட்டு அடிப்படையில் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளச் செய்யும் ஒரு முறைக்கு மாற்ற முயற்சிக்கிறது.

- இந்த வானவில் மன்றத்தின் செயல்பாடுகள் ஆனது, மாநிலம் முழுவதும் தொகுதி வாரியாக சுமார் 13,200 பள்ளிகளில் சுமார் 20 லட்சம் மாணவர்களுக்குப் பலனளிக்கும் வகையில் STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) துறை வல்லுநர்களால் செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்த வல்லுநர்களுக்கு 'நடமாடும் ஆய்வக' கருவிப் பெட்டகமானது வழங்கப்படும்.




## மதுரை அமர்வு நீதிமன்றத்தின் முதல் பெண் சோப்தார்

- மதராஸ் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் முதல் பெண் சோப்தாராக (பணித்துறை முத்திரைக் கோள் ஏந்திச் செல்லும் அலுவலர்) T.லலிதா என்பவர் நியமிக்கப் பட்டு உள்ளார்.
- அவர் நீதிபதி N.மாலா அவர்களுக்கான சோப்தாராக செயல்படுவார்.
- உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் தங்கள் அறைகளிலிருந்து நீதிமன்ற அரங்குகளுக்குச் செல்லும் போது அவர்களுக்குத் தடையின்றி வழி விடுவதை உறுதி செய்வதற்காக, நீதிபதிகளுக்கு முன்னால் சோப்தார் நடந்து செல்வார்.
- இந்த ஆண்டு ஜூன் மாதத்தில், மதராஸ் உயர்நீதிமன்றத்தில் முதல் பெண் சோப்தார் நியமிக்கப்பட்டார்.



## பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம்

- தமிழகத்தில் 2017-19 ஆம் ஆண்டில் 58 ஆக இருந்த பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் ஆனது 2018-20 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 54 ஆகக் குறைந்து உள்ளது.
- தமிழக மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பேறுகாலத் தாய்மார்கள் இறப்பிற்கும் அதன் நான்கு நிலைகளில் (சமூகம், மருத்துவமனை, வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் நிபுணர் குழு) இறப்புத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- மகப்பேற்றுக்கு பிறகான இரத்தப் போக்கு (PPH) மற்றும் கர்ப்பத்தினால் ஏற்படும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவை தமிழகத்தில் பதிவாகும் பேறுகாலத் தாய்மார்கள் இறப்புகளுக்கான முக்கிய காரணங்களாகும்.
- தென் மாநிலங்களில், ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 19 இறப்புகளுடன் கேரளாவில் மிகக் குறைந்த பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் பதிவாகியுள்ளது.
- அதைத் தொடர்ந்து தெலுங்கானா (43), மற்றும் ஆந்திரப் பிரதேசம் (45) ஆகியவை இடம் பெற்றுள்ள அதே சமயம் கர்நாடகா 69 பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதத்துடன் தமிழகத்திற்கு அடுத்த இடத்தில் உள்ளது.



FACT SHEET | Special bulletin, Maternal Mortality Ratio (MMR), census of India

| India & Major States | MMR 2017-19 | MMR 2018-2020 |
|---|---|---|
| INDIA | 103 | 97 |
| Andhra Pradesh | 58 | 45 |
| Telangana | 56 | 43 |
| Karnataka | 83 | 69 |
| Kerala | 30 | 19 |
| Tamil Nadu | 58 | 54 |
| Maharashtra | 38 | 33 |

## தேவாங்கு மற்றும் கடல்பசு வளங்காப்பு மையங்கள்

- இந்தியாவின் முதல் தேவாங்குச் சரணாலயம் மற்றும் கடல்பசு வளங்காப்பகம் ஆகியவற்றினை அறிவித்ததையடுத்து, அடுத்த இரண்டு ஆண்டுகளில் இரண்டு உயிரினங்களுக்குமான வளங்காப்பு மையங்களையும் அமைப்பதற்கு தமிழ்நாடு வனத்துறை திட்டமிட்டுள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம் அய்யலூரில் தேவாங்கு வளங்காப்பு மையம் அமைக்கப்பட உள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மனோரா எனுமிடத்தில் கடல்பசு வளங்காப்பு மையம் அமைக்கப்பட உள்ளது.
- கடல்பசு வளங்காப்பு மையமானது முழுத் திட்டத்திற்கான ஒரு ஈடுபாட்டு மையமாக செயல்படும்.

- அங்கு கடல்சார் அருங்காட்சியகம், அரைவட்ட வடிவ அரங்கம், கடல் ஆய்வு மையம் மற்றும் குடில்கள் ஆகியவை அமைக்கப்பட உள்ளது.



## தமிழகப் பொருளாதாரத்தின் தரவு

- 2022-23 ஆம் நிதியாண்டில் செப்டம்பர் மாதம் வரை தமிழ்நாட்டின் நிகர சந்தைக் கடன்கள் (மறு சரிபார்ப்பிற்குப் பிறகு) சுமார் 30.3% குறைந்துள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலத்தில் 35,000 கோடி ரூபாயாக இருந்த இதன் அளவு 24,403 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசானது, மாநில மேம்பாட்டுக் கடன்கள் (SDLs) எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் சந்தையில் இருந்து கடன் பெறுகிறது.
- கடந்த ஆண்டு 85,209.74 கோடியாக இருந்த தமிழகத்தின் மொத்த வருவாய் வரவுகள் ஆனது 2022-23 ஆம் ஆண்டின் முதல் பாதியில் சுமார் 1.12 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, தமிழகத்தின் நிதிப் பற்றாக்குறை ₹18,726.32 கோடியாகவும், வருவாய்ப் பற்றாக்குறை ₹4,184.10 கோடி ஆகவும் இருந்தது.
- 2023 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் நிதி உபரித் தொகைகள் பதிவாகியுள்ளன.
- கர்நாடகா, குஜராத், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற சில பெரிய மாநிலங்களில் மிகக் குறைந்த அளவிலான நிதிப் பற்றாக்குறையே (நிதி நிலை மதிப்பீடுகளில் 30%க்கும் குறைவாக) பதிவாகியுள்ளன.
- 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியிலேயே பீகார் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஏற்கனவே தங்களது முழு ஆண்டு இலக்குகளை நிறைவு செய்துள்ளன.

## TrackKD செயலி

- தமிழ்நாடு காவல்துறை "TrackKD" என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த மாநிலம் முழுவதும் காணப்படும் அறியப்பட்டக் குற்றவாளிகளை நேரடியாக கண்காணிப்புச் செய்வதற்கு இந்தச் செயலி அவர்களுக்கு உதவும்.
- மாநிலத்தில் உள்ள 39 மாவட்டங்கள் மற்றும் ஒன்பது ஆணையரகங்களைச் சேர்ந்த 30,000க்கும் மேற்பட்ட தொடர் குற்றவாளிகளின் விவரங்கள் எண்ணிம மயமாக்கப் பட்டுள்ளன.

- குற்றத்தின் தன்மை, செயல் முறை மற்றும் குற்றத்துடன் தொடர்புடைய கும்பல் ஆகியவற்றின் அடிப்படையில் சந்தேகப்படக் கூடிய வகையிலான நபர்களை இந்தச் செயலி வகைப்படுத்தும் என்பதோடு, இது அனைத்து வகையான குற்றவாளிகளின் பெயர்களைக் கொண்ட நீண்டப் பட்டியலைக் குறைப்பதற்குப் புலனாய்வாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்

- தமிழக அரசானது, துப்புரவுப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தினைத் தொடங்கி உள்ளது.
- இது மாநிலத்தின் சுகாதாரப் பாதுகாப்புத் துறை சார்ந்த தொழிலாளர்களின் நலனை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, துப்புரவுப் பணியாளர்களை அடையாளம் காணவும், அவர்களின் எண்ணிக்கையினைக் கணக்கெடுப்பதற்காகவும் ஒரு கைபேசி செயலி வெளியிடப் பட்டது.
- துப்புரவுப் பணியாளர்களைக் கண்டறிவதற்கான ஒரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டு, அதன் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் இந்தச் செயலியில் பதிவேற்றப்படும்.
- இந்தத் திட்டத்தின் முதல் கட்டமானது, மாநிலத்தில் உள்ள ஐந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட உள்ளது.
- பின்னர் இது மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப் படும்.

## மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சிலை

- வாரணாசியில் அமைந்துள்ள புதுப்பிக்கப்பட்ட பாரதி இல்லத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்த வீட்டில் பாரதியார் தனது 15 வயது முதல் 19 வயது வரையிலான காலங்களில் வாழ்ந்தார்.
- 'பாரதி இல்லத்தில்' புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாரதியார் அவர்களின் சிலையையும் அவர் திறந்து வைத்தார்.
- பாரதியாரின் நூற்றாண்டு நினைவு நாளானது மகாகவி தினமாக (செப்டம்பர் 11) அனுசரிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.
- இந்த நினைவிடத்தில் இந்தச் சிலையைத் தவிர ஒரு சிறிய நூலகமும் அமைந்துள்ளது.

## இந்தியா டுடே இதழின் சிறந்த மாநிலங்களுக்கானப் பட்டியல்

- இந்தியா டுடே இதழின் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களின் பட்டியலில், இந்தியாவின் மிகப்பெரிய மாநிலங்களுள் தொடர்ந்து 5வது ஆண்டாக தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ஒவ்வோர் ஆண்டின் முடிவிலும், மாநிலங்களின் செயல்திறன் குறித்த தரவரிசைப் பட்டியலை இந்தியா டுடே இதழ் வெளியிடுகிறது.

- பொருளாதாரம், மருத்துவம், வேளாண்மை, கல்வி, உள்கட்டமைப்பு, சட்டம் & ஒழுங்கு, சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய பிரிவுகளின் கீழ் பல்வேறு மாநிலங்களை பெரிய மற்றும் சிறிய மாநிலங்களாக இந்த நிறுவனம் பட்டியலிடுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தப் பட்டியலில் தமிழ்நாடு 1303.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.
- 2018, 2019, 2020, 2021 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் தமிழகம் தொடர்ந்து முதலிடத்தில் இருந்தது.
- அதைத் தொடர்ந்து இமாச்சலப் பிரதேசம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- குஜராத், பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை முறையே 4வது, 5வது மற்றும் 6வது இடங்களில் உள்ள மாநிலங்கள் ஆகும்.
- பொருளாதார மேம்பாட்டில் குஜராத் முன்னணியில் உள்ளது.
- கடந்த ஆண்டு அந்தப் பிரிவில் 4வது இடத்தில் இருந்த தமிழகம், இந்த ஆண்டு 2வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- மருத்துவப் பிரிவில் கடந்த ஆண்டு 5வது இடத்திலிருந்து 3வது இடத்திற்கு முன்னேறிய தமிழக மாநிலமானது சுகாதாரத்தில் கடந்த ஆண்டில் இருந்த 7வது இடத்திலிருந்து 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- சிறந்த உள்கட்டமைப்பின் அடிப்படையில் கடந்த ஆண்டில் 4வது இடத்தில் இருந்த தமிழகம் 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

**BEST PERFORMING BIG STATES OVERALL**

| STATE | SCORE OUT OF 2080 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| TAMIL NADU | 1,303.5 | ◆1 | 1 | 1 | 1 |
| HIMACHAL PRADESH | 1,257.2 | ◆2 | 2 | 2 | 7 |
| KERALA | 1,252.5 | ▲3 | 4 | 5 | 3 |
| GUJARAT | 1,226.4 | ▲4 | 5 | 6 | 4 |
| PUNJAB | 1,223.4 | ▼5 | 3 | 4 | 5 |
| ANDHRA PRADESH | 1,214.6 | ▲6 | 7 | 8 | 10 |
| TELANGANA | 1,204.8 | ▲7 | 9 | 10 | 9 |
| HARYANA | 1,199.9 | ▼8 | 6 | 3 | 2 |
| MAHARASHTRA | 1,166.0 | ▼9 | 8 | 9 | 8 |
| KARNATAKA | 1,141.5 | ▲10 | 11 | 7 | 6 |

## நூலகங்களின் நண்பர்கள் திட்டம்

- தமிழக அரசானது, வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் வகையில் 'நூலகங்களின் நண்பர்கள்' என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், அரசு நடத்தும் நூலகங்களுக்குச் செல்ல முடியாத நபர்களுக்கு தனிப்பட்ட முறையில் புத்தகங்கள் வழங்கப்படும்.

- இந்தத் திட்டத்தின் படி, நூலகத்திற்கு வர முடியாத மாற்றுத் திறனாளிகள், மூத்தக் குடிமக்கள், குழந்தைகள் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள உள் நோயாளிகள் உள்ளிட்டோர் இந்த முன்னெடுப்பின் மூலம் பயனடைவார்கள்.
- இதற்காக தன்னார்வலர்களின் சேவைகளும் பயன்படுத்தப்பட உள்ளது.
- ஒரு அறிவு சார்ந்தச் சமூகத்தை மேம்படுத்தச் செய்வதே இத்தகைய முன்னெடுப்பின் ஒரு நோக்கமாகும்.

**BOOKS AT YOUR DOORSTEP**

- Tamil Nadu has **4,640 public libraries with more than one crore members**
- Friends of Library **scheme aims to provide last mile connectivity to elderly readers, disabled persons**
- Directorate of **Public Libraries plans to enrol 12,500 volunteers from across the state**
- **Teachers, civil service aspirants, youth and school students can become** volunteers in libraries in their neighbourhood
- A volunteer will get a maximum of **25 books to distribute in their neighborhood**
- Volunteers will also **get ID card and a bag from the libraries**

## நம்ம பள்ளி அறக்கட்டளை

- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழக மாநிலத்தில் உள்ள அரசுப் பள்ளிகளை தனியார் துறைகளின் பங்களிப்புடன் அதை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டத்தினை சென்னையில் தொடங்கி வைத்தார்.
- உள்கட்டமைப்பு மற்றும் நன்மதிப்பின் அடிப்படையில் அரசுப் பள்ளிகளை சிறப்பாகச் செயல்படச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கல்வியாளர்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் (NGOs) உறுப்பினர்களிடையேயான திட்டமாக இருக்கும்.
- இத்திட்டத்தின் மூலம், அரசுப் பள்ளிகளில் படித்து, தற்போது பல்வேறு நிறுவனங்களில் உயர்பதவி வகிக்கும் முன்னாள் மாணவர்கள், தொழிலதிபர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட முன்னாள் மாணவர்கள், தங்கள் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (CSR) நிதி மூலம் அரசுப் பள்ளிகளைத் தத்தெடுத்து நடத்துவர்.
- சுற்றுச்சுவர், ஓவியம், இணையதள வசதிகள், சுகாதார கழிப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் தொடங்கப் பட உள்ளது.
- TVS மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன், நம்ம பள்ளி அறக்கட்டளை திட்டத்தின் தலைவராகவும், விஸ்வநாதன் ஆனந்த் இத்திட்டத்தின் தூதராகவும் உள்ளனர்.
- நம்ம ஊர் பள்ளித் திட்டமானது இதன் விரிவாக்கத் திட்டமாகும்.
- உள்ளூர் மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், தொழில் துறையினர் மற்றும் உலகம் முழுவதும் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களை இணைப்பதற்கான அடித்தளத்தினை நம்ம ஊர் பள்ளித் திட்டம் நிறுவுகிறது.

- முன்னதாக, மாநிலப் பள்ளிக் கல்வித் துறையின் பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தின் பெயரினை "பேராசிரியர் K.அன்பழகன் கல்வி வளாகம்" என்று முதல்வர் அவர்கள் பெயர் மாற்றம் செய்தார்.




## உலக ஆணழகன் பட்டம் 2022



- தாய்லாந்தில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு உலக ஆணழகன் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மணி பட்டத்தினை வென்றுள்ளார்.
- இவர் 5வது முறையாக இந்தப் பட்டத்தினை வென்றுள்ளார்.

## கிசான் ஆளில்லா விமானங்களுக்கு வான்வழிப் போக்குவரத்திற்கான தலைமை இயக்குநரகத்தின் ஒப்புதல்

- ஆளில்லா விமானங்கள் தயாரிப்பு நிறுவனமான கருடா ஏரோஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட், வான்வழிப் போக்குவரத்திற்கான தலைமை இயக்குநரகத்தின் வகை சார் சான்றிதழ் மற்றும் தொலைதூரத்திலிருந்து இயக்குவதற்கான பயிற்சி அமைப்பு ஆகியவற்றிற்கான அனுமதியைப் பெற்றுள்ளது.
- இந்த ஒப்புதலானது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட கிசான் வகை ஆளில்லா விமானங்களுக்காகப் பெறப்பட்டுள்ளது.

- எனவே, இந்த ஒப்புதலைப் பெற்ற இந்தியாவின் முதல் ஆளில்லா விமான உற்பத்தி செய்யும் புத்தொழில் நிறுவனமானது இதுவேயாகும்.
- வான்வழிப் போக்குவரத்திற்கான தலைமை இயக்குநரகத்தின் வகை சார் சான்றிதழ் ஆளில்லா விமானங்களின் தரச் சோதனையின் அடிப்படையில் அதனை கடுமையான சோதனைச் செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டப் பிறகு வழங்கப் படுகிறது.
- இந்திய அரசானது, ஆளில்லா விமானங்களுக்கான விதிமுறைகளின் கீழ் 2021 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் வகைசார் சான்றிதழ் வழங்கீட்டு முறையினை இந்தியாவில் அறிமுகப் படுத்தியது.
- இந்தியாவிலேயே தயாரிப்போம் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் 'கிசான்' ஆளில்லா விமானங்கள் ஆனது பயிர் இழப்பைக் குறைத்தல், பயிர் வளக் கண்காணிப்பு, மகசூல் அளவீடு மற்றும் சமீபத்திய உற்பத்தித் திறன் கொண்ட தொழில்நுட்பங்களைக் கொண்டுப் பயிர் இழப்பை ஈடு செய்தல் போன்ற வேளாண் நோக்கங்களுக்காக என்று பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளன.




## குப்பைகள் இல்லாத மன்னார் வளைகுடா

- தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடா கடல் தேசியப் பூங்காவில் காணப்படும் உபயோகமற்ற அல்லது தொலைந்து போன வலை மற்றும் கடல் குப்பைகள் போன்ற பிரச்சனையைத் தீர்ப்பதற்காக மாநில வனத்துறையானது HCL அறக்கட்டளையுடன் (HCLF) கைகோர்த்துள்ளது.
- இதில் உபயோகமில்லாத தூக்கி எறியப்பட்ட அல்லது தொலைந்து போன மீன்பிடிச் சாதனங்கள் 'Ghost nets' எனப்படுகின்றன.
- இது உலகெங்கிலும் அமைந்துள்ள கடலோர மற்றும் கடல் வாழ்விடங்களுக்கு ஒரு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.
- ஒரு மாபெரும் அளவில் குடிமக்கள் ஈடுபாடு சார்ந்த நடவடிக்கைக்கான மூன்றாண்டு காலச் செயல் திட்டம் மற்றும் 'குப்பைகள் இல்லாத மன்னார் வளைகுடா' வெகுஜன விழிப்புணர்வுப் பிரச்சாரங்களும் நடத்தப்படும்.




## நீலகிரி வரையாடு வளங்காப்புத் திட்டம்

- தமிழக அரசானது நீலகிரி வரையாடு எனப்படும் தமது மாநில விலங்கினைப் பாதுகாக்கும் ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், அரசாங்கம் கீழ்க்கண்டவற்றைத் திட்டமிட்டுள்ளது.
    - ஆய்வுகள் மற்றும் ரேடியோ தொலை அளவியல் ஆய்வுகள் மூலம் நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கையைப் பற்றிய சிறப்பான புரிதலை உருவாக்குதல்
    - வரையாடுகளை அவற்றின் முந்தையக் கால வாழ்விடத்தில் மீண்டும் அறிமுகப் படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களைச் சரி செய்தல்.
    - மேலும், இந்த இனங்கள் பற்றியப் பொது விழிப்புணர்வினை அதிகரித்தல்.
- இத்திட்டம் ஆனது 2022 முதல் 2027 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட உள்ளது.
- மேலும், E.R.C.டேவிதார் என்பவரைப் போற்றும் வகையில் அக்டோபர் 07 ஆம் தேதி என்பது 'நீலகிரி வரையாடு தினமாக' கொண்டாடப்பட உள்ளது.
- 1975 ஆம் ஆண்டில் இந்த இனங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட முதல் ஆய்வுகளின் முன்னோடியாக இவர் திகழ்கிறார்.
- இது அருகி வரும் இனங்களுள் ஒன்றான தென்னிந்தியாவின் வெப்பமண்டல மலைப் பகுதிகளில் காணப்படும் ஒரே ஒரு வெள்ளாட்டினம் ஆகும்.



# தேசியச் செய்திகள்

## 'போர்க்களச் சீருடைக்கான' அறிவுசார் சொத்து உரிமை

- இந்திய இராணுவமானது, புதிய வடிவமைப்பு கொண்ட மற்றும் உருமறைப்பு வடிவச் சீருடையின் உரிமத்தினைக் கோருவதற்காக வேண்டி அதற்கான அறிவுசார் சொத்து உரிமையினைப் பெறுவதற்கு (IPR) பதிவு செய்துள்ளது.
- இந்திய இராணுவ வீரர்களுக்கான புதிய டிஜிட்டல் முறையில் வடிவமைக்கப்பட்ட போர்க்களச் சீருடையானது, 2022 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதி இராணுவ தினத்தன்று வெளியிடப்பட்டது.
- இந்தச் சீருடையானது சமகாலத் தோற்றம் மற்றும் செயல்பாடு சார்ந்த வடிவமைப்பு கொண்டது.
- இந்த உடையின் துணியானது இலகுவாகவும், வலிமையாகவும், காற்று ஊடுருவக் கூடியதாகவும், விரைவாக உலர்த்தக் கூடியதாகவும், பராமரிக்க எளிதான வகையிலும் செய்யப் பட்டுள்ளது.



## குடியரசு தின விழா சிறப்பு விருந்தினர்

- 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற உள்ள குடியரசு தின விழாவில் எகிப்து நாட்டின் அதிபர் அப்தெல் ஃபத்தா அல் சிசி அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்.
- கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு குடியரசு தின விழா கொண்டாட்டங்களுக்கான விருந்தினர்களுக்கான திட்டங்கள் ரத்து செய்யப் பட்டதால், 2020 ஆண்டிற்குப் பிறகு வருகை தரும் முதல் விருந்தினர் திரு. சிசி ஆவார்.
- எகிப்து அரபுக் குடியரசின் அதிபர் நமது குடியரசு தினத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- இரு நாடுகளும் இந்த ஆண்டு தனது அரசு முறை உறவுகள் நிறுவப்பட்டதன் 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றன.
- மேலும், 2022-23 ஆம் ஆண்டில் G-20 அமைப்பின் தலைமைப் பதவிக் காலத்தின் போது எகிப்து 'விருந்தினர் நாடாக' பங்கேற்பதற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.
- இந்தியாவின் நட்பு நாடுகளின் தலைவர்கள் 1950 ஆம் ஆண்டு முதல் குடியரசு தின விழாவில் பங்கேற்று விழாவினைச் சிறப்பித்து வருகின்றனர்.

- முதலாவதாக, இந்தோனேசிய அதிபர் சுகர்னோ 1950 ஆம் ஆண்டில் முதல் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார்.
- 1952, 1953 மற்றும் 1966 ஆம் ஆண்டுகளில், குடியரசு தின விழாக்களில் வெளிநாட்டுத் தலைவர் சிறப்பு விருந்தினர்களாக இல்லாமல் நடத்தப்பட்டது.
- முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா (2015), ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் (2007) ஆகியோர் கடந்த காலத்தில் சிறப்பு விருந்தினர்களாக வருகை புரிந்துள்ளனர்.
- 2020 ஆம் ஆண்டில், அப்போதையப் பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.



## மூன்றாவது ஆய்வுக் கப்பல் 'இக்சாக்'


- இந்தியக் கடற்படையின் மூன்றாவது ஆய்வுக் கப்பலான 'இக்சாக்' சென்னையில் படையில் இணைக்கப்பட்டது.
- இது நான்கு ஆய்வுக் கப்பல்கள் (பெரியது) (SVL) திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மூன்றாவது கப்பலாகும்.
- இக்கப்பலுக்கு 'வழிகாட்டி' என்று பொருள்படும் வகையில் 'இக்சாக்' என்று பெயரிடப் பட்டுள்ளது.




- கடலில் கடற்படையினர் பாதுகாப்பாகப் பயணிப்பதற்கு ஆய்வுக் கப்பல்களின் முக்கியப் பங்களிப்பைக் குறிக்கும் வகையில் இந்தக் கப்பலுக்கு இந்தப் பெயரிடப் பட்டுள்ளது.

- இந்தத் திட்டத்தின் முதல் கப்பலான 'சந்தாயக்' 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 05 ஆம் தேதியன்று கொல்கத்தாவில் உள்ள GRSE என்ற கப்பல் கட்டும் தளத்தில் படையில் இணைக்கப் பட்டது.

## பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் குறைவு




- 2018-20 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் (MMR) 97 ஆக இருந்தது.
- 2014-16 ஆம் ஆண்டில், 130 ஆக இருந்த பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதமானது, அதன்பின் நிலையான வகையிலான ஒரு சரிவைக் கண்டது.
- ஒரு பிராந்தியத்தில் பதிவாகும் பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் என்பது அந்தப் பகுதியில் உள்ள பெண்களின் பேறு காலம் சார்ந்த ஆரோக்கியத்தின் ஒரு மதிப்பீடு ஆகும்.
- இது ஒரு லட்சம் குழந்தை பிறப்புகளின் போது ஏற்படும் கர்ப்பிணிகளின் இறப்பாகும்.




- இந்திய மாநிலங்களில், அசாம் அதிகபட்சமாக 195 பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதத்துடனும், அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம் (173) மற்றும் உத்தரப் பிரதேசம் (167) ஆகிய மாநிலங்களும் இடம் பெற்றுள்ளன.

- கேரளாவில் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் (19) மிகக் குறைவாக உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மாநிலத்தில் 33 ஆகவும், தெலுங்கானா மாநிலத்தில் 43 ஆகவும் அது பதிவாகியுள்ளது.
- இதில் தமிழ்நாடு 4வது இடத்தில் உள்ளது (54).

## ஒட்டும் வகையிலான முதல் பற்று அட்டை





- IDFC First வங்கியானது NPCL அமைப்புடன் இணைந்து சமீபத்தில் FIRSTAP எனப்படும் இந்தியாவின் முதல் ஒட்டி அடிப்படையிலான இந்தியாவின் முதல் பற்று அட்டையினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது அருகிலுள்ள புலத் தொடர்பு (NFC) செயல்படுத்தப்பட்ட விற்பனை முனையத்தில் இந்த ஒட்டிகளைத் தட்டுவதன் மூலம் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது.
- பற்று அட்டைகளை எடுத்துச் செல்லாமல் கடைகள், உணவகங்கள் மற்றும் பிற இடங்களில் இந்த ஒட்டிகளைத் தட்டுவதன் மூலம் பணம் செலுத்துவதற்கு இதைப் பயன்படுத்தலாம்.
- ரூ.5,000 வரையிலான பணப் பரிவர்த்தனைகளை தனிப்பட்ட அடையாள எண் (PIN) இல்லாமலும், அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்குத் தனிப்பட்ட அடையாள எண் (PIN) உள்ளிடுவதன் மூலமும் இந்தப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள இயலும்.

## MGNREGA திட்டத்திற்கான மறுஆய்வுக் குழு

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் தொடர்பான (MGNREGS) மாநிலங்களின் செயல்திறன் மற்றும் அதன் கீழ் நிலவும் நிர்வாகப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்வதற்கான குழு ஒன்றினை மத்திய அரசு அமைத்துள்ளது.
- முன்னாள் ஊரக மேம்பாட்டுத் துறை செயலாளர் அமர்ஜித் சின்ஹா தலைமையில் இந்த 9 பேர் கொண்ட குழு அமைக்கப் பட்டுள்ளது.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள கிராமப்புறத் துறையில் நிலவும் கூலி வேலைக்கான தேவையைப் பாதிக்கும் பல்வேறு காரணிகளை இந்தக் குழு ஆய்வு செய்யும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டமானது 2006 ஆம் ஆண்டில் நாட்டின் மிகவும் பின்தங்கிய 200 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.
- இது 2007-08 ஆம் ஆண்டில் மேலும் 130 மாவட்டங்களுக்கும், 2008-09 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் விரிவுபடுத்தப் பட்டது.
- இது ஒவ்வொரு கிராமப்புறக் குடும்பத்திற்கும் ஒரு நிதியாண்டில் 100 நாள் கூலியுடன் கூடிய வேலைவாய்ப்பை உறுதி செய்கிறது.

- இந்தத் திட்டத்திற்கான தளத்தில் உள்ள தரவுகளின்படி, 2020-21 ஆம் ஆண்டில் 7.55 கோடி குடும்பங்கள் (11.19 கோடி நபர்கள்) இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர்.
- நடப்பு 2022-23 ஆம் நிதியாண்டில், நவம்பர் 26 ஆம் தேதி வரை 5.21 கோடி குடும்பங்கள் (7.22 கோடி மக்கள்) இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.




## 7வது உலகத் தொழில்நுட்ப உச்சிமாநாடு

- 7வது உலகத் தொழில்நுட்ப உச்சி மாநாடானது புது டெல்லியில் கலப்பு முறையில் நடைபெற உள்ளது.
- இது புவிசார் தொழில்நுட்பம் தொடர்பாக இந்திய அரசு மேற்கொள்ளும் வருடாந்திர முதன்மை மாநாடாகும்.
- மேலும் இது வெளியுறவு அமைச்சகம் மற்றும் கார்னெகி இந்தியா ஆகியவற்றினால் இணைந்து நடத்தப்படுகிறது.
- இந்த ஆண்டு உச்சி மாநாட்டின் கருத்துரு, 'தொழில்நுட்பத்தின் புவிசார் அரசியல்' என்பதாகும்.

## கார்பன் பற்றுகைப் பயன்பாடு மற்றும் சேமிப்புக் கொள்கை கட்டமைப்பு - நிதி ஆயோக்

- நிதி ஆயோக் அமைப்பானது, கார்பன் பற்றுகைப் பயன்பாடு மற்றும் சேமிப்பிற்கான (CCUS) கொள்கைக் கட்டமைப்பின் அறிக்கையைத் தயாரித்துள்ளது.
- சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, ஆண்டிற்கு சுமார் 2.6 ஜிகா டன் கார்பன் உமிழ்வுகளை வெளியிடுவதுடன், உலகில் $CO_2$ வாயுவினை வெளியிடும் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது.
- எனவே, கார்பன் பற்றுகைப் பயன்பாடு மற்றும் சேமிப்புக் கொள்கையானது, இந்தியா அதன் கார்பன் நீக்க இலக்குகளை அடைவதற்கு இன்றியமையாத ஒன்றாகும்.

- கார்பன் பற்றுகைப் பயன்பாடு மற்றும் சேமிப்புக் கொள்கை என்பது கார்பன் டை ஆக்சைடு உமிழ்வைக் கைப்பற்றி, கட்டுமானப் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு (பயன்பாடு) அல்லது மேற்பரப்பிற்குக் கீழே பல ஆயிரம் அடிகளுக்குக் கீழே அதனை நிரந்தரமாகச் சேமித்து வைப்பதற்கு (சேமிப்பு) பயன்படும் ஒரு செயல் முறையாகும்.

## சமன்வே பயிற்சி - 2022


- இந்திய விமானப் படையானது 'சமன்வே 2022' எனப்படும் ஒரு வருடாந்திரக் கூட்டு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண (HADR) பயிற்சியினை ஆக்ராவில் நடத்தி வருகிறது.
- இது நிறுவனம் சார்ந்த பேரிடர் மேலாண்மைக் கட்டமைப்புகள் மற்றும் அவசர கால நடவடிக்கைகளின் செயல்திறன் ஆகியவற்றினை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய நாட்டினைச் சேர்ந்த பல்வேறு பங்குதாரர்களின் பங்கேற்புடன், ஆசியான் நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

## இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வரலாறு திட்டம்

- இந்திய வரலாற்று ஆராய்ச்சிச் சபை (ICHR) மற்றும் இஸ்ரோ ஆகியவை இணைந்து "இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வரலாறு" என்ற திட்டத்தைத் தொடங்கச் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பல்வேறு அறிவியல் களங்களில் இந்திய நாட்டினை ஒரு "விஷ்வ குரு" (உலகத் தலைவர்) ஆக நிலை நிறுத்துவதே இதன் இலக்காகும்.
- இந்தியாவின் பொருளாதார வரலாற்றைக் கண்டறிவதற்காக இதே போன்ற திட்டம் ஒன்றினை இந்திய வரலாற்று ஆராய்ச்சிச் சபை தொடங்க உள்ளது.
- மருத்துவத் துறையில் இந்தியாவின் பங்களிப்புகளைக் கண்டறிவதற்காக ஆயுஷ் அமைச்சகத்துடன் இணைந்து இந்திய வரலாற்று ஆராய்ச்சிச் சபை மற்றொரு திட்டத்தையும் தொடங்க உள்ளது.



## தேர்தல் பத்திரங்களின் விற்பனை குறித்த தரவு




- தேர்தல் பத்திரத் திட்டம் தொடங்கப்பட்டது முதல் இன்று வரை மும்பை நகரம் அதிக எண்ணிக்கையிலான தேர்தல் பத்திரங்களை விற்றுள்ளது.
- மும்பை, கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்கள் 2018 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் இன்று வரை எண்கள் மற்றும் மதிப்பின் அடிப்படையில், அதிக எண்ணிக்கையிலான தேர்தல் பத்திரங்களை விற்றுள்ளன.
- மதிப்பின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட மொத்தத் தேர்தல் பத்திரங்களில் மும்பையின் பங்கு 25.4 சதவீதம் ஆகும்.
- இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான தேர்தல் பத்திரங்களை கொல்கத்தா நகரம் விற்றுள்ளது.
- மும்பை, கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் ஆகியவை ரூ.1 கோடி மதிப்பிலான பத்திரங்களை அதிக அளவில் விற்பனை செய்துள்ளன.
- காங்டாக், ராஞ்சி மற்றும் ஸ்ரீநகர் போன்ற நகரங்களில் ஒரு தேர்தல் பத்திரம் கூட விற்கப் படவில்லை.
- அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசினால் இந்தத் தேர்தல் பத்திரம் திட்டமானது தொடங்கப் பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், வருடத்திற்கு நான்கு முறை 10 நாட்கள் வரையில் தேர்தல் பத்திரங்கள் விற்கப்படுகின்றன.
- இவை பெயர் அறியா நன்கொடையாளர்களிடமிருந்து பணத் தொகையினை நன்கொடையாகப் பெற அரசியல் கட்சிகளுக்கு வழி வகை செய்கின்றன.
- இந்தப் பத்திரங்களை விற்று மீட்டெடுப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரே வங்கி பாரத ஸ்டேட் வங்கி மட்டுமேயாகும்.

## கிரித் பரிக் குழு



- கிரித் பரிக் குழுவானது, எரிவாயு விலை நிர்ணயம் குறித்த தனது அறிக்கையினை சமீபத்தில் சமர்ப்பித்தது.
- இது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் முழு அளவிலான விலையிடல் சுதந்திரத்தை வழங்குவதற்குப் பரிந்துரை செய்தது.
- வழக்கமான எண்ணெய் பிரித்தெடுப்புத் தளங்களில் இருந்து பிரித்தெடுக்கப்படும் இயற்கை எரிவாயுவின் விலையினை, இந்திய அரசு முற்றிலுமாகத் தடையற்ற முறையில் மற்றும் சந்தைக்கேற்ற முறையில் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று இக்குழு பரிந்துரைத்துள்ளது.
- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த இயற்கை எரிவாயுவில் இது 70 சதவீதத்திற்கும் அதிகமான அளவாகும்.
- வழக்கமான எண்ணெய் பிரித்தெடுப்புத் தளங்களில் இருந்து பெறப்படும் எரிவாயுவிற்கான உச்சவரம்பு வீதத்தை ஒரு mmBTU (Metric Million British Thermal Unit) அளவிற்கு 0.5 ஆக அதிகரிக்க வேண்டும் எனவும் இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.
- 2027 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியில் வழக்கமான எண்ணெய் பிரித்தெடுப்புத் தளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் எரிவாயுவிற்கான சந்தை நிர்ணய விலையினையும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் KG-D6 போன்ற கடினமான புவியியல் அமைப்புக் கொண்ட தளங்களில் உள்ள தளங்களுக்கு தற்போதுள்ள விலை நிர்ணய சூத்திரத்தில் எந்த மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு இக்குழு பரிந்துரைக்கவில்லை.
- தற்போது, ஆழ்கடல், உயர் வெப்பநிலை, உயர் அழுத்த மண்டலங்கள் ஆகியப் பகுதிகளில் உள்ள உள்ள எண்ணெய் பிரித்தெடுப்புத் தளங்கள், இறக்குமதி செய்யப் பட்ட திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு விலையின் கூறுகளை உள்ளடக்கிய வேறுபட்ட சூத்திரத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன.
- இருப்பினும், அவை 12.46 அமெரிக்க டாலர் என்ற உச்சவரம்பு விலை அளவிற்கு உட்பட்டவையாகும்.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்திய அரசின் தலைமை




- ❖ டிசம்பர் 01 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் (UNSC) மாதாந்திர சுழற்சி முறை தலைமைப் பதவியை இந்தியா ஏற்றுக் கொண்டது.
- ❖ 2021-22 ஆம் ஆண்டில் அச்சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இந்தியாவின் இரண்டு ஆண்டு கால பதவிக் காலத்தில் இந்தியா இவ்வாறு பொறுப்பேற்பது இது இரண்டாவது முறையாகும்.
- ❖ இந்தியா முன்னதாக 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது.
- ❖ வெளி விவகாரங்கள் துறை அமைச்சரும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ்ஸும் டிசம்பர் 14 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையில் M.K.காந்தி அவர்களின் மார்பளவு உயரம் உள்ள சிலையைத் திறந்து வைக்க உள்ளார்.
- ❖ இந்தத் தினமானது காந்தி அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்திற்கு வருகைத் தந்ததைக் குறிக்கிறது.
- ❖ சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கான உறுதிப்பாட்டினைக் கொண்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, உலகளாவியப் பலதரப்பு உறவுகளின் மையப் பகுதியாகும்.
- ❖ ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது, 15 உறுப்பினர் நாடுகளைக் கொண்டது : அவற்றுள் 5 நிரந்தர மற்றும் 10 நிரந்தரமற்ற உறுப்பினர் நாடுகள் ஆகும்.
- ❖ பத்து நிரந்தரமற்ற உறுப்பினர் நாடுகள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் இரண்டு வருட காலத்திற்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றன.
- ❖ ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியா ஏழு முறை நிரந்தரமற்ற உறுப்பினராகப் பணியாற்றியுள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், இந்தியா எட்டாவது முறையாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இடம் பெற்றது.

## அனைத்து மகளிர் நீதிமன்ற அமர்வு



- இந்தியத் தலைமை நீதிபதி D.Y. சந்திரசூட் அவர்கள், ஹிமா கோஹ்லி மற்றும் பேலா M. திரிவேதி ஆகிய நீதிபதிகள் அடங்கிய ஒரு அனைத்து மகளிர் நீதிமன்ற அமர்வினை அமைத்துள்ளார்.
- இந்த அமர்வானது திருமணம் சார்ந்தப் பிரச்சினைகள் மற்றும் பிணை தொடர்பான விவகாரங்கள் ஆகியவற்றோடுத் தொடர்புடைய இடமாற்ற மனுக்களை விசாரிக்கும்.
- உச்ச நீதிமன்ற வரலாற்றில் அனைத்து மகளிர் அமர்வு அமைக்கப்படுவது இது மூன்றாவது முறையாகும்.
- நீதிபதிகள் கியான் சுதா மிஸ்ரா மற்றும் ரஞ்சனா பிரகாஷ் தேசாய் ஆகியோர் அடங்கிய முதல் அனைத்து மகளிர் அமர்வானது 2013 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- 2வது அமர்வானது 2018 ஆம் ஆண்டில் நீதிபதிகள் R. பானுமதி மற்றும் இந்திரா பானர்ஜி ஆகியோர் அடங்கிய அமர்வாகும்.
- 2020 ஆம் ஆண்டில், மதராஸ் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அமரேஷ்வர் பிரதாப் சாஹி அதன் முதல் மூன்று நீதிபதிகள் அடங்கிய முழு அளவிலான அனைத்து மகளிர் அமர்வினை அமைத்தார்.
- தற்போது உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் கோஹ்லி, B.V. நாகரத்னா மற்றும் நீதிபதி திரிவேதி உட்பட மூன்று பெண் நீதிபதிகள் உள்ளனர்.
- நீதிபதி நாகரத்னா அவர்கள் 2027 ஆம் ஆண்டில் முதல் பெண் தலைமை நீதிபதியாக பதவியேற்க உள்ளார்.
- தற்போது உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட 27 நீதிபதிகள் உள்ள நிலையில் உச்ச நீதிமன்றத்தின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையானது 34 ஆகும்.


## மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் Mk-III படைப் பிரிவு

- 840 Sqn (CG) எனப்படும் இந்திய கடலோரக் காவல்படையின் மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டரான (ALH) Mk-III என்ற படைப் பிரிவானது சமீபத்தில் அந்தப் படையில் இணைக்கப் பட்டது.
- Mk-III மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர்கள், இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனம் மூலம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது.

- இது தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள ஆபத்துக்கு உள்ளாகக் கூடியப் பகுதிகள் நிறைந்த நீர்நிலைகளில் இந்தியக் கடலோரக் காவல் படையின் செயல்திறன்களுக்கு ஒரு பெரிய உத்வேகத்தினை வழங்கும்.



## உள்ளடக்க மாநாடு




- தேசிய ஊக்க மருந்துத் தடுப்பு முகமை (NADA) ஆனது முதல் முறையாக உள்ளடக்க மாநாட்டை நடத்துகிறது.
- மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு ஊக்க மருந்துத் தடுப்பு சார்ந்த கல்வி மற்றும் செயல்முறைகளை வழங்குவதில் கவனம் செலுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பழங்குடியினர் குளிர்கால விழா

- ஜம்மு காஷ்மீரின் பந்திபோரா மாவட்டத்தில் முதன்முறையாக பழங்குடியினர் குளிர் கால விழா நடைபெற்றது.
- காஷ்மீரி சமூகத்தைச் சேர்ந்த மக்களான, குஜ்ஜர்கள் மற்றும் பேக்கர்வால்கள் வேற்றுமையில் கலாச்சார ஒற்றுமையின் தனித்துவமான சித்தரிப்பினை வெளிப் படுத்தும் விதமாக டோல் எனப்படும் கருவியின் (முரசு) தாளங்களுக்கு ஏற்ப ஒன்றாக நடனமாடினார்கள்.
- 'கட்கா' என்பது அந்த இரண்டு பழங்குடிச் சமூகத்தினரால் நிகழ்த்தப்பட்ட மற்றொரு நிகழ்வாகும்.

- இது அனைத்துப் புவியியல், சமூகம் மற்றும் அரசியல் முரண்பாடுகளுக்கு மத்தியில் குஜ்ஜர் இனத்தவர் மேற்கொண்டு வரும் போராட்ட உணர்வைச் சித்தரிக்கிறது.

## இந்தியக் கடற்படைக்கான குடியரசுத் தலைவரின் நிலையான நிறம் மற்றும் முத்திரை

- இந்தியக் கடற்படைக்கான குடியரசுத் தலைவரின் நிலையான நிறம் மற்றும் முத்திரை ஆகியவற்றிற்கான புதிய வடிவமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- இது இந்தியாவின் மகத்தான கடல்சார் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதோடு, சக்தி வாய்ந்த, திறம் மிக்க, நம்பிக்கை மற்றும் பெருமைமிக்க இந்தியக் கடற்படையை அடையாளப்படுத்துகிறது.
- இந்தியக் கடற்படைக்கான குடியரசுத் தலைவரின் நிலையான நிறம் மற்றும் முத்திரையின் முந்தைய வடிவமைப்பு 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 06 ஆம் தேதியன்று உருவாக்கப் பட்டது.
- இந்தியக் கடற்படை முத்திரையானது, மாறுபட்ட வடிவமைப்புடைய நங்கூரத்திற்கு பதிலாக தெளிவான நங்கூரத்துடன் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 1951 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதியன்று அப்போதையக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களால் இந்தியாவின் மூன்று படைகளில் ஒன்றான கடற் படைக்கு President’s Colour வழங்கப்பட்டது.

## அரசியலமைப்பு - ஒரு பெண்ணிய ஆவணம்


- தலைமை நீதிபதி D.Y. சந்திரசூட் அவர்கள், "வயது வந்தோர் வாக்குரிமை: இந்தியாவின் அரசியல் மாற்றத்தை ஒரு சமூக மாற்றமாக பரிமாற்றுதல்" என்ற கருத்துருவின் கீழ், 8வது டாக்டர் L.M. சிங்வி நினைவு விரிவுரையை ஆற்றினார்.
- "வளர்ச்சியடைந்த" மேற்கத்திய ஜனநாயக நாடுகளில் பெண்களுக்கும், கறுப்பின மக்களுக்கும், தொழிலாள வர்க்கத்தினருக்கும் இத்தகைய உரிமைகள் வழங்கப் பட்ட போது, அனைவருக்குமான வயது வந்தோர் உரிமையை அறிமுகப் படுத்தியது ஒரு புரட்சிகரமான செயல் என்று அவர் குறிப்பிட்டார்.



- இந்த வகையில், நமது அரசியலமைப்பு ஒரு பெண்ணிய ஆவணம் என்பதோடு, ஒரு சமத்துவச் சமூக மாற்ற ஆவணமாகவும் அது உள்ளது.
- இது காலனித்துவ மற்றும் காலனித்துவத்திற்கு முந்தையப் பாரம்பரியத்தில் இருந்து ஒரு முறிவாகக் கருதப் படுவதோடு, உண்மையிலேயே இந்தியர்களின் கற்பனையினுடைய விளைபொருளாக இருந்த இந்த நடவடிக்கையானது அரசியல் அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு துணிச்சல் மிக்க நடவடிக்கையாகும்.

## சங்கம் - கடற்படைப் பயிற்சி

- சங்கம் எனப்படும் 7வது கடற்படைப் பயிற்சியானது கோவாவில் தொடங்கியது.
- இது இந்தியக் கடற்படைப் பிரிவான MARCOs மற்றும் அமெரிக்கக் கடற்படைப் பிரிவான SEALs ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டுக் கடற்படை சிறப்புப் பயிற்சி ஆகும்.
- சங்கம் கடற்படைப் பயிற்சியானது முதன்முதலில் 1994 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- மேலும், இது இரு நாடுகளுக்கு இடையிலான ஒரு முக்கியமான இராணுவ மற்றும் உத்திசார் முயற்சியாகும்.




## அச்சகம் மற்றும் எண்ணிம ஊடகச் சங்கம்

- இந்தியா முழுவதும் செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்களை வெளியிடும் நிறுவனங்களுக்கான ஒரு சுய ஒழுங்குமுறை அமைப்பாக அச்சகம் மற்றும் எண்ணிம ஊடகச் சங்கத்தினை (PADMA) அறிவித்து மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.
- அச்சகம் மற்றும் எண்ணிம ஊடகச் சங்கம் என்பது 47 செய்தி வெளியீட்டு நிறுவனங்களைக் கொண்ட ஒரு சுய ஒழுங்குமுறை அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது அதன் உறுப்பினர்களாக உள்ள வெளியீட்டு நிறுவனங்களின் தளங்களில் வெளியிடப்படும் எண்ணிம ஊடகச் செய்தி உள்ளடக்கம் தொடர்பான குறைகளைத் தீர்ப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள அமைப்பாகும்.
- முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி மூல் சந்த் கார்க் இந்த அமைப்பிற்குத் தலைமை தாங்குவார்.
- இந்த அமைப்பில் பகுதி நேர உறுப்பினரும் இடம் பெறுவர்.


## தேசியக் கட்சி அந்தஸ்து - ஆம் ஆத்மி கட்சி

- ஆம் ஆத்மி கட்சியானது, தேசியக் கட்சிகள் என்ற குழுவில் சேர உள்ளது.
- அரவிந்த் கெஜ்ரிவால் 2012 ஆம் ஆண்டில் ஆம் ஆத்மி கட்சியை (AAP) தொடங்கினார்.
- ஒரு தேசியக் கட்சி என்பது குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் இரண்டு சதவீத மக்களவைத் தொகுதிகளில், அதாவது 11 இடங்களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
- ஆம் ஆத்மி கட்சியின் உறுப்பினர்கள் எவரும் மக்களவை உறுப்பினர்களாக இடம் பெற வில்லை.
- இதற்கான மற்றொரு நிபந்தனை என்னவென்றால், அந்தக் கட்சியானது நான்கு மாநிலங்களில் மாநிலக் கட்சி என்ற அங்கீகாரத்தினைப் பெற்றிருக்க வேண்டும்.
- ஆனால், இக்கட்சி டெல்லி மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பெரிய ஆதரவுடன் அரசினை அமைத்துள்ளது.
- கோவா மாநிலத்தில், இந்தக் கட்சி ஆறு சதவீத வாக்குகளைப் பெறுதல் / இரண்டு இடங்களில் வெற்றி பெறுதல் என்ற நிபந்தனையைப் பூர்த்தி செய்கிறது.
- தற்போது எட்டு தேசியக் கட்சிகள் மட்டுமே இந்திய தேர்தல் ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- அவை பா.ஜ.க., காங்கிரஸ், தேசிய மக்கள் கட்சி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, தேசியவாத காங்கிரஸ் கட்சி, இந்தியப் பொதுவுடைமை கட்சி, இந்தியப் பொதுவுடைமை கட்சி (மார்க்சிஸ்ட்), மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியனவாகும்.
- இந்த அந்தஸ்தின் காரணமாக, ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல் சின்னமானது (துடைப்பம்) இந்தியா முழுவதும் மாற்றப்படாமல் இருக்கும்.
- தேசியக் கட்சிகள் ஆனது பொதுத் தேர்தல்களின் போது, ஆகாசவாணி மற்றும் தூர்தர்ஷன் ஆகியவற்றில் ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பு அலைவரிசைகளைப் பெறுகின்றன.
- அது தனது கட்சியின் தலைமை அலுவலகத்தினைக் கட்டமைப்பதற்காக வேண்டி அரசு நிலத்தைப் பெறும்.
- அங்கீகரிக்கப்பட்ட 'மாநில' மற்றும் 'தேசிய' கட்சிகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய ஒரே ஒரு முன்மொழிபவர் மட்டுமே தேவை.



## வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதா 2021

- வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதாவானது, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று, பாராளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- இது 1972 ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டத்தில் குறிப்பிடத்தக்க சில திருத்தங்களைச் மேற்கொள்கிறது.
- இந்த ஆண்டின் ஆகஸ்டு மாதத்தில் இந்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப் பட்டது.
- இந்தச் சட்டத்தினால் பாதுகாக்கப்படும் உயிரினங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை அதிகரிப்பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அழியும் நிலையில் உள்ள வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) இனங்களில் மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கையின் விதிகளை இந்தச் சட்டத்தில் செயல்படுத்துவதன் மூலம் இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.




- 43வது பிரிவில் மிக முக்கியமான திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- முதல் அட்டவணையில் இடம் பெற்றுள்ள யானை இனங்களை, 'சமய அல்லது வேறு எந்த நோக்கத்திற்காகவும்' பயன்படுத்த இது அனுமதிக்கிறது.
- இத்திருத்தத்திற்கு வனவிலங்கு ஆர்வலர்கள் மற்றும் விலங்கு நிபுணர்கள் ஆகியோர் கடும் விமர்சனத்தைத் தெரிவித்துள்ளனர்.

- இந்தியாவில் விலங்குகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத வர்த்தகத்தினைத் தடுக்கும் இன்ன பிற ஒழுங்கு முறைச் சட்டங்கள்
    - சுங்கச் சட்டம், 1962
    - வெளிநாட்டு வர்த்தகம் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1992
    - ஏற்றுமதி இறக்குமதி கொள்கை மற்றும் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972.

## 6வது வந்தே பாரத் இரயில்

- நாக்பூர் நகரை பிலாஸ்பூர் நகருடன் இணைக்கும் 6வது வந்தே பாரத் விரைவு இரயில் சேவையினைப் பிரதமர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- ஏற்கனவே டெல்லி-வாரணாசி, டெல்லி - ஸ்ரீ வைஷ்ணோ தேவி மாதா கத்ரா, காந்திநகர் - மும்பை, புதுடெல்லி - ஆம்ப் ஆண்டௌரா மற்றும் சென்னை - மைசூரு ஆகிய நகரங்களுக்கு இடையே வந்தே பாரத் இரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, டெல்லி-வைஷ்ணோ தேவி, கத்ரா வழித் தடத்தில் முழுவதும் சைவ உணவு வகைகள் வழங்கப்படும் வசதி கொண்ட முதல் வந்தே பாரத் இரயில் சேவையினைத் தொடங்கியது.




## முப்பரிமாண முறையில் உயிரி அச்சிடல் முறைக்கான சிறப்பு மையம்

- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது (IISc) இந்தியாவின் முதல் முப்பரிமாண முறையில் உயிரி அச்சிடல் முறைக்கான ஒரு சிறப்பு மையத்தினைத் தொடங்கியுள்ளது.
- திசு பொறியியல், மீளுருவாக்க மருத்துவம் மற்றும் புதிய மருந்துகளின் கண்டுபிடிப்பு ஆகியவற்றில் மேலும் புதிய கண்டுபிடிப்புகளை கொண்டு வருவதற்காக வேண்டி ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான செயற்கருவிகளை வழங்குவதில் இந்த மையம் கவனம் செலுத்தும்.
- இது முப்பரிமாண முறையில் உயிரி அச்சிடல் அமைப்புகளுக்கான அணுகல் வாய்ப்புகளை வழங்குவதோடு, ஆராய்ச்சியாளர்கள் முக்கியமானப் பயன்பாடுகள் தொடர்பான தங்கள் பணியை மேலும் துரிதப்படுத்தவும் உதவுகிறது.



## 21 பசுந்தட விமான நிலையங்களுக்கு ஒப்புதல்





- இந்தியாவில், இதுவரை கட்டுமானப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலத்தில் அமைக்கப்படும் (பசுந்தடம்) 21 விமான நிலையங்களை அமைப்பதற்கு மத்திய அரசு சமீபத்தில் "கொள்கைசார்" ஒப்புதலை அளித்துள்ளது.
- இதுவரை கட்டுமானப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலத்தில் அமைக்கப் படும் இந்த 21 விமான நிலையங்களில், ஒன்பது விமான நிலையங்கள் ஏற்கனவே செயல்பாட்டுக்கு வந்துள்ளன.
- கிரீன்ஃபீல்ட் விமான நிலையம் என்பது எந்தவொரு மேம்பாட்டு நடவடிக்கைகளும் இல்லாத நிலத்தில், கடந்த காலத்தில் எந்தவொருப் பணியும் செய்யப்படாத இடத்தில் புதிதாகக் கட்டப்படும் ஒரு விமான நிலையமாகும்.
- தற்போதுள்ள விமான நிலையங்களில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் இந்த விமான நிலையங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- பொதுவாக, இது நகரத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள பகுதியில், சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் தினசரி ஊதியம்

- கேரளாவில் பணி புரியும் தினசரி கூலிக் காரர்கள் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா போன்ற தொழில்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் பணி புரியும் தங்கள் சக ஊழியர்களை விட அதிகமாக வருமானம் ஈட்டியுள்ளனர்.

- அவர்கள் தேசியச் சராசரியான ரூ.373.30 என்ற அளவை விட இருமடங்கு (837.3) அதிகம் ஈட்டியுள்ளனர்.
- கேரளாவில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் சராசரி தினசரி ஊதியமானது, குறைந்த ஊதியம் வழங்கப்படும் மாநிலங்களான திரிபுரா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவற்றினை விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- மற்ற இரண்டு முன்னணி மாநிலங்களாக ஜம்மு & காஷ்மீர் மற்றும் தமிழ்நாடு உள்ள நிலையில், அங்கு வழங்கப்படும் ஊதியம் முறையே ரூ.519 மற்றும் ரூ.478 ஆகும்.
- ஒரு தொழிலாளிக்குச் சராசரியாக ரூ.726.8 ஊதியம் வழங்குவதுடன் அதிக ஊதியம் பெறும் வேளாண் தொழிலாளர்களைக் கொண்டு கேரள மாநிலம் முன்னணியில் உள்ளது.
- பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஜம்மு & காஷ்மீரில் சராசரியாக ஒரு நபருக்கு ரூ. 524.6 ரூபாயும், இமாச்சலப் பிரதேசத்தில் ஒரு நபருக்கு ரூ. 457.6 ரூபாயும் தமிழ்நாட்டில் ஒரு நபருக்கு ரூ.445.6 ரூபாயும் சராசரி ஊதியமாக வழங்கப் படுகிறது.




## PM VIKAS திட்டம்

- பிரதான் மந்திரி கௌஷல் கோ காம் காரியக்ரம் (PMKKK) என்ற திட்டமானது தற்போது பிரதான் மந்திரி விராசத் கா சம்வர்தன் (PM VIKAS) திட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது சிறுபான்மை விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு மத்திய அரசின் திட்டமாகும்.
- திறன் மேம்பாடு, கல்வி, பெண்கள் தலைமைத்துவம் மற்றும் தொழில்முனைவு ஆகிய கூறுகளைப் பயன்படுத்தி சிறுபான்மையினரின், குறிப்பாக கைவினைஞர் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தத் திட்டமானது சிக்கோ அவுர் கமாவோ, USTTAD, ஹமாரி தரோஹர், நை ரோஷ்னி மற்றும் நை மன்சில் ஆகிய ஐந்து திட்டங்களை ஒருங்கிணைக்கிறது.




## BOLD திட்டம்

- சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகமானது, காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையத்தின் (KVIC) மூலம் "BOLD திட்டம்" என்ற ஒரு தனித்துவமான சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- BOLD என்பது வறட்சியில் காணப்படும் நிலங்களில் அமைந்துள்ள மூங்கில் சோலை என்பதனைக் குறிக்கிறது.
- பல்வேறு கிராமத் தொழில்கள் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் மூங்கில் சாகுபடியின் சுற்றுச்சூழல் சார்ந்த நன்மைகள் மற்றும் பொருளாதார ஆற்றலை அறிவியல் ரீதியாகப் பயன்படுத்தச் செய்வதுமே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையத்தின் கீழ் இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப் படவில்லை.
- அசாம் மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட மூங்கில் கன்றுகள் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.
- இது ஒரு சோதனைத் திட்டம் மட்டுமே என்பதால் இந்தத் திட்டத்திற்கு இலக்கு எதுவும் நிர்ணயிக்கப் படவில்லை.



## நமாமி கங்கைத் திட்டத்திற்குக் கிடைத்த அங்கீகாரம்

- இந்தியாவின் புனித நதியான கங்கையைப் புனரமைப்பதற்காகத் தொடங்கப்பட்ட நமாமி கங்கை திட்டத்தினை இயற்கையைப் புதுப்பிப்பதற்காகத் தொடங்கப்பட்ட 10 சிறந்த உலக மறுசீரமைப்புப் பணிகளில் ஒன்றாக ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ளது.
- சுற்றுச்சூழல் அமைப்பின் மறுசீரமைப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் பத்து ஆண்டுகளுக்கான முன்னெடுப்பின் கீழ் இவை தேர்ந்தெடுக்கப்பட்டன.
- இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆகியவற்றினால் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் ஒரு உலகளாவிய இயக்கமாகும்.
- கங்கை நதியைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து 2014 ஆம் ஆண்டில் மத்திய அரசினால் நமாமி கங்கை திட்டம் தொடங்கப்பட்டது.



## 20 அணுசக்தி நிலையங்கள்



- இந்தியா 2031 ஆம் ஆண்டிற்குள் 20 அணுமின் நிலையங்களைத் தொடங்க திட்டம் இட்டுள்ளது.
- இது கிட்டத்தட்ட 15,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை இந்திய மின் உற்பத்தித் திறனில் சேர்க்கிறது.
- இந்த 20 அணுமின் நிலையங்களில் 700 மெகாவாட் திறன் கொண்ட முதலாவது அலகானது 2023 ஆம் ஆண்டில் குஜாரத்தின் காக்ராபர் நகரில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- கல்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் 500 மெகாவாட் திறன் கொண்ட முதலுறு வேக ஈனுலையானது 2024 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.
- அதைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டில் கூடங்குளத்தில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் அமைக்கப்பட உள்ளன.

## முதல் கார்பன்-நடுநிலை ஆற்றல் பரிமாற்றம்

- எரிசக்தி வர்த்தகத் தளமான இந்திய எரிசக்திப் பரிமாற்றம் என்ற நிறுவனமானது நாட்டின் முதல் கார்பன்-நடுநிலை ஆற்றல் பரிமாற்ற நிறுவனமாக மாறியது.
- கார்பன் உமிழ்வினை ஈடு செய்வதற்குச் சந்தை அடிப்படையிலான வர்த்தக செயற் கருவிகளை இது பயன்படுத்துகிறது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வை எட்டுவதனை இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது.

## பெருந்திரள் அளவில் உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது ஃப்ளெக்ஸ் எரிபொருளில் இயங்கும் மகிழுந்து




- மாருதி சுஸுகி நிறுவனமானது, வேகன் ஆர் எனப்படும் ஃப்ளெக்ஸ் எரிபொருளில் இயங்கும் மகிழுந்தின் முன்மாதிரியினை டெல்லியில் காட்சிப் படுத்தியுள்ளது.
- இது இந்தியாவில் பெருந்திரள் அளவில் உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது ஃப்ளெக்ஸ் எரிபொருளில் இயங்கும் மகிழுந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- 20% (E20) மற்றும் 85% (E85) ஆகிய எத்தனால்-பெட்ரோல் எரிபொருள் கலவையில் இயங்கும் வகையில் இந்த மகிழுந்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இந்த முன்மாதிரி வாகனமானது அதிக எத்தனால் கலந்த பெட்ரோல் எரி பொருளினைப் பயன்படுத்துவதற்காக வேண்டி வடிவமைக்கப்பட்ட மேம்படுத்தப் பட்ட இயந்திரத்தைக் கொண்டுள்ளது.

## உலக சுகாதார அமைப்பின் உலகப் பாரம்பரிய மருந்துகள் மையம்

- குஜராத்தின் ஜாம்நகரில் உலக சுகாதார அமைப்பின் உலகப் பாரம்பரிய மருந்துகள் மையத்தினை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் உலகப் பாரம்பரிய மருந்துகள் மையமானது, ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் ஜாம்நகரில் நிறுவப்பட உள்ளது.
- உலகெங்கிலும் உள்ள பாரம்பரிய மருத்துவத்திற்கான முதல் மற்றும் ஒரே உலகளாவியப் புற மையம் (அலுவலகம்) இதுவாகும்.




## சூர்ய கிரண் XVI பயிற்சி

- சூர்ய கிரண் பயிற்சி என்பது இந்தியா மற்றும் நேபாள இராணுவப் படைகளுக்கு இடையில் நேபாளத்தில் நடைபெற்ற ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.
- கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளின் அனுபவங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றினை பகிர்தல் மற்றும் இயங்கு திறனை மேம்படுத்துதல் ஆகியவை இதன் நோக்கங்களாகும்.

- இதன் முதலாவது இருதரப்புப் பயிற்சியானது 2011 ஆம் ஆண்டில் மிசோரமில் நடைபெற்றது.



## PathoDetect சோதனைக் கருவி

- மைலேப் டிஸ்கவரி சொலூசன்ஸ் என்ற நிறுவனத்தின் ‘PathoDetect’ கருவியானது காசநோயினைத் துல்லியமாகக் கண்டறிவதாகக் கூறப்படுகிறது.
- இரண்டு மணி நேரத்திற்குள் பல மாதிரிகளின் தானியங்கிப் பரிசோதனையை இந்தக் கருவி நிறைவு செய்துள்ளது.
- கோவிட் பரிசோதனையில் பயன்படுத்தப்பட்ட RT-PCR எனப்படும் அதே தொழில் நுட்பத்தினை இந்தக் கருவிப் பயன்படுத்துகிறது.
- இது டிஎன்ஏ தகவலைப் பிரித்தெடுத்து, அந்த மரபணுக்கள் காசநோயை உண்டாக்கச் செய்கின்ற பாக்டீரியமா எனக் கண்டறியும் வகையில் இது ஒரு மூலக்கூறு சார்ந்த கருவியாகும்.




## எண்ணிம இந்தியா விருதுகள் 2022

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் திறன்மிகு நகரங்கள் திட்டமானது, 2022 ஆம் ஆண்டின் எண்ணிம இந்தியா விருது விழாவில் "திறன்மிகு நகரங்கள் தரவு : தரவுகள் வழியாக நகரங்களை மேம்படுத்துதல்" என்ற முன்னெடுப்பிற்காக பிளாட்டினம் பரிசினைப் பெற்றுள்ளது.

- 'தரவுப் பகிர்வு மற்றும் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கான தரவுப் பயன்பாடு' என்ற பிரிவில் இந்த பரிசானது வழங்கப்பட உள்ளது.
- திறன்மிகு நகரங்கள் தரவு என்ற முன்னெடுப்பானது, நகர நிர்வாகங்கள் சான்றுகளின் அடிப்படையிலான தீர்மானங்களை எடுப்பதற்கு வழிவகை செய்யும் ஒரு விரிவான தரவு சார்ந்த சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான ஒரு முக்கியமான படி நிலையாகும்.
- இந்தியாவிலுள்ள 100 திறன்மிகு நகரங்களில் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக தரவுகளைப் பயன்படுத்த இந்த முன்னெடுப்பு முயல்கிறது.




## A தரநிலைப் பெற்ற பல்கலைக்கழகம்




- அமிர்தசரசில் உள்ள குருநானக் தேவ் பல்கலைக்கழகமானது, தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார வழங்கீட்டுச் சபையின் (NAAC) தரவரிசையில் A தர நிலையினைப் பெற்று உள்ளது.

- இந்தத் தரநிலையினைப் பெற்ற இந்தியாவின் முதல் பல்கலைக் கழகமாக இது திகழ்கிறது.

## வாத்நகர் நகரம்

- யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளங்களின் தற்காலிகப் பட்டியலில் இந்தியாவினைச் சேர்ந்த மேலும் மூன்று தளங்கள் சேர்க்கப் பட்டுள்ளன.
- குஜராத்தின் வாத்நகர் நகரம் மற்றும் மோதேராவில் உள்ள புகழ்பெற்ற சூரியன் கோவில் ஆகியவை இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- திரிபுராவின் உனகோட்டி பாறை வெட்டுச் சிற்பங்கள் ஆகியவை இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- வாத்நகர் ஆனது பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் சொந்த ஊர் என்றும் அறியப் படுகிறது.
- வாத்நகரின் வரலாறு கி.மு. 8 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது.
- யுனெஸ்கோ அமைப்பின் இந்தத் தற்காலிகப் பட்டியல் ஆனது ஒவ்வொரு உறுப்பினர் நாடுகளும் இந்தப் பட்டியலில் குறிப்பிடப் படுவதற்காக பரிசீலிக்க விரும்பும் இடங்களின் தொகுப்பாகும்.



## நகர்ப்புறம் 20 நிகழ்ச்சி

- 2023 ஆம் ஆண்டு நகர்ப்புறம் 20 என்ற நிகழ்ச்சியானது, இந்தியாவின் G20 அமைப்பின் தலைமையின் கீழ் அகமதாபாத் நகரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- நகர்ப்புறம் 20 (U20) என்பது G20 அமைப்பின் ஈடுபாட்டுக் குழுக்களில் ஒன்றாகும்.
- பருவநிலை மாற்றம் மற்றும் சமூக உள்ளடக்கம் உள்ளிட்ட நகர்ப்புற மேம்பாட்டின் பல்வேறு முக்கியப் பிரச்சனைகள் பற்றிய விவாதங்களை மேற்கொள்ளும் ஒரு செயல்முறையினை எளிதாக்குவதற்கு G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளில் உள்ள நகர நிர்வாகங்களுக்கு இது ஒரு தளத்தை வழங்குகிறது.
- G20 அமைப்பின் இந்தியாவின் தலைமையின் கீழ், அகமதாபாத் இந்த நிகழ்ச்சியினை நடத்தும் நிலையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தினால் இது ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

- G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் தவிர, C40 (பருவநிலை 40), UCLG (ஒருங்கிணைந்த நகரங்கள் உள்ளாட்சி அரசுகள்) அமைப்பின் உறுப்பினர் நகரங்கள் மற்றும் பார்வையாளர்களாக உள்ள நகரங்களின் மேயர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர்.

## மாநிலங்களவையின் விதிமுறைப் புத்தகத்தின் 267வது விதி

- மாநிலங்களவையின் விதிமுறைப் புத்தகத்தின் 267வது விதிமுறையானது, மேல் அவையில் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.
- ஏனெனில், குளிர்காலக் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த ஒரு அறிக்கை கூட ஏற்கப் படவில்லை.
- மாநிலங்களவையின் விதிமுறைப் புத்தகத்தின் 267வது விதிமுறையானது, அவைத் தலைவரின் ஒப்புதலுடன், சபையில் முன்னதாக தீர்மானிக்கப்பட்ட செயல்பாட்டு நிரலை இடைநிறுத்துவதற்கு வேண்டி மாநிலங்களவையின் உறுப்பினருக்கு ஒரு சிறப்பு அதிகாரத்தினை வழங்குகிறது.
- வேறு எந்த வகையான விவாதமும் அவையின் மற்ற நடைமுறையினை இடை நிறுத்தம் செய்யாது.
- 267வது விதிமுறையின் கீழ் ஒரு பிரச்சினை ஏற்றுக் கொள்ளப் பட்டால், அது அன்றைய மிக முக்கியமான தேசியப் பிரச்சினை என்பதைக் குறிக்கிறது.
- மேலும், 267வது விதிமுறையின் கீழ், அவை விவாதத்தின் போது இதற்கான ஒரு விளக்கத்தினை அளிப்பதன் மூலம் அரசு இந்த விவகாரத்திற்குப் பதிலளிக்க வேண்டும்.
- கடைசியாக 2016 ஆம் ஆண்டில் அப்போதைய அவைத் தலைவர் ஹமீத் அன்சாரி "பண மதிப்பு நீக்கம்" குறித்த விவாதத்திற்கு அனுமதி வழங்கினார்.

## குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பினை செயல்படுத்துதல்

- குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பினை (CCTNS) செயல்படுத்துவதில் அனைத்து பெரும் மாநிலங்களிலும் ஹரியானா மாநிலக் காவல் துறையானது முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு என்பது ஒருங்கிணைந்த பொதுக் காவல்துறை செயலி (CIPA) எனப்படும் ஒரு முழு அளவிலான திட்டம் சாரா திட்டத்தின் வழியில் உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

- நாடு முழுவதும் உள்ள 14,000க்கும் மேற்பட்ட காவல் நிலையங்களை ஒருங்கிணைத்த ஒரு நாடு தழுவிய இணையவழிக் கண்காணிப்பு அமைப்பினை இந்த அமைப்பு கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தினால் செயல்படுத்தப் படுகிறது.

## முதல் பசுமை எஃகு தயாரிப்பு

- மத்திய எஃகு அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா புதுதில்லியில் KALYANI FeRRESTA என்ற முதல் பசுமை எஃகு தயாரிப்பினை வெளியிட்டார்.
- இது இந்தியாவின் முதல் பசுமை எஃகு தயாரிப்பு பொருள் ஆகும்.
- இது புனேவில் அமைந்துள்ள கல்யாணி குழுமம் என்ற எஃகு உற்பத்தி நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.
- சுற்றுச்சூழலில் எந்தவொரு கரிமப் பாதிப்புகளையும் விட்டுச் செல்லாத வகையில் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் வளங்களை இது பயன்படுத்துகிறது.


## மாநிலங்களவைத் துணைத் தலைவர் குழு - P.T. உஷா

- மாநிலங்களவையின் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரபல முன்னாள் தடகள வீராங்கனை P.T. உஷாவினை நாடாளுமன்ற மேலவையின் அவைத் துணைத் தலைவர் குழுவின் உறுப்பினர்களுள் ஒருவராக நியமிப்பதற்குப் பரிந்துரைத்துள்ளார்.
- சமீபத்தில் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராகவும் P.T. உஷா தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- இவர் பெரும்பாலும் "இந்தியத் தடகளத்தின் இராணி" என்று அழைக்கப் படுகிறார்.



## தினை வகைகள் ஊக்குவிப்பு திட்டம்

- சமீபத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பானது, இத்தாலியின் ரோம் நகரில் 2023 ஆம் ஆண்டினைச் சர்வதேச தினை ஆண்டாக கொண்டாடுவதற்கான (IYOM 2023) தொடக்க விழாவை ஏற்பாடு செய்தது.
- 2023 ஆம் ஆண்டினைச் சர்வதேச தினை ஆண்டாகக் கொண்டாடுவதற்கான பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் முன்மொழிதலை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) ஏற்றுக் கொண்டது.




- தினையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, வேளாண் துறை அமைச்சகமானது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒரு தினை உணவுத் திருவிழாவை நடத்தி உள்ளது.

## அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் புதியத் தலைவர்

- மூத்த அணுசக்தி அறிவியலாளர் தினேஷ் குமார் சுக்லா, அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் (AERB) தலைவராக மூன்று ஆண்டு காலங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- G. நாகேஸ்வர ராவிற்கு அடுத்த படியாக இவர் இப்பதவியினை ஏற்றார்.
- அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் ஆனது (AERB) 1962 ஆம் ஆண்டு அணுசக்திச் சட்டம் வழங்கிய அதிகாரங்களைப் பயன்படுத்தி 1983 ஆம் ஆண்டில் இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டது.
- இது அந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சில ஒழுங்குமுறை மற்றும் பாதுகாப்புச் செயல்பாடுகளை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் ஒழுங்குமுறைச் சார்ந்த அதிகாரமானது, 1962 ஆம் ஆண்டு அணுசக்திச் சட்டம் மற்றும் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் ஆகியவற்றிலிருந்துப் பெறப்பட்டது.

Government of India
AERB
Atomic Energy Regulatory Board

- இதன் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது.
- இந்தியாவில் அயனியாக்கும் திறன் கொண்ட கதிர்வீச்சு மற்றும் அணுசக்தியின் பயன்பாடு சுகாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் எந்தவொரு தேவையற்ற ஆபத்தையும் ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதே இந்த வாரியத்தின் பணி ஆகும்.

## முதல் காலாட்படை அருங்காட்சியகம்

- இந்தியாவின் முதல் காலாட்படை அருங்காட்சியகமானது மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூரில் அமைந்த மோவ் எனுமிடத்தில் பொதுமக்களின் வருகைக்குத் திறக்கப் பட்டுள்ளது.
- இந்த அருங்காட்சியகமானது இந்திய நாட்டிலேயே முதன்மையானதும், உலகில் இரண்டாவதும் ஆகும்.
- இதற்கு முன், அமெரிக்காவில் இது போன்ற ஒரு அருங்காட்சியகம் கட்டமைக்கப் பட்டு உள்ளது.
- இந்தக் காலாட்படை அருங்காட்சியகமானது 1747 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலாட்படையின் வரலாற்றுச் சிறப்புகளை உள்ளடக்கியது.

## மிக நீளமான 'escape' சுரங்கப் பாதை - T49




- இந்தியாவின் மிக நீளமான escape tunnel எனப்படும் 12.89 கிமீ நீளம் கொண்ட சுரங்கப் பாதையானது ஜம்மு காஷ்மீரில் உள்ள பனிஹால்-கத்ரா என்ற இரயில் பாதையில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இது இந்திய இரயில்வே நிர்வாகத்தினால் கட்டி முடிக்கப் பட்டது.
- இது உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இரயில் பாதை (USBRL) திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## AIM-UNDP Youth Co:Lab முன்னெடுப்பு

- நிதி ஆயோக் அமைப்பின் அடல் புத்தாக்கத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் இந்தியப் பிரிவு ஆகியவை இணைந்து இளம் தொழில் முனைவோருக்கான 5வது Youth Co:Lab முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளன.

- இது ஆசிய பசிபிக் பகுதியில் உள்ள மிகப்பெரிய இளையோர் புத்தாக்க இயக்கமாகும்.
- இது 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு (UNDP) மற்றும் சிட்டி அறக்கட்டளை ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப்பட்டது.
- Youth Co:Lab என்ற முன்னெடுப்பானது இன்றுவரை, 28 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டில் நிதி ஆயோக் அமைப்பின் அடல் புத்தாக்கத் திட்டத்துடன் இணைந்து, ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் இந்தியப் பிரிவினால் இந்திய நாட்டில் தொடங்கப்பட்டது.




## சிங்கம் @ 47: அம்ருத்காலுக்கான தொலைநோக்குத் திட்டம்




- கிர் ஆசிய சிங்கங்களைப் பாதுகாப்பதற்காக சிங்கம் @ 47: அம்ருத்காலுக்கான தொலைநோக்குத் திட்டத்தை மத்திய அரசு வெளியிட்டது.
- இது சிங்கங்கள் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு, அதிகரித்து வரும் சிங்கங்களின் எண்ணிக்கையை நிர்வகிப்பதற்கான வாழ்விடங்களைப் பாதுகாத்து அதை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது உள்ளூர்ச் சமூகங்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்குதல், இந்தப் பெரிய பூனை இனங்களின் நோயினைக் கண்டறிதல் மற்றும் அதற்கான சிகிச்சை பற்றிய உலகளாவிய அறிவுசார் மையத்தை நிறுவுதல் மற்றும் உள்ளடக்கிய பல்லுயிர்ப் பாதுகாப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.


## நாசி வழி செலுத்தும் கோவிட் தடுப்பூசி

- பாரத் பயோடெக்கின் நாசி வழி செலுத்தும் கோவிட் தடுப்பூசியைக் கூடுதல் ஊக்க மருந்தாக செலுத்த மத்திய சுகாதார அமைச்சகம் அங்கீகரித்துள்ளது.
- இது 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக வேண்டி விரைவில் Co-WIN என்ற இணைய தளத்தில் அறிமுகப் படுத்தப் படும்.
- BBV154 நாசி எனும் இந்தத் தடுப்பூசி கடந்த மாதம் இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஒப்புதலைப் பெற்றது.



## PMGKAY மற்றும் NFSA திட்ட இணைப்பு

- மத்திய அரசு மேலும் ஓராண்டுக்கு இலவச உணவு தானியங்களை வழங்குவதை ஒரு நோக்கமாகக் கொண்டு பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனாவை (PMGKAY) தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்துடன் (NFSA) இணைக்க முடிவு செய்துள்ளது.
- நாடு தழுவிய முழு ஊரடங்கு மூலம் வாழ்வாதாரம் முடங்கிய ஏழைகளுக்கு உதவிட PMGKAY திட்டம் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்டது.



WHY PMGKAY, NFSA WERE MERGED

LOWER FOODGRAIN STOCKS

As on Nov 30, combined stock of rice (115.42 lakh metric tonne) and wheat (190.27 LMT) was at 305.69 LMT. This was lower than the figure of 591.56 LMT (rice 213.03 LMT, wheat 378.53 LMT) on Nov 30, 2021.

HIGHER ECONOMIC COST

Economic cost for rice has increased to Rs 3,670.04 per quintal this year from Rs 3,597.17 last year. For wheat, it has gone up to Rs 2,588.70 per quintal from Rs 2,4999.69 per quintal last year.

- இத்திட்டத்தின் கீழ் 80 கோடி ஏழைகளுக்கு மாதந்தோறும் 5 கிலோ கோதுமை மற்றும் அரிசி இலவசமாக வழங்கப் படுகிறது.
- NFSA சட்டத்தின் கீழ், ஒவ்வொரு அந்த்யோதயா அன்ன யோஜனா (AAY) குடும்ப அட்டை வைத்திருக்கும் குடும்பமும், மாதம் ஒன்றுக்கு 35 கிலோ உணவு தானியங்கள் பெற உரிமை உண்டு.
- மற்ற அனைத்து வகை குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கும் ஒரு நபருக்கு மாதம் 5 கிலோ உணவு தானியங்கள் வழங்கப்படும்.

## 'நேரடி மற்றும் செயல்பாடு சார்ந்த அணுகல்' குறித்த தணிக்கை

- இந்தியத் தலைமை நீதிபதி D.Y.சந்திரசூட், "நேரடி மற்றும் செயல்பாட்டு அணுகல்" பற்றிய ஒரு தணிக்கையை மேற்கொள்வதற்காக வேண்டி நீதிபதி தலைமையிலான ஒரு குழுவினை அமைத்துள்ளார்.
- உச்ச நீதிமன்ற வளாகத்தினை மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த வகையில் மாற்றச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உச்ச நீதிமன்ற அணுகல் தொடர்பான இந்தக் குழுவானது நீதிபதி S. ரவீந்திர பட் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

## ஆக்கிரமிக்கப்பட்ட மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்

- இந்தியாவில் மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் அல்லது தளங்கள் மொத்தம் 3,695 உள்ளன.
- இந்தியா முழுவதும் மொத்தம் மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட 356 நினைவுச் சின்னங்கள் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.
- இது 2021 ஆம் ஆண்டில் பதிவான ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களின் 321 என்ற எண்ணிக்கையிலிருந்து மேலும் அதிகரித்துள்ளது.
- மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட, நினைவுச் சின்னங்கள் உத்தரப் பிரதேச மாநிலத்தில் அதிக எண்ணிக்கையில் (743) உள்ளன.
- மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் அதிக எண்ணிக்கையில் (412) உள்ள இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- அதே நேரத்தில், சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நினைவுச் சின்னங்களும் உத்தரப் பிரதேசம் (75) மற்றும் தமிழ்நாடு (74) என்ற அளவில் அதிக எண்ணிக்கையில் உள்ளன.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் முறையே 48 மற்றும் 46 நினைவுச் சின்னங்கள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன.
- மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் என்பது, 1958 ஆம் ஆண்டு பண்டைய கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் மற்றும் எஞ்சியப் பகுதிகள் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப் பட்டவையாகும்.
- 2010 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ், மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னம் அமைந்துள்ள 100 மீட்டர் பரப்பிற்குள் கட்டுமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தடை செய்யப் பட்டுள்ளன.

- இந்தப் பகுதிகளில் அமைந்துள்ள 300 மீட்டர் பரப்பிற்குள் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகள் கடுமையான ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.




## வாணி திட்டம்





- வாணி திட்டம் ஆனது இந்திய அறிவியல் கல்விக் கழகம் (IISc), ARTPARK (செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் தொழில்நுட்ப பூங்கா) மற்றும் கூகுள் ஆகியவற்றினால் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.
- பல்வேறு இந்திய மொழிகள் மற்றும் பேச்சுவழக்குகளைப் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலான செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஒரு மொழி மாதிரியை உருவாக்கச் செய்வதற்காக இந்தியா முழுவதிலும் இருந்து பல்வேறு உரையாடல் தரவுகளைச் சேகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய கைபேசிவழி கண்காணிப்பு அமைப்பு

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், பணிபுரியும் தொழிலாளர்களின் வருகைப் பதிவினை எண்ணிம முறையில் பதிவு செய்யும் முறை என்பது, 2023 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் நாடு முழுவதும் மத்திய அரசினால் அமல்படுத்தப்பட உள்ளது.

- 2022 ஆம் ஆண்டு மே 16 ஆம் தேதி முதல் 20 அல்லது அதற்கு மேற்பட்ட பணி நபர்களைக் கொண்ட அனைத்துப் பணியிடங்களுக்கும் ஒரு செயலியின் மூலம் வருகையைப் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இதற்காக இரு வேலையும் முத்திரையிடப்பட்ட மற்றும் புவியிடங்காட்டி சார்ந்த குறியீடு வழங்கப்பட்ட தொழிலாளர்களின் புகைப்படங்கள் இதில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- திறன் சாராத தொழிலாளர்களை விட சற்றே அதிக ஊதியம் பெறும் துணைவர்கள் / மேற்பார்வையாளர்கள் இந்தப் பணியினை மேற்கொள்ள வேண்டும்.




## AVGC மேம்பாட்டுப் பணிக்குழுவின் அறிக்கை




- இயங்குபடம், காட்சிக் கலைகள், விளையாட்டு மற்றும் வரைகதை (AVGC) மேம்பாட்டுப் பணிக் குழுவின் அறிக்கையினை அரசாங்கம் பெற்றுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையானது AVGC மேம்பாட்டுப் பணிக் குழுவை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- AVGC தொழிற்துறையின் பரவலை விரிவுபடுத்துவதற்கு, உள்நாட்டுத் திறன், மற்றும் உள்நாட்டு மற்றும் உலகளாவியத் தேவை ஆகியவற்றை உணர்ந்து அதனை மேம்படுத்தவதனை இந்த பணிக்குழு வலியுறுத்துகிறது.

## 'PRASAD' திட்டம்

- இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள புனிதப் பயண நகரமான ஸ்ரீசைலத்தில் உள்ள சுற்றுலா வசதி வழங்கீட்டு மையத்தில் 'PRASAD' என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- PRASAD திட்டம் என்பது 'யாத்திரை மீளுருவாக்கம் மற்றும் ஆன்மீகப் பெருக்கத்திற்கான உத்வேக இயக்கம்' ஆகும்.
- இது சுற்றுலா அமைச்சகத்தின் கீழ் மேற்கொள்ளப் படும் முழுவதுமாக மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறும் திட்டமாகும்.
- சமயச் சுற்றுலா அனுபவத்தை மேம்படுத்துவதற்காக வேண்டி இந்தியா முழுவதும் உள்ள புனிதப் பயணத் தலங்களை மேம்படுத்தி, அதை அடையாளம் காண்பதில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது.
- இது ஒரு முழுமையான சமயச் சுற்றுலா அனுபவத்தை வழங்குவதற்கான முன்னுரிமை அடிப்படையிலான, திட்டமிடப்பட்ட மற்றும் நிலையான முறையிலான புனிதப் பயண இடங்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உள்நாட்டுச் சுற்றுலாவின் வளர்ச்சியானது பெருமளவில் புனிதப் பயணச் சுற்றுலாவையே சார்ந்துள்ளது.

## இந்தியாவில் பதிவான சாலை விபத்துகள் – 2021

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் ஆனது, 'இந்தியாவில் பதிவான சாலை விபத்துகள் 2021' என்ற வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இதன்படி, 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் 4,12,432 சாலை விபத்துகள் பதிவாகி உள்ளன.
- இந்த விபத்துகளின் மூலம் 1,53,972 பேர் கொல்லப் பட்டனர்.
- சுமார் 3,84,448 நபர்கள் காயமடைந்துள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டில் சாலை விபத்துக்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு 12.6% அதிகரித்து உள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது, 2021 ஆம் ஆண்டில் சாலை விபத்துகளால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை 1.9 சதவிகிதம் அதிகரித்துள்ளது.




## மின்னணு விளையாட்டுகளுக்கு அங்கீகாரம்

- இந்திய அரசானது மின்னணு விளையாட்டுகளை நாட்டின் முக்கிய விளையாட்டுத் துறைகளுள் ஒன்றாக ஒருங்கிணைத்துள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் "அரசியலமைப்புச் சட்டத்தின் 77வது சட்டப் பிரிவின் (3)வது உட்பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி மின்னணு விளையாட்டுகளை நிர்வகிப்பதற்கான விதிமுறைகளை திருத்தி அமைத்து உள்ளார்.





- தற்போது, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவை "பல்துறை விளையாட்டுப் போட்டிகளின் ஒரு பகுதியாக மின்னணு விளையாட்டுகளை" சேர்க்க இயலும்.
- மின்னணு விளையாட்டுகள் ஆனது 2018 ஆம் ஆண்டு ஜகார்த்தா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஒரு செயல் விளக்க அடிப்படையிலான விளையாட்டுப் போட்டியாக சேர்க்கப் பட்டது.
- அதாவது இந்த விளையாட்டுப் போட்டிகளில் வென்ற பதக்கங்கள் ஒட்டு மொத்த அதிகாரப் பூர்வப் பதக்கப் பட்டியலில் கணக்கிடப்படவில்லை.

- ❖ இயங்கலை விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான விவகாரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தலைமை முகமையாக விளங்கும்.

## அம்ரித் பாரத் இரயில் நிலையத் திட்டம்

- ❖ மத்திய இரயில்வே அமைச்சகம் ஆனது இந்தியா முழுவதும் உள்ள இரயில் நிலையங்களை நவீனப்படுத்துவதற்காக அம்ரித் பாரத் இரயில் நிலையத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இத்திட்டத்தின் கீழ், குறைந்தபட்ச அத்தியாவசிய வசதிகளுக்கு அப்பாற்பட்ட பல்வேறு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் இரயில் நிலைய வளாகத்தின் கூரையின் மேற்பகுதியில் அமைந்த விற்பனைக் கூடம் மற்றும் நகர வணிக மையங்களை நீண்ட காலத்திற்கு இயங்கும் வகையில் உருவாக்குதல் ஆகியவை அடங்கும்.
- ❖ இத்திட்டம் தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்துதல் & மாற்றுதல் மற்றும் புதிய வசதிகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றைப் பூர்த்தி செய்யும்.
- ❖ இதில், நடைமேடைகள், இணைய சேவை இணைப்பு, பல்வடிவமைப்பு சார்ந்த அறை கலன்கள், உள்ளடக்கம், நிலைத்தன்மை மற்றும் பயனர் அனுபவத்தை மேம்படுத்தச் செய்தல் ஆகியவை அடங்கும்.



# சர்வதேசச் செய்திகள்

## 'நசீம் அல் பஹ்ர்' பயிற்சி

- இந்தியக் கடற்படைக் கப்பல் ஐஎன்எஸ் திரிகாண்ட், ஐஎன்எஸ் சுமித்ரா மற்றும் கடல்சார் ரோந்து விமானம் டோர்னியர் ஆகியவை 13வது ‘நசீம் அல் பஹ்ர்’ பயிற்சியில் பங்கேற்றன.
- இது இந்தியக் கடற்படை (IN) மற்றும் ஓமன் நாட்டுக் கடற்படை (RNO) இடையேயான இருதரப்புக் கடல்சார் பயிற்சியாகும்.
- மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படுகிற இது, துறைமுகம் சார்ந்த பயிற்சி கட்டம், கடல்சார் பயிற்சி கட்டம் மற்றும் விவாதம் சார்ந்த பயிற்சி ஆகியனவாகும்.
- முதல் IN-RNO (இந்தியக் கடற்படை மற்றும் ஓமன் நாட்டுக் கடற்படை) பயிற்சியானது 1993 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டானது, IN-RNO இருதரப்புப் பயிற்சிகளின் 30 ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.




## அக்னி வாரியர் பயிற்சி

- சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒரு இருதரப்புப் பயிற்சியான 12வது அக்னி வாரியர் பயிற்சி சமீபத்தில் மகாராஷ்டிராவின் தேவ்லாலி என்ற இடத்தில் நடைபெற்றது.
- கூட்டு ஆயுதத் திறன் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் புதிய தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த பீரங்கி உபகரணங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பீரங்கித் துப்பாக்கிகள் மற்றும் சிறு பீரங்கிவகை ஆயுதங்கள் ஆகியவை இதன் இறுதிக் கட்டப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டன.

## வாசெனார் அமைப்பின் தலைமை

- 2023 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று, வாசெனார் அமைப்பின் முழு அளவிலான தலைமைப் பொறுப்பினை இந்தியா ஏற்க உள்ளது.
- 42 உறுப்பினர்களைக் கொண்ட இந்தத் தன்னார்வ ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அமைப்பானது, வழக்கமான ஆயுதங்கள் மற்றும் இரட்டைப் பயன்பாடு பண்பு கொண்ட பொருட்களின் பரிமாற்றங்களைக் கண்காணிக்கிறது.
- இந்தியா இந்த அமைப்பின் 42வது பங்கேற்பு நாடாக 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வாசெனார் அமைப்பில் இணைந்தது.

## சர்வதேச வரி ஒத்துழைப்புக் கட்டமைப்பு

- ஐக்கிய நாடுகள் சபையின் அரசுகளுக்கிடையேயான செயல்முறையின் அடிப்படையில் ஒரு சர்வதேச வரி ஒத்துழைப்புக் கட்டமைப்பை அல்லது செயற் கருவியை உருவாக்குவதற்கான தீர்மானத்தினை ஐக்கிய நாடுகள் பொது சபை ஒரு மனதாக ஏற்றுக்கொண்டது.
- 54 ஆப்பிரிக்க நாடுகளின் கூட்டமைப்பின் சார்பில் நைஜீரியா இந்தத் தீர்மானத்தைச் சமர்ப்பித்தது.
- உலகெங்கிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வரி விதிப்பு முறைகளை ஒழுங்குபடுத்தும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் 60 ஆண்டுகாலப் பணிக்கு இது முற்றுப்புள்ளி வைக்க உள்ளது.
- இதே போன்ற ஒரு கட்டமைப்பைப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு முன்மொழிந்துள்ளது.
- இந்தக் கட்டமைப்பு ஆனது ஆப்பிரிக்கா மற்றும் ஆசியப் பகுதிகளில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் அறிமுகப் படுத்தப் பட்ட "இரு பிரிவு தீர்வு", ஆனது எண்ணிமப் பொருளாதாரத்தில் நிலவும் வரி சார்ந்த சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மத்திய ஆசிய நாடுகளுடன் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரின் சந்திப்பு

- இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் மத்திய ஆசிய நாடுகளான கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தனது சகப் பிரதிநிதிகளுடன் ஒரு சிறப்புச் சந்திப்பினை மேற்கொண்டார்.
- கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்கள் ஓர் உயர்மட்ட பாதுகாப்புக் கூட்டத்திற்காக டெல்லியில் கூடுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்தியாவிற்கும் மத்திய ஆசிய நாடுகளுக்கும் இடையேயான அரசுமுறை உறவுகள் நிறுவப் பட்டதன் 30வது ஆண்டு நிறைவை ஒட்டி இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
- "இந்தியாவின் விரிவுபடுத்தப்பட்ட அண்டை நாட்டுப் பகுதி" மற்றும் "அமைதியான, பாதுகாப்பான, செழிப்பான" மத்திய ஆசியா நமது நாட்டின் பொது நலன் என்ற கருத்தில் இருப்பதால், மத்திய ஆசியாவிற்கு இந்தியா மிக உயர்ந்த முன்னுரிமையை வழங்கியது.



## ஈரானின் அறநெறிக் காவல்துறை

- ஈரானின் தலைமை வழக்குரைஞர் முகமது ஜாபர் மொண்டசெரி, அங்கு ஏற்பட்ட பரவலான எதிர்ப்புகளை அடுத்து அந்த நாட்டின் அறநெறிக் காவல்துறையை இடை நீக்கம் செய்ய வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்தார்.
- ஈரானின் அறநெறிக் காவல்துறையானது, காஷ்ட்-இ-எர்ஷாத் (வழிகாட்டலுக்கான பணித் துறை) என்று அழைக்கப்படுகிறது.
- இது "பணிவு மற்றும் பெண்கள் கட்டாயமாக ஹிஜாப் எனப்படும் தலையுறையினை அணிந்திருக்க வேண்டும் என்ற கலாச்சாரத்தைப் பரப்புவதற்காக" நிறுவப்பட்டது.
- இத்துறையினர் 2006 ஆம் ஆண்டில் இதற்கான ரோந்துப் பணியைத் தொடங்கினர்.
- ஈரான் சமூகத்தினரை ஆளும் இஸ்லாமியச் சட்டமான ஷரியா என்ற சட்டத்தின் கீழ், பெண்கள் தங்கள் தலைமுடியை மறைக்க வேண்டும் என்றும், மேலும் தளர்வான ஆடைகளை அணிய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.
- 1979 ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சியைத் தொடர்ந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு 1983 ஆம் ஆண்டில் பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டது.



## இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் அமைச்சர்கள் மாநாடு




- ❖ வங்காள தேசத்தின் டாக்கா நகரில் நடைபெற்ற இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் (IORA) 22வது அமைச்சர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்றது.
- ❖ இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கு வழிகாட்டும் 'இந்திய-பசிபிக் பகுதி தொடர்பான இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் கண்ணோட்ட அறிக்கையினை' அமைச்சர்கள் மாநாடானது ஏற்றுக்கொண்டது.
- ❖ மறைந்த தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா அவர்கள் 1995 ஆம் ஆண்டில் இந்திய நாட்டிற்கு வருகை புரிந்த போது இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கம் பற்றிய கருத்தாக்கம் ஆனது முதலில் தோன்றியது.
- ❖ இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கம் என்பது இந்தியப் பெருங் கடல் பிராந்தியத்தில் பிராந்திய ஒத்துழைப்பையும் நிலையான வளர்ச்சியினையும் மேம்படுத்துவதற்காக என்று பிரத்தியேகமாக அதற்கெனவே அர்ப்பணிக்கப் பட்ட ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- ❖ இது இந்தியப் பெருங்கடலை ஒட்டிய 23 உறுப்பினர் நாடுகளையும் 10 பேச்சு வார்த்தைக்கான பங்குதாரர்களையும் கொண்டுள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை வங்காள தேசம் இந்த அமைப்பின் தலைவராகப் பணியாற்ற உள்ளது.

## சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணையம்

- ❖ 2023-25 ஆகிய காலக் கட்டத்திற்கான சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணையத்தின் (IEC) துணைத் தலைமை மற்றும் உத்திசார் மேலாண்மை வாரியத்தின் (SMB) தலைமை ஆகிய பொறுப்புகளை இந்தியா பெற்றுள்ளது.
- ❖ சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணையம் என்பது அனைத்து மின்சார, மின்னணு மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற தொழில்நுட்பங்களுக்கான சர்வதேச தர நிலைகளை வெளியிடும் ஒரு சர்வதேசத் தரநிலை அமைப்பாகும்.

- உத்திசார் மேலாண்மை வாரியம் என்பது தொழில்நுட்பக் கொள்கை விவகாரங்களுக்கான பொறுப்பினை வகிக்கும் சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணையத்தின் ஒரு உச்ச நிர்வாகக் குழுவாகும்.




## சீன-இந்தியப் பெருங்கடல் விளிம்புப் பகுதி நாடுகள் மன்றம்

- இந்தியாவைத் தவிர அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த 19 நாடுகளுடன் இணைந்து சீன-இந்தியப் பெருங்கடல் பிராந்திய மேம்பாட்டு ஒத்துழைப்பு தொடர்பான முதல் உயர் மட்ட சீன-இந்தியப் பெருங்கடல் பிராந்திய மன்றத்தை சீனா ஏற்பாடு செய்துள்ளது.
- இந்த மன்றத்தினைச் சீன சர்வதேச மேம்பாட்டு ஒத்துழைப்பு முகமை (CIDCA) நடத்தி உள்ளது.
- சீனா மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு நாடுகளுக்கு இடையே கடல் சார் பேரழிவு தடுப்பு மற்றும் அதற்கான தணிப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஒத்துழைப்பு நெறிமுறையை நிறுவுவதற்கு சீனா முன்மொழிந்துள்ளது.




## உலக செயற்கை நுண்ணறிவு கூட்டாண்மை அமைப்பின் தலைமை

- டோக்கியோவில் நடைபெற்ற 2022-23 ஆம் ஆண்டிற்கான உலக செயற்கை நுண்ணறிவு கூட்டாண்மை அமைப்பின் கூட்டத்தில் அந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பினை பிரான்சு நாட்டிடமிருந்து இந்தியா பெற்றது.
- உலக செயற்கை நுண்ணறிவு கூட்டாண்மை அமைப்பு என்பது மனிதனை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கி வரும் செயற்கை நுண் அறிவினைப் பொறுப்பு மிக்க முறையில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் ஒரு சர்வதேச முயற்சியாகும்.
- செயற்கை நுண்ணறிவின் கோட்பாடு மற்றும் நடைமுறைக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட முதல் முன்னெடுப்பு இது ஆகும்.
- இந்தியா 2020 ஆம் ஆண்டில் உலக செயற்கை நுண்ணறிவு கூட்டாண்மை அமைப்பின் ஸ்தாபன உறுப்பினராக இணைந்தது.
- உலக செயற்கை நுண்ணறிவு கூட்டாண்மை அமைப்பு என்பது அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம், கனடா, ஆஸ்திரேலியா, இத்தாலி, டென்மார்க் மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட 25 உறுப்பினர் நாடுகளைக் கொண்ட ஒரு சபையாகும்.




## ஆப்பிரிக்காவில் மலேரியா எதிர்ப்பு மருந்தின் எதிர்ப்புத் திறனை எதிர் கொள்ள செய்வதற்கான புதிய உத்தி

- உலக சுகாதார நிறுவனமானது, ஆப்பிரிக்காவில் மலேரியா எதிர்ப்பு மருந்தின் எதிர்ப்புத் திறனை எதிர்கொள்வதற்கான ஒரு புதிய உத்தியை வெளியிட்டது.
- ஆப்பிரிக்க நாடுகளானது தற்போது ஆர்ட்டெமிசினின் அடிப்படையிலான சேர்க்கை முறை சிகிச்சைகளை (ACT) அதிகம் சார்ந்துள்ளது.
- ஆர்ட்டெமிசினின் மருந்திற்கு எதிரான எதிர்ப்புத் திறன் மற்றும் ACT சிகிச்சையில் கூடுதலாக வழங்கப்படும் மருந்து ஆகியவை இந்நோய்க்கான சிகிச்சையில் தோல்வி ஏற்படுவதற்கான விகிதங்களை அதிகரிக்கச் செய்கின்றன.
- இது மலேரிய நோய்க்கு எதிராக உலக நாடுகள் மேற்கொண்டு வரும் போராட்டத்தில் பெரும் தடையை ஏற்படுத்தக் கூடும்.
- உலக சுகாதார அமைப்பானது, புதிய நான்கு அம்ச உத்தியின் மூலம் ஆப்பிரிக்காவில் மலேரியா எதிர்ப்பு மருந்திற்கான எதிர்ப்புத் திறனின் விளைவுகளைக் குறைக்க முயல்கிறது.




## ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாடு 2022

- ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டினைத் தாய்லாந்து ஏற்பாடு செய்தது.
- ஆசிய-பசிபிக் நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கோரிக்கையினை முன் வைத்ததோடு, அந்த பிராந்தியத்தினைச் சேர்ந்த நாடுகளின் நிலையான மேம்பாட்டினை நோக்கி அவற்றை வழி நடத்திச் செல்வதற்கு உறுதியளித்தனர்.
- ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டினை நடத்தும் தாய்லாந்து நாட்டிடமிருந்து "சாலோம்" என்ற மூங்கில் கூடையினை ஒப்படைப்புப் பரிசாக கமலா ஹாரிஸ் (அமெரிக்கா) பெற்றார்.
- அடுத்த ஆண்டிற்கான இந்த உச்சி மாநாட்டை அமெரிக்கா சான் பிரான்சிஸ்கோ நகரில் நடத்தவுள்ளது.
- ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர்கள் உலகின் ஒவ்வொரு 10 பேரில் கிட்டத்தட்ட நான்கு பேரையும் மற்றும் உலக வர்த்தகத்தில் கிட்டத் தட்ட பாதி அளவினையும் கொண்டுள்ளது.


## நியூசிலாந்தின் புகையிலைச் சட்டம்

- 2009 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த எவருக்கும் சிகரெட் விற்பனையைத் தடை செய்வதற்கான ஒரு விதிமுறையினை நியூசிலாந்து அரசு ஏற்றுக் கொண்டது.
- இந்தக் கட்டுப்பாடுகளானது 2023 ஆம் ஆண்டில் அமலுக்கு வர உள்ளது.
- இது புகைபிடிப்பதைத் தடை செய்திட உலகின் முதல் புகையிலைச் சட்டம் ஆகும்.
- 2025 ஆம் ஆண்டிற்குள் "புகை இல்லாத நாடாக" மாறுவதை நியூசிலாந்து நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மேலும், நாடு முழுவதும் 6,000 ஆக உள்ள சிகரெட் சார்ந்த புகையிலைப் பொருள்களை விற்பனை செய்யும் சில்லறை விற்பனையாளர்களின் எண்ணிக்கையை 600 ஆகக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இவற்றின் அடிமையாக்கும் தன்மையைக் குறைப்பதற்காக, புகையிலை சார்ந்தத் தயாரிப்புகளில் உள்ள நிகோடின் அளவைக் குறைப்பதில் இந்த நடவடிக்கை கவனம் செலுத்துகிறது.
- வயது வந்தோர் பிரிவில் 8 சதவீதம் பேர் மட்டுமே தினசரி அடிப்படையில் புகை பிடிக்கும் பழக்கம் கொண்டுள்ளவர்களாக இருப்பதால், நியூசிலாந்தில் புகை பிடிப்பவர்களின் விகிதம் மிகவும் குறைவாக உள்ளது.




## Group of Friends



- அமைதி காக்கும் படையினருக்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்பு ஏற்பினை மேம்படுத்துவதற்காக இந்திய நாடானது 'நண்பர்கள் குழுமம்' (Group of Friends) என்ற அமைப்பினைத் தொடங்கியுள்ளது.
- நீல நிற தலைக்கவசம் அணிந்த இந்த படைப் பிரிவினருக்கு எதிரான அனைத்துக் குற்றங்களையும் பதிவு செய்வதற்கான தரவுத்தளமானது இதற்காக விரைவில் நிறுவப் படும்.
- இந்தியா, வங்காளதேசம், எகிப்து, பிரான்சு, மொராக்கோ மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் 'நண்பர்கள் குழுமத்தின் இணைத் தலைமையினை ஏற்றுள்ள நாடுகளாகும்.

## வங்காளதேசக் கடற்படையின் முதல் சர்வதேச கடற்படை ஆய்வு

- வங்காளதேசக் கடற்படையானது தனது முதல் சர்வதேசக் கடற்படை மதிப்பாய்வை மேற்கொள்கிறது.
- அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் அண்டை நாடான மியான்மர் உள்ளிட்ட சுமார் 30 நாடுகளைச் சேர்ந்த கடற்படைத் தளபதிகள், கப்பல்கள் இந்த சர்வதேச நிகழ்வில் பங்கேற்க உள்ளனர்.
- கொச்சி, கவராத்தி மற்றும் சுமேதா ஆகிய இந்தியக் கடற்படைக் கப்பல்கள் இதில் பங்கேற்க உள்ளன.
- இந்திய-பசிபிக் பெருங்கடல் பகுதியில், பல்வேறு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையேயான உறவுகளை இன்னும் மேம்படுத்தச் செய்வதே இந்தப் பயிற்சி மேற் கொள்ளப் படுவதன் ஒரு முக்கிய நோக்கமாகும்.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் அந்தஸ்து



- போஸ்னியா நாட்டிற்கு உறுப்பினர் அந்தஸ்து வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புக் கொண்டுள்ளது.
- உறுப்பினர் அந்தஸ்துக்கான பாதையில் இது கடைசிப் படிநிலையாகும்.
- மற்ற ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகளாவன: அல்பேனியா, மால்டோவா, வடக்கு மாசிடோனியா குடியரசு, மாண்டினீக்ரோ, செர்பியா, துருக்கி மற்றும் உக்ரைன் ஆகியவையாகும்.
- 2013 ஆம் ஆண்டில் இந்த ஒன்றியத்தில் இணைந்த குரோஷியா அதில் கடைசியாக அங்கத்துவம் பெற்ற நாடாகும்.
- மால்டோவா மற்றும் உக்ரைனின் கோரிக்கை மனுவானது கடந்த ஜூன் மாதத்தில் நடத்தப் பட்ட உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பிறகு தான் உறுதி செய்யப் பட்டது.

## ஐரோப்பிய ஒன்றியத்தில் கொசோவோ




- ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக இணைவதற்கான ஒரு விண்ணப்பத்தினை கொசோவோ அதிகாரப்பூர்வமாகச் சமர்ப்பித்தது.
- ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் உரிமைக்கு விண்ணப்பித்த கடைசி மேற்கத்திய பால்கன் நாடு கொசோவோ ஆகும்.
- கொசோவோ 2008 ஆம் ஆண்டில் செர்பியாவிடமிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்த அல்பேனிய இனம் சார்ந்த ஒரு பிரதேசமாகும்.
- ஆனால் செர்பியா நாடானது தனது முக்கிய நட்பு நாடுகளான ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றுடன் சேர்ந்து செர்பியாவினை இன்னும் தனது எல்லைக்குட்பட்ட ஒரு பகுதியாகவே கருதுகிறது.
- எனவே, கொசோவோ ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக இடம் பெறவில்லை.

- ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகளான கிரீஸ், ஸ்பெயின், ரோமேனியா, ஸ்லோவாக்கியா மற்றும் சைப்ரஸ் ஆகிய ஐந்து நாடுகளும் கொசோவோ நாட்டினை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கவில்லை.

## ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களின் நிலை தொடர்பான ஆணையம்

- ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களின் நிலை தொடர்பான ஆணையத்தில் (CSW) இருந்து ஈரான் எதிர்பாராத விதமாக வெளியேற்றப்பட்ட நிலையில், இதற்கான ஒரு வாக்கெடுப்பில் இருந்து இந்தியா விலகியது.
- ஈரான் நாட்டினை அந்தக் குழுவில் இருந்து நீக்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகச் சபையில் அமெரிக்க நாட்டினால் முன்வைக்கப்பட்ட ஒரு முன்மொழிதலுக்கு ஆதரவாக 29 வாக்குகள் கிடைத்தன.
- 54 உறுப்பினர்களைக் கொண்ட இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையில், இந்த முன் மொழிதலுக்கு எதிராக எட்டு வாக்குகளும், 16 நாடுகள் வாக்களிக்காமல் விலகவும் செய்தன.
- ஈரான் நாட்டின் அறநெறிக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு உயிரிழந்த 22 வயதான மஹ்சா அமினியின் மரணம் காரணமாக செப்டம்பர் மாதம் முதல் ஈரான் நாட்டில் போராட்டங்கள் வெடித்து வருகின்றன.
- ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களின் நிலை தொடர்பான ஆணையம் ஆனது (CSW) 1946 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும், உலகெங்கிலும் உள்ள பெண்களின் வாழ்க்கையின் உண்மை நிலையினை ஆவணப்படுத்துவதற்கும், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்த உலகளாவியத் தரநிலைகளை வடிவமைக்கச் செய்வதற்கும் இந்த அமைப்பு ஒரு செயற்கருவியாக செயல்படுகிறது.




## விண்வெளி ஆய்வுகளுக்கான ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கை

- நைஜீரியா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகள் ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

- இதன் மூலம் விண்வெளி ஆய்வுகளுக்கான உடன்படிக்கையில் இணைந்த முதல் ஆப்பிரிக்க நாடுகள் என்ற பெருமையை இவை பெற்றுள்ளன.
- ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கை என்பது 1967 ஆம் ஆண்டின் வெளிப்புற விண்வெளி ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ஒரு பிணைப்பு சாரா ஒப்பந்தமாகும்.
- நிலவு மற்றும் விண்வெளியில், அமைதியான மற்றும் நிலையான ஆய்வுகளை மேற் கொள்வதற்கான அழைப்பு இதுவாகும்.
- இது எட்டு நாடுகளுடன் இணைந்து அமெரிக்க வெளியுறவுத்துறை மற்றும் நாசா நிறுவனம் ஆகியவற்றினால் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## சிங்கப்பூர் பிரகடனம்




- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 17வது ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய கூட்டம் "சிங்கப்பூர் பிரகடனத்தை" ஏற்றுக் கொண்டது.
- தொழிலாளர் சந்தையுடன் தொடர்புடைய சவால்களை எதிர்கொள்வதற்கும், கோவிட்-19 தொற்றுநோய், இயற்கைப் பேரழிவுகள் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மை போன்ற நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கும் சமூகப் பேச்சுவார்த்தையை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குறைந்து வரும் ஊதியங்கள், பணவீக்கம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் போன்றப் பிரச்சினைகளைச் சமாளிக்க இந்த அமைப்பின் உறுப்பினர்களின் தேசிய நடவடிக்கையின் 10 முன்னுரிமையளிக்கப்பட்ட அம்சங்கள் பற்றி ஒரு பகிரப்பட்டப் பார்வையை இது வழங்குகிறது.

## மியான்மர் மீதான முதல் தீர்மானம்

- 74 ஆண்டுகளில் மியான்மர் மீதான முதல் தீர்மானத்தை ஐநா பாதுகாப்புக் குழுமம் ஏற்றுக் கொண்டது.
- அது வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பதவி நீக்கப்பட்ட தலைவர் ஆங் சான் சூகி உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கவும் இராணுவ ஆட்சியை வலியுறுத்துகிறது.


- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 1, ஆம் தேதியன்று சூகியின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திடமிருந்து ராணுவம் ஆட்சியைப் பிடித்தது முதல் மியான்மர் நாடானது நெருக்கடியில் உள்ளது.
- இந்தியாவுடன் சீனாவும் ரஷ்யாவும் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.
- மீதமுள்ள 12 உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

## புதிய பாலின அங்கீகார வழங்கீட்டு மசோதா

- ஸ்காட்லாந்து அரசாங்கமானது தனது பாலினத்தை மாற்ற விரும்பும் நபர்களுக்கு சுய அடையாள முறையை அறிமுகப்படுத்துவதற்காக வேண்டி ஒரு பாலின அங்கீகார வழங்கீட்டுச் சட்டத்தினை நிறைவேற்றியுள்ளது.
- மக்கள் தங்கள் பாலின அங்கீகாரச் சான்றிதழை பெறுவதற்கான அமைப்பு முறையில் மிகப்பெரிய சீர்திருத்தங்களை இந்தச் சட்டம் கொண்டு வருகிறது.
- தற்போது, அவர்கள் இந்தச் சான்றிதழினைப் பெறுவதற்கு ஐக்கியப் பேரரசின் பாலின அங்கீகாரக் குழுவிற்கு விண்ணப்பித்து அங்கு இரண்டு மருத்துவ அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்தப் புதிய பாலின அங்கீகார வழங்கீட்டுச் சட்டத்தின் கீழ், ஐக்கியப் பேரரசின் குழுவிற்குப் பதிலாக ஸ்காட்லாந்து தலைமை பதிவு அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படும்.

## பாம்ப் புயல் - குளிர்காலப் புயல்

- ஒரு அதிதீவிர குளிர்காலப் புயலானது, இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த அளவு பதிவினை நெருங்கியுள்ள நிலையில் அமெரிக்காவின் பெரும்பகுதியை தாக்கி, பனிப் புயல், உறைபனி மழை, வெள்ளம் மற்றும் கடுமையான குளிர் ஆகியவற்றினை ஏற்படுத்தியுள்ளது.
- குறை அழுத்தக் காற்றுப் பகுதியானது, உயர் அழுத்தக் காற்றுடன் மோதும் போது புயல்கள் உருவாகின்றன.
- இதில் காற்று என்பது உயர் அழுத்தத்திலிருந்து குறை அழுத்தப் பகுதியை நோக்கி நகரும் போது காற்று ஓட்டம் உருவாகிறது.
- ஒரு பாம்ப் புயல் என்பது குறைந்த காற்றழுத்தப் பகுதியில் உள்ள அழுத்தம் எவ்வளவு விரைவாக குறைகிறது (24 மணி நேரத்தில் குறைந்தது 24 மில்லி பார்கள் அழுத்தத்தில்) என்பதனைப் பொறுத்து வரையறுக்கப்படுகிறது.
- இது இரண்டு காற்று அழுத்தப் பகுதிகளுக்கு இடையே உள்ள அழுத்த வேறுபாட்டை விரைவாக அதிகரித்து காற்றின் வலிமையை அதிகரிக்கிறது.
- இவ்வாறு காற்று அதி தீவிரமடையும் நிகழ்வானது பாம்போஜெனீசிஸ் (விரைவு வீழ்ச்சி) என்று அழைக்கப்படுகிறது.
- வட அரைக் கோளத்தில், காற்று சுழலும் திசை மேற்புறத்திலிருந்து நோக்கும் போது இடஞ்சுழி திசையில் உள்ளது.




## மாலத்தீவு முன்னாள் அதிபருக்கு சிறை

- மாலத்தீவு குற்றவியல் நீதிமன்றமானது அந்நாட்டின் முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீனுக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 5 மில்லியன் டாலர் அபராதமும் விதித்துள்ளது.
- தனியார் நிறுவனத்திடம் இருந்து கையூட்டு பெற்றது தொடர்பான ஊழல் மற்றும் பண மோசடி குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் கண்டறிந்தது.
- அவர் 2018 ஆம் ஆண்டில் பதவி அதிகாரத்தினை இழந்தார், எனினும் 2023 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு மாலத்தீவுகளின் முற்போக்குக் கட்சியின் அதிபர் பதவிக்கான வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.



# பொருளாதாரச் செய்திகள்

## ஏர் இந்தியா நிறுவனத்துடன் விஸ்தாரா நிறுவனம் இணைப்பு

- விஸ்தாரா ஏர்லைன்ஸ் நிறுவனமானது, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் டாடா குழுமத்திற்குச் சொந்தமான ஏர் இந்தியா நிறுவனத்துடன் இணைக்கப்பட உள்ளது.
- 2013 ஆம் ஆண்டில் கூட்டுத் துணிகர முயற்சியாக நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் 51 சதவீதப் பங்கினை டாடா குழுமமும், மீதமுள்ள 49 சதவீதப் பங்கினை சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனமும் வைத்துள்ளன.
- டாடா நிறுவனமானது, ஒரு வருடத்திற்கு முன்பு அரசின் முதலீட்டுச் சேமிப்பு மீட்பு என்ற முறையின் ஒரு பகுதியாக 18,000 கோடி ரூபாய் மதிப்பிற்கு ஏர் இந்தியா நிறுவனத்தை வாங்கியது.




## இந்தியாவின் முதல் தனியார் வேளாண் மண்டி

- சஹ்யாத்ரி உழவர் உற்பத்தியாளர் நிறுவனமானது, மகாராஷ்டிராவின் நாசிக் மாவட்டத்தில் உள்ள திண்டோரியில் தனியார் வேளாண் மண்டியை (சந்தை) அமைப்பதற்கான உரிமத்தினைப் பெற்றுள்ளது.
- இது நாட்டின் முதல் தனியார் வேளாண் மண்டி ஆகும்.



- உலகத் தரம் வாய்ந்த இந்த உள்கட்டமைப்புடன், வங்கிச் சேவை முதல் ஒரே தளத்தில் இயங்கும் சேமிப்பு, செயலாக்கம் மற்றும் பொதியாக்கம், நேரடி மற்றும் இணையவழி வர்த்தகத்திற்கான விருப்பத் தேர்வுகள், கள வர்த்தகத்தை சட்டப்பூர்வமாக்குதல் மற்றும் விவசாயிகளின் உரிமை ஆகியவற்றுடன் இந்தச் சந்தைத் தளமானது ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.

## இருப்பிடக் குளிரூட்டலில் முதலீட்டு வாய்ப்புகள்

- உலக வங்கியானது, "இந்தியாவின் குளிரூட்டல் தொழில்நுட்பத் துறையில் பருவ நிலைச் சார்ந்த முதலீட்டு வாய்ப்புகள்" என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- இந்தியாவில் 2040 ஆம் ஆண்டில் இருப்பிடக் குளிரூட்டலுக்கானச் சந்தை வாய்ப்பு மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் 1.5 டிரில்லியன் டாலர்களாக இருக்கும்.
- 2040 ஆம் ஆண்டிற்குள் ஆண்டுதோறும் 300 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைக் குறைக்கும் திறனைக் கொண்ட குளிரூட்டல் தொழில்நுட்பத்திற்கான நிலையான செயற்திட்டத்தினை இந்த அறிக்கைப் பரிந்துரைக்கிறது.
- இந்தியா ஒவ்வோர் ஆண்டும் அதிகளவு வெப்பநிலையை எதிர் கொண்டு வருகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள், நாடு முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் 160-200 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கொடிய வெப்ப அலைகளுக்கு ஆளாக வாய்ப்பு உள்ளது.
- இந்தியாவில் அதிகளவு வெப்ப நிலையினால் ஏற்படும் மன அழுத்தத்தினால் ஏற்படும் உற்பத்தித் திறன் குறைவினால் சுமார் 34 மில்லியன் மக்கள் வேலை இழப்பைச் சந்திக்க நேரிடும்.
- உணவுப் பாதுகாப்பு ரீதியாக, போக்குவரத்தின் போது உண்டாகும் வெப்பத்தினால் ஏற்படும் உணவு இழப்பு ஆண்டிற்கு 13 பில்லியன் டாலர் என்று உலக வங்கி தெரிவித்து உள்ளது.
- கட்டிடக் கட்டுமானம், குளிரூட்டல் தொடர் சங்கிலி அமைப்புகள் மற்றும் குளிர்பதனப் பெட்டிகள் ஆகிய மூன்று முக்கியத் துறைகளில் புதிய முதலீடுகள் செய்வது மூலம் புது டெல்லியின் 2019 ஆம் ஆண்டு இந்தியக் குளிரூட்டல் செயல் திட்டத்தினை (ICAP) ஆதரிப்பதற்கான ஒரு செயற்திட்டத்தினை இந்த அறிக்கை முன்மொழிகிறது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் சில்லறை எண்ணிம நாணயம்

- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) எண்ணிம நாணயத்தின் சில்லறை விற்பனை சோதனையானது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- இது இணையவழி ரூபாய் அல்லது எண்ணிம ரூபாய் என விளம்பரப் படுத்தப் படுகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வங்கி எண்ணிம நாணயம் (CBDC) என்பது இறையாண்மை மிக்க நாணயத்தின் ஒரு மின்னணு வடிவமாகும்.
- சில்லறை எண்ணிம ரூபாயானது, மத்திய வங்கியின் நேரடிப் பொறுப்பின் கீழ் இருப்பதால், பணம் செலுத்துவதற்கும் கடன் ஈடு செய்வதற்கும் பாதுகாப்பான முறையில் பணத்திற்கான அணுகலை வழங்குகிறது.
- நாடு முழுவதும் உள்ள நான்கு நகரங்களில் எண்ணிம ரூபாயின் சில்லறை விற்பனையில் பங்கேற்பதற்காக கட்டம் வாரியாக எட்டு வங்கிகள் இதில் அடையாளம் காணப் பட்டுள்ளன.

- முதற்கட்டமாக, பாரத் ஸ்டேட் வங்கி, ICICI வங்கி, YES வங்கி, IDFC First வங்கி உள்ளிட்ட நான்கு வங்கிகள் இந்தச் சோதனைக் கட்டத்தில் பங்கேற்கின்றன.
- இந்தச் சோதனையானது, முதலில் மும்பை, புது டெல்லி, பெங்களூரு மற்றும் புவனேஸ்வர் ஆகிய நான்கு நகரங்களில் மேற்கொள்ளப் படுகிறது.




## இந்தியாவின் முதல் செயல் சாரா வரிச் சேமிப்பு நிதி

- IIFL பரஸ்பர நிதி நிறுவனமானது, இந்தியாவின் முதல் செயல் சாரா வரிச் சேமிப்பு நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஒரு தடையற்ற செயல் சாரா சம பங்கு சார்ந்த சேமிப்புத் திட்ட (ELSS) நிதியாகும்.
- இத்திட்டம் நிஃப்டி 50 அளவினை ஒத்தது போன்று செயல்பட முயல்வதோடு, அந்தக் குறியீட்டின் மாறுபாட்டிற்கு ஏற்ப வருமானத்தை உருவாக்கும்.


## புதிய நிஃப்டி பாரத் பத்திரக் குறியீடு

- தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தின் துணை நிறுவனமான NSE குறியீடுகள் நிஃப்டி பாரத் பத்திரக் குறியீடுகள் தொடரின் கீழ் மேலும் ஒரு குறியீட்டை அறிமுகப் படுத்தி உள்ளது.
- நிஃப்டி பாரத் பத்திரக் குறியீடுகளைக் கண்காணிக்கும் முதல் பாரத் பத்திரக் குறியீடுகள் ETFs 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப் பட்டன.
- 2033 ஆம் ஆண்டில் நிறைவடையும் புதிய பாரத் பத்திரக் குறியீட்டின் அறிமுகமானது, நிலையான வருமானம் சார்ந்த முதலீட்டாளர்களுக்கு அதிக முதலீட்டுத் தேர்வுகளை வழங்கும்.

## 100 பில்லியன் டாலர் பண வரவு

- 2022 ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலர்கள் மதிப்பிலானப் பண வரவினைப் பெற்ற உலகின் முதல் நாடு இந்தியாவாகும்.
- கடந்த ஆண்டு பதிவான 7.5 சதவீதமாக இருந்த இந்தியாவின் பண வரவானது 12 சதவீதமாக அதிகரிக்கும் என்று உலக வங்கி கூறியுள்ளது.
- அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் அதிக சம்பளம் பெறும் இந்தியப் புலம்பெயர்ந்தோரின் பெரும் பங்கே இந்த சாதனைக்கு காரணம் ஆகும்.

- ❖ இந்தியாவின் பண வரவானது, 2022 ஆம் ஆண்டில் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதம் மட்டுமே இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ ஐக்கிய அரபு அமீரகத்தினை விஞ்சி இந்தியாவிற்கு அதிகப் பண வரவினை வழங்கும் மூல ஆதார நாடாக அமெரிக்கா சமீபத்தில் உருவெடுத்துள்ளது.




## இந்தியாவின் முதல் தங்க நாணய தானியங்கு வழங்கீட்டு எந்திரம்

- ❖ கோல்ட்சிக்கா பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது தனது முதல் தங்க நாணய ATM மையத்தினை ஹைதராபாத்தில் தொடங்கியது.
- ❖ இந்த ATM இயந்திரமானது 0.5 கிராம் முதல் 100 கிராம் வரையிலான தங்க நாணயங்களை வழங்குகிறது.
- ❖ மக்கள் தங்கள் பற்று அல்லது கடன் அட்டைகளை இயந்திரத்தில் செருகி அதன் மூலம் தங்க நாணயங்களைப் பெற இயலும்.

## 8வது பெரிய விளம்பரச் சந்தை





- ❖ 2023 ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டினை முந்தி உலகின் எட்டாவது பெரிய விளம்பரச் சந்தையாக இந்தியா மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ GroupM என்ற நிறுவனமானது இந்த ஆண்டு இந்தியாவை உலகளவில் ஒன்பதாவது பெரிய விளம்பரச் சந்தையாக தரவரிசைப் படுத்தியுள்ளது.

- 2022 ஆம் ஆண்டில், எண்ணிம ஊடகத்தில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களின் அளவு அதிகரித்ததால், இந்தியாவின் மொத்த விளம்பர வருவாயானது 15.8% அளவிற்கு அதிகரித்து 14.9 பில்லியன் டாலரைத் தொட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் இது 16.8% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## இந்திய நாட்டிற்கான எண்ணெய் வழங்கீட்டில் முன்னணியில் உள்ள நாடு


- முதன்முறையாக ஈராக் நாட்டினை விஞ்சி, இந்தியாவிற்கு அதிகளவில் எண்ணெய் வழங்கும் முன்னணி நாடாக ரஷ்யா உருவெடுத்துள்ளது.
- ரஷ்யாவிலிருந்து இந்தியாவிற்கு மேற்கொள்ளப்படும் எண்ணெய் இறக்குமதியானது தொடர்ந்து ஐந்தாவது மாதமாக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் ஒட்டு மொத்த எண்ணெய் இறக்குமதியில் சுமார் 23 சதவிகிதம் ரஷ்யாவிலிருந்து மேற்கொள்ளப் படுகிறது.
- கடந்த மாதம் ஈராக்கில் இருந்து இந்தியாவிற்கு மேற்கொள்ளப்படும் எண்ணெய் இறக்குமதியானது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத அளவிற்குப் பிறகு பதிவான மிகக் குறைந்த அளவாக குறைந்துள்ளது.




## உத்தரவாதப் பத்திரக் காப்பீடு


- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்காரி இந்தியாவின் முதல் உத்தரவாதப் பத்திரக் காப்பீட்டு வசதியினை பஜாஜ் அலையன்ஸ் நிறுவனத்திடமிருந்து அறிமுகம் செய்தார்.
- உத்தரவாதப் பத்திரங்கள் என்பது பொதுக் காப்பீட்டு நிறுவனங்களால் ஒப்பந்ததாரர் சார்பாக திட்ட வழங்கல் நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஒரு பண வழங்கீட்டு உத்தர வாதமாகும்.
- உத்தரவாதப் பத்திரம், பரஸ்பர ரீதியாக ஒப்புக் கொள்ளப்பட்ட சில விதிமுறைகளின் பேரில் ஒரு நிறுவனத்திற்கு உத்தரவாத ஒப்பந்தத்தை அளிக்கிறது.
- அந்த நிறுவனத்திற்கான ஓர் இடர் பரிமாற்றக் கருவியாக, இது அந்த நிறுவனத்தினை இழப்புகளிலிருந்துப் பாதுகாக்கிறது.

- ஒரு வங்கியினால் வழங்கப்படும் உத்தரவாதத்தைப் போலன்றி, இந்த உத்திரவாதப் பத்திரக் காப்பீட்டிற்கு ஒப்பந்தக்காரரிடமிருந்து பெரிய பிணைத் தொகை எதுவும் பெற வேண்டிய அவசியமில்லை.




## விவசாயிகளின் வருமானம்

- இந்தியாவின் கிராமப்புறங்களில் உள்ள விவசாயக் குடும்பங்களின் நிலைமை மீதான மதிப்பீட்டு ஆய்வினை (SAS) புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் (MoSPI) தேசியப் புள்ளியியல் அலுவலகத்தினால் (NSO) நடத்தப்பட்டது.
- இது 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு ஜூன் மதம் வரையிலான வேளாண் ஆண்டின் 77வது சுற்றினை (ஜனவரி 2019- டிசம்பர் 2019) குறிக்கிறது.
- வேளாண் வருமானம் என்பதனுள் தினக் கூலியிலிருந்து கிடைக்கும் வருமானம், ஒரு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்ததன் மூலம் கிடைக்கும் வருமானம், பயிர் உற்பத்தியில் இருந்து கிடைக்கும் நிகர வருவாய், கால்நடைகளை வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் நிகர வருவாய் மற்றும் வேளாண் சாராத வணிகத்தின் மூலம் கிடைக்கும் நிகர வருவாய் ஆகியவை அடங்கும்.
- ஒரு விவசாயக் குடும்பத்தின் சராசரி மாத வருமானமானது ரூ.29,348 என்ற மதிப்புடன் இந்திய அளவில் மேகாலயா மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- ஒரு வேளாண் குடும்பத்திற்கான சராசரி மாத வருமானத்தில் பஞ்சாப் மாநிலம் நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது.
- பஞ்சாப் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் முக்கியப் பயிர்களில் அரிசி, கோதுமை, சோளம், பஜ்ரா, கரும்பு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி ஆகியவை அடங்கும்.
- ஆனால் அவற்றுள் அரிசி மற்றும் கோதுமை மட்டுமே அங்கு விளைக்கப்படும் மொத்த பயிர்ப் பரப்பளவில் 80 சதவிகிதப் பரவலைக் கொண்டுள்ளன.
- இதில் தமிழகத்தின் வருமானம் 11,924 ஆகவும், அகில இந்தியச் சராசரி 10,218 ஆகவும் உள்ளது.




## 2022 ஆம் ஆண்டில் 32 டிரில்லியன் டாலர் வர்த்தகம்

- உலக வர்த்தகத்தின் மதிப்பு இந்த ஆண்டு ஒரு புதிய சாதனையை எட்ட உள்ளது.
- இது சுமார் 12 சதவீதம் அதிகரித்து $32 டிரில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பால் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- வணிகப் பொருட்களின் வர்த்தகம் $25 டிரில்லியனாக உயர்ந்துள்ளது.
- இது முந்தைய ஆண்டை விட சுமார் 10 சதவீதம் அதிகமாகும்.
- சேவைகளின் வர்த்தகம் ஆண்டுக்கு ஆண்டு 15 சதவீதம் அதிகரித்து கிட்டத்தட்ட $7 டிரில்லியன் ஆக உள்ளது.

## பெண்களின் கையெழுத்துடன் பண நோட்டுகள்



- அமெரிக்காவின் நிதித் துறை அமைச்சகம் இரண்டு பெண்களின் கையெழுத்துடன் முதல் அமெரிக்க காகிதப் பண நோட்டுகளை அச்சிட்டுள்ளது.

- $1 மற்றும் $5 மதிப்புள்ள புதிய நாணயத் தாள்களில் கருவூலச் செயலர் (அமெரிக்க நிதி அமைச்சர்) ஜேனட் யெல்லென் மற்றும் லின் மலெர்பா ஆகியோரின் கையொப்பம் உள்ளது.
- அமெரிக்காவின் காகிதப் பண நோட்டுகள் கிரீன்பேக் என்று பிரபலமாக அழைக்கப் படுகின்றன.

## எரிவாயு விலைக் குறியீடு




- இந்தியாவின் முக்கிய இயற்கை எரிவாயு விலையைப் பிரதிபலிக்கின்ற நிலையில் இந்தியன் எரிவாயுப் பரிமாற்றகமானது இந்தியாவின் முதல் விலைக் குறியீட்டை அறிமுகப் படுத்தியது.
- இதுவரை, இந்தியாவில் எரிவாயுவிற்கு JKM (ஜப்பான் கொரியக் குறியீடு) மற்றும் HH (ஹென்றி ஹப்) உள்ளிட்ட பிற சர்வதேச அளவுகோல்களை மக்கள் பயன்படுத்தினர்.

## பொருளாதார மற்றும் வணிக ஆராய்ச்சி மையத்தின் இந்தியப் பொருளாதாரம் குறித்த கணிப்பு

League Table by 2037 ranking

| Ranking out of 191 | 2007 | 2012 | 2017 | 2022 | 2023 | 2027 | 2032 | 2037 |
|---|---|---|---|---|---|---|---|---|
| China | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 1 |
| United States | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 |
| India | 12 | 11 | 6 | 5 | 5 | 4 | 3 | 3 |
| Japan | 2 | 3 | 3 | 3 | 4 | 3 | 4 | 4 |
| Germany | 4 | 4 | 4 | 4 | 3 | 5 | 5 | 5 |
| United Kingdom | 5 | 5 | 5 | 6 | 6 | 6 | 6 | 6 |
| France | 6 | 6 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 |
| Brazil | 10 | 7 | 8 | 12 | 11 | 8 | 8 | 8 |
| Korea | 13 | 14 | 11 | 13 | 13 | 9 | 9 | 9 |
| Canada | 9 | 10 | 10 | 8 | 8 | 10 | 10 | 10 |

- "உலகப் பொருளாதாரக் குழும அட்டவணை" என்பது பொருளாதார மற்றும் வணிக ஆராய்ச்சி மையத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையானது, உலகளாவிய மற்றும் தேசிய அளவில் நிலவும் பேரியல் பொருளாதாரப் போக்குகளை மதிப்பிடுகிறது.

- இந்த அறிக்கையானது 191 நாடுகளுக்கான 2037 ஆம் ஆண்டு வரையிலான பொருளாதாரக் கணிப்புகளை வழங்குகிறது.
- இந்திய நாடானது, 2037 ஆம் ஆண்டில் மூன்றாவது பொருளாதார வல்லரசு நாடாகவும், 2035 ஆம் ஆண்டில் 10 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட பொருளாதார நாடாகவும் மாறும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி என்பது, ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக 6.4 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இதற்குப் பிறகு, அடுத்த 9 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது சராசரியாக 6.5 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலகப் பொருளாதாரக் குழும அட்டவணையில், தற்போது இந்த 2022 ஆம் ஆண்டில் 5வது இடத்தில் இருக்கும் இந்தியா, 2037 ஆம் ஆண்டில் 3வது இடத்திற்கு முன்னேறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## PSLV-C54 ஏவுகலம்




- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (இஸ்ரோ), அதன் துருவ செயற்கைக் கோள் ஏவுகலம் (PSLV-C54) மூலம் ஒன்பது செயற்கைக் கோள்களை அவற்றின் பல்வேறு சுற்றுப்பாதைகளில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியது.

- இது ஒரு புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள் (EOS-06) மற்றும் 8 நுண்ணிய செயற்கைக் கோள் ஆகியவற்றினை உள்ளடக்கியது.
- எட்டு நுண்ணிய செயற்கைக்கோள்களில் பூடானுக்கான இஸ்ரோ நுண்ணிய செயற்கைக் கோள்-2 (INS-2B), ஆனந்த், ஆஸ்ட்ரோகாஸ்ட் (நான்கு செயற்கைக் கோள்கள்) மற்றும் இரண்டு தைபோல்ட் ஆகிய செயற்கைக் கோள்கள் அடங்கும்.
- EOS-6 என்பது Oceansat வரிசையின் மூன்றாம் தலைமுறை செயற்கைக் கோள் ஆகும்.
- EOS-06 ஆனது கடலியல், பருவநிலை மற்றும் வானிலை செயல்பாடுகளில் பயன் படுத்துவதற்காக கடல் பரப்பின் வண்ணம் குறித்தத் தரவு, கடல் மேற்பரப்பு வெப்ப நிலை மற்றும் காற்று திசைகாட்டி தரவு ஆகியவற்றைக் கண்காணிக்கும்.

## இந்தியாவின் முதல் தனியார் துறை விண்வெளி வாகன ஏவுதளம்






- சென்னையைச் சேர்ந்த விண்வெளித் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இந்தியாவின் முதல் தனியார் துறை ஏவுதளம் மற்றும் ஆய்வுப்பணிக் கட்டுப்பாட்டு மையத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த மையமானது அக்னிகுல் ஏவுதளம் மற்றும் அக்னிகுல் ஆய்வுப்பணிக் கட்டுப்பாட்டு மையம் ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளதாகும்.
- ஏவுதளமானது திரவ நிலை எரிபொருள் கொண்ட, கட்டுப்படுத்தப்பட்ட ஏவுகலங்களை ஏவுகின்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சென்னையைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனமானது தனது அக்னிபான் ராக்கெட்டை இந்த ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தத் திட்டமிட்டுள்ளது.

- அக்னிபான் என்பது இரண்டு-நிலைகள் கொண்ட, 100 கிலோகிராம் எடையுள்ள விண்வெளி ஆய்வுப் பொருட்களை 700 கிலோமீட்டர் தொலைவில் உள்ள புவித் தாழ் மட்டச் சுற்றுப்பாதை வரை கொண்டு செல்லும் திறன் கொண்ட ஒரு ஏவு வாகனம் ஆகும்.
- அக்னிபான் ஏவுகலமானது, அந்த நிறுவனத்தின் முப்பரிமாண முறையில் அச்சிடப் பட்ட அக்னிலெட் எந்திரங்களால் இயக்கப்படும்.
- அக்னிலெட் ஏவுகலம் என்பது, திரவ வடிவ மண்ணெண்ணெய் மற்றும் மீக்குளிர் நிலை கொண்ட திரவ ஆக்சிஜன் ஆகியவற்றின் கலவையைப் பயன்படுத்தி தன்னைத்தானே உந்துவிக்கின்ற திறன் கொண்ட ஒரு "பகுதியளவு கிரையோஜெனிக் வகை" இயந்திரம் ஆகும்.

## குரங்கம்மை நோய்க்குப் புதிய பெயர்

- உலக சுகாதார நிறுவனமானது குரங்கம்மை நோய்க்குப் புதிய பெயர் ஒன்றை பரிந்துரைத்துள்ளது.
- இந்நோய் தற்போது, குரங்கம்மை நோயினைக் குறிக்கும் ஓர் இணைச்சொல்லாக mpox என்று அழைக்கப்படும்.
- குரங்கம்மை நோய் படிப்படியாக ஒழிக்கப்படும் வரை இந்த இரண்டு பெயர்களும் ஒரு வருடத்திற்கு மாறி மாறி பயன்படுத்தப்படும்.
- மனித குரங்கம்மை நோய்க்கு 1970 ஆம் ஆண்டில் இந்தப் பெயரானது வழங்கப்பட்டது.
- வைரஸ்களுக்குப் பெயரிடும் செயல்முறையானது, சர்வதேச வைரஸ் வகை பிரித்தல் குழுவின் பொறுப்பாகும்.




## பாரத் பயோடெக் நிறுவனத்தின் நாசி வழி உட்செலுத்தக் கூடிய கோவிட் தடுப்பு மருந்து




- பாரத் பயோடெக் நிறுவனத்தின் iNCOVACC தடுப்பு மருந்தானது, அவசரகாலப் பயன்பாட்டிற்கான அங்கீகாரத்தினைப் பெற்ற உலகின் முதல் நாசி வழியில் உட் செலுத்தக் கூடிய கோவிட்-19 தடுப்பு மருந்தாக மாறியுள்ளது.
- மற்றொரு தடுப்பு மருந்தின் இரண்டு தவணைகளைப் பெற்றவர்களுக்கு இதனை ஒரு முதன்மைத் தடுப்பு மருந்தாகவும், பன்முகத் தன்மையுடைய உத்வேகத் தடுப்பு மருந்தாகவும் பயன்படுத்தலாம்.
- iNCOVACC என்பது, இணைப்புச் செயல்முறைக்கு முன்பே நிலைப்படுத்தப்பட்ட SARS-CoV-2 முள் புரதத்துடன் கூடிய மீள் இணைவு பிரதி குறைபாடுள்ள அடினோவைரஸ் கடத்திகள் கொண்ட தடுப்பூசி ஆகும்.

## முதல் வகை நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தாமதப்படுத்தும் முதல் மருந்து





- முதல் வகை நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தாமதப்படுத்தும் உயிரியல் சிகிச்சைக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகமானது ஒப்புதல் அளித்துள்ளது.

- முதல் வகை நீரிழிவு நோயைத் தடுப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதல் சிகிச்சை இது ஆகும்.
- முதல் வகை நீரிழிவு நோயில், ஒரு நபரின் நோயெதிர்ப்பு அமைப்பானது இன்சுலினை உற்பத்தி செய்யும் கணையத்தில் உள்ள பீட்டா செல்கள் எனப்படும் செல்களைத் தாக்குகிறது.
- இன்சுலின் என்பது இரத்தத்தில் உள்ள சர்க்கரை மூலக்கூறுகள் உயிரணுக்களுக்குள் நுழைய உதவுவதோடு அங்கு அவை ஆற்றல் உற்பத்திக்காகப் பயன்படுத்தப் படுகின்ற ஒரு ஹார்மோன் ஆகும்.

## செயற்கை ஒளிச்சேர்க்கை முறை

- திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்தூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை இணைந்து சூரிய மின் ஆற்றலைச் சேமிக்க உதவும் செயற்கை ஒளிச்சேர்க்கை முறையை உருவாக்கியுள்ளன.
- ஒளிச்சேர்க்கையின் ஒரு சிக்கலான செயல்முறையைப் பிரதிபலிக்கும் வகையிலான இந்தத் தொழில்நுட்பத்தில் எதிர்கொள்ளப்படும் பல்வேறு சவால்களையும், அதே போல் ஒளி உட்கவர்பொருள் மற்றும் கடத்திகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய சிக்கல்களையும் இது தீர்க்கிறது.
- இந்தப் புதியத் தொழில்நுட்பமானது சூரிய மின்கலங்களின் செயல்திறனை மேம்படுத்தவும் ஆற்றல் இழப்பைக் குறைக்கவும் உதவும் வகையிலான புதிய ஒளிச் சேர்க்கை கலன்களை வடிவமைக்க வழி வகுக்கிறது.




## ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் விமான இயந்திரம்


- ஏர்லைன் ஈஸிஜெட் மற்றும் விமான எந்திரத் தயாரிப்பு நிறுவனமான ரோல்ஸ் ராய்ஸ் ஆகியவை ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் விமான இயந்திரத்தின் சோதனையினை வெற்றிகரமாக மேற்கொண்டதாக அறிவித்துள்ளன.

- இது விமானப் போக்குவரத்துத் துறையில் உலகில் முதல் முறையாக இவ்வாறு மேற் கொள்ளப் படுவதாக விவரிக்கப்படுகிறது.
- ஜெட் எரிபொருளை விட பசுமை ஹைட்ரஜன் எரிபொருளானது சுற்றுச்சூழலுக்கு மிகச் சிறந்தது என்று பரவலாகக் கருதப்படுகிறது.
- அந்த நிறுவனம் சிறிய பிராந்திய விமானங்களில் பயன்படுத்தப்படுகின்ற வகையில் உந்துதலை வழங்கும் சுழலி இயந்திரத்தைச் சோதனை செய்தது.
- இந்தச் சோதனைகளுக்கான பசுமை ஹைட்ரஜன் எரிபொருளானது, ஸ்காட்லாந்தின் ஓர்க்னி தீவுகளில் அலை மற்றும் காற்று ஆற்றலைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்டு உள்ளது.




## நீராவி மூலம் இயக்கப்படும் விண்கலம்

- ஜப்பானின் விண்வெளி நிறுவனமானது, சந்திரனை நோக்கி அனுப்பப்பட்டுள்ள EQUULEUS எனப்படும் விண்கலத்தினை இயக்குவதற்கு உலகிலேயே முதன்முறையாக நீராவியினைப் பயன்படுத்தியதாக அறிவித்துள்ளது.
- இது நாசாவின் ஓரியன் விண்கலத்தில் விண்வெளி சார்ந்தப் பொருட்களுள் ஒன்றாக ஏவப்பட்டது.
- JAXA நிறுவனத்தின் கருத்துப் படி, நீர் சார்ந்த உந்துவிசை அமைப்பைப் பயன்படுத்தி புவி தாழ்மட்ட சுற்றுப்பாதைக்கு அப்பாற்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உலகின் முதல் வெற்றிகரமான சுற்றுப்பாதை நிலை நிறுத்துதல் அமைப்பு இதுவாகும்.
- இது தகவல்தொடர்பு கருவியில் இருந்து வெளியேறும் வெப்பத்தைப் பயன்படுத்தி தண்ணீரை நீராவியாக மாற்றுவதோடு, அதற்கு ஒரு உந்துதலையும் உருவாக்குகிறது.
- கியூப்சாட் செயற்கைக் கோளானது, தோராயமாக ஒன்றரை ஆண்டுகளில் பூமி மற்றும் சந்திரன் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட இரண்டாவது லெக்ராஞ்சியன் பகுதியினை (EML2) அடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- லெக்ராஞ்சியன் பகுதிகள் என்பது கோள்கள் போன்ற பெரிய பொருட்களின் ஈர்ப்பானது விண்கலத்தின் மைய விலக்கு விசையால் சமநிலைப்படுத்தப்பட்டு, மிகவும் நிலையான சுற்றுப்பாதையை மேற்கொள்ள வழிவகுக்கும் விண்வெளியில் உள்ள சில குறிப்பிட்ட இடங்களாகும்.




## எலாலைட் மற்றும் எல்கின்ஸ்டன்டோனைட்




- சோமாலியாவில் விழுந்த ஒரு விண்கல்லில் இரண்டு புதிய கனிமங்கள் இருப்பதை கனடா நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- விண்கல் மோதிய நகரத்தின் பெயரால் இந்தக் கனிமத்திற்கு "எலாலைட்" என்றும், விண்கோள்கள் அறிவியல் துறையின் அறிவியலாளர் லிண்டி எல்கின்ஸ்-டாண்டன் என்பவரின் நினைவாக "எல்கின்ஸ்டன்டோனைட்" என்றும் பெயரிடப்பட்டுள்ளன.
- இதே போன்ற கனிமங்கள் 1980 ஆம் ஆண்டுகளில் ஓர் ஆய்வகத்தில் செயற்கையாக உருவாக்கப் பட்டன என்றாலும், இவை இயற்கையாகத் தோன்றியதாக பதிவு செய்யப் படவில்லை.
- 2020 ஆம் ஆண்டில் சோமாலியாவில் கண்டெடுக்கப்பட்ட 2 மீட்டருக்கும் அதிகமான அகலமும், 15 டன் எடையும் கொண்ட விண்கல் ஆனது இது வரை பதிவு செய்யப்பட்ட ஒன்பதாவது பெரிய விண்கல் ஆகும்.
- செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில் உள்ள குறுங்கோள் பட்டையில் உள்ள சிறு கோள் ஒன்றில் இருந்து இந்த விண்கல் பிரிந்து வந்துள்ளது.

## அண்டவெளி புழுத்துளை

- அறிவியல் புனைவுக் கதைகளில் அண்டவெளி புழுத்துளை என்ற கருத்துகள் மிகவும் அதிகமாக பேசப்படும் தலைப்புகளாகும்.
- ஒரு அண்டவெளி புழுத் துளை என்பதன் சரியான வரையறையானது அண்டம் மற்றும் நேரம் ஆகியவற்றில் ஒரு பிளவு' என்பதோடு, இது 'பேரண்டத்தில் உள்ள இரண்டு தொலைதூரப் பகுதிகளுக்கு இடையேயான ஒரு பிணைப்புப் பகுதியாகக்' கருதப் படுகிறது.
- இவை அண்டத்தில் காணப்படவில்லை என்றாலும், ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று அந்த அமைப்பின் ஒரு சிறிய வடிவமைப்பினை உருவாக்கியதாகக் கூறி உள்ளனர்.
- ஒரு குவாண்டம் கணினியின் மூலம் இரண்டு சிறிய கருந்துளைகளைக் கொண்டு இந்த உருவக அமைப்பானது உருவாக்கப் பட்டதால், அவற்றின் மூலம் விண்வெளி ஆராய்ச்சியாளர்களால் வெற்றிகரமாகத் தகவல்களை அனுப்ப முடிந்தது.




## ரேடாருக்குப் புலப்படாத அணுசக்தி குண்டுவீச்சு விமானம்

- அமெரிக்கா B-21 ரைடர் எனப்படும் தனது சமீபத்திய உயர்-தொழில்நுட்ப குண்டுவீச்சு விமானத்தினை அறிமுகம் செய்துள்ளது.
- கடந்த 30 ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் குண்டுவீச்சு விமானம் இதுவே ஆகும்.
- இது அணு ஆயுதத்தைச் சுமந்து செல்லும் திறன் கொண்டதோடு, இந்த விமானத்தில் பணியாளர்கள் யாரும் இன்றி பறக்கும் திறனையும் இது கொண்டது.
- B-21 ரைடர் விமானமானது ஒட்டுநர் இல்லாமலேயே வானில் பறக்கும் திறன் கொண்டது.



## கடல் அலை ஆற்றல் மாற்றி

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தினைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கடல் அலைகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கக்கூடிய 'கடல் அலை ஆற்றல் மாற்றி' என்ற இயந்திரத்தினை உருவாக்கியுள்ளனர்.
- இந்தச் சாதனமானது அடுத்த மூன்று ஆண்டுகளில் கடல் அலைகளிலிருந்து 1 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.
- 'கடலில் இருந்து உருவாக்கப்பட்டது' என்று பொருள்படும் வகையில் இந்த சாதனம் 'சிந்துஜா-I' என்று பெயரிடப்பட்டுள்ளது.



## ஐஎன்எஸ் மோர்முகோவா

- இது 2022 ஆம் ஆண்டு கோவா விடுதலை தினத்தை முன்னிட்டு மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது இந்தியக் கடற்படையின் விசாகப்பட்டின ரகம் சார்ந்த, ரேடாருக்குப் புலப்படாத வகையிலான தொழில்நுட்பம் கொண்ட வழிகாட்டுதல் ஏவுகணை அழிப்பு கப்பல்களின் இரண்டாவது தொடர் ரகமாகும்.
- இது 15B திட்டத்தின் கீழ் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இது மும்பையில் அமைந்துள்ள மசாகன் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் (MDSL) கட்டமைக்கப் பட்டது.
- இந்தக் கப்பலின் 75 சதவிகிதக் கட்டுமான அம்சங்கள் ஆனது உள்நாட்டுக் கருவிகளால் கட்டமைக்கப் பட்டதாகும்.
- இந்தியக் கடற்படையின் 15B என்ற திட்டத்தின் நோக்கமானது, அதிகபட்ச உள்நாட்டு உள்ளீடுகளைக் கொண்ட, ரேடாருக்குப் புலப்படாத வகையிலான தொழில்நுட்பம் கொண்ட வழிகாட்டுதல் ஏவுகணை அழிப்புக் கப்பல்களை உருவாக்குவதாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட முதல் கப்பலான ஐஎன்எஸ் விசாகப் பட்டினம் ஆனது இது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியக் கடற்படையில் இணைக்கப் பட்டது.
- இந்தியக் கடற்படையின் விசாகப்பட்டினம் ரகம் சார்ந்த ரேடாருக்குப் புலப்படாத வகையிலான தொழில்நுட்பம் கொண்ட வழிகாட்டுதல் ஏவுகணை அழிப்புக் கப்பல்களின் தொடர் ரகங்களில் முதன்மையான கப்பலாகும்.




## ஐஎன்எஸ் அர்னாலா

- இது ASW SWC திட்டத்தின் முதல் கப்பல் ஆகும்.
- இது இந்தியக் கடற்படைக்காக கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் & இன்ஜினியர்ஸ் (GRSE) நிறுவனத்தின் மூலம் சென்னையின் காட்டுப் பள்ளியில் தொடங்கப்பட்டது.
- மகாராஷ்டிராவின் வசாய் பகுதிக்கு வடக்கே சுமார் 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள அர்னாலா தீவிற்கு, மாபெரும் மராட்டிய மன்னரான சத்ரபதி சிவாஜி மகாராஜா அவர்கள் வழங்கிய உத்திசார் கடல்சார் முக்கியத்துவத்தை கௌரவிக்கும் வகையில் இந்த கப்பலுக்கு அர்னாலா என்று பெயரிடப்பட்டது.



## 'வாகீர்'




- ❖ ஐந்தாவது ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் திட்டம் 75ன் கீழ் கட்டமைக்கப் பட்ட வாகிர் எனப்படும் கல்வாரி வகை நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்தியக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளன.
- ❖ இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள், பிரான்சில் உள்ள நேவல் குரூப் என்ற நிறுவனத்தின் ஒரு ஒத்துழைப்புடன், மும்பையில் உள்ள மசாகான் என்ற கப்பல் கட்டும் நிறுவனத்தில் கட்டமைக்கப் பட்டு வருகின்றன.
- ❖ திட்டம்-75 ஆனது ஸ்கார்பியன் வடிவமைப்பிலான ஆறு நீர்மூழ்கிக் கப்பல்களின் உள்நாட்டுக் கட்டுமானப் பணிகளை உள்ளடக்கியது.
- ❖ இந்தத் திட்டமானது, அதிநவீன தன்னியக்கக் காற்று உந்துவிசை அமைப்பினைக் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களை உள்நாட்டிலேயே கட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தத் தொடரின் 6வது & கடைசி நீர்மூழ்கிக் கப்பலான வாக்ஷீர் அடுத்த ஆண்டு கடற் படையிடம் வழங்கப்படும்.

## வைனு பாப்பு தொலைநோக்கி



- சமீபத்தில் வைனு பாப்பு தொலைநோக்கியானது தனது 50 ஆண்டு கால பணிக் கால நிறைவினைக் கொண்டாடியது.
- இந்தத் தொலைநோக்கியானது, தமிழ்நாட்டின் காவலூரில் பேராசிரியர் வைனு பப்பு அவர்களால் 1972 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- காவலூர் என்பது திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள வாணியம்பாடி தாலுக்காவில் அமைந்துள்ள ஜவ்வாது மலையில் உள்ள ஒரு கிராமமாகும்.
- காவலூர் பகுதியில் வானங்களின் காட்சிகள் சிறப்பாக உள்ளதோடு, அது தெற்குப் பகுதியில் அமைந்துள்ளதால் வடக்குப் பகுதி மற்றும் தெற்குப் பகுதி வானத்தின் பெரும் பகுதியை இங்கிருந்து காண முடியும்.
- யுரேனஸ் கிரகத்தைச் சுற்றி வளையங்கள் இருப்பது, யுரேனஸின் புதிய துணைக் கோள், வியாழனின் துணைக் கோளான கேனிமீட்டைச் சுற்றி வளிமண்டலம் இருப்பது போன்ற பல முக்கியக் கண்டுபிடிப்புகளை மேற்கொண்டதன் மூலம் வானியலில் இது குறிப்பிடத் தக்க பங்களிப்பினைக் கொண்டுள்ளது.
- இதில் பல 'Be Stars', இராட்சத நட்சத்திரங்களில் லித்தியம் குறைதல், அண்ட அணுக் கருக்களில் (Blazars) ஏற்படும் ஒளியியல் மாறுபாடு மற்றும் பிரபலமாக கூறப்படும் SN 1987A எனப்படும் சூப்பர்நோவாவின் இயக்கவியல் ஆகியவற்றின் கண்டுபிடிப்பு மற்றும் ஆய்வு ஆகியவை இதன் மூலம் மேற்கொள்ளப் பட்டது.
- 1976 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட கேஸ்கிரேன் ஒளிமானி மற்றும் எச்செல் நிறமாலை மானி முதல், 1978 ஆம் ஆண்டில் புதிய ஒளியடைப்பு நிறமாலை மானி, 1988 ஆம் ஆண்டில் ஒளியியல் சுழற்சி கருவி 2016 ஆம் ஆண்டில் மாற்றப் படுதல் மற்றும் 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சமீபத்திய NIR ஒளிமானி ஆகியவை உட்பட இந்தக் கண்காணிப்பகம் அதன் வசதிகளைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

## 'பிரலய்' உந்துவிசை ஏவுகணை





- இந்திய ஆயுதப் படைகள் ஆனது தற்போது 'பிரலய்' எனப்படும் ஒரு உந்துவிசை வகை ஏவுகணையை வாங்கத் தயாராக உள்ளன.
- இது 150 முதல் 500 கிமீ வரை உள்ள இலக்கைத் தாக்கும் திறன் கொண்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஆனது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்த நிலம் விட்டு நிலம் பாயும் ஏவுகணையான 'பிரலய்' வகை ஏவுகணையின் முதல் ஏவுதல் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒடிசா கடற்கரையில் உள்ள டாக்டர் A.P.J. அப்துல் கலாம் தீவில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.

- பிரலய் ஏவுகணையானது திட உந்துசக்தி ஏவுகல விசைப்பொறி மூலம் இயக்கப் படுகிறது.
- இந்தப் புதிய ஏவுகணையானது நிர்ணயிக்கப்பட்ட பகுதியளவு உந்துவிசை பாதையைப் பின்பற்றியதோடு அதிக அளவு துல்லியத்துடன் நிர்ணயிக்கப்பட்ட ஒரு இலக்கை அடைந்து, கட்டுப்பாடு, வழிகாட்டுதல் மற்றும் அதற்கான செயல்பாட்டு வழி முறைகளில் சிறப்பான செயல்பாடுகளைக் கொண்டுள்ளது.

## BF.7

- புதிய கோவிட் மாறுபாடான BF.7 என்பது ஓமைக்ரான் வகை கொரோனா வைரசின் ஒரு மாறுபாடாகும்.
- ஓமைக்ரான் வைரசின் BF.7 என்ற ஒரு துணை மாறுபாட்டு வகையினால் சீனாவில் பதிவாகின்ற கோவிட் பாதிப்பில் மிகப்பெரிய அளவில் அதிகரிப்பு ஏற்படுகிறது.
- குஜராத் மற்றும் ஒடிசா மாநிலங்களில் தான், BF.7 கோவிட் மாறுபாட்டின் பாதிப்புகள் முதலில் பதிவாகியுள்ளன.
- ஓமைக்ரான் துணை வகைகளான BA.5 மற்றும் BF.7 ஆகியவை ஒரே மாதிரியானவை ஆகும்.
- BF.7 என்பது BA.5.2.1.7 என்றும் அழைக்கப்படுகிறது.
- BF.7 துணை மாறுபாடானது அதன் அசல் வகையான D614G மாறுபாட்டை விட 4.4 மடங்கு அதிக நடுநிலைப் படுத்தல் எதிர்ப்புத் திறனைக் கொண்டுள்ளது.
- ஆய்வக அமைப்பில், தடுப்பூசி செலுத்தப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட நபரின் உடலில் உள்ள ஆன்டிபாடிகள் ஆனது, அசல் வகை வுஹான் வைரசினை அழிப்பதை விட BF.7 வகையினை அழிக்கும் திறனைக் குறைவாகவேக் கொண்டுள்ளன.
- BQ.1 எனப் பெயரிடப்பட்ட மற்றொரு ஓமைக்ரான் துணை மாறுபாடானது, அதிக நெகிழ் திறன் கொண்ட துணை மாறுபாடு அல்லாத BF.7 மாறுபாட்டினை விட 10 மடங்கு அதிக நடுநிலைப்படுத்தல் எதிர்ப்புத் திறனைக் கொண்டிருந்தது.



## சந்திரனுக்கான வர்த்தகரீதியான முதல் தரையிறங்கு வாகனம்

- ஜப்பானின் விண்வெளிசார் புத்தொழில் நிறுவனம் சமீபத்தில் சந்திரனுக்கு ஒரு விண்கலத்தை வெற்றிகரமாக ஏவியது.
- இது அந்த நாட்டிற்கும் ஒரு தனியார் நிறுவனத்திற்கும் முதலாவதாக இருக்கும் ஒரு செயல்பாடாகும்.
- ஜப்பானின் இஸ்பேஸ் நிறுவனத்தின் ஹக்குடோ-R எனும் இந்த விண்வெளிப் பயணம் அமெரிக்காவில் புளோரிடாவின் கேப் கனவெரலில் இருந்து ஏவப்பட்டது.
- இன்று வரையில், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றின் அரசு விண்வெளி அமைப்புகள் மட்டுமே நிலவில் மென்மையான தரையிறக்கத்தை நிகழ்த்தியுள்ளன.
- நிலவில் தரையிறங்கிய M1 வாகனம், ஜப்பானின் JAXA விண்வெளி அமைப்பின் இரு சக்கரம் கொண்ட பேஸ்பால் அளவிலான உலவியையும், ஐக்கிய அரபு அமீரகத்தால் தயாரிக்கப்பட்ட நான்கு சக்கரம் கொண்ட ரஷித் உலவியையும் பயன்படுத்தும்.



## ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி "உலகின் முதல்" அறுவைசிகிச்சை




World-first operation using placenta stem cells saves baby with heart defect

- இங்கிலாந்தில் உள்ள இதய அறுவை சிகிச்சை நிபுணர், நஞ்சுக் கொடியிலிருந்து ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி "உலகிலேயே முதல்" அறுவை சிகிச்சையை மேற் கொண்டுள்ளார்.
- ஸ்டெம் செல்கள் என்பவை உடலின் மூலப்பொருட்கள் ஆகும்.

- இவை சில சிறப்புச் செயல்பாடுகளைக் கொண்ட மற்ற அனைத்துச் செல்களையும் உருவாக்கும் செல்கள் ஆகும்.
- உடல் அல்லது ஆய்வகத்தில் ஒரு சரியான சூழ்நிலையில், ஸ்டெம் செல்கள் பிரிக்கப் பட்டு சேய் செல்கள் எனப்படும் அதிக செல்கள் உருவாக்கப்படுகின்றன.

## அணுக்கரு இணைவில் திருப்புமுனை

- லாரன்ஸ் லிவர்மோர் தேசிய ஆய்வகம் (எல்.எல்.என்.எல்) உலகின் மிகப்பெரிய லேசரை முதன்முறையாக அணுக்கரு இணைவுத் தொடர்வினையை உருவாக்கப் பயன்படுத்தி உள்ளதாகக் கூறியுள்ளது.
- சூரியனை இயக்கும் செயல்முறையைப் பிரதிபலிக்கும் இந்தத் தொடர்வினை எனபது உற்பத்தி செய்வதற்கு எடுத்துக் கொண்டதை விட அதிக ஆற்றலை உருவாக்கியது.
- அணுக்கரு இணைவு அதன் ஆதரவாளர்களால் தூய்மையான, மிகுதியான மற்றும் பாதுகாப்பான ஒரு ஆற்றல் மூலமாகக் கூறப்படுகிறது.
- ஆராய்ச்சியாளர்கள் 2.05 மெகாஜூல் ஆற்றலை வழங்க 192 அதிசக்தி வாய்ந்த லேசர்களைப் பயன்படுத்தி அதன் விளைவாக 3.15 மெகா ஜூல் இணைவு ஆற்றல் வெளியீட்டைப் பெற்றனர்.




## முதல் உலகளாவிய நீர் ஆய்வு செயற்கைக்கோள்

- நாசா அமைப்பானது ஸ்பேஸ்எக்ஸ் பால்கன் 9 ராக்கெட் மூலம் 'மேற்பரப்பு நீர் மற்றும் கடல் நிலப்பரப்பு' (Surface Water and Ocean Topography - SWOT) என்ற செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது.
- இந்தச் செயற்கைக்கோள் விண்வெளியில் இருந்து பூமியின் நன்னீர் அமைப்புகளின் முதல் உலகளாவிய ஆய்வை எடுக்கும்.

- SWOT என்பது விஞ்ஞானிகளுக்குக் கடல்கள் மற்றும் காலநிலை மாற்றம் அதனை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றிய ஒரு ஆழமான புரிதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள ஒரு மேம்படுத்தப் பட்ட ரேடார் செயற்கைக்கோள் ஆகும்.
- இந்த செயற்கைக்கோள் கடல் நீர்மட்ட அம்சங்களை தற்போது சாத்தியமுள்ளதை விட பத்து மடங்கு துல்லியமாக அளவிட முடியும்.
- இதனால் பூமியில் உள்ள ஒரு மில்லியன் ஏரிகள் மற்றும் ஆறுகளை அளவிட முடியும்.
- இந்த செயற்கைக்கோள் கண்காணிப்பு மூலமாக வெள்ள முன்னறிவிப்புகளின் துல்லியத்தை மேம்படுத்தவும் முடியும்




## செயற்கை இதயம்

- கான்பூரில் அமைந்துள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது தீவிர இதயப் பிரச்சனை உள்ளவர்களுக்குப் பெரிதும் உதவும் வகையில் ஒரு செயற்கை இதயத்தை உருவாக்கியுள்ளது.
- இந்தச் செயற்கை இதயங்கள் தீவிர நோயாளிகளின் உடலில் பொருத்தப்படலாம்.
- இதற்கானப் பரிசோதனையானது வெற்றிகரமாக நிறைவடைந்த பிறகு, அடுத்த இரண்டு ஆண்டுகளில் மனிதர்களின் உடலில் பொறுத்தப்படுவதற்கான மாற்று அறுவை சிகிச்சையினை இதன் மூலம் மேற்கொள்ள இயலும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## மௌனா லோவா எரிமலை

- ஹவாய் தீவில் உள்ள உலகின் மிகப்பெரிய செயல்பாட்டில் உள்ள எரிமலையான மௌனா லோவா, சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக வெடிக்கத் தொடங்கியுள்ளது.
- மௌனா லோவா பசிபிக் பெருங்கடலின் நீர் மட்டத்தில் இருந்து 13,679 அடி (4,169 மீட்டர்) உயரத்தில் உள்ளது.
- இது ஹவாய் தீவுகளை உருவாக்கிய எரிமலைத் தொடரின் ஒரு பகுதியாகும்.
- முன்னதாக 1984 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மாதங்களில் இந்த எரிமலை வெடித்தது.



## புதிய கருப்பவளப்பாறை இனங்கள்



- மேற்பரப்பிற்குக் கீழே 2,500 அடி (760 மீட்டர்) ஆழத்தில் காணப்படும் ஐந்து புதிய வகை கருப்பவளப்பாறைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது ஆஸ்திரேலியாவின் கடற்கரையில் உள்ள பெருந்தடுப்புப் பவளத்திட்டு மற்றும் பவளக் கடல் ஆகியப் பகுதிகளில் காணப்படுகிறது.

- கரும்பவளப்பாறைகள் ஆழமற்ற நீர் நிலையிலும், 26,000 அடி (8,000 மீட்டர்) ஆழத்திலும் வளர்வதைக் காணலாம்.
- சில தனிப்பட்ட பவளப்பாறைகள் 4,000 ஆண்டுகளுக்கு மேல் வாழக்கூடியவை.

## ஆபத்து நிலையில் உள்ள உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியல்



- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN) மற்றும் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய மையம் (WHC) ஆகியவற்றின் கூட்டு அறிக்கையானது, ஆஸ்திரேலியாவில் உள்ள பெருந்தடுப்பு பவளத் திட்டுகளின் (GBR) நிலை குறித்து கவலைக்கிடமான தகவலைத் தெரிவித்தது.
- அந்த அமைப்புகள் "ஆபத்திலுள்ள உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் இதனைச் சேர்க்க வேண்டும்" என்று பரிந்துரைத்துள்ளன.
- இது ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து கடற்கரையில் அமைந்துள்ளது.
- பெருந்தடுப்பு பவளத் திட்டு என்பது 2,900 தனிப்பட்ட திட்டுகள், 900 தீவுகள் மற்றும் தோராயமாக 344,400 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட உலகின் மிகப்பெரிய பவளப்பாறை அமைப்பாகும்.
- இது உலகின் மிகப்பெரிய பல்லுயிர் மையங்களில் ஒன்றாகும் என்பதோடு, உலகின் மிகப்பெரிய கார்பன் உட்கவர் அமைப்புகளில் ஒன்றாகவும் இது உள்ளது.

## நேட்டோவெனேட்டர் பாளிடோண்ட்டஸ்

- நேட்டோவெனேட்டர் பாளிடோண்ட்டஸ் எனப்படும் டைனோசர் இனமானது சுமார் 72 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கிரெட்டேசியஸ் காலத்தில் உயிர் வாழ்ந்தது.
- இது சீரான உடலமைப்பினைக் கொண்ட நீந்தும் பறவை போன்ற உயிரினமாகும்.
- இது வாத்து போன்ற நீளமான கழுத்து மற்றும் 100க்கும் மேற்பட்ட சிறிய பற்களைக் கொண்ட வாயுடன், நீண்ட தட்டையான மூக்கு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- அதன் நன்கு பதப்படுத்தப்பட்ட உடல் பாகங்கள், அதாவது சுமார் 70% அளவுடைய ஒரு அதன் எலும்புக் கூடு ஆனது கோபி பாலைவனத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




## பறவைகள் கணக்கெடுப்பு - சத்தீஸ்கர்

- சத்தீஸ்கர் மாநிலத்தின் முதல் முறை சார்ந்த மாநிலங்களுக்கு இடையேயான பறவை கணக்கெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட கங்கர் பள்ளத்தாக்கு பறவைகள் கணக்கெடுப்பின் போது சுமார் 200 பறவை இனங்கள் ஆவணப்படுத்தப்பட்டன.
- சத்தீஸ்கர் மாநிலத்தினைச் சேர்ந்த பறவைகள் ஆர்வலர்கள் & சத்தீஸ்கரின் பறவைகள் மற்றும் வனவிலங்குகள் அமைப்பு மற்றும் இந்தியப் பறவைகள் கணக்கெடுப்பு அமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கங்கர் பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவின் வனத்துறையினால் இந்த கணக்கெடுப்பானது ஏற்பாடு செய்யப் பட்டது.
- வனப் பணியாளர்கள், பறவை வழிகாட்டிகள் மற்றும் பறவைக் கண்காணிப்பாளர்களாக விளங்கும் இந்தியக் குடிமக்கள் ஆகியோரை உள்ளடக்கிய கங்கர் பள்ளத்தாக்குப் பூங்காவின் முதல் பறவை கணக்கெடுப்பு இதுவாகும்.



## கொரோனிவியா வேளாண் கூட்டுப் பணி




- கொரோனிவியா வேளாண் கூட்டுப் பணிக்கு (KJWA) இந்தியா எதிர்ப்பு தெரிவித்து உள்ளது.
- இது ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றத்திற்கான ஒப்பந்தக் கட்டமைப்பின் கீழ் ஒரு முக்கிய முடிவாகும்.
- கொரோனிவியா வேளாண் கூட்டுப் பணி வேளாண் துறையில் இருந்து வெளியாகும் பசுமை இல்ல வாயு உமிழ்வினைக் குறைக்க முயல்கிறது.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் வேளாண் துறையின் தனித்துவமானத் திறனை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மண், ஊட்டச்சத்துப் பயன்பாடு, கால்நடைகள், நீர், வேளாண் துறையில் ஏற்பு மற்றும் சமூக-பொருளாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு சார்ந்த பரிமாணங்களை அளவிடும் முறைகள் ஆகிய ஒன்றோடொன்று தொடர்புடைய 6 துறைகளுக்கான தீர்வினைக் குறிப்பிடுகிறது.
- வேளாண் துறைகளில் இருந்து வெளிவரும் மாசுக்கள் "ஆடம்பர வாழ்க்கை சார்ந்த" உமிழ்வுகள் அல்ல, அது ஏழைகள் "உயிர் பிழைப்பதற்கான முயற்சியில் வெளியாகும் உமிழ்வுகள்" என்று இந்தியா கூறுகிறது.
- வளர்ச்சியடைந்த நாடுகள் உலகிற்கு 790 ஜிகா டன் கார்பன் டை ஆக்சைட் அளவிலான கார்பன் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது என்று இந்தியா சுட்டிக் காட்டியது.
- ஒரு டன்னுக்கு 100 அமெரிக்க டாலர் என்ற மிதமான விலையில் நிர்ணயத்தில் கூட இது சுமார் 79 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடையதாகும்.
- உலக மக்கள்தொகையில் நான்கில் ஒரு பங்கைக் கொண்டிருந்தாலும், தொழில் துறைக்கு முந்தையக் காலத்திலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையில் தெற்காசியா வெளியிட்ட மொத்த கார்பன் உமிழ்வு 4 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.
- இந்தியாவின் தனிநபர் வருடாந்திர உமிழ்வுகள் உலக சராசரியில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.
- முழு உலகமும் இந்திய நாட்டின் போலவே தனிநபர் உமிழ்வு அளவில் கார்பனை வெளியேற்றினால், பருவநிலை நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்.

## துங்கரேஷ்வர் வனவிலங்கு சரணாலயம்





- மஹாராஷ்டிராவின் துங்கரேஷ்வர் வனவிலங்கு சரணாலயத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதியைச் சுற்றி 1 கி.மீ. சுற்றளவில் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்களை உருவாக்க வேண்டும் என்ற விதிமுறையில் இருந்து உச்ச நீதிமன்றம் விலக்கு அளித்து உள்ளது.
- இது மகாராஷ்டிராவின் பால்கர் மாவட்டத்தில் உள்ள வசை மற்றும் விரார் ஆகியவற்றிற்குக் கிழக்கே உள்ள ஒரு பீடபூமியில் அமைந்துள்ளது.
- இது போரிவலி தேசியப் பூங்காவிற்கும் தன்சா வனவிலங்கு சரணாலயத்திற்கும் இடையே ஒரு வழித்தடத்தினை உருவாக்குகிறது.
- முன்னதாக, இந்தியா முழுவதும் உள்ள அனைத்து பாதுகாக்கப்பட்ட காடுகள், தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் ஆகியவை அவற்றின் வரையறுக்கப் பட்ட எல்லைகளில் இருந்து குறைந்தபட்சம் 1 கி.மீ. சுற்றளவில் கட்டாயமாக ஒரு சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தை அமைத்திருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்கள் என்பது பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளைச் சுற்றி "தாக்கத்தினைத் தடுக்கும் அரண்களாக" அமைக்கப்படும் பகுதிகளாகும்.
- அதிகப் பாதுகாப்பு உள்ள பகுதிகளிலிருந்து குறைந்தப் பாதுகாப்பு உள்ள பகுதிகள் என அனைத்து வனப் பகுதிகளுக்கும் அவை ஒரு மாறுதல் மண்டலமாக செயல்படுகின்றன.
- இதற்கு முன்பாக மும்பையில் உள்ள சஞ்சய் காந்தி தேசியப் பூங்கா மற்றும் தானே க்ரீக் ஃபிளமிங்கோ (பூநாரை) சரணாலயம் ஆகியவற்றிற்கு இந்த விதிமுறையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

## இயற்கைக்கான நிதி நிலை அறிக்கை 2022

- இது ஜெர்மனியின் மத்தியப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தின் (BMZ) நிலச் சீரழிவின் பொருளாதாரம் என்ற முன்னெடுப்பு, பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்த அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஆணையம் ஆகியவற்றுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல்

மேம்பாட்டு அமைப்பினால் வெளியிடப்பட்டது.

- இது COP27 மாநாடு முடிவடைந்த 10 நாட்களுக்குப் பிறகும் கனடா நாட்டின் மாண்ட்ரீயல் நகரில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பல்லுயிர் பெருக்கம் (COP15 CBD) மாநாடு தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பும் வெளியிடப்பட்டது.
- இயற்கை சார்ந்த தீர்வுகளில் (NbS) மேற்கொள்ளப்படும் தற்போதைய உலகளாவிய முதலீடு ஆண்டிற்கு 154 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.
- இது 2025 ஆம் ஆண்டிற்குள் 384 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்கப்பட வேண்டும்.
- பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வை அதிகரிக்கும் பொருளாதார நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் இயற்கை சார்ந்தத் தீர்வுகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை விட 3 முதல் 7 மடங்கு அதிகமாகும்.
- சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான மானியங்கள் எரிசக்தித் துறையில் அதிகம் வழங்கப்படுகின்றன.
- வேளாண் துறையில் வழங்கப்படும் மானியங்கள் ஆண்டிற்கு சுமார் 500 பில்லியன்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்த மானியங்களைப் படிப்படியாக நிறுத்துவதற்கு இந்த அறிக்கை பரிந்துரைத்து உள்ளது.



## மெலனோக்லமிஸ் பெங்காலென்சிஸ்



- வங்காள விரிகுடா கடற்கரையை ஒட்டிய திகா, தலசாரி-உதய்ப்பூர் மற்றும் அதற்கு அருகில் உள்ள பகுதிகளில் புதிய வகை தலை-கவசம் கொண்ட கடல் தட்டை மீன்கள் இனம் ஒன்றை விலங்கியல் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இதற்கு மெலனோக்லமிஸ் பெங்காலென்சிஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய இனங்கள் ஆனது, அதே குடும்பத்தினைச் சேர்ந்த மற்ற இனங்களுடன் ஒப்பிடும் போது ஒரு தனித்துவமான உயிரினக் கிளை இனத்தினைக் குறிக்கின்றன.
- இது 14 மி.மீ. வரை நீளம் கொண்ட ஒரு சிறிய கடல் தட்டை மீன்கள் என்பதோடு, அது தனது உடலின் உள்ளே ஒடுனுடனும் முதுகெலும்பு அற்றும் காணப்படுகிறது.
- இந்த குடும்பத்தினைச் சேர்ந்த 17 இனங்கள் உலகம் முழுவதும் காணப்படுகின்றன.
- இந்த இனங்கள் அனைத்தும் பொதுவாக இந்திய-பசிபிக் பெருங்கடல் மண்டலத்தின் மித வெப்ப மண்டலப் பகுதிகளில் பரந்துக் காணப்படுகின்றன.
- தாய்லாந்து வளைகுடாவில் கண்டுபிடிக்கப்பட்ட மெலனோக்லமிஸ் பாப்பிலாட்டா என்ற இனத்தினை அடுத்து பதிவு செய்யப்பட்ட இரண்டாவது வெப்பமண்டல இனம் இதுவாகும்.

## உலகளவில் கரிசல் மண்ணின் நிலை

- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது "உலகளவில் கரிசல் மண்ணின் நிலை" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- கரிமப் பொருட்கள் நிறைந்த மண் அடுக்கினைக் கொண்ட தடிமனான, கருமை நிற மண் கரிசல் மண் என்று வகைப்படுத்தப் படுகிறது.
- அதிக ஈரப்பதத்தைச் சேமிக்கும் திறன் கொண்டதால் இவை மிகவும் வளமானவை மற்றும் அதிக வேளாண் விளைச்சலை வழங்கும் திறன் கொண்டவையாகும்.
- உலகளவில் உள்ள மண் வகைகளில் 5.6 சதவீதம் கரிசல் மண் ஆகும் என்பதோடு, இவை உலகின் கரிம கார்பன் (SOC) இருப்புகளில் 8.2 சதவீதத்தைக் கொண்டுள்ளன.
- உலகின் பெரும்பாலான இடங்களில் காணப்படும் கரிசல் மண்ணில் உள்ள கரிம கார்பன் (SOC) இருப்புகளில் குறைந்தது 50 சதவீதம் குறைந்து வருவதால், உலக நாடுகளின் மக்கள்தொகைக்கு பெருமளவில் உணவளிக்கும் கரிசல் மண் ஆனது அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது.
- உலக மக்கள்தொகையில் சுமார் 2.86 சதவீதம் பேர் கரிசல் மண் பகுதிகளில் வாழ்கின்றனர்.

- இது 17.36 சதவீத விளைநிலத்திற்கும், 8.05 சதவீத உலகளாவிய கரிம கார்பன் (SOC) இருப்புகளுக்கும், விளை நிலங்களின் 30.06 சதவீத கரிம கார்பன் (SOC) இருப்புகளுக்கும் மூல ஆதாரமாக விளங்குகிறது.
- உலகில் உள்ள மண் வகைகளில் ஒரு சிறிய அளவில் மட்டுமே இது காணப்பட்டாலும், உலக உணவுப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் கரிசல் மண் பெரும் பங்கு வகிக்கிறது.
- மொத்த விளைநிலத்தில் 70% கரிசல் மண், ஐரோப்பா மற்றும் யூரேசியா பகுதிகளில் காணப் படுகிறது.
- வட அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்கா & கரீபியன் மற்றும் ஆசியா ஆகிய பகுதிகளில் தலா 10 சதவீதம் கரிசல் மண் காணப்படுகிறது.


Table 2.1 Top ten countries with the largest black soil areas

| Country | Black soil area (million hectare) | Country area (million hectare) | Black soil proportion (percentage) |
|---|---|---|---|
| Russian Federation | 326.8 | 1700.2 | 19.22 |
| Kazakhstan | 107.7 | 283.9 | 37.93 |
| China | 50 | 934.6 | 5.35 |
| Argentina | 39.7 | 278.1 | 14.28 |
| Mongolia | 38.6 | 156.5 | 24.67 |
| Ukraine | 34.2 | 60 | 57.01 |
| United States of America | 31.2 | 950.1 | 3.28 |
| Colombia | 24.5 | 113.8 | 21.54 |
| Canada | 13 | 997.5 | 1.30 |
| Mexico | 11.9 | 196.4 | 6.04 |

## தெற்கு வெள்ளை காண்டாமிருகங்களின் நிலை

- CITES உடன்படிக்கையின் 19வது பங்குதாரர்களின் மாநாடானது, சமீபத்தில் தெற்கு வெள்ளை காண்டாமிருகங்களின் நிலையை Iவது பின் இணைப்பிலிருந்து IIவது பின் இணைப்பிற்கு மாற்றுவதற்கான முன்மொழிதலை ஏற்றுக் கொண்டது.
- நமீபியா மற்றும் போட்ஸ்வானா ஆகிய நாடுகள் இந்த முன்மொழிவினை முன் வைத்தன.
- IIவது பின் இணைப்பில் உள்ள விலங்குகள் அழிவின் விளிம்பில் உள்ள விலங்குகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் அவற்றின் வாழ்வினை பாதுகாக்கச் செய்வதற்காக அத்தகைய இனங்களில் மேற்கொள்ளப்படும் வர்த்தகமானது ஒழுங்கு படுத்தப் படுகிறது.
- இது வெள்ளை காண்டாமிருகங்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு நீண்ட தூரத்திற்கு இடமாற்றம் செய்வதற்கான திட்டத்திற்கு அனுமதிக்கிறது.
- தெற்கு வெள்ளை காண்டாமிருகம் ஆனது வெள்ளை காண்டாமிருக இனங்களின் இரண்டு துணை இனங்களில் ஒன்றாகும் என்ற நிலையில், அதன் மற்றொரு இனம் வடக்கு வெள்ளை காண்டாமிருகம் ஆகும்.
- இது உலகின் மிகப்பெரிய மற்றும் கனமான விலங்குகளில் ஒன்றாகும்.

- இது வெள்ளை காண்டாமிருகங்களின் மிகவும் பரவலாகக் காணப்படும் மற்றும் பொதுவான கிளையினங்களில் ஒன்றாகும்.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலைக்கு அருகில் உள்ள ஒரு இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.





## அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் பட்டியல்

- கனடாவின் மாண்ட்ரீயல் நகரில் நடைபெற்ற உயிரியல் பன்முகத்தன்மைத் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையின் (CBD) 15வது பங்குதாரர்கள் மாநாட்டில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் பட்டியல் வெளியிடப் பட்டது.
- அதிகப்படியான நுகர்வு மற்றும் அதிகளவில் நிலையான முறையில் மேற்கொள்ளப் பட்டு வரும் உயிரின நீக்கமானது நம்மைச் சுற்றியுள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் மீது என்ன தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதை இந்தப் பட்டியல் உணர்த்துகிறது.
- அனைத்து வகை அபலோன் மட்டி மீன் இனங்களில் கிட்டத்தட்ட 44 சதவீத இனமானது தற்போது அழிந்து போகும் நிலையில் உள்ளது.
- கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள் மற்றும் நியூ கலிடோனியாவில் உள்ள கடல் பசு இனங்கள் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் முறையே மிக அருகி வரும் மற்றும் அருகி வரும் நிலையில் உள்ள இனங்களாக உள்ளன.
- இந்த இனங்கள் உலகளவில் பாதிக்கப்படக் கூடிய நிலையிலேயே உள்ளன.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் பாதிக்கப்படக் கூடிய இனமாக இருந்த, யுகடன் தீபகற்பம் மற்றும் புளோரிடாவில் இருந்து டிரினிடாட் மற்றும் டொபாகோ வரையிலான கரீபியன் பகுதிகள் முழுவதும் காணப்படும் தூண் பவளப் பாறைகள் ஆனது மிக அருகி வரும் இனங்கள் என்ற நிலையை எட்டியுள்ளது.

| 2022-23 ஆம் ஆண்டிற்கான IUCN அமைப்பின் செந்நிற பட்டியலின் அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் உலகளாவிய புள்ளிவிவரங்கள்: | |
|---|---|
| மதிப்பிடப்பட்ட மொத்த இனங்கள் | 150,388 |
| அச்சுறுத்தல் நிலையில் உள்ள மொத்த இனங்கள் | 42,108 |
| வனங்களில் அழிந்துவிட்ட இனங்கள் | 84 |
| அழிந்துவிட்ட இனங்கள் | 902 |
| மிக அருகி வரும் இனங்கள் | 9,251 |
| அருகி வரும் இனங்கள் | 16,364 |
| பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள இனங்கள் | 16,493 |
| அச்சுறுத்தப்படுத்தல் நிலையில் உள்ள இனங்கள் | 8,816 |
| குறைந்த ஆபத்து/வளங்காப்பு முறையை சார்ந்துள்ள இனங்கள் | 152 |
| குறைந்த அளவு கவனம் தேவைப்படும் இனங்கள் | 77,491 |
| தரவுகள் குறைவாக உள்ள இனங்கள் | 20,835 |

## உயிரியல் பன்முகத் தன்மை குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு - COP 15




- உயிரியல் பன்முகத் தன்மை குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் 15வது பங்குதாரர்கள் மாநாடானது கனடாவின் மாண்ட்ரீயல் நகரில் தொடங்கியது.
- இது 15வது பங்குதாரர்கள் மாநாட்டின் இரண்டாம் பகுதியாகும்.
- இதன் முதல் பாகத்தினைச் சீனா நடத்தியது.
- பல்லுயிர்ப் பாதுகாப்புக்கான பரப்பளவு அடிப்படையிலான இலக்குகள் என்ற ஒரு கருத்தை இந்தியா நிராகரித்துள்ளதோடு ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தக் கூடியது என்ற வகையிலான அணுகுமுறையினை ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் கூறியுள்ளது.
- பல்லுயிர் இழப்பைத் தடுக்கவும், அதனை மாற்றியமைக்கவும் 2020 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய உலகளாவியக் கட்டமைப்பை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு வேண்டி வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவுவதற்காக புதிய மற்றும் உறுதிப்பாடு மிக்க ஒரு நிதியை உருவாக்குவதற்கும் இந்தியா வலியுறுத்தியது.


## குன்மிங்-மாண்ட்ரீயல் உலகப் பல்லுயிர் கட்டமைப்பு

- உயிரியல் பன்முகத் தன்மைக்கான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையின் (CBD) 15வது பங்குதாரர்களின் மாநாடானது (COP15) கனடாவின் மாண்ட்ரீயல் நகரில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டிற்குச் சீனா தலைமை வகித்தது.
- இந்த மாநாடானது குன்மிங்-மாண்ட்ரீயல் உலகப் பல்லுயிர்க் கட்டமைப்பு என்ற ஒரு ஒப்பந்தத்தினை ஏற்றுக் கொண்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பல்லுயிர் இழப்பு மற்றும் இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கான 23 இலக்குகள் மற்றும் நான்கு இலக்குகள் ஆகியவற்றை இந்த ஒப்பந்தம் உள்ளடக்கியுள்ளது.
- பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு அவசியமானவையாகக் கருதப்படும் 30 சதவீத நிலம் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாப்பதற்கான இந்த ஒப்பந்தம் 30 by 30 என அழைக்கப் படுகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உலகப் பல்லுயிர்க் கட்டமைப்பு இலக்குகள் பூர்த்திச் செய்யப் பட வேண்டும்.
- உலகப் பல்லுயிர் கட்டமைப்பினைச் செயல்படுத்துவதற்கு உதவி வழங்குவதற்காக, ஒரு சிறப்பு அறக்கட்டளை நிதியத்தினை நிறுவிட வேண்டி உலகளாவிய சுற்றுச்சூழல் மையத்திடம் கோரப் பட்டுள்ளது.
- உலகப் பல்லுயிர்க் கட்டமைப்பின் ஒரு பகுதியாக, ஆண்டிற்கு 500 பில்லியன் டாலர் மதிப்பிலான தீங்கு விளைவிக்கும் பிரிவுகளுக்கான அரசாங்க மானியங்களைக் குறைக்கவும், 2025 ஆம் ஆண்டிற்குள்ளாக பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் வகையிலான மானியங்களை அடையாளம் காணவும் நாடுகள் உறுதி அளித்துள்ளன.
- இதன் முக்கிய இலக்குகள்
    - உலகின் நிலம், நீர், கடலோர மற்றும் கடல் பகுதிகளில் குறைந்தது 30% பகுதிகளை பாதுகாத்தல்
    - பாதிக்கப்பட்ட நிலப்பரப்பு, உள்நாட்டு நீர் வளங்கள், கடலோர மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளில் குறைந்தது 30% பகுதிகளை மீளச் செய்தல்
    - உலகளாவிய உணவுக் கழிவுகளைப் பாதியாகக் குறைத்தல் மற்றும் அதிகப் படியான நுகர்வுகள் மற்றும் கழிவுகளைக் குறைத்தல்
    - பூச்சிக் கொல்லிகள் மற்றும் அபாயகரமான இரசாயனங்களின் பயன்பாட்டைப் பாதியாகக் குறைத்தல்.

## உறைந்த நிலையில் பவளப் பாறைகள்

- உலகிலேயே முதல் முறையாக மேற்கொள்ளப்பட்ட ஒரு சோதனையில், ஆஸ்திரேலியாவின் பெருந்தடுப்புப் பவளப்பாறையை வெற்றிகரமாக அறிவியலாளர்கள் உறையச் செய்தனர்.
- பெருந்தடுப்புப் பவளப்பாறையானது, கடந்த ஏழு ஆண்டுகளில் நான்கு வெளிர்தல் நிகழ்வுகளை எதிர்கொண்டுள்ள நிலையில், அறிவியலாளர்கள் பவளப் பாறைகளைப் பாதுகாக்க முயற்சி செய்து வருகின்றனர்.

- உலகில் முதல்முறையாக பெருந் தடுப்புப் பவளப்பாறையில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வகச் சோதனையில் அறிவியலாளர்கள் பவளப் பாறைகளை உறைய வைப்பதற்கு கிரையோமெஷ் என்ற வலையினைப் பயன்படுத்தினர்.
- கிரையோமெஷ் என்ற பிரத்தியேகமாக புனையப்பட்ட ஒரு வலையானது, கிரையோ ப்ரெசர்வேஷன் என்ற குளிரூட்டும் முறையில் ஓர் அடித்தள மூலக்கூறாகப் பயன் படுத்தப் படுகிறது.
- 'கிரையோமேஷ்' என்பது ஓர் இலகுரக மற்றும் மலிவாக தயாரிக்கப்படக்கூடிய வலை ஆகும்.
- இது பவளப் பாறைகளை சிறந்த முறையில் பாதுகாக்கச் செய்வதோடு, குளிரூட்டல் பண்புகளையும் கொண்டுள்ளது.





## கார்பன் எல்லை சீரமைப்புச் செயல்முறை

- ஐரோப்பிய ஒன்றியம் கார்பன் சந்தையில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க சீர்திருத்தத்தை தனது குழுவிற்குள் அறிவித்தது.
- இந்த சீர்திருத்தம், கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கும், காலநிலைக்கு ஏற்ற தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வதற்கும் வேண்டி ஐரோப்பிய ஒன்றியத்தின் லட்சியங்களில் மையமாக செயல்படுகிறது.
- விரைவுபடுத்தப்பட்ட கரிம உமிழ்வுக் குறைப்பு, தொழில்களுக்கான இலவசப் பண வழங்கீடுகளை படிப்படியாக நீக்குதல் போன்ற விதிகள் இந்த ஒப்பந்தத்தில் அடங்கும்.
- கார்பன் எல்லை வரி என்பது மிகவும் தனித்துவமான ஒரு முன்முயற்சியாகும்.
- இது 2050 ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தை கார்பன்-நடுநிலையாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட உலகின் பெரிய முதல் படியைக் குறிக்கிறது.
- இது கார்பன் எல்லைச் சீரமைப்பு செயல்முறை (CBAM) மற்றும் கார்பன் எல்லை வரி என்றும் அழைக்கப்படுகிறது.
- இது சில ஐரோப்பிய ஒன்றிய இறக்குமதிகளுக்கு மாசு மதிப்புகளைச் சேர்க்கிறது.
- இந்த நடவடிக்கையானது அதிக கார்பன் உமிழும் தொழில்கள் கடுமையான உமிழ்வு கட்டுப்பாட்டுத் தரநிலைகளைக் கடைபிடிக்கச் செய்வதை அவசியமாக்குகிறது.

- கார்பன் எல்லை வரி என்பது கார்பன் வெளியேற்றத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதிக்கு விதிக்கப்படும் ஒரு வரியாகும்.




## "காலநிலை மாற்றம் மற்றும் நிலம்" பற்றிய அறிக்கை




- காலநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையேயான குழு (IPCC) பருவநிலை மாற்றம் மற்றும் நிலம் மீதான சிறப்பு அறிக்கையை வெளியிட்டது.
- மனிதப் பயன்பாடு நேரடியாக 70% (69-76%) பனிக்கட்டி இல்லாத உலகளாவிய நிலப் பரப்பைப் பாதிக்கிறது.
- தற்போதைய தீவிர விவசாய முறை மண் சிதைவு மற்றும் நிலையான இழப்புகளுக்கு வழி வகுத்தது.
- அடுத்த 50 ஆண்டுகளுக்குக் கூட உலகிற்கு உணவளிக்கப் போதுமான மண் வளம் இல்லை.
- இரண்டாம் உலகப் போருக்கு பிறகு, வளிமண்டலக் கார்பன் டை ஆக்சைடு அளவுகள் ஆண்டுக்கு மில்லியனுக்கு 1.3 பாகங்களாக உயர்ந்து வருவது பதிவு செய்யப் பட்டு உள்ளது.

- இது முந்தைய 100 ஆண்டுகளை விட நான்கு மடங்கு வேகமாகவும் கடந்த 5,000 ஆண்டுகளை விட 400 மடங்கு வேகமாகவும் உள்ளது.
- நமது உணவின் சுற்றுச்சூழலின் தாக்கம் பற்றிய நமது அறிவு அதிகரித்துள்ள போதிலும், 1998 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலகளாவிய இறைச்சி நுகர்வு 58% அதிகரித்துள்ளது.
- தாவர எண்ணெய் நுகர்வு 2013 ஆம் ஆண்டில் இருந்து சுமார் 30% அதிகரித்துள்ளது.
- 2008 ஆம் ஆண்டிலிருந்து உலகளவில் அரிசி நுகர்வு 17% அதிகரித்துள்ள நிலையில் கோதுமை நுகர்வு 6% உயர்ந்துள்ளது.

## துருவக் கரடிகள் எண்ணிக்கை சரிவு




- கனடாவில் மேற்கு ஹட்சன் விரிகுடாவில் துருவக் கரடிகளின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் 27 சதவீதம் குறைந்துள்ளது.
- ரஷ்யா, அலாஸ்கா, நார்வே, கிரீன்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளில் 19 துருவக் கரடி வகைகள் உள்ளன.
- மேற்கு ஹட்சன் விரிகுடாவில் உள்ள துருவ கரடி இனம் முதலாவதாக அழிந்து போகும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2011 முதல் 2016 வரை மட்டும் இந்தப் பகுதியில் துருவக் கரடிகளின் எண்ணிக்கை 11 சதவீதம் குறைந்துள்ளது.
- தற்போது 2021 ஆம் ஆண்டில் 618 துருவக் கரடிகள் மட்டுமே எஞ்சியுள்ளன.
- இது 1980 ஆம் ஆண்டுகளின் எண்ணிக்கை புள்ளி விபரங்களை விட தோராயமாக 50 சதவீதம் குறைவாகும்.

## மாசுபட்ட நதிகள் பற்றிய தரவு

- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) ஆனது இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் 351 ஆக இருந்த இந்தியாவில் உள்ள ஆறுகளில் காணப்படும் மாசு பட்ட பகுதிகளின் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் 311 ஆகக் குறைந்துள்ளது.

- ஆனால் மிகவும் மாசுபட்ட ஆற்றுப் பகுதிகளின் எண்ணிக்கையானது நடைமுறையில் மாறாமல் உள்ளது.
- முதலாவது மற்றும் இரண்டாவது வகைகளில் முன்னுரிமை வழங்கப்பட்ட மாசுபட்ட ஆறுகளின் பகுதிகளில் மாற்றம் / சிறிதளவு மாற்றம் எதுவும் பதிவாகவில்லை.

## அண்டார்டிகாவின் பேரரசப் பெங்குயின்



- அண்டார்டிகா பகுதியானது பூமியில் மிகவும் குளிரான, அதிக காற்று வீசும், உயரமான மற்றும் வறண்டக் கண்டத்தில் வாழக்கூடிய தனித்துவமான தாவரங்கள் மற்றும் விலங்குகளைக் கொண்டுள்ளது.
- இந்த இனங்களில் 2 பூக்கும் தாவரங்கள், கடினமான பாசி மற்றும் லைகன்கள், ஏராளமான நுண்ணுயிரிகள், முதுகெலும்பில்லா உயிரிகள் மற்றும் பேரரச மற்றும் அடேலி பெங்குயின் போன்ற இனப்பெருக்கம் செய்யும் கடல் பறவைகள் ஆகியவையும் அடங்கும்.
- புவி வெப்பமடைதல் மற்றும் பருவநிலை நெருக்கடி காரணமாக இந்த விலங்குகள் மற்றும் தாவரங்கள் அச்சுறுத்தல் நிலைக்கு உட்படுத்தப் படுகின்றன.
- தற்போதையப் பாதுகாப்பு முயற்சிகள் அப்படியே மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், 97 சதவீத அண்டார்டிக் நிலப்பரப்பில் வாழும் உயிரினங்கள் மற்றும் இனப்பெருக்கம் செய்யும் கடற்பறவைகளின் எண்ணிக்கை தற்போது முதல் 2100 வரை ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் குறையக்கூடும்.
- இதற்குச் சிறப்பான முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், 37 சதவீத உயிர் இனங்கள் குறைந்து விடும் நிலை உள்ளது.
- மிக மோசமான சூழ்நிலையில் பேரரசப் பெங்குயின் இனங்கள் 2100 ஆம் ஆண்டளவில் முற்றிலும் அழிந்து போகும் அபாயம் உள்ளது.
- இந்த நிலையை எதிர்கொள்ளும் ஒரே இனம் இதுதான் என்று இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

## வரித்தலை வாத்து

- வரித்தலை வாத்து (அன்சர் இன்டிகஸ்) உலகின் மிக உயரமான பறக்கும் பறவைகளில் ஒன்றாக கருதப்படுகிறது.
- இவை மத்திய ஆசிய நாடுகளைத் தாயகமாகக் கொண்டவையாகும்.

- இந்த இனங்களானது 12,000 முதல் 14,000 அடி உயரம் வரையிலான மிக உயரமான மலைகளின் வழியாக பறக்கும் திறன் கொண்டது.
- இவை தெற்காசியாவில், தெற்கே தீபகற்ப இந்தியா வரையிலும் தனது குளிர் காலத்தினைக் கழிப்பதோடு, இவை இமயமலையைக் கடப்பதற்கு முன்பாக திபெத், கஜகஸ்தான், மங்கோலியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து தெற்கே இடம் பெயர்கின்றன.
- இந்த வரித்தலை வாத்துகள் ஒரு நாளில் 1,609 கிலோமீட்டர் தொலைவிற்கு மேல் இடம் பெயர்கின்றன.
- கடந்த சில நாட்களாக ஒடிசாவின் ருஷிகுல்யா ஆற்றில் சுமார் ஆயிரம் வரித்தலை வாத்துக்கள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## GEURS - கணக்கெடுப்பு

- டைம்ஸ் உயர் கல்வி (THE) இதழானது, உலக வேலைவாய்ப்பு பல்கலைக் கழகத் தர வரிசை மற்றும் கணக்கெடுப்பு அறிக்கையினை (GEURS) வெளியிட்டுள்ளது.
- ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் கூற்றுப் படி, பணிக்கு நியமிக்கும் வகையிலான பட்டதாரிகளை உருவாக்கும் உலகின் சிறந்த 250 பல்கலைக்கழகங்களை இப்பட்டியல் வெளிக்கொணர்கிறது.
- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் இந்தப் பட்டியலில் முதல் 50 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளது.
- உலக அளவில், மொத்தம் 44 நாடுகள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- சமீபத்தில் வெளியான அறிக்கையில், மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கையில் இந்தியா 13வது இடத்தில் உள்ளது.
- சுவீடன், ஹாங்காங், இத்தாலி மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளை விட இந்தியா முன்னணியில் உள்ளது.

- ❖ பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்விக் கழகமானது, 58வது இடத்தைப் பெற்றுள்ள நிலையில், இது இந்தியாவின் இரண்டாவது சிறந்த செயல்திறன் கொண்ட நிறுவனம் ஆகும்.
- ❖ இது மூன்று இடங்கள் முன்னேறி அதன் தரவரிசையை மேம்படுத்தியுள்ளது.
- ❖ அதைத் தொடர்ந்து, 2021 ஆம் ஆண்டில் 97வது இடத்தில் இருந்த மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் தற்போது 72வது இடத்தில் உள்ளது.
- ❖ முதல் 200 இடங்களில் ஐந்து இந்திய நிறுவனங்களும், முதல் 250 இடங்களில் மொத்தம் ஏழு நிறுவனங்களும் இடம் பெற்றுள்ளன.
- ❖ அகமதாபாத்தில் உள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் 154வது இடத்தையும், காரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் 155வது இடத்தையும் பெற்று உள்ளன.
- ❖ இப்பட்டியலில் இடம் பெற்ற முதல் ஐந்து பல்கலைக்கழகங்களில் நான்கு அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் ஆகும்.
- ❖ இதில் மொத்தம் 55 அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் முதல் 250 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- ❖ பிரான்சு மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 18 மற்றும் 14 பல்கலைக் கழகங்கள் முறையே முதல் 250 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

## உலக முதன்மை நகரங்கள் குறியீடு

**THE KNIGHT FRANK PRIME GLOBAL CITIES INDEX Q3 2022**
Ranked by annual % change

| | CITY | WORLD REGION | 12-MONTH % CHANGE (Q3 2021-Q3 2022) | 6-MONTH % CHANGE (Q1 2022-Q3 2022) | 3-MONTH % CHANGE (Q2 2022-Q3 2022) |
|---|---|---|---|---|---|
| 1 | Dubai | Middle East | 68.6% | 49.9% | 29.3% |
| 2 | Miami[1,2] | North America | 30.6% | 15.2% | 3.1% |
| 3 | Tokyo[2] | Asia | 17.0% | 5.7% | 10.6% |
| 4 | Los Angeles[1,2] | North America | 13.6% | 2.8% | -4.1% |
| 5 | Gold Coast | Australasia | 11.3% | 0.1% | -1.6% |
| 6 | Zurich | Europe | 10.7% | 6.1% | 2.6% |
| 7 | Edinburgh | Europe | 9.9% | 5.3% | 0.9% |
| 8 | Berlin | Europe | 9.4% | 4.3% | -0.9% |
| 9 | Seoul | Asia | 8.9% | 0.6% | -4.1% |
| 10 | Taipei | Asia | 8.6% | 3.3% | 1.7% |

- ❖ இலண்டனைச் சேர்ந்த சொத்து ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமான நைட் ஃபிராங்க், தான் வெளியிட்ட உலக முதன்மை நகரங்கள் குறியீட்டில் மும்பையை 22வது இடத்தில் குறிப்பிட்டுள்ளது.
- ❖ இது உயர் ரகக் குடியிருப்பு சொத்துக்களின் வருடாந்திர விலை மதிப்பீட்டை அளவிடச் செய்கிறது.
- ❖ மும்பை, பெங்களூரு மற்றும் புது டெல்லி ஆகிய மூன்று இந்திய நகரங்களில் 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் அந்த சொத்துகளின் சராசரி ஆண்டு விலைகள் அதிகரித்துள்ளன.

- கடந்த ஆண்டுக் குறியீட்டில் 39வது இடத்தில் இருந்த மும்பை 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 22வது இடத்திற்கு முன்னேறியது.
- இதில் பெங்களூருவின் தரநிலையும் 41வது இடத்தில் இருந்து 27வது இடத்திற்கு முன்னேறியது.
- புது டெல்லியின் தரநிலை 38வது இடத்தில் இருந்து 36வது இடத்திற்கு முன்னேறியது.


## பழங்குடியினர் மேம்பாட்டு அறிக்கை 2022

- பாரத் ஊரக வாழ்வாதார அறக்கட்டளையானது, அதன் முதல் வகை பழங்குடியினர் மேம்பாட்டு அறிக்கையினை (2022) வெளியிட்டுள்ளது.
- இது அகில இந்திய அளவில் மற்றும் மத்திய இந்தியப் பகுதிகளில் உள்ள பழங்குடியின சமூகங்களின் நிலையை மதிப்பிடுகிறது.
- இது வாழ்வாதாரம், வேளாண்மை, இயற்கை வளங்கள், பொருளாதாரம், இடம்பெயர்வு, ஆளுகை, மனித மேம்பாடு, பாலினம், சுகாதாரம், கல்வி, கலை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றைப் பொறுத்துப் பகுப்பாய்வு செய்கிறது.
- இந்தியாவிலுள்ள பழங்குடியினச் சமூகங்கள் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி நாட்டின் மக்கள்தொகையில் 8.6% ஆகும்.
- இந்தியாவின் 80% பழங்குடியினச் சமூகத்தினர் மத்திய இந்தியாவில் வாழ்கின்றனர்.
- 257 பட்டியலிடப்பட்ட பழங்குடியின மாவட்டங்களில், 230 (90%) மாவட்டங்கள் காடுகள் அல்லது மலைகள் நிறைந்தவை அல்லது வறண்ட பகுதிகளாகும்.
- ஆனால் அவர்கள் இந்தியாவின் பழங்குடியின மக்கள் தொகையில் 80% ஆக உள்ளனர்.
- அவர்கள் வண்டல் சமவெளிகள் மற்றும் வளமான ஆற்றுப் படுகைகளிலிருந்து நாட்டின் மிகக் கடுமையான சுற்றுச்சூழல் பகுதிகளான மலைகள், காடுகள் மற்றும் வறண்ட நிலங்களுக்குள் இடம் பெயர்வதற்குக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

## உலக நீர் வளங்களின் நிலை 2021

- உலக வானிலை அமைப்பானது (WMO) சமீபத்தில் தனது முதல் உலக நீர் வள அறிக்கையை வெளியிட்டது.
- இது உலகின் நீர் வளங்களின் மீது சுற்றுச்சூழல், பருவநிலை மற்றும் சமூக மாற்றங்கள் ஆகியவற்றின் தாக்கத்தின் அளவினை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேவை அதிகமாகவும், வழங்கீடு மிகக் குறைவாகவும் இருக்கும் சமயத்தில், உலகம் முழுவதும் உள்ள நன்னீர் வளங்களைக் கண்காணித்துத் திறம்பட மேலாண்மை செய்வதற்கு ஆதரவு வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- 2021 ஆம் ஆண்டில், ஆப்பிரிக்காவில் உள்ள நைஜர், வோல்டா, நைல் மற்றும் காங்கோ போன்ற ஆறுகள் இயல்பான நீரோட்டத்தினை விட குறைவான நீரோட்டத்தினையே சந்தித்தன.
- அதே காலகட்டத்தில் ரஷ்யா, மேற்கு சைபீரியா மற்றும் மத்திய ஆசியாவின் பல பகுதிகளில் உள்ள ஆறுகளிலும் சராசரியை விட குறைவான நீரோட்டமே காணப் பட்டன.

- சீனா, வட இந்தியா, மேற்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளில் தான் பெருமளவிலான வெள்ளப் பாதிப்பு நிகழ்வுகள் ஏற்பட்டன.
- மொசாம்பிக், பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகள் வெப்ப மண்டலச் சூறாவளிகளால் பாதிக்கப் பட்டவையாகும்.
- எத்தியோப்பியா, கென்யா மற்றும் சோமாலியா போன்ற நாடுகளில் தொடர்ந்து பல ஆண்டுகளாக சராசரிக்கும் குறைவான மழைப் பொழிவே பதிவாகின.
- 2021 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை, தென் அமெரிக்காவின் மத்தியப் பகுதி மற்றும் படகோனியா, வட ஆப்பிரிக்கா மற்றும் மடகாஸ்கர், மத்திய ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள், பாகிஸ்தான் மற்றும் வட இந்தியா போன்ற இடங்களில் நிலப்பரப்பு நீர்ச் சேமிப்பு இயல்பை விட குறைவாக இருந்தது.
- ஆண்டுகள் செல்லச் செல்ல, பல இடங்களில் உள்ள நிலத்தடி நீர்ச் சேமிப்பில் எதிர் மறையானப் போக்குகள் ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இவற்றுள் பிரேசில் நாட்டில் உள்ள ரியோ சாவோ பிரான்சிஸ்கோ நதிப்படுகை, படகோனியா, கங்கை மற்றும் சிந்து ஆகிய நதிகளின் மூல நீர் ஆதாரங்கள் மற்றும் தென் மேற்கு அமெரிக்கா ஆகியவை அடங்கும்.
- நேர்மறையானப் போக்கினை விட எதிர்மறையானப் போக்குகள் மிகவும் வலிமை ஆனவையாக உள்ளது.




## உலக வங்கியின் இடம்பெயர்வு மற்றும் மேம்பாட்டு ஆய்வு அறிக்கை

- உலக வங்கியானது, அதன் 37வது இடம்பெயர்வு மற்றும் மேம்பாடு அறிக்கையினை (2022) சமீபத்தில் வெளியிட்டது.
- இந்த அறிக்கைக்கு 'பண வரவுகள் துணிகரமிக்க உலகளாவிய சிக்கல்களை எதிர் கொள்ளும்: சிறப்பு கவனம் பருவநிலை சார்ந்த இடம்பெயர்வு' என்று தலைப்பிடப் பட்டுள்ளது.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு அனுப்பப்படும் பண வரவானது 2022 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 5 சதவீதம் அதிகரித்து 626 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.


- இது 2021 ஆம் ஆண்டில் பதிவான 10.2 சதவீத அதிகரிப்பிற்கும் குறைவானதாகும்.
- இந்த வளர்ச்சியானது 2023 ஆம் ஆண்டில் மேலும் 2 சதவீதம் குறையும் என எதிர் பார்க்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் அதிக பணம் வரவைப் பெறும் முதல் ஐந்து நாடுகள் இந்தியா, மெக்சிகோ, சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் எகிப்து ஆகியவையாகும்.




## சமூக மோதல்கள் குறியீடு

- 2020 ஆம் ஆண்டில், அமெரிக்கச் சிந்தனைக் குழுவான பியூ ஆராய்ச்சி மையம் வெளியிட்ட சமூக மோதல்கள் குறியீட்டில் (SHI) இந்தியா முதல் இடத்தைப் பிடித்து உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் சமூக விரோதக் குறியீடு, அதன் அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவற்றை விட மோசமாக இருந்தது.
- இது 2019 ஆம் ஆண்டிற்கான அதன் குறியீட்டு மதிப்பில் இருந்து மேலும் முன்னேறி உள்ளது.
- சமூகத்தில் உள்ள தனிநபர்கள், அமைப்புகள் அல்லது குழுக்களின் சமய விரோதச் செயல்களை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது.
- சமயம் தொடர்பான ஆயுத மோதல்கள் அல்லது பயங்கரவாதம் மற்றும் கும்பல் கொலை அல்லது மதவெறி வன்முறை உள்ளிட்ட 13 அளவீடுகளை இக்குறியீடு உள்ளடக்கியுள்ளது.
- சமய நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் அரசின் நடவடிக்கைகள் குறித்து அரசுக் கட்டுப்பாடுகள் குறியீடு (GRI) மதிப்பிடுகிறது.
- சீனா 9.3 மதிப்பெண்களுடன் தரவரிசையில் மோசமான நிலையினைப் பெற்றுள்ளது.
- இந்தியாவின் 34வது இடமானது, இத்தகைய "உயர்" நிலை அரசாங்கக் கட்டுப் பாடுகளைக் கொண்ட நாடுகள் என்ற பிரிவில் வகைப்படுத்தச் செய்வதற்கு ஒரு போதுமான அளவீடு ஆகும்.
- சில குறிப்பிட்ட பிரிவுகளைத் தடை செய்வது, மதமாற்றத்தைத் தடை செய்வது, பிரசங்கிப்பதைக் கட்டுப்படுத்துவது அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மதக் குழுக்களுக்கு முன்னுரிமை சார்ந்த அங்கீகாரம் அளிப்பது போன்ற அரசாங்கங்களின் முன்னெடுப்புகள் உட்பட 20 நடவடிக்கைகளை அரசுக் கட்டுப்பாடுகள் குறியீடு உள்ளடக்கியுள்ளது.

- இரண்டு குறியீடுகளிலும் 2020 ஆம் ஆண்டானது இந்தியாவின் மோசமான ஆண்டாக குறிப்பிடப் படவில்லை.
- 2016 ஆம் ஆண்டானது சமூக மோதல்கள் என்ற பிரிவில் மோசமான ஆண்டாகவும், 2018 ஆம் ஆண்டானது அரசுக் கட்டுப்பாடுகள் என்ற பிரிவில் மோசமான ஆண்டாகவும் குறிப்பிடப் பட்டுள்ளன.




## உலக விமானப் பாதுகாப்புத் தரவரிசை 2022




- சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பான ICAO, விமானப் போக்குவரத்திற்கு மிகவும் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இந்தியாவினை 48வது இடத்தில் குறிப்பிட்டுள்ளது.


- இதற்கு முன்னதாக 2018 ஆம் ஆண்டில் இந்தியா இப்பட்டியலில் 102வது இடத்தில் இருந்தது.
- தற்போது சிறந்த விமானப் பாதுகாப்பு வசதி கொண்ட முன்னணி 50 நாடுகளில் ஒன்றாக இந்தியா இடம்பெற்றுள்ளது.
- இந்தத் தரவரிசையில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தத் தரவரிசையில் சீனாவை (49) விட இந்தியா முன்னணியில் உள்ளது.
- இதில் அண்டை நாடான பாகிஸ்தான் 100வது இடத்தில் உள்ளது.

## உலகின் அதிகாரம் மிக்க 100 பெண்கள் பட்டியல்



- ஃபோர்ப்ஸ் இதழின் 2022 ஆம் ஆண்டு உலகின் அதிகாரம் மிக்க 100 பெண்களின் பட்டியலில் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேன் முதலிடம் பெற்றுள்ளார்.
- 2010 ஆம் ஆண்டைத் தவிர, 2006 முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஜெர்மனியின் முன்னாள் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் இப்பட்டியலில் முதலிடத்தில் இருந்தார்.
- அப்போதைய அமெரிக்க அதிபரின் மனைவியான மிச்செல் ஒபாமா 2010 ஆம் ஆண்டில் முதல் இடத்தினைப் பெற்றார்.
- இப்பட்டியலில் ஈரானின் மஹ்சா அமினி 100வது இடத்தைப் பிடித்துள்ளார்.
- இப்பட்டியலில் முதன்முறையாக மரணத்திற்குப் பின் சேர்க்கப்பட்ட நபர் இவரே ஆவார்.
- 2022 ஆம் ஆண்டிற்கான இப்பட்டியலில் ஆறு இந்தியப் பெண்கள் இடம் பெற்றுள்ளனர்.
- அந்தப் பட்டியலில் இடம் பெற்ற இந்தியப் பெண்மணிகள்
  - மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்,
  - பயோகான் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் கிரண் மஜும்தார்-ஷா,
  - நைக்கா நிறுவனர் ஃபால்குனி நாயர்,
  - HCL டெக் நிறுவனத்தின் தலைவர் ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா,
  - SEBI தலைவர் மாதபி பூரி புச் மற்றும்
  - இந்திய எஃகு ஆணையத்தின் தலைவர் சோமா மோண்டல்.

## ஆர்டன் கேபிடல் நிறுவனத்தின் கடவுச் சீட்டுக் குறியீடு 2022





- இது உலகின் சக்தி வாய்ந்த மற்றும் சக்தி குறைந்த கடவுச் சீட்டுகளை தரவரிசைப் படுத்துகிறது.
- கடவுச் சீட்டின் தரவரிசை மூன்று அடுக்கு அமைப்பு முறை மூலம் தீர்மானிக்கப் படுகிறது.
- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் 2018 ஆம் ஆண்டு மனித வளர்ச்சிக் குறியீடு ஆனது ஒரு சமன் முறிவு அளவாகப் பயன்படுத்தப்படுகிறது.
- ஐக்கிய அரபு அமீரகமானது, உலகின் அதிகாரம் மிக்க கடவுச் சீட்டினைக் கொண்டு உள்ளது.
- இந்த கடவுச் சீட்டினை வைத்திருப்பவர்கள், நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் அல்லது “வருகை நிலையில் வழங்கப்படும் நுழைவு இசைவுச் சீட்டு” மூலம் 180 நாடுகளுக்குப் பயணம் செய்யலாம்.
- ஜெர்மனி, ஸ்வீடன், பின்லாந்து, லக்சம்பர்க், ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகியவை சிறந்த 10 செயல்திறன் கொண்ட நாடுகளில் உள்ளன.
- உலகின் வலிமையான கடவுச் சீட்டுப் பட்டியலில் இந்தியா 87வது இடத்தில் உள்ளது.
- சக்தி குறைந்த கடவுச் சீட்டுகளைக் கொண்ட நாடுகள் ஆப்கானிஸ்தான் (38 நாடுகள்) சிரியா (39), ஈராக் (40), பாகிஸ்தான் (44) ஆகியவையாகும்.

## EIU நிறுவனத்தின் வாழ்க்கைச் செலவினக் குறியீடு 2022

- இலண்டனை சேர்ந்த பொருளாதார நுண்ணறிவுப் பிரிவு நிறுவனமானது (EIU) 2022 ஆம் ஆண்டு உலக வாழ்க்கைச் செலவின அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- இது உலகம் முழுவதும் உள்ள 172 நாடுகளில் உள்ள 200க்கும் மேற்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் விலைகளை ஒப்பிடுகிறது.
- அதிக வருமானம் மற்றும் வலுவான அமெரிக்க டாலர் மதிப்பு காரணமாக நியூயார்க் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இணைந்து இக்குறியீட்டில் முதலிடத்தைப் பெற்று உள்ளன.
- 2021 ஆம் ஆண்டில் முதலிடத்தில் இருந்த டெல் அவிவ் இந்த ஆண்டு 3வது இடத்திற்குச் சரிந்தது.


- லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகள் 4வது இடத்தினைப் பெற்றுள்ளன.
- 2021 ஆம் ஆண்டில் 72வது இடத்திலிருந்த மாஸ்கோவின் தரவரிசையானது 2022 ஆம் ஆண்டில் 37வது இடத்திற்கு உயர்ந்தது.
- உக்ரைனின் தலைநகரமான கியேவ் 2022 ஆம் ஆண்டு பட்டியலில் இடம் பெற வில்லை.
- இஸ்தான்புல், பியூனஸ் அயர்ஸ் மற்றும் டெஹ்ரான் ஆகிய நகரங்களில் பண வீக்கத்தில் அதிக உயர்வானது பதிவாகியுள்ளது.
- பணவீக்கத்தின் அதிகபட்ச விகிதம் ஆனது, கடந்த ஆண்டில் வாழ்க்கைச் செலவினம் 132 சதவீதம் வரை அதிகரித்த கராகஸ் நகரில் (வெனிசுலா) பதிவு செய்யப்பட்டுள்ளது.




## உலக ஊதிய அறிக்கை 2022-2023

- "உலக ஊதிய அறிக்கை 2022-2023: ஊதியம் மற்றும் வாங்கும் திறனில் பணவீக்கம் மற்றும் COVID-19 பெருந்தொற்று ஆகியவற்றின் தாக்கம்" என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை சர்வதேச தொழிலாளர் அமைப்பு வெளியிட்டுள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலக நிதி நெருக்கடிக்குப் பிறகு, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினங்கள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் முதல் முறையாக உலக அளவில் ஊதியங்கள் குறைந்துள்ளன.
- இது சமத்துவமின்மையை மேலும் மோசமாக்கக்கூடிய மற்றும் சமூக அமைதி இன்மையைத் தூண்டும் ஓர் அச்சுறுத்தலாக உள்ளது.
- பல்கேரியா, ஸ்பெயின், இலங்கை, தென் கொரியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் குறைந்த பட்ச ஊதியத்தில் வீழ்ச்சியை எதிர்கொண்ட நாடுகளாகும்.
- இங்கிலாந்து, இத்தாலி, ஜப்பான் மற்றும் மெக்சிகோ போன்ற நாடுகளில் நிலவிய 2008 ஆம் ஆண்டின் நிலையுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் வழங்கப்படும் ஒட்டு மொத்த ஊதியமானது நிகழ்நேர அடிப்படையில் குறைவாக இருந்தது.
- 1999 ஆம் ஆண்டு முதல் அதிக வருமானம் கொண்ட நாடுகளில் காணப்படும் இயல்பு நிலை தொழிலாளர் உற்பத்தித் திறனின் வளர்ச்சிக்கும் இயல்பு நிலை ஊதிய வளர்ச்சிக்கும் இடையேயான மிகப்பெரிய இடைவெளியானது 2022 ஆம் ஆண்டில் தான் பதிவாகியுள்ளது.


- வளர்ந்து வரும் G20 நாடுகளில் உள்ள இயல்பு ஊதியம் மற்றும் வளர்ச்சி பெற்ற G20 நாடுகளில் உள்ள இயல்பு ஊதியம் ஆகியவற்றிற்கு இடையேயான சராசரி அளவில் பரந்த இடைவெளி காணப்படுகிறது.




## புதிய எரிசக்தி கண்ணோட்ட அறிக்கை 2022

- உலகளாவிய, தூய்மை எரிசக்தி ஆராய்ச்சி வழங்குநரான BloombergNEF என்ற நிறுவனமானது 2022 ஆம் ஆண்டிற்கான புதிய எரிசக்தி கண்ணோட்ட அறிக்கை என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகளில் இருந்து, குறிப்பாக இந்தியாவில் இருந்து வெளியிடப்படும் பசுமை இல்ல வாயு உமிழ்வானது 2030 ஆம் ஆண்டின் இறுதி வரை தொடர்ந்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2030 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் மட்டுமே இந்த நாடுகளில் உமிழ்வு அளவானது குறையும்.
- 2022 ஆம் ஆண்டில் ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் உமிழ்வு அளவுகள் ஏற்கனவே உச்ச நிலையை எட்டியுள்ளதால், அடுத்து வரும் ஆண்டுகளில் உமிழ்வின் அளவுகள் வேகமாகக் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- சீனாவில், உமிழ்வு அளவுகளானது 2022 ஆம் ஆண்டில் உச்சத்தை எட்டும் என்றும், வளர்ச்சியடைந்த நாடுகளின் போக்குடன் இது இணைவதற்கு முன்பாக சில ஆண்டுகளுக்கு அந்த அளவுகள் நிலைபெறும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.
- உலக வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸ் அளவிற்குள் கட்டுப்படுத்தச் செய்வதற்கான இலக்கினை எளிதில் அடைய முடியாது.
- தீவிர முயற்சி நடவடிக்கைகள் எடுக்கப் பட்டால், உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பினை 1.77 டிகிரி செல்சியஸ் வரை நிலையாக பேண முடியும்.
- இருப்பினும், 2050 ஆம் ஆண்டிற்குள் நிகர சுழிய இலக்கை அடைவதற்கு, தூய எரிசக்தி துறையில் மேற்கொள்ளப்படும் முதலீடானது புதைபடிவ எரிபொருட்கள் துறையில் மேற்கொள்ளப் படும் அளவினை விட மூன்று மடங்கு அதிகமாக இருக்க வேண்டும்.

- இந்த தசாப்தத்தின் இறுதிக்குள் உமிழ்வுகள் 30 சதவிகிதம் குறைய வேண்டும் மற்றும் 2040 ஆம் ஆண்டிற்குள் ஆண்டிற்கு 6 சதவிகிதம் என்ற வீதத்தில் குறைய வேண்டும்.




## இந்தியச் சமத்துவமின்மை அறிக்கை 2022 - மின்னிலக்கத் தலைமுறை இடைவெளி

- ஆக்ஸ்பாம் இந்தியா நிறுவனமானது, 'இந்தியச் சமத்துவமின்மை அறிக்கை 2022: மின்னிலக்கத் தலைமுறை இடைவெளி' எனும் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் கைபேசி வைத்திருக்கும் ஆண்களின் எண்ணிக்கையானது 61 சதவீதமாக உள்ள அதே சமயம் 31 சதவீத பெண்கள் மட்டுமே சொந்தமான தொலை பேசிகள் வைத்துள்ளனர்.
- சாதி, மதம், பாலினம், வர்க்கம் மற்றும் புவியியல் இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் மின்னிலக்கப் பயன்பாடுகளிலும் கவலையளிக்கும் விதத்தில் காணப்படுகிறது.
- சம்பளம் பெறும் நிரந்தரத் தொழிலாளர்களில் 95 சதவீதம் பேர் தொலைபேசி வைத்து இருக்கும் நிலையில் அவர்களின் வேலைவாய்ப்பு நிலையை அடிப்படையாகக் கொண்ட மின்னிலக்கத் தலைமுறை இடைவெளியினை இந்த அறிக்கை வெளிப் படுத்தியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் வேலையில்லாத 50 சதவீத நபர்களிடம் (வேலை தேடும்) மட்டுமே தொலைபேசி இருந்தது.
- கிராமப்புற மக்களில் 3 சதவீதம் பேர் மட்டுமே கணினி வைத்திருக்கின்றனர்.
- நாட்டில் 100 பேருக்கு 57.29 இணைய சந்தாதாரர்கள் மட்டுமே உள்ள நிலையில், அந்த எண்ணிக்கையானது நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் கணிசமான அளவில் குறைவாக உள்ளது.



## 100 முன்னணிப் பாதுகாப்பு நிறுவனங்களின் பட்டியல்

- ❖ சுவீடனைச் சேர்ந்த சிந்தனைச் செயல்பாட்டு நிறுவனமான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது (SIPRI) 2021 ஆம் ஆண்டின் 100 முன்னணிப் பாதுகாப்பு நிறுவனங்களின் பட்டியலை வெளியிட்டது.
- ❖ இது 2021 ஆம் ஆண்டில் மொத்தம் 5.1 பில்லியன் டாலர் மதிப்பில், ஆயுதங்களை விநியோகிப்பதற்கான உலகின் 100 முன்னணி நிறுவனங்களின் பட்டியலில் HAL (42வது) மற்றும் BEL (63வது) ஆகிய நிறுவனங்களை சேர்த்துள்ளது.
- ❖ SIPRI நிறுவனமானது முதன்முறையாக முதல் 100 இடங்களில் ஒரு தைவான் நிறுவனத்தைச் சேர்த்துள்ளது.
- ❖ சீன நாட்டினைச் சேர்ந்த மொத்தம் எட்டு நிறுவனங்கள் முதல் 100 இடங்களில் பட்டியலிடப் பட்டுள்ள நிலையில், அவற்றில் நான்கு நிறுவனங்கள் முதல் 10 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன.
- ❖ இந்த எட்டு சீன நிறுவனங்களின் ஆயுத விற்பனையானது 2021 ஆம் ஆண்டில் 109 பில்லியன் டாலர்களை எட்டியது.
- ❖ மொத்த ஆயுத விற்பனையில் 51 சதவீதப் பங்கைக் கொண்டு அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக முன்னணியில் உள்ளன.
- ❖ இந்தப் பட்டியலில் அமெரிக்க நிறுவனங்களைத் தொடர்ந்து சீன நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.

# Top 100 for 2022


## 2022 Top 100 Click headers to sort

| This year's rank | Last Year's Rank | Company | Leadership | Country | 2021 Defense Revenue (in millions) | 2020 Defense Revenue (in millions) | % Defense Revenue Change | 2021 Total Revenue (in millions) | Revenue From Defense |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | Lockheed Martin [1,2] | James D. Taiclet, Chairman, President and CEO | U.S. | $64,458.00 | $62,562.00 | 3% | $67,044.00 | 96% |
| 2 | 2 | Raytheon Technologies [1] | Gregory J. Hayes, Chairman and CEO | U.S. | $41,852.20 | $42,000.00 | 0% | $64,388.00 | 65% |
| 3 | 3 | Boeing | David Calhoun, President and CEO | U.S. | $35,093.00 | $32,400.00 | 8% | $62,286.00 | 56% |
| 4 | 4 | Northrop Grumman | Kathy J. Warden, Chair, CEO and President | U.S. | $31,429.00 | $31,400.00 | 0% | $35,667.00 | 88% |
| 5 | 5 | General Dynamics | Phebe Novakovic, Chairman and CEO | U.S. | [illegible] | [illegible] | 3% | $38,500.00 | 80% |
| 6 | 6 | Aviation Industry Corporation of China | Tan Ruisong, Chairman of the Board, and Hao Zhaoping, Director and General Manager * | China | $30,155.22 | $25,468.59 | 18% | $80,424.24 | 37% |
| 7 | 7 | BAE Systems [1] | Charles Woodburn, Group CEO | U.K. | $25,775.20 | $23,502.38 | 10% | $26,840.15 | 96% |
| 8 | 10 | China State Shipbuilding Corporation Limited * | Lei Fanpei, Chairman, and Yang Jincheng, Director and General Manager | China | $18,517.72 | $16,017.53 | 16% | $82,573.10 | 22% |
| 9 | 8 | China North Industries Group Corporation Limited | Liu Shiquan, Chairman, and Liu Dashan, President * | China | $17,711.93 | $15,249.27 | 16% | $81,648.42 | 22% |
| 10 | 9 | L3Harris Technologies * | Christopher E. Kubasik, Vice Chair and CEO * | U.S. | $14,924.00 | $14,908.00 | 0% | $17,814.00 | 84% |

## காயங்கள் மற்றும் வன்முறையைத் தடுத்தல் : ஒரு கண்ணோட்டம்

- ❖ காயங்கள் தடுப்பு மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த 14வது உலக மாநாடு ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.
- ❖ உலக சுகாதார நிறுவனமானது, "காயங்கள் மற்றும் வன்முறையைத் தடுத்தல் : ஒரு கண்ணோட்டம்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.

- 2019 ஆம் ஆண்டில் பதிவான 4.4 மில்லியன் காயங்கள் சார்ந்த இறப்புகளில், தற்செயலாக ஏற்பட்ட காயங்களால் 3.16 மில்லியனுக்கும் அதிகமான இறப்புகளையும், வன்முறை தொடர்பாக ஏற்பட்ட காயங்கள் 1.25 மில்லியன் இறப்புகளையும் ஏற்படுத்தி உள்ளது.
- இவற்றில் மூன்றில் ஒரு நபர் சாலைப் போக்குவரத்து சார்ந்த விபத்துகளால் இறந்தவர்கள் ஆவர்.
- 6 இறப்புகளில் ஒருவர் தற்கொலையினாலும், 9 இறப்புகளில் ஒன்று கொலைகள் மூலமாகவும், 61 இறப்புகளில் ஒன்று போர் மற்றும் மோதல்களினாலும் தங்கள் உயிரை இழந்துள்ளனர்.
- 5 முதல் 29 வயதுக்குட்பட்டவர்களில் பதிவான இறப்புகளுக்கான முதல் 5 காரணங்களில் சாலைப் போக்குவரத்து விபத்துகள் தொடர்பாக ஏற்பட்ட காயங்கள், கொலை மற்றும் தற்கொலை ஆகியவை பெரும்பங்கு வகிக்கின்றன.
- 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் மரணத்திற்கு சாலைப் போக்குவரத்து தொடர்பான காயங்களே முக்கியக் காரணமாகும்.
- 5 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பிற்கு சாலைப் போக்குவரத்து தொடர்பான காயங்கள் இரண்டாவது முக்கியக் காரணமாகும்.
- 5 முதல் 14 வயதுக்குட்பட்டவர்களின் மரணத்திற்கு நீரில் மூழ்கி உயிரிழத்தல் 6வது முக்கியக் காரணமாகும்.
- காயங்கள் மற்றும் வன்முறைகளால், ஒவ்வோர் ஆண்டும் ஆண்கள் பெண்களை விட இரண்டு மடங்கு அதிகமான அளவில் இறப்பினை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளனர்.
- பெண்கள் இறப்பதற்கான முக்கியக் காரணங்கள் என்பவை சாலைப் போக்குவரத்து தொடர்பான காயங்கள், தவறி விழுதல் மற்றும் தற்கொலைகள் ஆகியனவாகும்.



## Who is Financing Fossil Fuel Expansion in Africa? - அறிக்கை


- "ஆப்பிரிக்காவில் புதைபடிவ எரிபொருள் விரிவாக்கத்திற்கு நிதியளிப்பது யார்?" (Who is Financing Fossil Fuel Expansion in Africa?) என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையானது எகிப்தில் நடந்த 27வது பங்குதாரர்கள் மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- தற்போது சுமார் 200 நிறுவனங்கள் ஆனது, 55 ஆப்பிரிக்க நாடுகளுள் 48 நாடுகளில் புதிய புதைபடிவ எரிபொருள் இருப்புக்கள் அல்லது உள்கட்டமைப்பை ஆராய்ந்து அல்லது அதை மேம்படுத்தி வருகின்றன.
- இவற்றில் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு முனையங்கள், குழாய் இணைப்புகள் அல்லது எரிவாயு மற்றும் நிலக்கரி மூலம் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவை அடங்கும்.
- 18 ஆப்பிரிக்க நாடுகள் தற்போதுள்ள எண்ணெய் அல்லது எரிவாயு உற்பத்தியில் சிறிதளவு கூட கொண்டிராத எல்லைப்புற நாடுகளாகும்.
- ஆப்பிரிக்காவில் உள்ள 20 முன்னணி எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிறுவனங்களில் 13 நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களாகும்.
- இந்த புதிய எண்ணெய் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் பிரித்தெடுத்தல் மற்றும் எரிப்பு ஆகிய செயல்முறைகள் 8 ஜிகா டன்கள் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான உமிழ்வினை ஏற்படுத்தும்.
- ஆப்பிரிக்காவில் புதைபடிவ எரிபொருள் விரிவாக்கத்திற்கான நாடு வாரியான வங்கி நிதியுதவியின் அடிப்படையில், ஐரோப்பா (40 சதவீதம்), அமெரிக்கா (20 சதவீதம்) மற்றும் இந்தியா (3 சதவீதம்) ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன.
- இந்தப் புதிய திட்டங்கள் அந்தக் கண்டத்தின் புதைபடிவ எரிபொருளின் திறனை அதிகரிக்கச் செய்தாலும், இந்தத் மையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் ஒரு சிறிய பங்கு மட்டுமே உள்நாட்டு நுகர்வுக்குப் பயன்படுத்தப் படுகிறது.




## கட்டாய இடப்பெயர்வு பற்றிய ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் அறிக்கை

- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது, "உள்நாட்டு இடப்பெயர்வுகளின் போக்கினை மாற்றியமைத்தல்: தீர்வுகளைக் கண்டறிவதற்கான மேம்பாட்டு அணுகு முறை" என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- முதன்முறையாக 2022 ஆம் ஆண்டில் 100 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வலுக்கட்டாயமாக இடம் பெயர்த்தப்பட்டுள்ள நிலையில், அவர்களில் பெரும்பாலான மக்கள் தங்கள் சொந்த நாடுகளுக்குள்ளேயே இடம் பெயர்த்தப் பட்டுள்ளனர்.

- 2021 ஆம் ஆண்டின் இறுதியில், மோதல்கள், வன்முறைகள், பேரழிவுகள் மற்றும் பருவ நிலை மாற்றம் காரணமாக 59 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் சொந்த நாடுகளுக்குள் வலுக்கட்டாயமாக இடம் பெயர்த்தப் பட்டுள்ளனர்.
- உக்ரைனில் ஏற்பட்ட போருக்கு முன்பு, அங்கு 6.5 மில்லியன் மக்கள் உள் நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டில், பருவநிலை மாற்றம் ஆனது 216 மில்லியனுக்கும் அதிகமான மக்களை தங்கள் சொந்த நாடுகளுக்குள் இடம் பெயர்வதற்கான கட்டாயத்தினை ஏற்படுத்தும்.
- 2021 ஆம் ஆண்டில் 130க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களில் புதிய இடப் பெயர்வுகள் பதிவு செய்யப் பட்டுள்ளதால், பேரழிவு தொடர்பாக மேற்கொள்ளப்படும் உள்நாட்டு இடப்பெயர்வு மேலும் பரவலாக காணப்படுகிறது.
- சுமார் 30% தொழில்முறை வல்லுனர்கள் வேலையற்ற நிலைக்கும் மற்றும் 24% பேர் முன்பு போல வருமானம் ஈட்ட முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.
- உள்நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்த குடும்பங்களில் 48% பேர் இடப்பெயர்விற்கு முன்பிருந்ததை விட குறைவான வருமானத்தினையே ஈட்டியுள்ளனர்.





## மாற்றுத் திறனாளிகளுக்கான சுகாதார சம பங்கு குறித்த உலக அறிக்கை

- மாற்றுத் திறனாளிகளுக்கான சுகாதார சமபங்கு குறித்த உலகளாவிய அறிக்கை ஒன்றை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டது.
- மாற்றுத் திறனாளிகளுக்கு, சமூகத்தில் உள்ள மற்றவர்களுடன் ஒப்பிடும் போது, அகால மரணம் மற்றும் நோய்க்கு உள்ளாகும் அபாயம் அதிகமாகும்.

- முறையான மற்றும் தொடர்ச்சியான சுகாதார ஏற்றத்தாழ்வுகள் காரணமாக, அவர்கள் குறைபாடுகள் இல்லாதவர்களை விட 20 ஆண்டுகளுக்கு முன்பே இறக்கும் அபாயம் அதிகமாகும்.
- ஆஸ்துமா, மனச்சோர்வு, நீரிழிவு, உடல் பருமன், வாய்வழி நோய்கள் மற்றும் பக்க வாதம் போன்ற நாட்பட்ட நோய்கள் உருவாகக் கூடிய அபாயம் இவர்களில் இருமடங்கு அதிகமாகும்.
- தற்போது, உலகம் முழுவதும் உள்ள ஆறில் ஒருவருக்கு (1.3 பில்லியன்) குறிப்பிடத்தக்க வகையிலான குறைபாடுகள் உள்ளன.

Figure 3. Prevalence of disability, by age and sex, 2021





Source: Global burden of disease data, 2021

## WASH பிரிவுகள் பற்றிய உலக சுகாதாரம் மற்றும் குடிநீர் பற்றியப் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு அறிக்கை

- உலக சுகாதாரம் மற்றும் குடிநீர் பற்றியப் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு (GLAAS) அறிக்கையினை உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் - தண்ணீர் வள அமைப்பு ஆகியவை இணைந்து வெளியிட்டன.
- இந்த அறிக்கையானது, 121 நாடுகள் மற்றும் பிரதேசங்கள் மற்றும் 23 வெளிநாட்டு ஆதரவு பெறும் முகமைகள் ஆகியவற்றிலிருந்து குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் (WASH) பற்றியப் புதிய தரவுகளைத் தொகுக்கிறது.
- அத்தியாவசிய குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் (WASH) ஆகிய துறை சார்ந்தப் பணிகளை மேலாண்மை செய்வதற்குப் போதுமான மனித வளங்களைப் பேணி வருவதாக மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவான நாடுகள் தெரிவித்துள்ளன.
- 45% நாடுகள் தங்கள் குடிநீர்ப் பாதுகாப்பு இலக்குகளை அடையும் பாதையில் செயல் படுகின்ற வேளையில் 25% நாடுகள் மட்டுமே தனது துப்புரவு சார்ந்த இலக்குகளை எட்டுகின்றன.
- குடிநீர் மற்றும் துப்புரவிற்கான உதவி 2017 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 5.6% குறைந்துள்ளதோடு, மேலும் உதவி வழங்கப்படுவதற்கான புவியியல் சார்ந்த பரவல் இலக்குகளும் மாற்றப்பட்டுள்ளன.

- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் (WASH) ஆகிய துறைகளுக்கு வழங்கப்படும் உதவியின் விகிதம் 32 சதவீதத்திலிருந்து 23% ஆகக் குறைந்துள்ளது.
- மத்திய மற்றும் தெற்கு ஆசிய நாடுகளில், இது 12 சதவீதத்திலிருந்து 20% ஆகவும், கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில், 11 சதவீதத்திலிருந்து 20% ஆகவும் அதிகரித்துள்ளது.




## உலக மலேரியா அறிக்கை 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான உலக மலேரியா அறிக்கையினை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- உலக நாடுகளின் இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தினையும் அறிக்கை எடுத்து உரைக்கச் செய்வதோடு, மலேரியாவைக் கட்டுப்படுத்துவதிலும், அகற்றுவதிலும் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களையும் இந்த அறிக்கை அடையாளம் காட்டுகிறது.
- அதிக நோய்ப் பாதிப்பு எண்ணிக்கை கொண்ட மலேரியா நாடுகளில், 2021 ஆம் ஆண்டில் மலேரியா பாதிப்புகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை நிலைப் படுத்தப் பட்டுள்ளது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் 625,000 ஆக இருந்த இறப்பு எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 619,000 ஆக குறைந்துள்ளது.
- இருப்பினும், பெருந்தொற்றிற்கு முந்தைய நிலைகளை விட இந்த எண்ணிக்கை அதிகமாக உள்ளது (2019 ஆம் ஆண்டில் 568,000 இறப்புகள்).
- அதிக நோய்ப் பாதிப்பு எண்ணிக்கை உள்ள 11 நாடுகளுள், 5 நாடுகளில் (காங்கோ ஜனநாயகக் குடியரசு, கானா, இந்தியா, நைஜர் மற்றும் தான்சானியா) மலேரியாவால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளன.
- 2016-2030 ஆம் ஆண்டிற்கான உலக சுகாதார அமைப்பின் மலேரியாவிற்கான உலகளாவியத் தொழில்நுட்ப உத்தியானது, 2020 ஆம் ஆண்டிற்குள் மலேரியா நோய் பாதிப்பு மற்றும் இறப்பு விகிதத்தைக் குறைந்தபட்சம் 40 சதவிகிதமாகவும், 2025 ஆம் ஆண்டிற்குள் குறைந்தபட்சம் 75 சதவிகிதமாகவும் மற்றும் 2015 ஆம் ஆண்டின் அளவுகளுக்குப் பதிலாக 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்த பட்சம் 90 சதவிகிதமாகவும் அதனைக் குறைக்க முயல்கிறது.
- 2021 ஆம் ஆண்டில் மலேரியா நோய்ப் பாதிப்பு 48 சதவீதமாக இருந்தது.
- அந்த ஆண்டில், நோய்ப் பாதிப்புள்ள 1,000 பேரில் 59 நபர்கள் ஆபத்தான நிலையில் இருந்த நிலையில், இது அதற்கு விதிக்கப்பட்ட 31 என்ற இலக்கை விட அதிகமாகும்.
- இறப்பு நிகழ்வுகளும் 48 சதவிகிதம் என்ற இலக்கிலேயே நீடிக்க வில்லை (2021 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட 14.8 என்ற இலக்கிற்குப் பதிலாக 7.8 பதிவானது).
- இந்தப் போக்கு நீடித்தால், மலேரியாவை ஒழிப்பதற்கான போராட்டத்தில் உலகம் 88 சதவிகிதம் இலக்கை எட்ட முடியாத நிலை ஏற்படும்.

## உலக உணவுப் பாதுகாப்புக் குறியீடு (GFSI) – 2022

- இது 11வது உலக உணவுப் பாதுகாப்புக் குறியீடாகும்.
- இது பிரிட்டிஷ் வார இதழான "தி எகனாமிஸ்ட்" இதழ் மூலம் வெளியிடப்பட்டது.
- இதில் பின்லாந்து முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து அயர்லாந்து மற்றும் நார்வே ஆகிய நாடுகளும் உள்ளன.
- இந்த அறிக்கையில், 59வது இடத்தினைப் பெற்ற தென்னாப்பிரிக்கா, துனிசியாவை பின்னுக்குத் தள்ளி, ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே மிகவும் உணவுப் பாதுகாப்பு மிக்க நாடாக மாறியது.
- ஆப்பிரிக்காவின் துணை சஹாரா பகுதியில் உள்ள ஒரு நாடு இந்தக் கண்டத்தில் முன்னிலை வகுப்பது இதுவே முதல் முறையாகும்.
- மேலும் இந்த அறிக்கையானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக உலகளாவிய உணவுச் சூழலமைவில் சீரழிவு ஏற்பட்டு வருவதாகவும், உணவுப் பாதுகாப்பை அச்சுறுத்துகின்ற நிலையையும் எடுத்துரைக்கிறது.
- 2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரை உலகளாவிய உணவுப் பாதுகாப்பில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் இந்தியா அல்ஜீரியாவுடன் இணைந்து 68வது இடத்தினைப் பெற்று உள்ளது.

## சமூக முன்னேற்றக் குறியீடு

- பிரதமர் அவர்களுக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவானது (EAC-PM) இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கான சமூக முன்னேற்றக் குறியீட்டினை (SPI) வெளியிட்டுள்ளது.
- இது தேசிய மற்றும் துணை தேசிய அளவில் நமது நாடு அடைந்துள்ள சமூக முன்னேற்றத்தின் முழுமையான மதிப்பீடாக விளங்குகின்ற ஒரு விரிவான செயற் கருவியாகும்.
- இது போட்டித் திறன் மற்றும் சமூக முன்னேற்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டது.
- நாட்டிலுள்ள 112 உயர் இலட்சியமிக்க மாவட்டங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தினை இந்த அறிக்கையின் சிறப்புப் பகுதி எடுத்துக் காட்டுகிறது.
- சமூக முன்னேற்றத்தின் 3 முக்கியமான பரிமாணங்களில் உள்ள 12 கூறுகளின் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது.

***3 பரிமாணங்கள்***


- மனிதனின் அடிப்படைத் தேவைகள் - ஊட்டச்சத்து மற்றும் அடிப்படை மருத்துவ வசதி, நீர் மற்றும் துப்புரவு, தனிப்பட்டப் பாதுகாப்பு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்திறனை மதிப்பிடுகிறது.
- நல்வாழ்வின் அடித்தளங்கள் - அடிப்படை அறிவுக்கான அணுகல், தகவல் மற்றும் தொடர்புக்கான அணுகல், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் தரம் ஆகியவற்றின் கூறுகள் முழுவதும் மேற்கொள்ளப் பட்டுள்ள முன்னேற்றத்தை இந்த அறிக்கை மதிப்பிடுகிறது.
- வாய்ப்பு - தனிப்பட்ட உரிமைகள், தனிப்பட்டச் சுதந்திரம் மற்றும் தெரிவுகள், உள்ளார்ந்தத் தன்மை மற்றும் மேம்பட்ட கல்விக்கான அணுகல் ஆகிய கூறுகளை மதிப்பிடுகிறது.

| Top 3 Best-performing States | | Top 3 Best-performing Districts |
|---|---|---|
| Puducherry | (SPI - 65.99) | Aizawl (Mizoram) |
| Lakshadweep | (SPI - 65.89) | Solan (Himachal Pradesh) |
| Goa | (SPI - 65.53) | Shimla (Himachal Pradesh) |

## நிலக்கரி 2022: 2025 ஆம் ஆண்டிற்கான பகுப்பாய்வு மற்றும் முன்னறிவிப்பு

- இது சர்வதேச எரிசக்தி முகமையினால் (IEA) வெளியிடப்பட்டது.
- உலக நிலக்கரித் தேவையின் வளர்ச்சி இயந்திரமாக நிலக்கரி தொடர்ந்து இருக்கப் போவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- அண்மைக் காலத்தில் இரும்பு மற்றும் எஃகுத் துறையில் நிலக்கரிப் பயன்பாட்டின் அளவினை மாற்றக் கூடிய குறைந்த உமிழ்வினை வெளியிடக் கூடிய அளவில் வேறு சில மாற்றுகள் எதுவும் இல்லை.
- 2022 ஆம் ஆண்டில், உலக நிலக்கரித் தேவை முதல் முறையாக எட்டு பில்லியன் டன்களை எட்டியது.

- இது 2013 ஆம் ஆண்டில் பதிவான முந்தையச் சாதனையை முறியடித்தது.
- இந்தியா, சீனாவுடன் சேர்ந்து, உலகின் மிகப்பெரிய நிலக்கரி உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் இறக்குமதியாளர் நாடாகத் திகழ்கிறது.
- இந்தியாவின் சொந்த நிலக்கரி உற்பத்தியானது 2022 ஆம் ஆண்டிற்குள் ஒரு பில்லியன் டன்னைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவின் நிலக்கரி நுகர்வானது 2007 ஆம் ஆண்டு முதல் 6 சதவீத வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் இரட்டிப்பாகியுள்ளது.
- உலகளவில் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளிலும் நிலக்கரிச் சுரங்கம் சார்ந்த சொத்துக்களில் முதலீடுகள் அதிகரித்துள்ளன.




## ஹுருண் நிறுவனத்தின் உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் தரவரிசை

- உலகின் மிக மதிப்புமிக்க 20 நிறுவனங்களை இந்தியா கொண்டுள்ளது.
- உலகின் தலைசிறந்த 500 நிறுவனங்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- கடந்த ஆண்டு, இந்தப் பட்டியலில் எட்டு நிறுவனங்கள் இடம் பெற்றதன் மூலம் இதில் இந்தியா 9வது இடத்தைப் பெற்றது.
- இந்தத் தரவரிசையில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்திலும், சீனா 35 நிறுவனங்களுடன் இரண்டாவது இடத்திலும், ஜப்பான் (28) மற்றும் இங்கிலாந்து (21) ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- ஹுருண் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இந்தப் பட்டியல் ஆனது, உலகின் மிகவும் மதிப்புமிக்க 500 அரசு சாராத நிறுவனங்களின் தொகுப்பாகும்.
- இந்திய அளவிலான தரவரிசையில், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது முதலிடத்தைப் பெற்றுள்ளதோடு, இது உலகளவில் 34வது இடத்தையும் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து டாடா ஆலோசனை சேவை வழங்கீட்டு நிறுவனம் மற்றும் HDFC வங்கி ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- உலகளவில், உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனம் என்ற இடத்தை ஆப்பிள் நிறுவனம் தக்க வைத்துக் கொண்டது.

❖ ஹுருண் நிறுவனத்தின் உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் தரவரிசையில் இடம் பெற்றுள்ள 50 சதவீத நிறுவனங்கள் அல்லது 250 நிறுவனங்கள் இந்தியாவில் வணிகம் மேற்கொள்கின்றன.

**5 GLOBALLY MOST VALUABLE COMPANIES**

| | | |
|---|---|---|
| Apple | $2.36 trillion | (Same position) |
| Microsoft | $1.8 trillion | (Same position) |
| Alphabet | $1.3 trillion | (Up one rank) |
| Amazon | $1.2 trillion | (Down one rank) |
| Tesla | $672 billion | (Up three ranks) |

**3 MOST VALUED INDIAN COS**

| | |
|---|---|
| RIL | $202 billion |
| TCS | $139 billion |
| HDFC Bank | $97 billion |

## சமூக முன்னேற்றக் குறியீடு 2022

❖ இந்திய மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கான சமூக முன்னேற்றக் குறியீடானது பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவினால் வெளியிடப்பட்டது.

❖ இந்தப் பட்டியலில் அதிக மதிப்பெண் பெற்று புதுச்சேரி (65.99) முதலிடம் பிடித்தது.

❖ அசாம், ஜார்க்கண்ட் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் இந்தியாவில் குறைந்த மதிப்பெண் பெற்றுள்ளன.

❖ கோவா, புதுச்சேரி, இலட்சத்தீவு மற்றும் சண்டிகர் ஆகியவை அடிப்படை மனிதத் தேவைகளில் முன்னணியில் உள்ள நான்கு மாநிலங்கள் ஆகும்.

❖ மிசோரம், இமாச்சலப் பிரதேசம், லடாக் மற்றும் கோவா ஆகியவை நல்வாழ்வுக்கான அடித்தள உருவாக்கத்தில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களாக உருவெடுத்து உள்ளன.

❖ மிசோரம், நாகாலாந்து மற்றும் மேகாலயா ஆகியவை சுற்றுச்சூழல் தரத்தில் முன்னணியில் உள்ள முதல் மூன்று மாநிலங்களாகும்.

❖ தமிழ்நாடு மாநிலமானது வாய்ப்பு என்ற கூறில் அதிகபட்ச மதிப்பெண்ணைப் பெற்று உள்ளது.

❖ ஐஸ்வால் (மிசோரம்), சோலன் (இமாச்சலப் பிரதேசம்) மற்றும் சிம்லா (இமாச்சலப் பிரதேசம்) ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்ட முதல் மூன்று மாவட்டங்களாக உருவெடுத்துள்ளன.

**UTs EMERGE AS TOP PERFORMERS**

| Rank | State/ UTs | Score |
|---|---|---|
| 1 | Puducherry | 65.99 |
| 2 | Lakshadweep | 65.89 |
| 3 | Goa | 65.53 |
| 4 | Sikkim | 65.1 |
| 5 | Mizoram | 64.19 |
| 6 | Tamil Nadu | 63.33 |
| 7 | Himachal Pradesh | 63.28 |
| 8 | Chandigarh | 62.37 |
| 9 | Kerala | 62.05 |
| 10 | Jammu & Kashmir | 60.76 |


Source: Social Progress Index

## மறுசீரமைப்பு பாரோமீட்டர் அறிக்கை 2022

- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பால் வெளியிடப்படுகிறது.
- மறுசீரமைப்பு இலக்குகளைச் செயல்படுத்துவதில் முன்னேற்றத்தைக் கண்காணிக்க அரசாங்கங்களால் தற்போது பயன்படுத்தப்படும் ஒரே கருவியாக உள்ள இந்த மறு சீரமைப்பு பாரோமீட்டர் கருவியின் பயன்பாட்டை இந்த அறிக்கை எடுத்துக் காட்டச் செய்கிறது.
- இந்த கருவி முதலாவதாக 2016 ஆம் ஆண்டில் பான் சவால் காற்றழுத்தமானியாக அறிமுகப் படுத்தப் பட்டது.
- 18 நாடுகளில் 26 பில்லியன் டாலர் முதலீடுகள் என்பது 14 மில்லியன் ஹெக்டேர் சிதைந்த நிலப்பரப்புகளை மீட்டெடுப்பின் கீழ் கொண்டு வந்துள்ளது என்பதை இது குறிப்பிட்டு காட்டுகிறது.
- பான் சவால் என்பது 2020 ஆம் ஆண்டிற்குள் 150 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் மற்றும் 2030 ஆம் ஆண்டிற்குள் 350 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் சிதைந்த மற்றும் காடழிப்பிற்கு உள்ளான உலகின் நிலங்களை மீட்டெடுப்பதற்கான ஒரு உலகளாவிய முயற்சியாகும்.

## சர்வதேச கடன் அறிக்கை 2022

- சர்வதேச கடன் அறிக்கை 2022 உலக வங்கியால் வெளியிடப்பட்டது.
- துணை-சஹாரா ஆப்பிரிக்கா பகுதியில் (SSA) குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் கடன் 2020 ஆம் ஆண்டில் $702 பில்லியனில் இருந்து 2021 ஆம் ஆண்டில் $789 பில்லியனாக அதிகரித்துள்ளது.
- இது 2010 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிராந்தியத்தின் அதிக கடன் சுமையாகும்.
- 2010 ஆம் ஆண்டில், இந்தப் பிராந்தியத்தின் கடன் சுமார் 305 பில்லியன் டாலர்களாக இருந்தது.




- 2021 ஆம் ஆண்டின் இறுதியில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் மொத்த வெளிநாட்டுக் கடன் $9 டிரில்லியன் ஆகும்.
- பாரீஸ் மன்றத்தின் ஒரு உறுப்பினராக இல்லாத சீனா, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்கும் நாடாக

மாறியுள்ளது.

- மற்ற பாரீஸ் மன்றத்தின் உறுப்பினர் அல்லாத நாடுகளில் ரஷ்யா சராசரியாக $6.1 பில்லியனையும், சவூதி அரேபியா $2.5 பில்லியன்களையும், இந்தியா $2.4 பில்லியன்களையும் வழங்கிள்ளது.

## வீபாக்ஸ் இந்தியா திறன் அறிக்கை 2023




- வீபாக்ஸ் இந்தியா நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான திறன் அறிக்கையானது, வர்த்தக அமைப்புகள், நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மேலும் பிறவற்றால் தொகுக்கப் பட்டதாகும்.
- இந்த அறிக்கையின்படி கடந்த ஓராண்டில் இந்தியர்களின் வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளது.
- 50.3 சதவீத விண்ணப்பதாரர்கள் வேலை வாய்ப்பு பெறத் தகுதியுடையவர்கள் என்று மதிப்பீட்டில் கண்டறியப்பட்டுள்ளது.
- இது கடந்த ஆண்டில் பதிவாகிய 46.2 சதவீதத்தினை விட குறிப்பிடத்தக்க அளவிலான அதிகரிப்பு ஆகும்.
- வேலைத்திறன் உள்ள நபர்கள் எண்ணிக்கையில் உள்ள 52.8 சதவீத பெண்கள் வேலை வாய்ப்புப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.
- இது வேலைவாய்ப்புப் பெற தகுதியுடைய ஆண்களை விட 47.2 சதவீதம் அதிகமாகும்.
- இந்தியாவின் வேலைத்திறன் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையில் பெண்களின் தற்போதையப் பங்கு 33 சதவீதமாகும்.
- இது ஆண் பணியாளர்களின் பங்கினை விட 67 சதவீதம் குறைவாகும்.
- தென் அமெரிக்கா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களில் அமைந்துள்ள நாடுகளில் உள்ள மொத்தப் பணியாளர்களில் 36 சதவீதம் பெண்கள் ஆவர்.
- ராஜஸ்தானில் வேலை வாய்ப்பு பெற தகுதியுடைய மற்றும் பணி புரியத் தயாராக உள்ள பெண்களின் எண்ணிக்கையானது அதிக சதவீதம் (53.5 சதவீதம்) ஆக உள்ளது.
- அதனைத் தொடர்ந்து 46.5 சதவீதத்துடன் உத்தரப் பிரதேச மாநிலம் இடம் பெற்று உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த ஏவுகல சோதனை மையம்

- தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தினால் நிறுவப்பட்ட நாட்டின் முதல் ஒருங்கிணைந்த ஏவுகல சோதனை மையமானது திறக்கப் பட உள்ளது.
- இது ஏவுகலங்களின் வடிவமைப்பு, தயாரிப்பு மற்றும் சோதனைக்கு உதவும்.
- ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனமானது, உயர் தொழில்நுட்பம், குறைந்த விலை, நம்பகமான ஏவுதல் திறன் கொண்ட வாகனங்களை உருவாக்க முனைகிறது.



## அனைத்து மாவட்டங்களிலும் 5ஜி சேவை




- குஜராத்தின் 33 மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு தலைமையகத்திலும் ஜியோ நிறுவனம் தனது True 5G கட்டமைப்பு வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன் மூலம் இந்தியாவில் முழு அளவிலான 5ஜி சேவைப் பரவலை பெற்ற முதல் மாநிலமாக இது திகழ்கிறது.
- மேலும் அந்த நிறுவனமானது, குஜராத்தில் சுகாதாரம், கல்வி, வேளாண்மை, தொழில் துறை 4.0 மற்றும் இணைய வசதி சார்ந்தப் பொருட்கள் (IoT) ஆகிய துறைகளில் True 5 ஜி வசதிகளை அறிமுகப்படுத்தும் முன்னெடுப்புகளைத் தொடங்க உள்ளது.

## முதல் மகளிர் காவல்துறை ஆணையர்



- 2000 ஆம் ஆண்டு பணிக் குழுவினைச் சேர்ந்த இந்தியக் காவல்பணி அதிகாரி லட்சுமி சிங், நியூ நொய்டா பகுதியின் உயர்மட்ட காவல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதன் மூலம் உத்தரப் பிரதேசத்தில் காவல்துறை ஆணையர் அலுவலகத்திற்கு தலைமை தாங்கும் முதல் பெண் அதிகாரி என்ற பெருமையை இவர் பெற்றார்.
- லட்சுமி 2016 ஆம் ஆண்டில் காவலர் பதக்கத்தையும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே உத்தரப் பிரதேசத்தின் தலைமை காவல் அதிகாரியின் வெள்ளி மற்றும் தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

## சூரியசக்தி ஆலைக்கான சில்லறை விலை நகராட்சி பசுமைப் பத்திரம்

- மத்தியப் பிரதேசத்தின் இந்தூர், நாட்டில் முதல் முறையாக உள்ளாட்சிப் பத்திரத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளது.
- இது தனிப்பட்ட முதலீட்டாளர்களைக் குறி வைத்து, அதன் மூலம் பெறப்படும் வருமானங்களை சூரிய சக்தித் திட்டத்திற்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்பட உள்ளது.
- இந்தூருக்கு அருகில் ரூ. 3 பில்லியன் செலவில் 60 மெகாவாட் (MW) திறன் கொண்ட ஒரு சூரியசக்தி மையமானது கட்டமைக்கப்பட உள்ளது.
- இது அந்த நகரத்தின் மின் செலவில் மாதம் ரூ. 250 மில்லியன் வரை சேமிப்பதற்கு உதவும்.
- தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக இந்தியாவின் தூய்மையான நகரம் என்ற விருதினை இந்தூர் வென்றுள்ளது.

## 23வது இருவாட்சிப் பறவை திருவிழா

- 23வது இருவாட்சிப் பறவை திருவிழா (2022) நாகாலாந்தில் உள்ள நாகா மக்களின் பாரம்பரியக் கிராமமான கிசாமாவில் தொடங்க உள்ளது.
- இது 'பண்டிகைகளின் திருவிழா' என்றும் பிரபலமாக அறியப் படுவதோடு, நாகாலாந்தின் வளமான கலாச்சாரத்தை இது வெளிப்படுத்துகிறது.
- குழிந்த தலை கொண்ட இருவாட்சி எனவும் அழைக்கப்படும் இப்பறவை (ஹார்ன்பில்) ஒரு இந்தியப் பறவையாகும்.
- இது இருவாட்சிப் பறவை குடும்பத்தின் மாபெரும் உறுப்பின இனங்களுள் ஒன்றாகும் என்பதோடு இது இந்தியத் துணைக்கண்டம் மற்றும் தென்கிழக்கு ஆசிய ஆகியப் பகுதிகளில் காணப் படுகிறது.

- இந்தப் பறவை அந்தப் பழங்குடியினரின் கலாச்சாரத்தின் ஒரு முக்கிய பகுதியாகும் என்பதோடு, அதன் அளவு மற்றும் நிறத்திற்காக இந்தப் பறவை பிரபலமாக அறியப் படுகிறது.

## ஒரு முறைமைக்கென குறிப்பிட்ட அமைப்பிற்கு உட்படாத வகையிலான பயணச் சீட்டு வழங்கீட்டு முறை அறிமுகம்




- ஹரியானா அரசானது "ஒரு முறைமைக்கென குறிப்பிட்ட அமைப்பிற்கு உட்படாத வகையிலான பயணச் சீட்டு வழங்கீட்டு முறையினை" தொடங்க உள்ளது.
- இதன் மூலம் சாலையில் இயங்கும் பேருந்துகளுக்கான ஒரு முறைமைக்கென குறிப்பிட்ட அமைப்பிற்கு உட்படாத வகையிலான பயணச் சீட்டு வழங்கீட்டு முறையினை அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக ஹரியானா மாறியுள்ளது.
- ஒரு முறைமைக்கென குறிப்பிட்ட அமைப்பிற்கு உட்படாத வகையிலான பயணச் சீட்டு வழங்கீட்டு முறை என்பது, சாலையில் இயங்கும் பேருந்துகளுக்கான நேரடிப் பயணச் சீட்டுகளை வாங்குவதில் உள்ள சிரமங்களைத் தவிர்க்க பயணிகளுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## குஜராத் வாக்குச் சாவடிகள்



- கிர் பகுதியின் அடர்ந்த காடுகளில் வாழும் பனேஜில் மஹந்த் ஹரிதாஸ்ஜி உதாசின் என்ற ஒரே ஒரு வாக்காளருக்காக இந்திய தேர்தல் ஆணையம் ஒரு வாக்குச் சாவடியை அமைத்துள்ளது.

- அரபிக் கடலால் சூழப்பட்ட அம்ரேலி மாவட்டத்தில் உள்ள ஷியல்பேட் கிராமத்தில் வாழும் வாக்காளர்கள் படகு மூலம் மட்டுமே அங்கு போக்குவரத்தினை மேற்கொள்ள முடியும்.
- அந்தத் தீவில் ஐந்து வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ஒரு வாக்குச் சாவடியில் மருத்துவப் பரிசோதனை மையமும் அமைக்கப்பட்டது.
- அது "இந்தியாவின் முதல் தேர்தல் சுகாதாரச் சாவடியாக" ஜுனாகத் மாவட்டத்தில் அமைக்கப் பட்டது.

## ஆளில்லா விமானங்களுக்கான முதல் நிலையம்

- 1.5 கிலோ எடை கொண்ட மருந்துகளை தொலைதூர இடங்களுக்கு வான்வழியே விநியோகம் செய்ததன் மூலம், மேகாலயாவில் மருந்துகளைக் கொண்டு செல்வதற்கான ஆளில்லா விமானங்களுக்கான இந்தியாவின் முதல் நிலையம் திறக்கப் பட்டது.
- ஒரு புத்தொழில் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட சர்டிபிளேன் X3 எனப்படும் ஆளில்லா விமானமானது, மருந்துப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு 36 நிமிடங்கள் எடுத்துக் கொண்டது.
- அம்மாநிலத் தலைநகர் ஷில்லாங்கிற்கு அடுத்தபடியாக மேகாலயாவின் மிகப்பெரிய நகர்ப்புற மையமாக விளங்கும் துராவிலிருந்து 32 கிமீ தொலைவில் உள்ள ஜெங்ஜால் பகுதியானது மருந்துப் பொருள் விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஆளில்லா விமானங்களுக்கான ஓர் உத்திசார் நிலையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரமானது, சாலைப் போக்குவரத்திற்கு ஆகும் நேரத்தை விட கிட்டத்தட்ட 2 மணிநேரம் குறைவாகும்.
- இந்த ஆளில்லா விமானமானது 4 கிலோ எடை வரை சுமந்து கொண்டு பறக்கும் திறன் கொண்டது.



## திவ்யாங் துறை

- திவ்யாங் பிரிவினருக்கான (மாற்றுத் திறனாளிகள்) தனி அரசுத் துறையை உருவாக்குவதற்கு மகாராஷ்டிரா அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் மூலம் இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கென தனித் துறையை அமைத்த முதல் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- அந்த மாநிலத்தில் உள்ள உடல் மற்றும் மனநலம் குன்றியவர்களுக்கு கல்வி மற்றும் தொழில் ரீதியான சேவைகளை வழங்குவதற்காக இத்துறை நிறுவப்பட்டுள்ளது.

- திவ்யாங் பிரிவினரின் நலனை உறுதிப்படுத்துவதையும், அவர்களை பயனர் இலக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தப்படும் பல்வேறு அரசு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் முதல் செயற்கை ஒளியூட்டல் அற்ற பகுதி

- லடாக்கின் சாங்தாங் பகுதியில் உள்ள ஹன்லே கிராமத்தில் இந்தியாவில் முதல் முறையாக செயற்கை ஒளியூட்டல் அற்ற பகுதியினை அமைக்கப்பட உள்ளது.
- ஹான்லியில் சுமார் பதினெட்டு இடங்களில், விண்மீன்களின் ஆய்விற்காக அந்த சக்தி வாய்ந்த தொலைநோக்கிகள் நிறுவப்பட உள்ளது.
- உலகின் இரண்டாவது மிக உயர்ந்த ஒளியியல் தொலைநோக்கியானது ஹான்லியில் அமைந்துள்ளது.
- இது இந்திய வானியற்பியல் நிறுவனத்தினால் 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




## இமாச்சலப் பிரதேசத்தின் புதிய முதல்வர்

- காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த சுக்விந்தர் சிங் சுகு டிசம்பர் 11 ஆம் தேதியன்று இமாச்சலப் பிரதேசத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- சுகு அவர்கள், இமாச்சலப் பிரதேசத்தின் கடைமட்ட பகுதியிலிருந்து இத்தகைய உயர் பதவியை வகிக்கும் முதல் காங்கிரஸ் தலைவர் ஆவார்.
- பாரதிய ஜனதா கட்சியின் பிரேம் குமார் துமாலுக்குப் பிறகு, ஹமிர்பூர் மாவட்டத்தில் இருந்து முதலமைச்சர் பதவியினை ஏற்கும் இரண்டாவது நபர் இவராவார்.
- 68 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப் பேரவைக்கு நடைபெற்ற பரபரப்பான தேர்தல் போட்டியில் காங்கிரஸ் கட்சி 40 இடங்களிலும், பா.ஜ.க. 25 இடங்களிலும் வெற்றி பெற்றன.



## கொச்சி-முசிரிஸ் மாபெரும் கண்காட்சி

- 5வது கொச்சி-முசிரிஸ் மாபெரும் கண்காட்சியினைக் கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- "In Our Views Flow Ink and Fire" என்ற கருத்துருவினை மையமாகக் கொண்டு இந்த மாபெரும் கண்காட்சியானது நடைபெற உள்ளது.
- இந்த நான்கு மாத கால அளவிலான கலைக் கொண்டாட்டமானது உலகளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என எதிர்பார்க்கப் படுகிறது

## குஜராத்தின் புதிய முதல்வர்

- குஜராத்தின் 18வது முதல்வராக பூபேந்திர படேல் பதவியேற்றுள்ளார்.
- படேல் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.
- அவர் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அந்த மாநில முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- சமீபத்தில் நடந்து முடிந்த குஜராத் சட்டசபைத் தேர்தலில் ஆளும் பா.ஜ.க. ஏழாவது முறையாக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது.
- சட்டமன்றத்தில் உள்ள மொத்த 182 இடங்களில் இந்தக் கட்சி 156 இடங்களை வென்று உள்ளது.
- காங்கிரஸ் 17 இடங்களிலும், ஆம் ஆத்மி கட்சி 5 இடங்களிலும் வெற்றி பெற்றன.



## செய்தித்தாள்களின் எழுத்து வடிவத்தினை மாற்றுதல் - மணிப்பூர்

- மணிப்பூரில் உள்ள செய்தித்தாள்கள் நிறுவனங்களானது, தற்போது பயன்பாட்டில் உள்ள வங்க மொழி வடிவ எழுத்திற்குப் பதிலாக மைதேயி அல்லது மணிப்பூரி எழுத்து வடிவங்களை மாற்றுவதற்கு முடிவு செய்துள்ளன.
- மைதேயி எழுத்து வடிவ முறையானது முன்னொரு காலத்தில் மெய்தி ஆட்சியாளர்களால் ஆதரிக்கப்பட்டது என்றாலும் இந்து மதத்தின் வருகையினால் பயன்பாட்டில் இல்லாமல் ஆன பின்பு இறுதியில் வழக்கொழிந்து போனது.
- இந்த எழுத்து வடிவின் முற்காலத்திய கல்வெட்டுப் பதிவானது, மைடிங்கு கியாம்பாவின் (1467-1508) உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட கொய்பு கிராமத்தில் உள்ள ஒரு பாறைக் கல்வெட்டு ஆகும்.

- 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டில் பதிக்கப்பட்ட கல்வெட்டுகள் வங்காள மொழி எழுத்துக்களில் பதிக்கப் பட்ட நிலையில் இந்து மதத்தின் வருகையுடன், வங்காள எழுத்துக்கள் மிகவும் பிரபலமடைந்தன.

## அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம்

- கோவாவில் அமைக்கப்பட்டுள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம், காஜியா பாத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய யுனானி மருத்துவ நிறுவனம் மற்றும் டெல்லியில் அமைக்கப் பட்டுள்ள தேசிய ஹோமியோபதி நிறுவனம் ஆகியவற்றைப் பிரதமர் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.
- 9வது உலக ஆயுர்வேத மாநாடு (WAC) மற்றும் ஆரோக்கியா கண்காட்சியில் அவர் உரை நிகழ்த்தினார்.

## சிறந்த காசநோய்க் கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கான விருது

- மேகாலயா அரசானது காசநோய்க்கு எதிராக 'ஜன் அந்தோலன்' (மக்கள் இயக்கம்) என்ற ஓர் இயக்கத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 2.6 மில்லியன் மக்களைப் பாதிக்கும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதில் இந்த இயக்கம் அது ஆற்றிய சிறந்த நடைமுறைகளுக்காக இந்த விருதினைப் பெற்றுள்ளது.

## இந்தியாவின் முதல் கார்பன் நடுநிலைப் பண்ணை

- கேரளாவின் ஆலுவாவில் அமைந்துள்ள ஒரு விதைப் பண்ணையானது, நாட்டின் முதல் கார்பன் நடுநிலைப் பண்ணையாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- கார்பன் உமிழ்வில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு நடவடிக்கைகள் என்பது, இந்த விதைப் பண்ணை கார்பன் நடுநிலை அந்தஸ்தினை அடைய உதவியது.
- கடந்த ஓராண்டில் பண்ணையில் இருந்து வெளியேற்றப்பட்ட மொத்த கார்பன் அளவு 43 டன்கள் ஆகும், ஆனால் அதன் மொத்த கொள்முதல் 213 டன்கள் ஆகும்.

## மிகப்பெரிய வணிக வகுப்பு அதிவேக விமான முனையம்

- கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதல் உயர் பாதுகாப்பு நுழைவாயில் மற்றும் வணிக வகுப்பு அதிவேக விமான முனையம் ஆகியவற்றினை கேரள முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இதன் மூலம், தனியார் அதிவேக விமான முனையத்தைக் கொண்டுள்ள நாட்டின் நான்காவது விமான நிலையமாக கொச்சி விமான நிலையம் மாறியுள்ளது.
- இரண்டு மாபெரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச பயண முனையங்களுடன், கொச்சின் சர்வதேச விமான நிலைய நிறுவனமானது (CIAL) தற்போது நாட்டின் மிகப்பெரிய வணிக அதிவேக விமான முனையத்தினைக் கொண்டுள்ள விமான நிலையமாக மாறி உள்ளது.

## புவிசார் குறியீடு பெற்ற புதிய கேரளப் பொருட்கள்



| | | | | |
|---|---|---|---|---|
| Attappady Attukombu Avara | Attappady Thuvara | Onattukara Ellu | Kanthalloor -Vattavada Veluthulli | Kodungalloor Pottuvellar |

- கேரளாவைச் சேர்ந்த 5 வேளாண் பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டு உள்ளது.
- இவை அட்டப்பாடி ஆட்டுக்கொம்பு அவரை, அட்டப்பாடி துவரை, ஓநாட்டுக்கரா எள்ளு, காந்தளூர்-வட்டவடா வெளுத்துள்ளி மற்றும் கொடுங்கல்லூர் பொட்டுவெள்ளரி ஆகியனவாகும்.
- கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அதிக புவிசார் குறியீடுகளைக் கொண்ட மாநிலங்களாக உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து கேரளா (35), உத்தரப் பிரதேசம் (34), மற்றும் மகாராஷ்டிரா (31) ஆகியவை உள்ளன.

## நுபி லால் தினம்

- 83வது நுபி லால் தினமானது டிசம்பர் 12 ஆம் தேதியன்று மணிப்பூர் மாநிலம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.
- 1904 மற்றும் 1939 ஆம் ஆண்டுகளில் முறையே பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராக எழுந்த முதல் மற்றும் இரண்டாவது நூபி லால் (பெண்கள் போர்) கிளர்ச்சியில் பங்கேற்ற பெண்களைக் கௌரவிக்கும் விதமாக இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.




## வடகிழக்கு சபையின் 50வது ஆண்டு நிறைவு கொண்டாட்டம்

- வடகிழக்கு சபையின் பொன்விழாக் கொண்டாட்டமானது ஷில்லாங் நகரில் நடைபெற்றது.

- வடகிழக்கு சபை என்பது வடகிழக்குப் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கான முதன்மை நிர்வாக அமைப்பாகும்.
- இது அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம் மற்றும் திரிபுரா ஆகிய எட்டு மாநிலங்களைக் கொண்டுள்ளது.
- வடகிழக்கு சபையானது 1971 ஆம் ஆண்டில் ஒரு பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப் பட்டது.
- இருப்பினும், இது 1972 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆம் தேதியன்று அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப் பட்டது.




## லோசர் திருவிழா

- லடாக் புத்தாண்டைக் குறிக்கும் வகையில் லடாக் பகுதியில் லோசர் திருவிழாவானது கொண்டாடப் படுகிறது.
- லோசர் திருவிழா அல்லது லடாக்கியப் புத்தாண்டு என்பது லடாக் பகுதியில் குளிர் காலத்தில் கொண்டாடப்படும் ஒரு முக்கிய சமூக-சமயத் திருவிழா ஆகும்.
- லோசர் திருவிழாவானது புத்தாண்டில் இருந்து ஒன்பது நாட்கள் வரை தொடர்ந்து நடைபெறும்.
- ஐபெக்ஸ் மற்றும் கைலாஷ் மலை ஆகியவை நோக்கிய யாத்திரையைப் போற்றும் வகையில் அப்பகுதியின் மக்கள் ஆடிப் பாடிக் கொண்டாடுவர்.

## சிறை உணவுகளுக்கு 5 நட்சத்திர மதிப்பீடு

- உத்தரப் பிரதேசத்தின் புலந்த்ஷாஹர் சிறையில் வழங்கப்படும் உணவிற்கு ஐந்து நட்சத்திர மதிப்பீடு மற்றும் 'சரியான உணவினை உண்ணுதல்' என்ற குறியீடு ஆகியவற்றினை இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர வழங்கீட்டு ஆணையம் (FSSAI) வழங்கியுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் ஃபரூகாபாத் சிறைக்கு அடுத்தபடியாக இந்தக் குறியீட்டினைப் பெற்ற இரண்டாவது சிறையாக புலந்த்ஷாஹர் சிறை திகழ்கிறது.
- இந்த மாவட்ட சிறைச்சாலைக்கு ஐந்து நட்சத்திரங்கள் மதிப்பீடு வழங்கப்பட்டு சிறந்து விளங்கும் சிறைச்சாலைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.




## தனு யாத்ரா

- 'தனு யாத்ரா' எனப்படும் உலகின் மிகப்பெரிய திறந்தவெளி நாடக விழாவானது இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு, ஒடிசாவில் உள்ள பர்காரில் நடைபெறத் தொடங்கியது.
- எழுச்சிமிக்க தனு யாத்ரா விழாவானது ஒடிசாவின் கலாச்சாரத்துடன் தொடர்பு உடையதாகும்.
- தனு யாத்திரை என்பது 1947-48 ஆம் ஆண்டு அறுவடைப் பருவத்திற்குப் பிறகு தொடங்கப் பட்டது.
- இந்த 11 நாட்கள் அளவிலான திருவிழாவானது 'பௌசசுக்லாவின்' 5ஆம் நாள் தொடங்கி 'பௌசபூர்ணிமா' அன்று முடிவடைகிறது.



## அனைத்து வார்டுகளிலும் நூலகத்தினைக் கொண்ட முதல் தொகுதி

- கேரள முதல்வர் பினராயி விஜயன் அவரகளின் தொகுதியானது சமீபத்தில் புதிய சாதனையினைப் படைத்துள்ளது.
- இவருடைய தொகுதியான தர்மடம் இந்தியாவிலேயே முதன் முதலாக அனைத்து வார்டுகளிலும் நூலகத்தினைக் கொண்ட தொகுதி என்ற நிலையை அடைந்துள்ளது.
- இப்போது அத்தொகுதியில் உள்ள 138 வார்டுகளிலும் நூலகங்கள் அமைந்துள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## அகாடமி புரஸ்கார் விருது பெற்ற நபர்கள்

- சங்கீத நாடக அகாடமியானது 2019, 2020 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கான சங்கீத நாடக அகாடமி விருதினைப் பெற உள்ள (அகாடமி புரஸ்கார்) 128 வெற்றியாளர்களின் பெயர்களை அறிவித்துள்ளது.
- இது இசை, நடனம், நாடகம், பாரம்பரியம்/நாட்டுப்புற/பழங்குடியினர் இசை /நடனம் / நாடகம், பொம்மலாட்டம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பிற்காகவும், நிகழ்த்துக் கலைகளில் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு / புலமைத்துவத்திற்காகவும் வழங்கப் படுகிறது.
- அகாடமியின் பொதுக் குழுவானது, கலைத்துறையில் சிறந்து விளங்கும் 10 நபர்களை அகாடமியின் உறுப்பினர்களாக அறிவித்துள்ளது.
- மேலும், 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கான உஸ்தாத் பிஸ்மில்லா கான் யுவ புரஸ்கார் விருதினைப் பெற உள்ள 102 கலைஞர்களின் பெயர்களையும் அகாடமி அறிவித்துள்ளது.
- இந்தக் கலைஞர்கள் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

## தேசிய கோபால் ரத்னா விருது

- தேசிய பால் தின நிகழ்வின் போது இந்த விருதானது வழங்கப்பட்டது.
- தேசிய கோபால் விருதானது, கால்நடை மற்றும் பால் வளத்துறை வழங்கப்படும் மிக உயர்ந்த தேசிய விருதுகளில் ஒன்றாகும்.
- உள்நாட்டு விலங்குகளை வளர்க்கும் விவசாயிகள் போன்ற அனைத்து நபர்களையும் இந்த விருது அங்கீகரித்து ஊக்குவிக்கிறது.
- இந்த விருதின் மூன்று பிரிவுகள்
    - நாட்டு மாடு/எருமை இனங்களை வளர்த்து வரும் சிறந்த பால் பண்ணையாளர்
    - சிறந்த செயற்கை கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர்.
    - சிறந்த பால் கூட்டுறவு/பால் உற்பத்தியாளர் நிறுவனம்/பால் உற்பத்தியாளர் அமைப்பு.

## பிரசார் பாரதி நிறுவனத்தின் வெள்ளி விழா




- ❖ பிரசார் பாரதி நிறுவனமானது 2022 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் தேதியன்று தனது வெள்ளி விழா அல்லது அது உருவாக்கப்பட்ட 25 ஆம் ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடியது.
- ❖ 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், பாராளுமன்றமானது பிரசார் பாரதி (இந்திய ஒலிபரப்புக் கழகம்) சட்டத்தை நிறைவேற்றியது.
- ❖ 1997 ஆம் ஆண்டில் இதே நாளில் தான், ஒரு சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வத் தன்னாட்சி அமைப்பாக இது உருவாக்கப்பட்டது.
- ❖ இது தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி ஆகியவற்றினை உள்ளடக்கியது.

## கட்டாக் பலியத்ரா - கின்னஸ் சாதனை




- ❖ ஒடிசாவின் கட்டாக் மாநகராட்சிக் கழகம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி ஒன்றில் புகழ் பெற்ற கட்டாக் பலியாத்ரா, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றது.
- ❖ 22 பள்ளிகளைச் சேர்ந்த 2,100க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் 35 நிமிடங்களில் 22,000 காகிதப் படகுகளை உருவாக்கி உலக சாதனையினைப் படைத்துள்ளனர்.
- ❖ அந்த மாநிலத்தின் மிகப்பெரிய திறந்தவெளி வர்த்தகக் கண்காட்சியான கட்டாக்கின் பலியத்ரா நிகழ்விற்கு உலக அங்கீகாரத்தைப் பெற்றுத் தரும் நோக்கத்துடன் இந்த உலக சாதனை முயற்சியானது மேற்கொள்ளப்பட்டது.

## ஆஸ்திரேலியாவின் "STEM துறைகளின் சூப்பர் ஸ்டார்கள்"

- ஆஸ்திரேலியாவின் STEM துறைகளின் சூப்பர் ஸ்டார்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 60 அறிவியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், பொறியாளர்கள் மற்றும் கணிதவியலாளர்களில் மூன்று இந்திய வம்சாவளிப் பெண்களும் இடம் பெற்று உள்ளனர்.
- அந்த மூன்று இந்திய வம்சாவளிப் பெண்கள் - நீலிமா கடியாலா, டாக்டர் அனா பாபு ரமணி மற்றும் டாக்டர் இந்திராணி முகர்ஜி ஆகியோர் ஆவர்.
- இது அறிவியலாளர்களைப் பற்றிய சமூகத்தின் பாலினம் சார்ந்த அனுமானங்களைத் தகர்த்து, பெண்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட பாலினம் சாராத நபர்கள் மீதுள்ள பொது மக்களின் கருத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முன்னெடுப்பு ஆகும்.



## புவி அழகிப் பட்டம் 2022

- தென் கொரிய நாட்டினைச் சேர்ந்த மினா சூ சோய், 2022 ஆம் ஆண்டின் புவி அழகியாக (மிஸ் எர்த்) மகுடம் சூட்டப்பட்டார்.
- இந்த சுற்றுச்சூழல் சார்ந்த பட்டங்களுக்கு 86 பேர் போட்டியிட்டதில் அவர்களுள் மூன்று நபர்களுக்கு மட்டுமே இந்தப் போட்டியின் மூன்று உட்கூறுகளுக்கான பட்டங்கள் வழங்கப் பட்டன.
    - மிஸ் ஃபயர் ( நெருப்பு) 2022 - கொலம்பியாவின் ஆன்ட்ரியா அகுலேரா,
    - மிஸ் வாட்டர் (நீர்) 2022 - பாலஸ்தீனத்தின் நதீன் அயூப், மற்றும்
    - மிஸ் ஏர் (காற்று) 2022 - ஆஸ்திரேலியாவின் ஷெரிடன் மோர்ட்லாக்.



## இந்தியாவின் 100 முன்னணி பணக்காரர்கள் பட்டியல் 2022




- ஃபோர்ப்ஸ் இதழானது, நாட்டின் 100 பணக்கார கோடீஸ்வரர்களின் வருடாந்திரப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் கௌதம் அதானி முதலிடம் பெற்றுள்ளார்.
- அவரைத் தொடர்ந்து முகேஷ் அம்பானி மற்றும் ராதாகிஷன் தமானி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- O.P. ஜிண்டால் குழுமத்தின் தலைவரான சாவித்திரி ஜிண்டால் இப்பட்டியலில் 6வது இடத்தில் உள்ளார்.
- முதல் 10 இடங்களில் இடம் பெற்றுள்ள ஒரே ஒரு கோடீஸ்வரப் பெண் மற்றும் நடப்பு கால அரசியல்வாதி இவரே ஆவார்.


## சர்வதேச லூசோபோன் திருவிழா

- கோவாவில் நடைபெற்ற நான்கு நாட்கள் அளவிலான சர்வதேச லூசோபோன் (போர்த்துகீசிய மொழி பேசுபவர்கள்) திருவிழாவை இந்தியா நடத்துகிறது.
- லூசோபோன் உலகம் நான்கு கண்டங்களில் உள்ள ஒன்பது நாடுகளில் பரவியுள்ளது.
- போர்த்துகீசிய மொழியானது, புவியின் தெற்கு அரைக்கோளத்தில் அதிகம் பேசப் படும் மொழியாகும்.
- போர்த்துகீசிய மொழி நாடுகளின் சமூகம் (CPLP) அல்லது லூசோபோன் காமன்வெல்த், 1996 ஆம் ஆண்டில் லிஸ்பன் நகரில் நிறுவப்பட்டது.
- அங்கோலா, பிரேசில், கபோ வெர்டே, கினியா பிசாவ், மொசாம்பிக், போர்ச்சுகல் மற்றும் சாவோ டோம் மற்றும் பிரின்சிப் ஆகியவை இந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகளாக உள்ளன.
- தைமோர் லெஸ்தே மற்றும் எக்குவடோரியல் கினியா ஆகியவை இந்த அமைப்பில் பின்னர் உறுப்பினராக இணைந்தன.

## கமலாதேவி சட்டோபாத்யாய் NIF புத்தகப் பரிசு 2022

- வரலாற்றாசிரியர்-செயல்பாட்டாளர் சேகர் பதக் எழுதிய, பிரபல வனப் பாதுகாப்புப் பிரச்சாரமான சிப்கோ இயக்கம் பற்றிய புத்தகமானது, 2022 ஆம் ஆண்டிற்கான கமலா தேவி சட்டோபாத்யாய் NIF என்ற புத்தகப் பரிசினை வென்றது.

- இந்த விருதானது "அனைத்துத் தேசிய இனத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களால் எழுதப் படும் நவீன/சமகால இந்தியாவைப் பற்றிய புனைவுக் கதை அல்லாத படைப்புகளின் சிறப்பை அங்கீகரித்து கொண்டாடுகிறது".




## தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையத்தின் தலைவர்

- தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையத்தின் (NCBC) தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர் பொறுப்பேற்றுள்ளார்.
- தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையமானது 1993 ஆம் ஆண்டு தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையச் சட்டத்தின் மூலம் மத்திய அரசினால் உருவாக்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 102வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் கீழ், தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையம் ஒரு அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாக மாறியது.
- இது இந்திய அரசியலமைப்பின் 338B என்ற பிரிவின் கீழ் நிறுவப்பட்டது.
- இந்த ஆணையத்தின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர் அவர்களால் நியமிக்கப்படுவர்.
- இதன பணி நிலைகள் மற்றும் பதவிக் காலம் ஆகியவை குடியரசுத் தலைவரால் தீர்மானிக்கப் படும்.

## G20 அமைப்பின் முதல் ஷெர்பா கூட்டம்

- இந்திய அரசின் தலைமையின் கீழான முதல் G20 ஷெர்பா (அரசப் பிரதிநிதிகள்) கூட்டமானது ராஜஸ்தானின் உதய்ப்பூர் நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் G20 அரசப் பிரதிநிதியான, அமிதாப் காந்த் இந்த நான்கு நாட்கள் அளவிலான கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார்.
- ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஒன்பது சிறப்பு விருந்தினர் நாடுகள் உட்பட 19 நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.
- சமீப காலங்களில் நிலவி வரும் மிக முக்கியமான சில பிரச்சனைகள் பற்றிய முக்கியமான உரையாடல்கள் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் படுகின்றன.

- இந்திய அரசு, G20 அமைப்பின் ஓராண்டு காலத் தலைமைப் பதவியை 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று முறையாக ஏற்றுக் கொண்டது.

## பேங்கர்ஸ் இதழின் ஆண்டின் சிறந்த வங்கியாளர் விருது




- இலண்டனில் நடைபெற்ற உலக வங்கி உச்சி மாநாட்டில் இந்தியப் பிரிவிற்கான 'பேங்கர்ஸ் இதழின் 2022 ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாளர் விருதினை' கனரா வங்கி பெற்றது.
- பேங்கர்ஸ் இதழின் ஆண்டின் சிறந்த வங்கியாளர் விருதுகள் ஆனது வங்கித் துறைக்கான ஆஸ்கார் விருதாக கருதப்படுகிறது.
- உலகெங்கிலும் உள்ள 180க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான முதன்மையான உலகளாவிய வங்கி மற்றும் நிதி ஆதாரமாக பேங்கர்ஸ் இதழ் திகழ்கிறது.
- கனரா வங்கியானது 1906 ஆம் ஆண்டில் மங்களூருவில் அம்மேம்பாள் சுப்பா ராவ் பாய் என்பவரால் நிறுவப்பட்டது.
- இந்த வங்கியின் அலுவலகங்கள் இலண்டன், துபாய் மற்றும் நியூயார்க் ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளன.

## உலகின் முதல் மாற்றுத் திறனாளி விண்வெளி வீரர்

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆனது உலகின் முதல் "மாற்றுத் திறனாளி விண்வெளி வீரரை" (பாராஸ்ட்ரோனாட்) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது மாற்றுத் திறனாளிகளை விண்வெளியில் பணியாற்றச் செய்வதற்கும், அங்கு வாழ்வதற்கும் வழி வகை செய்வதற்கான ஒரு முக்கியப் படிநிலையாகும்.
- விண்வெளி வீரர்களுக்கான பயிற்சியின் போது மேற்கொள்ளப்படும் சாத்தியக்கூறு ஆய்வில் பங்கேற்பதற்கு பிரிட்டிஷ் மாற்றுத் திறனாளி ஒலிம்பிக் தடகள வீரர் ஜான் மெக்ஃபாலை அந்நிறுவனம் நியமித்தது.
- எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள விண்வெளி ஆய்வுப் பணிகளில் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்பதற்குத் தேவையான பணி நிலைகளை இது மதிப்பிடுகிறது.




## முன்னாள் மத்திய அமைச்சர் யோகிந்தர் K. அலக்


- பிரபலப் பொருளாதார நிபுணரும், முன்னாள் மத்திய அமைச்சருமான யோகிந்தர் K அலக் காலமானார்.
- அவர் அகமதாபாத்தில் உள்ள சர்தார் படேல் பொருளாதார மற்றும் சமூக ஆராய்ச்சி நிறுவனத்தில் ஓய்வு பெற்ற மாண்புநிலை பேராசிரியராக இருந்தார்.
- 1996 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டு, 2000 ஆம் ஆண்டு வரை மேலவையில் ஒரு உறுப்பினராக பணியாற்றினார்.
- அவர் 1996-98 ஆம் ஆண்டில் மத்தியத் திட்டமிடல் மற்றும் திட்ட அமலாக்கம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் மின்சக்தி ஆகிய அமைச்சகங்களின் துணைநிலை அமைச்சராகப் பணியாற்றினார்.
- மேலும் இவர் 2006 முதல் 2012 ஆம் ஆண்டு வரை ஊரக மேலாண்மைக் கல்வி ஆனந்த் நிறுவனத்தின் (IRMA) தலைவராகவும் பணியாற்றினார்.
- இவர் திட்ட ஆணையத்தின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளதோடு, தொழில் துறை அமைச்சகத்தில் தொழில்துறைச் செலவினங்கள் மற்றும் விலைகள் பணியகத்தின் தலைவராகவும் இவர் பணியாற்றினார்.



## City of Joy கவிதை நூலின் ஆசிரியர் டொமினிக் லேபியர்

- Freedom at Midnight என்ற புத்தகத்தின் ஆசிரியர் டொமினிக் லேபியர் காலமானார்.
- இவர் City of Joy என்ற கொல்கத்தா நகரத்திற்கான கவிதை நூலினை எழுதியவர் ஆவார்.

- 30 மொழிகளில் 50 மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் விற்கப்பட்ட ஆறு புத்தகங்களை எழுதும் பணியில் அமெரிக்க எழுத்தரான லாரி காலின்ஸுடன் இணைந்து பணியாற்றினார்.
- இவருக்கு 2008 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.
- கொல்கத்தாவின் குடிசைக் குடியிருப்புப் பகுதிகளில் வாழும் தொழுநோயால் பாதிக்கப் பட்ட குழந்தைகளை மீட்க சிட்டி ஆஃப் ஜாய் என்ற அறக்கட்டளையை இவர் நிறுவினார்.
- 1981 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இதற்கு அவரது பல இலக்கிய வெற்றிகளின் மூலம் ஈட்டப்பட்ட பரிசுத் தொகைகள் மூலம் நிதி வழங்கப்பட்டது.



Dominique Lapierre, 'City of Joy' author dies at the age of 91

## TIME இதழின் 2022 ஆம் ஆண்டின் சிறந்த நபர்




- டைம் இதழ் ஆனது, உக்ரேனிய அதிபர் விலோடிமிர் ஜெலென்ஸ்கி அவர்களை 2022 ஆம் ஆண்டிற்கான தனது "ஆண்டின் சிறந்த நபர்" என்று அறிவித்துள்ளது.
- அவர் உக்ரேனியர்களை ஊக்கப் படுத்தியதோடு, ரஷ்யாவின் பேரழிவுகரமான படையெடுப்பை எதிர்ப்பதில் அவரது துணிச்சல் மிக்க செயல்களுக்காக உலகளவில் பாராட்டுகளைப் பெற்றார்.

- டெஸ்லா இன்க் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் 2021 ஆம் ஆண்டில் டைம்ஸ் இதழின் "ஆண்டின் சிறந்த நபர்" என்று அறிவிக்கப்பட்டார்.
- டைம் இதழானது ஆண்டின் சிறந்த நபரை அறிவிக்கும் இந்த வழக்கமுறைப் பாரம்பரியத்தை 1927 ஆம் ஆண்டில் தொடங்கியது.

## BBC நிறுவனத்தின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 பெண்களின் பட்டியல்



- உலகின் செல்வாக்கு மிக்க 100 பெண்களின் பட்டியலைப் பிரித்தானிய ஒளிபரப்புக் கழகமானது (BBC) வெளியிட்டுள்ளது.
- இதில் நடிகை பிரியங்கா சோப்ரா ஜோனாஸ், எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீ, பொறியாளர் மற்றும் விண்வெளி வீராங்கனை சிரிஷா பண்ட்லா, மற்றும் சமூக சேவகர் சினேகா ஜாவாலே ஆகிய நான்கு இந்தியர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டில் '100 பெண்கள்' என்ற பட்டியலின் கருத்துரு முன்னேற்றம் என்பது ஆகும்.

## எர்த்ஷாட் பரிசு 2022



- இளவரசர் வில்லியம்ஸ் எர்த்ஷாட் பரிசை வென்ற ஐந்து புத்தொழில் நிறுவனங்களுள் ஓர் இந்திய நிறுவனமும் இடம் பெற்றுள்ளது.
- இந்தப் பரிசானது பூமியைக் காப்பாற்றும் பல்வேறு திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறு விவசாயிகளுக்காக "ஒரு சிறு பெட்டக வடிவப் பசுமைக் குடிலினை" வடிவமைத்த இந்தியப் புத்தொழில் நிறுவனமான கெய்தி, இயற்கையைப் பாதுகாத்து அதை மீட்டு அமைப்பவை என்ற பிரிவில் பரிசினை வென்றது.
- கடந்த ஆண்டு, இந்தியாவினைச் சேர்ந்த திட்டமான டக்காச்சர், நமது காற்றினைச் சுத்தம் செய்தல் என்ற பிரிவில் பரிசை வென்றது.

## SHE STEM 2022

- SHE STEM என்பது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் மற்றும் நிலைத் தன்மை ஆகிய துறைகளில் பணியாற்றும் பெண்களைக் கொண்டாடும் விதமாக நடத்தப் படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- இந்த நிகழ்வானது, சுவீடன் இந்திய நோபல் நினைவு வாரத்தின் ஒரு பகுதியாக தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- இந்தியாவில் உள்ள சுவீடன் தூதரகமானது, அடல் புத்தாக்கத் திட்டம் மற்றும் ஜெர்மன் புத்தாக்க மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த வருடாந்திர விழாவினை ஏற்பாடு செய்துள்ளது.

## உள்ளூர் ஏற்பு சாம்பியன்கள் விருதுகள்

- மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஸ்வயம் ஷிக்சன் பிரயோக் அமைப்பானது உள்ளூர் ஏற்பு சாம்பியன்ஸ் விருதினைப் பெற்றுள்ளது.
- இந்த விருது விழாவானது எகிப்தின் ஷர்ம் எல்-ஷேக் நகரில் சமீபத்தில் நடைபெற்ற 27வது பங்குதாரர்கள் மாநாட்டில் உலக ஏற்பு நிலை மையத்தின் (GCA) மூலம் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இது 'திறன் மற்றும் அறிவு' என்ற பிரிவில் விருதினை வென்றது.
- மகாராஷ்டிராவின் மராத்வாடா பகுதியில் பெண் விவசாயிகள் அதிக நெகிழ்திறன் மிக்க மற்றும் நிலையான வேளாண் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு ஆதரவு அளிக்கும் வகையிலான அந்த நிறுவனத்தின் பணிக்காக இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.

## நுண்ணுயிர் எதிர்ப்பு தொடர்பான 3வது உலக உயர்மட்ட அமைச்சர் மாநாடு

- நுண்ணுயிர் எதிர்ப்பு தொடர்பான மூன்றாவது உலக அமைச்சர்கள் மாநாடானது ஓமன் நாட்டில் நிறைவடைந்தது.
- இந்த மாநாட்டின் கருத்துரு 'நுண்ணுயிர் எதிர்ப்பு ஓர் பெருந்தொற்று : கொள்கை முதல் ஒரு சுகாதார நடவடிக்கை வரை' என்பதாகும்.
- இந்த மாநாட்டின் போது அதற்கான மஸ்கட் அறிக்கை வெளியிடப்பட்டது.
- இது 2030 ஆம் ஆண்டு நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடையச் செய்வதற்காக நுண்ணுயிர் எதிர்ப்பின் மீதான ஒரு சுகாதார நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக இரைப்பைக் குடலியல் அமைப்பின் மாஸ்டர்ஸ் விருது 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான உலக இரைப்பைக் குடலியல் அமைப்பின் (WGO) மாஸ்டர்ஸ் விருதானது சென்னையைச் சேர்ந்த இரைப்பைக் குடலியல் நிபுணர் K.R. பழனிசாமி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இரைப்பைக் குடலியல் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காக அவருக்கு இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- உலக இரைப்பைக் குடலியல் அமைப்பின் மாஸ்டர்ஸ் விருதானது உலக இரைப்பைக் குடலியல் அமைப்பின் மிக உயரிய கௌரவமாகும்.

## இந்திய இணைய ஆளுமை மன்றம் (IGF) 2022




- பல்வேறு பங்குதாரர்களின் தளமாக விளங்கும் இந்திய இணைய ஆளுமை மன்றம் (IGF) ஆனது மூன்று நாள் கலப்பு நிகழ்வாக நடத்தப்படுகிறது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் இணைய ஆளுகை மன்றத்துடன் (UN-IGF) தொடர்புடைய ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த நிகழ்வின் கருத்துரு: 'பாரதத்தை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்' என்பதாகும்.
- இந்தியா 800 மில்லியன் இந்தியப் பயனர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய ‘இணைய சேவை இணைப்புள்ள’ ஒரு நாடாகும்.


## 7வது இந்திய நீர்வளப் பாதிப்பு உச்சி மாநாடு




- 7வது இந்திய நீர்வளப் பாதிப்பு உச்சி மாநாடானது சமீபத்தில் புதுடெல்லியில் நடத்தப் பட்டது.

- இந்த நிகழ்ச்சியின் கருத்துரு: மக்கள், கொள்கை, திட்டம், நிரல் மற்றும் செயற்பணி - ஆகிய '5Ps' என்ற 5 பிரிவுகளில் முறையானத் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, ஒரு பெரிய நதிப் படுகையில் உள்ள சிறிய நதிகளைப் புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல் என்பதாகும்.

## தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருது




- 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருது வழங்கும் விழாவானது எரிசக்தி திறன் ஆணையரகத்தினால் (BEE) ஏற்பாடு செய்யப்பட்டது.
- எரிசக்தி திறன் ஆணையரகமானது அருகிலுள்ள பொது மின்சார வாகன மின்னேற்ற முனையங்களுக்கு வாகனங்களை வழி செலுத்துவதற்கு ஏதுவாக ஒரு கைபேசி செயலியினை உருவாக்கியுள்ளது.
- கர்நாடக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனமானது (KREDL) அந்த மாநில அரசினால் நியமிக்கப்பட்ட முகமை (SDA குரூப்-1) துறையில் முதல் பரிசை வென்றது.

## ஆண்டின் சிறந்த பாதுகாப்பு செயல்திறன் கொண்ட நிறுவனம்



- ஸ்பைஸ்ஜெட் நிறுவனமானது, GMR டெல்லி விமான நிலைய விருதுகள் வழங்கும் 'ஆண்டின் சிறந்த பாதுகாப்பு செயல்திறன்' விருதினைப் பெற்றுள்ளது.
- சுயமாக கையாளப்படும் விமான நிறுவனங்களில் சிறந்து விளங்கியதற்காகவும், தரைநிலைப் பாதுகாப்பு மீறல்களை கணிசமாக குறைத்த நடவடிக்கைகளுக்காகவும் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- சமீபத்தில் சர்வதேச வான்வழிப் போக்குவரத்து அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தணிக்கையில் இடம் பெற்ற பட்டியலிடப்பட்ட இந்திய விமான நிறுவனம் ஸ்பைஸ்ஜெட் விமான நிறுவனம் மட்டுமே ஆகும்.
- ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்தின் பாதுகாப்பு அமைப்புகளின் தணிக்கையானது சர்வதேச வான்வழிப் போக்குவரத்து அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தணிக்கையில் இந்தியாவின் மிக உயர்ந்த பாதுகாப்பு தரவரிசையை அடைய உதவியது.

## 2022 ஆம் ஆண்டின் சிறந்த உலக தடகள வீரர்



- உலக சாம்பியனான அமெரிக்க நாட்டின் தடை தாண்டுதல் வீரர் சிட்னி மெக்லாலின்-லெவ்ரோன் மற்றும் ஸ்வீடன் நாட்டின் கம்பம் ஊன்றி தாண்டுதல் வீரர் மோண்டோ டுப்லாண்டிஸ் ஆகியோர் இந்த ஆண்டின் உலக தடகள வீரர் விருதுகளை வென்று உள்ளனர்.
- மெக்லாலின்-லெவ்ரோன் உலக மகளிர் பிரிவின் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் நிகழ்த்தப் பட்ட சாதனைகளை இரண்டு முறை முறியடித்துள்ளார்.
- அமெரிக்காவில் பிறந்த ஸ்வீடன் நாட்டு வீரர் டுப்லாண்டிஸ் 2022 ஆம் ஆண்டில் மூன்று உலக சாதனைகளுடன் மூன்றாண்டுகளில் இரண்டாவது முறையாக இந்த விருதை வென்று உள்ளார்.

## டியர் மூன் ஆய்வுப் பணி

- ஜப்பானியக் கோடீஸ்வரரான யுசாகு மேசாவா, 2023 ஆம் ஆண்டில் ஸ்பேஸ்எக்ஸ் ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்ட உள்ளதாக திட்டமிடப்பட்டுள்ள நிலவினைச் சுற்றி வரும் பயணத்தில் தன்னுடன் இணைய உள்ள எட்டுப் பணியாளர்களின் பெயர்களை அறிவித்துள்ளார்.
- இந்திய நடிகர் தேவ் ஜோஷியும் அந்தக் குழு உறுப்பினர்களில் ஒருவர் ஆவார்.

- டியர்மூன் எனப்படும் இந்த ஆய்வுப் பணியானது முதன்முதலில் 2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப் பட்டது.
- இந்தச் சுற்றுப் பயணம் ஆனது கிட்டத்தட்ட ஆறு நாட்கள் வரை தரையிறங்காமல் சந்திரனைச் சுற்றி மேற்கொள்ளப் படும்.




## அமெரிக்க அதிபர் வாழ்நாள் சாதனையாளர் விருது



- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் அவர்கள், இந்திய-அமெரிக்கரான கிருஷ்ணா வவிலாலாவிற்கு அதிபர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தார்.
- இது தனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஒருவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காக வழங்கப் படும் நாட்டின் உயரிய கௌரவமாகும்.
- அமெரிகார்ப்ஸ் அமைப்பினால் வழங்கப்படும் இந்த விருது விழாவானது, சிறந்த குணம், மதிப்புமிக்க நெறிமுறை மற்றும் தங்கள் சமூகங்களுக்கு தான் வழங்கிய அர்ப்பணிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் குடிமக்களைக் கௌரவிப்பதற்காக நடத்தப் படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.

## ஜம்னாலால் பஜாஜ் விருது 2022

- ஜம்னாலால் பஜாஜ் அறக்கட்டளை அமைப்பானது 2022 ஆம் ஆண்டு ஜம்னாலால் பஜாஜ் விருதினை வென்ற நபர்களின் பெயர்களை அறிவித்துள்ளது.
- இந்த அறக்கட்டளையானது பல்வேறு பிரிவுகளில் 4 விருதுகளை வழங்குகிறது.
- இதில் மூன்று விருதுகள் இந்தியர்களுக்கும் ஒரு விருதானது வெளிநாட்டில் காந்திய விழுமியங்களை ஊக்குவிப்பதற்காக ஒரு வெளிநாட்டவருக்கும் வழங்கப்படுகிறது.


- இதில் வெற்றி பெற்றவர்கள்
  - ஆக்கப்பூர்வப் பணிகளுக்காக - மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலேஷ் தேசாய்
  - கிராமப்புற மேம்பாட்டில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு - குஜராத்தின் மன்சுக்பாய் பிரஜாபதி
  - பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாடு மற்றும் நலனுக்கான விருது - ஒடிசாவின் சோபியா சாய்க்
  - இந்தியாவிற்கு வெளியே காந்திய விழுமியங்களை ஊக்குவிப்பதற்கான சர்வதேச விருது - லெபனானைச் சேர்ந்த டாக்டர் ஒகிரத் யூனன் மற்றும் டாக்டர் வாலிட் ஸ்லியாபி

## திருமதிக்கான உலக அழகிப் பட்டம் 2022



- அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற திருமதிக்கான உலக அழகிப் போட்டியில் 21 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய நாட்டினைச் சேர்ந்த சர்கம் கவுஷல் 2022 ஆம் ஆண்டிற்கான திருமதிக்கான உலக அழகிப் பட்டத்தை வென்றுள்ளார்.
- சர்கம் கௌஷல் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவர் ஆவார்.
- அதிதி கோவித்ரிகர் 2001 ஆம் ஆண்டில் இந்தப் பட்டத்தினை வென்ற முதல் இந்தியப் பெண்மணி ஆவார்.

## H.R. கேசவ மூர்த்தி



- கர்நாடகாவின் மூத்த கமகா எனப்படும் ஒரு கதைச் சொற்பொழிவாளரான H.R. கேசவ மூர்த்தி சமீபத்தில் காலமானார்.
- காவ்ய வாச்சனா என்றும் அழைக்கப்படுகிற கமகா, இது கர்நாடகாவில் தோன்றிய பாடல் மூலம் கதை சொல்லும் ஒரு கலை வடிவமாகும்.
- இங்கு பாடும் கலை கமகா என்றும், பாடுபவர் கமகி என்றும் அழைக்கப் படுகிறார்.
- இதில் கதை வழங்கலின் விளக்கம் வியாக்கியானம் எனப்படுகிறது.

## சாகித்ய அகாடமி விருது 2022




- முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி M. ராஜேந்திரன் எழுதிய வரலாற்று நாவலான காலா பாணி (கருப்பு நீர்) என்ற புத்தகமானது 2022 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதினை வென்றுள்ளது.
- சிவகங்கையை ஆண்ட வேங்கை பெரிய உடையண்ண தேவர், காளையார்கோயில் போருக்குப் பிறகு ஆட்சி செய்த சின்ன மருதுவின் மகன் துரைசாமி ஆகியோர் உட்பட 72 பேர் தோல்வியடைந்து நாடு கடத்தப்பட்டதை இப்புத்தகம் சித்தரிக்கிறது.
- ஆங்கிலேயர்களுக்கும் மருது சகோதரர்களுக்கும் இடையே நடைபெற்ற இந்தப் போரானது காளையார்கோயில் பகுதியில் உள்ள காடுகளில் 1801 ஆம் ஆண்டில் ஆறு மாதங்கள் வரை நடைபெற்றது.
- இந்தப் போரில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு, மருது சகோதரர்கள் 1801 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று தென் தமிழ்நாட்டில் அமைந்த திருப்பத்தூரில் தூக்கிலிடப் பட்டனர்.
- கப்பலில் ஏற்றப்பட்ட 72 பேரின் நாடு கடத்தல் பயணமானது 1802 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் தேதியன்று தொடங்கிய நிலையில், அவர்கள் 62 நாட்களுக்குப் பிறகு பினாங் பகுதியினை அடைந்தனர்.
- பெரிய உதயண்ண தேவர் மற்றவர்களிடமிருந்துப் பிரிக்கப்பட்டு சுமத்ரா தீவிற்கு அனுப்பப் பட்டு அங்கு அவர் நான்கு மாதங்கள் மட்டுமே வாழ்ந்தார்.
- 1820 ஆம் ஆண்டில் துரைசாமி உட்பட 11 பேர் இந்திய நாட்டிற்குத் திரும்பினார்கள்.

## சாகித்ய அகாடமி சிறந்த மொழிப்பெயர்ப்பு விருது

- மொழிப் பெயர்ப்பிற்கான பரிசானது 'பூனாச்சி' அல்லது கருப்பு ஆட்டின் கதை என்ற புத்தகத்திற்கு வழங்கப்பட்டது.
- இது தமிழ் எழுத்தாளர் பெருமாள் முருகனால் எழுதப்பட்ட நிலையில், N. கல்யாண் ராமன் என்பவர் இப்புத்தகத்தினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- K.நல்லதம்பி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட, 'யாட் வஷேம்' என்ற கன்னட புனைக் கதையின் தமிழ் மொழிப் பெயர்ப்புப் புத்தகத்திற்கும் விருது வழங்கப்பட்டது.

## ரவீந்திரநாத் தாகூர் இலக்கியப் பரிசு

- ரவீந்திரநாத் தாகூர் இலக்கியப் பரிசை சுதீப் சென் மற்றும் ஷோபனா குமார் ஆகியோர் கூட்டாக வென்றுள்ளனர்.
- சுதீப் தனது 'ஆந்த்ரோபோசீன்: காலநிலை மாற்றம், தொற்றுநோய், ஆறுதல் (பிப்பா ரான் புக்ஸ் & மீடியா, 2021)' என்ற புத்தகத்திற்காக இந்த விருதைப் பெற்றார்.
- ஷோபனா தனது ஹைகுன் வடிவ கவிதைத் தொகுப்பான "வானம் நிறைந்த விருப்பப் பட்டியல்" (ரெட் ரிவர், 2021) எனும் நூலுக்காக விருது பெற்றார்.
- ரவீந்திரநாத் தாகூர் இலக்கியப் பரிசானது ஆண்டுதோறும் இலக்கிய மற்றும் சமூக மாற்றச் சாதனைகளை அங்கீகரிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## ASEAN-இந்திய நாடுகளின் 3வது கடைமட்டப் புத்தாக்க மன்றம்

- ASEAN-இந்திய நாடுகளின் 3வது கடைமட்டப் புத்தாக்க மன்றம் மற்றும் இரண்டாவது அரசாங்கக் கூட்டம் ஆனது கம்போடியாவில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வில் நடத்தப்பட்ட கடைமட்டப் புத்தாக்கங்களுக்கானப் போட்டியில் பீகாரைச் சேர்ந்த ஷாலினி குமாரி என்பவர் உருவாக்கிய 'நடப்பதற்கு ஏதுவான முறையில் சரி செய்யக் கூடிய செயற்கைக் கால்களுடன் கூடிய ஊன்றுகோல்' என்ற கண்டுபிடிப்பானது முதல் பரிசைப் பெற்றது.
- இரண்டாவது மற்றும் மூன்றாம் பரிசுகள் ஆகியவற்றினை முறையே பிலிப்பைன்ஸ் மற்றும் மியான்மரைச் சேர்ந்த கடைமட்டப் புத்தாக்க ஆய்வாளர்கள் வென்றனர்.
- முதல் இரண்டு மன்றங்கள் முறையே இந்தோனேசியா (2018) மற்றும் பிலிப்பைன்ஸ் (2019) ஆகிய நாடுகளில் நடைபெற்றன.

## VinFuture சிறப்புப் பரிசு

- இந்திய அறிவியலாளர் மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் பேராசிரியர் தலப்பில் பிரதீப், 2022 ஆம் ஆண்டிற்கான வின் ஃபியூச்சர் சிறப்புப் பரிசினை வியட்நாமின் ஹனோய் எனுமிடத்தில் நடைபெற்ற விழாவில் பெற்றார்.
- நிலத்தடி நீரிலிருந்து ஆர்சனிக் மற்றும் பிற கனரக உலோகங்களை அகற்றுவதற்கான மலிவு விலையிலான வடிகட்டுதல் முறையைக் கண்டுபிடித்ததற்காக அவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.

- நுண்ணியப் பொருட்களைப் பயன்படுத்தி மலிவு விலை மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்கீட்டு முறைகளை உருவாக்குவதற்கான அவரது பணியைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு முன்னதாக தாமரைத் திரு (பத்மஸ்ரீ) விருது வழங்கப்பட்டது.

## முதல் ரோகிணி நய்யார் பரிசு

- கிராமப்புற மேம்பாட்டிற்கான சிறந்தப் பங்களிப்பிற்காக என்று செத்ரிசெம் சங்க்தம் என்பவருக்கு முதல் ரோகிணி நய்யார் பரிசு வழங்கப்பட்டது.
- கிழக்கு நாகாலாந்தில் உள்ள 1,200 விளிம்பு நிலை விவசாயிகளின் வருமானத்தை மூன்று மடங்காக உயர்த்துவதற்கு வேண்டி அவர் தனது 'Better Life Foundation' என்ற அறக்கட்டளை மூலம் உதவிகளை வழங்கினார்.
- 40 வயது அல்லது அதற்கு குறைவான வயதுடைய ஒருவருக்கு இந்தப் பரிசு வழங்கப் படுகிறது.
- இந்தியாவின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்குப் பங்களிக்கும் வகையில் அமைக்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதார நோக்கத்திற்கான அமைப்புகளுக்கு நய்யார் அறக்கட்டளையினால் ஆண்டுதோறும் பரிசு வழங்கப்படுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## வருடாந்திர சென்னை-கொழும்பு துடுப்புப் படகுப் போட்டி

- இலங்கையின் கொழும்பு நகரில் நடைபெற்ற 81வது வருடாந்திர சென்னை-கொழும்பு துடுப்புப் படகுப் போட்டியில் சென்னை படகுப் போட்டிக் குழுமத்தின் பெண்கள் அணி வெற்றி பெற்றது.
- அவர்களுக்கு அடையார் கோப்பை வழங்கப்பட்டது.
- ஆண்கள் பிரிவில் கொழும்பு துடுப்புப் படகுப் போட்டிக் குழுமத்தினர் வெற்றி பெற்ற நிலையில், அவர்களுக்கு தீபம் கோப்பை வழங்கப்பட்டது.



## இளையோர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி

- இந்த ஆண்டு சாம்பியன்ஷிப் போட்டிகளில் 73 நாடுகளைச் சேர்ந்த 600 குத்துச்சண்டை வீரர்கள் கலந்து கொண்டனர்.
- இந்தப் போட்டியின் பெண்கள் பிரிவில் இந்திய வீரர்கள் பெற்ற எட்டுப் பதக்கங்களும் வேறு எந்த நாடும் பெறாத ஒரு அதிகபட்ச எண்ணிக்கையாகும்.
- இந்திய குத்துச்சண்டை வீரர்களான விஸ்வநாத் சுரேஷ், வன்ஷாஜ், தேவிகா கோர்படே ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்றனர்.
- பெண்களுக்கான 48 கிலோ எடைப் பிரிவில் பாவ்னா ஷர்மா வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ஆஷிஷ் (54 கிலோ) வெள்ளிப் பதக்கத்தினை வென்ற மற்றொரு இந்தியர் ஆவார்.
- தமன்னா (50 கிலோ), குஞ்சராணி தேவி தொங்கம் (60 கிலோ), முஸ்கான் (75 கிலோ) மற்றும் லஷு யாதவ் (70 கிலோ) ஆகியோர் இதில் முறையே நான்கு வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- நடப்பு ஆண்டு போட்டியில் 11 பதக்கங்களுடன் இந்தியா முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து உஸ்பெகிஸ்தான் (10), அயர்லாந்து (7) மற்றும் கஜகஸ்தான் (7) ஆகிய நாடுகளும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.



## டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் 500 ரன்கள்

- ராவல்பிண்டியில் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் தொடக்க நாளில் இங்கிலாந்து அணி 506-4 என்ற அளவில் ரன்கள் எடுத்தது.
- டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளில் ஒரு அணி 500 ரன்கள் எடுத்தது இதுவே முதல் முறையாகும்.

| TEAM | OPPOSITION | GROUND | YEAR | RUNS |
|---|---|---|---|---|
| England | Pakistan | Rawalpindi | 2022 | 506 |
| Australia | South Africa | Sydney | 1910 | 494 |
| Australia | South Africa | Adelaide | 2012 | 482 |
| England | Australia | The Oval | 1934 | 475 |
| England | India | The Oval | 1936 | 471 |

## அதிவேக இரட்டை சதம்

- இந்திய வீரர் இஷான் கிஷான், வங்காளதேசத்துக்கு எதிரான போட்டியில் 210 ரன்கள் எடுத்து ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளின் வரலாற்றில் அதிவேக இரட்டை சதத்தை அடித்து சாதனை படைத்துள்ளார்.
- கிஷன் வெறும் 126 பந்துகளில் 200 ரன்களை எடுத்தார்.
- நியூசிலாந்தின் அமெலியா கெர் கொண்டிருந்த முந்தைய ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் போட்டிகளின் சாதனையை இவர் முறியடித்தார்.
- கெர் 2018 ஆம் ஆண்டில் அயர்லாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 134 பந்துகளில் அதிக ரன் எடுத்தார்.
- மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தொடக்க ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல் 2015 ஆம் ஆண்டில் ஜிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியில் 138 பந்துகளைச் சந்தித்து, ஆடவர் பிரிவுப் போட்டியில் இந்தச் சாதனையைப் படைத்தார்.
- கிஷானின் இணை- ஐந்தாவது அதிகபட்ச ஸ்கோருடன் ஆடவர் ஒருநாள் போட்டிகளில் ஒரு வீரர் இரட்டை சதம் அடிப்பது இது ஒன்பதாவது முறையாகும்.
- இந்த சாதனையைப் படைத்த 24 வயது இளைய நபர் இவரே ஆவார்.




## 65வது தேசியத் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டிகள்



- கர்நாடகத் துப்பாக்கி சுடுதல் வீராங்கனை திவ்யா போபாலில் நடைபெற்ற மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் தேசியப் போட்டிகளில் தனது முதல் பட்டத்தை வென்றுள்ளார்.
- மகளிருக்கான இளையோர் ஏர் பிஸ்டல் போட்டியில் மனு பாக்கர் வெற்றி பெற்று உள்ளார்.
- இளையோர் பிரிவில் ரிதம் சங்வான் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

## ICC அமைப்பினுடைய மாதத்தின் சிறந்த வீரர் பட்டம்

- இங்கிலாந்தினைச் சேர்ந்த, டி20 உலகக் கோப்பையை வென்ற கேப்டன் ஜோஸ் பட்லருக்கு முதல் முறையாக ICC அமைப்பினுடைய மாதத்தின் சிறந்த ஆடவ வீரர் விருதானது வழங்கப்பட்டது.
- பாகிஸ்தானின் சித்ரா அமீன் ICC அமைப்பினுடைய மாதத்தின் சிறந்த வீராங்கனைப் பட்டத்தைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக வென்றுள்ளார்.



## அரையிறுதியில் மொராக்கோ அணி

- FIFA உலகக் கோப்பைப் போட்டியின் அரையிறுதிக்குத் தகுதி பெற்ற முதல் ஆப்பிரிக்க அணி என்ற பெருமையை மொராக்கோ பெற்றுள்ளது.
- மொராக்கோ அணி கேமரூன் (1990), செனகல் (2002) மற்றும் கானா (2010) ஆகிய நாடுகளை விஞ்சி உலகின் மிகப்பெரிய கால்பந்தாட்டப் போட்டிகளின் கடைசி நான்கு இடங்களுக்குள் இடம் பெற்றது.

## FINA உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டி 2022

- ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற FINA உலக நீச்சல் சாம்பியன் ஷிப் போட்டியில் மகளிருக்கான 100 மீட்டர் பிரஸ்ட் ஸ்ட்ரோக் பிரிவில் இந்திய நீச்சல் வீராங்கனை சாஹத் அரோரா தேசிய சாதனையினைப் படைத்தார்.
- FINA என்பது சர்வதேச நீச்சல் கூட்டமைப்பாகும்.
- சாஹத் அரோரா 100 மீட்டர் பிரஸ்ட் ஸ்ட்ரோக் பந்தயத்தை 1 நிமிடம், 13.13 வினாடிகளில் நிறைவு செய்தார்.




## FIFA 2022 - சிறப்புச் செய்திகள்




- நான்கு முறை வெற்றி பெற்ற மற்றும் ஐரோப்பியச் சாம்பியன் பட்டத்தை வென்ற இத்தாலி அணியானது, தனது வரலாற்றில் முதல் முறையாக இரண்டாவது தொடர் உலகக் கோப்பைப் போட்டிக்குத் தகுதி பெறத் தவறியது.
- வேல்ஸ் நாடானது, கடந்த 64 ஆண்டுகளில் முதல்முறையாக இந்தப் போட்டியில் இடம் பெற்றுள்ள நிலையில், ஒரு ஐரோப்பிய அணிக்கான, பெரிய அளவிலான இடைவெளி இதுவாகும்.
- இதற்கு முன்னர் இந்த அணி 1958 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியில் மட்டுமே பங்கேற்றது.
- முந்தைய உலகக் கோப்பைப் போட்டியை நடத்திய ரஷ்யா, உக்ரைன் மீதான படையெடுப்பின் காரணமாக, இந்தப் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டிக்குத் தகுதி பெற்ற எகிப்து, பனாமா, கொலம்பியா, பெரு, ஐஸ்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் 2022 ஆம் ஆண்டு போட்டிக்குத் தகுதி பெறவில்லை.
- FIFA உலகக் கோப்பை போட்டியில் முதல் முறையாக அறிமுகமான ஒரே அணி கத்தார் அணியாகும்.
- 1934 ஆம் ஆண்டில் இப்போட்டியை நடத்திய இத்தாலி நாட்டிற்குப் பிறகு போட்டியில் அறிமுகமாகி அப்போட்டியினை நடத்தும் முதல் நாடும் இதுவே ஆகும்.
- இதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டு போட்டியானது தகுதி மூலம் இடம் பெற்ற எந்த ஒரு அணியும் முதல்முறையாக அறிமுகமாகாத முதல் உலகக் கோப்பைப் போட்டி ஆகும்.
- நெதர்லாந்து, ஈக்வடார், கானா, கேமரூன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் 2018 ஆம் ஆண்டு போட்டித் தொடரைத் தவற விட்டு மீண்டும் இந்த ஆண்டின் போட்டியில் இடம் பெற்றுள்ளன.

| Year | Winners | Runners-up | Host country |
|---|---|---|---|
| 1930 | Uruguay | Argentina | Uruguay |
| 1934 | Italy | Czechia | Italy |
| 1938 | Italy | Hungary | France |
| 1950 | Uruguay | Brazil | Brazil |
| 1954 | Germany | Hungary | Switzerland |
| 1958 | Brazil | Sweden | Sweden |
| 1962 | Brazil | Czechia | Chile |
| 1966 | England | Germany | England |
| 1970 | Brazil | Italy | Mexico |
| 1974 | Germany | Netherlands | West Germany |
| 1978 | Argentina | Netherlands | Argentina |
| 1982 | Italy | Germany | Spain |
| 1986 | Argentina | Germany | Mexico |
| 1990 | Germany | Argentina | Italy |
| 1994 | Brazil | Italy | United States |
| 1998 | France | Brazil | France |
| 2002 | Brazil | Germany | South Korea, Japan |
| 2006 | Italy | France | Germany |
| 2010 | Spain | Netherlands | South Africa |
| 2014 | Germany | Argentina | Brazil |
| 2018 | France | Croatia | Russia |
| 2022 | Argentina | France | Qatar |

- கனடா 36 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் போட்டியில் பங்கேற்றுள்ள நிலையில், இது முன்னதாக 1986 ஆம் ஆண்டு போட்டியில் மட்டுமே பங்கேற்றிருந்தது.
- 2026 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியானது அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய மூன்று வெவ்வேறு நாடுகளில் நடைபெற உள்ளது.
- அதிக சாம்பியன் பட்டங்களை வென்ற நாடு மற்றும் ஒவ்வொரு உலகக் கோப்பைப் போட்டிகளிலும் பங்கு பெற்ற ஒரே நாடு பிரேசில் ஆகும்.
- பிரேசில் அணி ஐந்து FIFA உலகக் கோப்பைப் பட்டங்களை வென்றுள்ளது.
- நான்கு போட்டித் தொடர்களில் 16 கோல்கள் அடித்த ஜெர்மனி வீரர் மிரோஸ்லாவ் க்ளோஸ், FIFA உலகக் கோப்பைப் போட்டிகளில் (2002, 2006, 2010, 2014) அதிக கோல்கள் அடித்த சாதனைக்குச் சொந்தக்காரர் ஆவார்.
- அல் ரிஹ்லா என்பது நீர் சார்ந்த மைகள் மற்றும் பசைகள் மூலம் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட முதல் உலகக் கோப்பைப் பந்து ஆகும்.
- அல் ரிஹ்லா பந்தானது காலிறுதி போட்டி வரை இந்த உலகக் கோப்பைப் போட்டியில் பயன்படுத்தப்பட இருந்தது.

- அல் ஹில்ம்' என்ற பந்தானது 2022 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கு அல் ரிஹ்லா பந்திற்குப் பதிலாக பயன்படுத்தப் பட்டது.
- அல் ரிஹ்லா என்றால் 'பயணம்' என்ற 14 ஆம் நூற்றாண்டு ஆய்வாளர் இபின் பதூதா எழுதிய பயணக் குறிப்பினைக் குறிக்கிறது.
- உலக கால்பந்துகளில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலான பந்துகளை பாகிஸ்தான் உற்பத்தி செய்கிற நிலையில் அதன் சியால்கோட் நகரம் இதற்கான உற்பத்தி மையமாக திகழ்கிறது.
- லயீப் என்பது 2022 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைப் போட்டியின் அதிகாரப் பூர்வச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.

## FIFA உலகக் கோப்பைப் போட்டி – 2022

| |
|---|
| • Top 4 team Rankings: Argentina (Winner), France (2nd), Croatia (3rd) and Morocco (4th) |
| • Golden Boot Award: Kylian Mbappe (France); (8 Goals) |
| • Golden Ball Award: Lionel Messi (Argentina); (7 goals and registering 3 assists) |
| • Golden Glove Award: Emiliano Martinez (Argentina) |
| • FIFA Young Player Award: Enzo Fernandez (Argentina) |
| • FIFA Fair Play Award: England |
| • Silver Boot Award: Lionel Messi |
| • Bronze Boot Award: Olivier Giroud (France) |
| • Silver Ball Award: Kylian Mbappe |
| • Bronze Ball Award: Luka Modric (Croatia) |

- கத்தாரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைப் போட்டியில் பிரான்சு அணியினை வீழ்த்தி அர்ஜென்டினா அணி கோப்பையினை வென்றது.
- 1978 ஆம் ஆண்டில் முதன்முதலில் கோப்பையினையும், 1986 ஆம் ஆண்டில் இரண்டாவது சாம்பியன்ஷிப் பட்டத்தினையும் வென்ற அர்ஜென்டினா அணியானது மறைந்த டியாகோ மரடோனாவால் அளிக்கப் பட்ட ஒரு உத்வேகத்துடன் தனது அடுத்தக் கோப்பையினை வென்று உள்ளது.
- ரஷ்யாவினால் நடத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைப் போட்டியில் குரோஷியா அணியினை வீழ்த்தி பிரான்சு அணி கோப்பையினை வென்றது.
- வெற்றி பெறும் அணிக்கு 42 மில்லியன் டாலர்கள் அல்லது 344 கோடி ரூபாயும், இரண்டாம் இடம் பெறும் அணிக்கு 30 மில்லியன் டாலர்கள் அல்லது 245 கோடி ரூபாயும் வழங்கப் படும்.
- ஒட்டு மொத்தமாகச் சிறப்பாகச் செயல்பட்ட வீரருக்கு தங்கப் பந்து விருது வழங்கப் படுகிறது.
- தங்கக் கையுறை விருது மற்றும் கோல்டன் பூட் (தங்கக் காலணி) விருது ஆகியவை இந்த கௌரவ விருதுகளில் மிகவும் மதிப்பு மிக்கவையாகும்.
- இந்தப் போட்டியின் போது அதிக கோல்கள் அடித்த வீரருக்கு கோல்டன் பூட் விருது வழங்கப் படுகிறது.

## பார்வையற்றோருக்கான 3வது டி20 உலகக் கோப்பை போட்டி 2022

- இந்திய அணி வங்காளதேச அணியினை வீழ்த்தி தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பட்டத்தை வென்றது.
- இதன் இறுதிப் போட்டியானது பெங்களூரு நகரில் நடைபெற்றது.
- B2 பிரிவில் இந்திய அணியினைச் சேர்ந்த அஜய் போட்டித் தொடரின் நாயகனாகவும், B1 பிரிவில் வங்காளதேச அணியின் முகமது மஹ்முத் ரஷித் போட்டித் தொடரின் நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

## மகளிருக்கான FIH தேசியக் கோப்பை போட்டி 2022




- இந்திய மகளிர் ஹாக்கி அணியானது தொடக்க FIH தேசியக் கோப்பை போட்டியின் இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணியினை வீழ்த்தி கோப்பையை வென்றது.
- இதில் இந்திய அணியின் அணித் தலைவர் சவிதா புனியா ஆவார்.
- இது ஸ்பெயினின் வலென்சியா நகரில் நடைபெற்றது.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில் பர்மிங்காமில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் ஹாக்கி அணி வெண்கலப் பதக்கத்தினை வென்றது.

## 9வது புரோ கபடி லீக் பட்டம்

- புனேரி பால்டன் அணிக்கு எதிரான புரோ கபடி லீக் 9வது போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணி வெற்றி பெற்றது.
- இது ஜெய்ப்பூர் அணி வென்ற இரண்டாவது புரோ கபடி லீக் சாம்பியன்ஷிப் பட்டம் ஆகும்.
- ஜெய்ப்பூர் அணி அபிஷேக் பச்சனுக்கு சொந்தமானதாகும்.
- பாட்னா அணிக்குப் பிறகு, இந்த லீக்கின் முதல் வெற்றியாளர்களான ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணி, தற்போது பல பட்டங்களை வென்ற இரண்டாவது அணி என்ற பெருமையினைப் பெற்றுள்ளது.
- இந்தப் போட்டிகள் பெங்களூரு, புனே மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களில் விளையாடப் பட்ட நிலையில் காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் மும்பையில் நடத்தப் பட்டன.

## IPL – டெகாகார்ன்

- இந்தியப் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் மொத்த மதிப்பீடு 10 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் தாண்டியுள்ளது.
- ஆகவே இது ஒரு டெகாகார்ன் நிறுவனமாக பரிணமித்துள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் தொடங்கி 15 ஆண்டுகளுக்குள், IPL நிறுவனம் இத்தகைய மைல் கல்லை எட்டியுள்ளது.
- IPL, ஒவ்வொரு போட்டியின் ஒளிபரப்பு கட்டணத்தில் இருந்து பெறப்படும் பணத்தின் அடிப்படையில் உலகளவில் இரண்டாவது பெரிய விளையாட்டு நிறுவனமாக விளங்குகிறது.
- ஒரு போட்டிக்கான வருவாயின் அடிப்படையில், தேசிய கால்பந்து லீக் நிறுவனம் (NFL) மட்டுமே IPL நிறுவனத்தினை விட அதிகமாக பண வருவாயினை ஈட்டுகிறது.

**VALUE OF IPL ECOSYSTEM**

| Years | INR '000 Crore | USD billion |
|---|---|---|
| 2014 | 19.5 | 3.2 |
| 2015 | 21.3 | 3.5 |
| 2016 | 27.5 | 4.2 |
| 2017 | 34.4 | 5.3 |
| 2018 | 41.8 | 6.3 |
| 2019 | 47.5 | 6.8 |
| 2020 | 45.8 | 6.2 |
| 2022 | 87.0 | 10.9 |

2014-2020 Data - IPL Valuation Report - Kroll

## அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீராங்கனைகளின் பட்டியல் 2022




- ஃபோர்ப்ஸ் இதழின் உலகிலேயே 2022 ஆம் ஆண்டிற்கான அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீராங்கனைகளின் பட்டியலில் P.V. சிந்து 12வது இடத்தைப் பிடித்து உள்ளார்.
- உலகிலேயே அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீராங்கனைகளின் 2022 ஆம் ஆண்டிற்கான பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே இந்தியர் சிந்து ஆவார்.

- ஜப்பானிய டென்னிஸ் வீராங்கனை நவோமி ஒசாகா இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- இவரைத் தொடர்ந்து செரீனா வில்லியம்ஸ் இடம் பெற்றுள்ளார்.

## FIFA உலகத் தரவரிசை 2022

Latest FIFA rankings December 2022

| Rank | Nation | Confederation | Last (Move) |
|---|---|---|---|
| 1. | Brazil | CONMEBOL | – |
| 2. | Argentina | CONMEBOL | 3rd (+1) |
| 3. | France | UEFA | 4th (+1) |
| 4. | Belgium | UEFA | 2nd (-2) |
| 5. | England | UEFA | – |
| 6. | Netherlands | UEFA | 8th (+2) |
| 7. | Croatia | UEFA | 12th (+5) |
| 8. | Italy | UEFA | 6th (-2) |
| 9. | Portugal | UEFA | – |
| 10. | Spain | UEFA | 7th (-3) |

- பிரேசில் தனது முதலாவது இடத்தினையும் 22வது FIFA ஆண்கள் உலகக் கோப்பை (2022) போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற அர்ஜென்டினா அணி 2வது இடத்தினையும் பெற்றுள்ளன.
- FIFA உலகத் தரவரிசையில் 22வது இடத்தில் இருந்த மொராக்கோ 11வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இதில் இந்தியா 106வது இடத்தில் உள்ளது.

## ICC ஆடவர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் தரவரிசை 2022


- ICC ஆடவர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் அணித் தரவரிசை என்பது சர்வதேச கிரிக்கெட் சபையின் சர்வதேச அளவிலான ஒருநாள் சர்வதேச (ODI) கிரிக்கெட் போட்டிகளின் தரவரிசை முறையாகும்.
- நியூசிலாந்து அணியானது இந்தத் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

| RANK | TEAM | MATCHES | POINTS | RATING |
|---|---|---|---|---|
| 1 | NEW ZEALAND | 23 | 2670 | 116 |
| 2 | ENGLAND | 30 | 3400 | 113 |
| 3 | AUSTRALIA | 32 | 3572 | 112 |
| 4 | INDIA | 36 | 3908 | 109 |
| 5 | PAKISTAN | 22 | 2354 | 107 |

# முக்கிய தினங்கள்

## செந்நிறக் கோள் தினம் - நவம்பர் 28

- 1964 ஆம் ஆண்டு இதே நாளில்தான், செவ்வாய்க் கிரகத்தை நோக்கிய சுற்றுப் பாதையில் மரைனர் 4 என்ற விண்கலத்தை அமெரிக்கா விண்ணில் செலுத்தியது.
- ஒரு விண்கலம் செந்நிறக் கோளிற்கான முதல் ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டது இதுவே முதல் முறையாகும்.
- விண்ணில் ஏவப்பட்ட இக்கலம், 1965 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் செந்நிறக் கோளின் படங்களைப் புவிக்கு அனுப்பியது.




## சர்வதேச ஜாகுவார் தினம் - நவம்பர் 29




- ஜாகுவார் (ஒரு சிறுத்தை வகை) இனங்களைப் பாதித்து வரும் பெரும் அச்சுறுத்தல்கள் மற்றும் முக்கியமானப் பாதுகாப்பு முயற்சிகள் ஆகியவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது உருவாக்கப்பட்டது.
- ஜாகுவார், இலத்தீன் அமெரிக்காவில் காணப்படும் ஒரு மிகப்பெரிய மாமிச உண்ணி மற்றும் ஒரே பெரும்பூனை இனமாகும்.
- இது மெக்ஸிகோ முதல் அர்ஜென்டினா வரை உள்ள 18 நாடுகளை உள்ளடக்கியப் பகுதியாகும்.
- IUCN அமைப்பில் இதன் பாதுகாப்பு நிலை - அச்சுறுத்தல் நிலைக்கு அருகில் உள்ள இனம்.
- இது எல் சால்வடார் மற்றும் உருகுவே ஆகியப் பகுதிகளில் அழிந்து விட்டது.

## எல்லைப் பாதுகாப்புப் படையின் 58வது எழுச்சி தினம் - டிசம்பர் 01

- இந்தியாவின் முதல் கட்ட பாதுகாப்புப் படையான எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) டிசம்பர் 01 ஆம் தேதியன்று தனது 58வது எழுச்சி தினத்தைக் கொண்டாடுகிறது.
- இந்தப் படையானது 1965 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதோடு, இது பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசத்துடனான இந்தியாவின் சர்வதேச எல்லையைப் பாதுகாக்கிறது.
- இந்திய இராணுவத்தைத் தவிர, தனி விமானப் படைப்பிரிவு, திறன் மிக்க பீரங்கி படைப் பிரிவு, பிரத்தியேக கடற்படைப் பிரிவு மற்றும் சிறப்பு புலனாய்வுத் துறை ஆகியவற்றைக் கொண்டுள்ள ஒரே மத்திய ஆயுதக் காவல் படை இதுவாகும்.

## உலக எய்ட்ஸ் தினம் - டிசம்பர் 01

- உலக சுகாதார அமைப்பானது 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று உலக எய்ட்ஸ் தினத்தை நிறுவியது.
- இது உள்ளூர் மற்றும் தேசிய அதிகாரிகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் குடிமக்களுக்கு இடையே தகவல் பகிர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "நம்மை பரிசோதனைக்கு உட்படுத்துதல்: HIV நோயினை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சமநிலையினை அடைதல்" என்பதாகும்.



## தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினம் - டிசம்பர் 02

- 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 02 மற்றும் 03 ஆகிய தேதிகளில் நடைபெற்ற போபால் விஷ வாயு விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு இத்தினம் அஞ்சலி செலுத்துகிறது.
- சுமார் 45 டன் அளவிலான மெத்தில் ஐசோசயனைடு என்ற வாயுவானது, அங்குள்ள ஒரு பூச்சிக் கொல்லி உற்பத்தி ஆலையிலிருந்து சுற்றுச்சூழல் மண்டலத்தில் வெளியானது.
- மனித அலட்சியம் மற்றும் தொழில்துறை உமிழ்வுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுப்பதற்காக மாசுக் கட்டுப்பாட்டுச் சட்டங்களைப் பின்பற்றுவதை ஊக்குவிப்பதற்காக இந்தத் தினம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 7 மில்லியன் மக்கள் காற்று மாசுபாட்டால் இறக்கின்ற நிலையில் அவர்களில் 4 மில்லியன் பேர் உட்புற காற்று மாசுபாட்டால் இறக்கின்றனர்.





## அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 02

- இது மனிதர்களை அடிமையாக விற்கும் நடைமுறைகளை ஒடுக்குவதற்கும் மற்றவர்களின் பாலியல் ரீதியிலான தொழில் முறையில் மேற்கொள்ளப்படும் சுரண்டல் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்குமான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட தினத்தினைக் குறிக்கிறது.
- காலனித்துவ ஆட்சியாளர்களால் நடைமுறைப் படுத்தப்பட்ட அடிமைத்தனத்தின் கொடூரமான வரலாற்றையும் இத்தினம் நினைவுபடுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'தைரியத்தின் கதைகள்: அடிமைத் தனத்திற்கு எதிர்ப்பு மற்றும் இனவெறிக்கு எதிரான ஒற்றுமை' என்பதாகும்.

## அசாம் தினம் - டிசம்பர் 02

- அசோம் திவாஸ் அல்லது அசாம் தினமானது, அசாமில் அஹோம் இராச்சியத்தின் முதல் மன்னர் சுகபாவின் வருகையைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 02 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.

- அஹோம் சாம்ராஜ்யத்தை நிறுவியவரின் நினைவாக இந்தத் தினமானது சுகபா திவாஸ் என்றும் கொண்டாடப்படுகிறது.
- இவர் ஆறு நூற்றாண்டுகளாக அசாம் பகுதியினை ஆண்ட அஹோம் அரசினை நிறுவிய 13 ஆம் நூற்றாண்டின் ஆட்சியாளர் ஆவார் என்பதோடு, இவரது சமகால அறிஞர்கள் அவரது தோற்றம் பர்மாவுடன் தொடர்புடையதாக கண்டுபிடித்துள்ளனர்.
- அஹோம் இராஜ்ஜியத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான விதைகளை விதைத்த சுகபா தனது முதல் சிறிய சமஸ்தானத்தை சாரெய்டியோ என்ற இடத்தில் நிறுவினார்.




## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் - டிசம்பர் 03

- மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வு பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் எதிர்கொள்ளும் அரசியல், சமூகம் மற்றும் பொருளாதார முரண்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் கடைபிடிக்கப் படுவதற்கான நடைமுறை என்பது 1992 ஆம் ஆண்டில் முதல் முறையாகத் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு 'உள்ளார்ந்த மேற்பாட்டிற்கான பரிமாற்றத் தீர்வுகள்: அணுகக்கூடிய மற்றும் சமமான உலகினை மேம்படுத்துவதில் புதுமையின் பங்கு' என்பதாகும்.

## இந்தியக் கடற்படை தினம் - டிசம்பர் 04

- இது இந்தியக் கடற்படையின் பங்களிப்பு மற்றும் சாதனைகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் போது பாகிஸ்தானுக்கு எதிராக மேற் கொள்ளப் பட்ட ட்ரைடென்ட் நடவடிக்கைத் தொடங்கப் பட்டதையும் இந்தத் தினம் நினைவு கூர்கிறது.
- இந்தியக் கடற்படை என்பது நமது நாட்டினைக் கடலின் மேற்பரப்பிற்கு மேலேயும், கடல் பரப்பிலும், கடல் பரப்பிற்குக் கீழான பகுதிகளையும் பாதுகாத்து வரும் ஒரு முப்பரிமாணப் படையாகும்.

- இந்தியாவின் கடற்படையை உருவாக்கிய சத்ரபதி சிவாஜி போஸ்லே "இந்தியக் கடற்படையின் தந்தை" என்று கருதப்படுகிறார்.




## சர்வதேச சிவிங்கிப் புலிகள் தினம் - டிசம்பர் 04

- 2010 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 04 ஆம் தேதியன்று சர்வதேச சிவிங்கிப் புலிகள் தினம் கொண்டாடப்படுகிறது.
- டாக்டர் லாவ்ரி மார்க்கர் என்பவர், ஒரிகானின் வின்ஸ்டனில் உள்ள வனவிலங்கு பூங்காவில் அது குட்டியாக இருந்தது முதல் தான் வளர்த்து வந்த கயாம் என்ற சிறுத்தையின் நினைவாக இந்த நாளை அறிவித்தார்.
- கயாம் சிவிங்கிப் புலிகளுக்கு, மீண்டும் வனத்தில் விடுதலுக்கான முதல் ஆராய்ச்சி திட்டத்திற்காக பயிற்சியளிக்கப் பட்டதோடு, 1977 ஆம் ஆண்டில் அது நமீபியாவின் காட்டிற்குள் விடப்பட்டது.
- சர்வதேச சிவிங்கிப் புலிகள் தினமானது வனவிலங்குப் பாதுகாப்பு தினத்துடன் ஒன்றி வருகிறது.
- சிவிங்கிப் புலிகள் பூமியின் வேகமான விலங்கு எனப் பிரபலமாக அறியப் படுகிறது.
- இது மூன்று வினாடிகளில் 70 மைல் வேகத்தை எட்டக் கூடியது.
- தற்போது இந்த விலங்குகள் பெரும்பான்மையாக நமீபியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.
- 1954 ஆம் ஆண்டில் இந்திய அரசானது இந்த விலங்கினை அழிந்து போன ஒரு விலங்கு இனமாக அறிவித்தது.
- இந்திய அரசாங்கம், நமீபியாவில் இருந்து சிவிங்கிப் புலிகளைக் கொண்டு வந்து மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவில் பாதுகாத்து வருகிறது.

## சர்வதேச வங்கி தினம் - டிசம்பர் 04

- இது நிலையான மேம்பாடுகளுக்கு நிதியளிப்பதில், பலதரப்பு மற்றும் சர்வதேச மேம்பாட்டு வங்கிகள் கொண்டுள்ள முக்கியத்துவத்தினை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2019 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது டிசம்பர் 04 ஆம் தேதியினை சர்வதேச வங்கி தினமாக நியமித்தது.
- இத்தினமானது, 2020 ஆம் ஆண்டில் முதல் முறையாக கொண்டாடப்படுகிறது.

## உலக மண் தினம் - டிசம்பர் 05

- மனித நல்வாழ்வு, உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு மண்ணின் தரத்தின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது முதன்முதலாக 2002 ஆம் ஆண்டில் சர்வதேச மண் அறிவியல் சங்கத்தினால் கருத்தாக்கப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது டிசம்பர் 05 ஆம் தேதியை உலக மண் தினமாக அறிவித்தது.
- 2022 ஆம் ஆண்டிற்கான உலக மண் தினத்தின் கருத்துரு, 'மண்: உணவு உற்பத்தி துவங்கும் இடம்' என்பதாகும்.

## சர்வதேசப் பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான தன்னார்வலர் தினம் - டிசம்பர் 05




- ஐக்கிய நாடுகள் சபையின் தன்னார்வத் தொண்டர்கள் மட்டுமின்றி, உலகம் முழுவதும் உள்ள தன்னார்வலர்களின் அயராத உழைப்பை அங்கீகரித்து ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1985 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் இந்தத் தினத்தினைச் சர்வதேச அளவில் அனுசரிப்பதற்கான முறைமை கட்டாயமாக்கப் பட்டது.
- உலகில் உள்ள 80 நாடுகளை இத்தினம் நினைவு கூர்கிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2001 ஆம் ஆண்டைச் சர்வதேச தன்னார்வலர்களின் ஆண்டாக அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'தன்னார்வத் தொண்டு மூலம் ஒற்றுமை' என்பதாகும்.

## தேசிய ஆயுதப்படை கொடி தினம் - டிசம்பர் 07

- இந்த நாளில், இந்தியக் கொடிகள், வில்லைகள், ஒட்டிகள் மற்றும் பிற பொருட்கள் ஆயுதப்படை ஊழியர்களின் மேம்பாட்டிற்காக வேண்டி நிதி திரட்டச் செய்வதற்காக விற்பனை செய்யப் படுகின்றன.
- இந்தக் கொடி தினத்தில் திரட்டப்படும் நிதியானது, போரில் உயிரிழந்தவர்களின் மறுவாழ்வு செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இந்தத் தினமானது இந்திய வீரர்கள், மாலுமிகள் மற்றும் விமானப்படை வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக, 1949 ஆம் ஆண்டு முதல் பல ஆண்டுகளாக ஒரு பாரம்பரியமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- 1949 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதியன்று, அப்போதைய இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு டிசம்பர் 07 ஆம் தேதியினை ஆண்டு தோறும் கொடி தினமாக அனுசரிக்க முடிவு செய்யப்பட்டது.

## சர்வதேச பொது விமானப் போக்குவரத்து தினம் - டிசம்பர் 07




- சர்வதேச விமானப் போக்குவரத்தில் சர்வதேச பொது விமான நிறுவனங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- சர்வதேச விமானப் போக்குவரத்தில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்புத் தரநிலைகள் சர்வதேச பொதுப் போக்குவரத்து அமைப்பு எனப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் தன்னாட்சி அமைப்பினால் மேலாண்மை செய்யப்படுகிறது.
- இந்தத் தினமானது முதன்முதலில் 1994 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டதோடு, 1996 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இத்தினம் அங்கீகரிக்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "உலகளாவிய விமானப் போக்குவரத்து மேம்பாட்டிற்கான புதுமைகளை மேம்படுத்துதல்" என்பதாகும்.
- 2023 ஆம் ஆண்டு வரை இந்தக் கருத்துரு பின்பற்றப்படும்.

## சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் - டிசம்பர் 09




- ❖ ஊழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதலையும், அதை எதிர்த்துப் போராடுதல் மற்றும் அதைத் தடுத்தல் ஆகியவற்றில் உடன்படிக்கையின் பங்கு பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2003 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டது.
- ❖ இந்த ஆண்டு, ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான உடன்படிக்கையின் (UNCAC) இருபதாம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான உடன்படிக்கையின் 20வது ஆண்டு நிறைவு: ஊழலுக்கு எதிராக உலக நாடுகளை ஒன்றிணைத்தல்" என்பதாகும்.

## இனப் படுகொலை குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவு மற்றும் கண்ணியத்தினைப் போற்றுதல் மற்றும் இந்தக் குற்றத்தைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 09




- ❖ மனிதனுக்கு எதிராக மனிதனால் இழைக்கப்படும் மிகப்பெரியக் குற்றம், மனித உரிமை மீறல் மற்றும் எதிர்காலத்தில் அதை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையானது 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் தேதியன்று, முதல் மனித உரிமைகள் சார்ந்த உடன்படிக்கையான இனப் படுகொலை குற்றத்தைத் தடுத்தல்

மற்றும் தண்டனை குறித்த ஒரு உடன்படிக்கையினை (இனப்படுகொலை ஒப்பந்தம்) ஏற்றுக் கொண்டது.

- 2022 ஆம் ஆண்டானது இந்த உடன்படிக்கையின் 74வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 2015 ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தினை இயற்றியதன் மூலமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்தத் தினத்தினை ஏற்றுக் கொண்டது.


## மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10





- இத்தினமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) ஆனது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தை (UDHR) ஏற்றுக் கொண்ட தினத்தினைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டானது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனமானது ஏற்றுக் கொள்ளப் பட்டதன் 74வது ஆண்டு நிறைவையும் 72வது மனித உரிமைகள் தினத்தையும் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "அனைவருக்கும் கண்ணியம், சுதந்திரம் மற்றும் நீதி" என்பதாகும்.
- மனித உரிமைகள் சட்டமானது 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 ஆம் தேதியன்று இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது.
- இந்தச் சட்டத்தின்படி, 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று இந்தியாவில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆனது உருவாக்கப்பட்டது.

## சர்வதேச மலை தினம் - டிசம்பர் 11

- வாழ்க்கை மற்றும் பருவநிலை ஆகிய இரண்டிலும் மலைகள் ஆற்றும் பங்கினைப் பற்றிய பொது விழிப்புணர்வை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது (UNGA) மலைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக சர்வதேச மலை தினத்தை நிறுவியது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு ''Women Move Mountains' என்பதாகும்.
- இந்தத் தினமானது 2003 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.




## ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதிய தினம் - டிசம்பர் 11



- UNICEF என்பது ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம் என்பதைக் குறிக்கும்.
- இது 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப் பட்டது.
- இது ஐரோப்பா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் போருக்குப் பிந்தைய சூழ்நிலைகளில் குழந்தைகளின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்கிறது.
- 1953 ஆம் ஆண்டில், இது ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் நிரந்தர அங்கமாக மாறியதோடு, இதன் பெயர் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியம் என சுருக்கப் பட்டது.
- 2022 ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு 'ஒவ்வொருக் குழந்தைக்குமான உள்ளடக்கம்' என்பதாகும்.

## சர்வதேசப் பொது சுகாதார வழங்கீட்டுத் தினம் - டிசம்பர் 12




- உலகளவில் வலுவான, நெகிழ்திறன்மிக்க, உலகத் தரம் வாய்ந்த சுகாதார அமைப்புகளை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- பல பங்குதார நிறுவனங்களுடன் சேர்ந்து வலுவான மற்றும் நெகிழ்திறன் மிக்க சுகாதார அமைப்புகள் மற்றும் பொது சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றின் தேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "நாம் விரும்பும் உலகை உருவாக்குங்கள்: அனைவருக்குமான ஆரோக்கியமான எதிர்காலம்"என்பதாகும்.

## சர்வதேச நடுநிலைமை தினம் - டிசம்பர் 12

- ஆயுதம் ஏந்திய மற்றும் பிற வகையான மோதல்கள் இல்லாத ஒரு உலகினை உருவாக்குவதன் சாத்தியத்தை மக்கள் உணரும் தினமாக இது அனுசரிக்கப்படுகிறது.
- 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இந்த தினமானது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

- அரசுகளுக்கு இடையேயான அமைதியான உறவுகளை ஆதரித்து அதற்காகச் செயல் ஆற்றுவதில் இது செயல்படுகிறது.
- துர்க்மெனிஸ்தான் நாட்டினால் முன்மொழியப்பட்ட இத்தினத்தினை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2017 ஆம் ஆண்டில் நிறுவியது.
- நடுநிலைமைக்கு சுவிட்சர்லாந்து நாடானது ஓர் சிறந்த உதாரணமாக விளங்குகிறது.

## தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் - டிசம்பர் 14

- 2001 ஆம் ஆண்டு இதே நாளில்தான், எரிசக்தி செயல்திறன் ஆணையரகத்தினால் (BEE) எரிசக்தி பாதுகாப்புச் சட்டமானது செயல்படுத்தப்பட்டது.
- ஆற்றலின் முக்கியத்துவம் மற்றும் குறைந்த ஆற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் ஆற்றலைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்த ஒரு விழிப்புணர்வை பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எரிசக்தி செயல்திறன் ஆணையரகத்தின் மாபெரும் இயக்கத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 09 முதல் 14 ஆம் தேதி வரை எரிசக்தி பாதுகாப்பு வாரத்தை மின்சார அமைச்சகம் கொண்டாடி வருகிறது.

## விஜய் திவாஸ் - டிசம்பர் 16



- இந்திய-பாகிஸ்தான் போர் ஆனது 1971 ஆம் ஆண்டில் டிசம்பர் 03 ஆம் தேதியன்று தொடங்கி 13 நாட்கள் நீடித்தது.
- 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 04 ஆம் தேதியன்று ட்ரைடென்ட் என்ற நடவடிக்கை இந்தியாவால் தொடங்கப்பட்டது.
- டிசம்பர் 06 ஆம் தேதியன்று, வங்காளதேசத்தைச் சுதந்திர நாடாக இந்தியா அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்தது.
- டிசம்பர் 16 ஆம் தேதியன்று, அதிகாரப் பூர்வமாக போர் முடிவடைந்து பாகிஸ்தான் இந்தியாவிடம் சரணடைந்தது.
- இது 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் முடிவு மற்றும் வங்காளதேசத்தின் விடுதலையைக் குறிக்கிறது.
- பாகிஸ்தான் கிழக்குப் படைப்பிரிவின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் AAK நியாசி சரணடைவதற்கான ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

## பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 17

- இது பாலியல் தொழிலாளர்கள், அவர்களது ஆதரவாளர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் பங்குதாரர்கள் ஆகியோரால் ஆண்டுதோறும் அனுசரிக்கப் படுகிறது.
- செந்நிறக் குடையானது பாலியல் தொழிலாளிகளின் உரிமைகளைக் குறிக்கும் ஒரு முக்கிய அடையாளமாகும்.

## தேசிய சிறுபான்மையினர் உரிமைகள் தினம் – டிசம்பர் 18

- இந்தியாவிலுள்ள மதம், இனம், வர்க்கம் அல்லது மொழி சார்ந்த சிறுபான்மையினரின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.
- மத்திய அரசானது, 1992 ஆம் ஆண்டு தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டத்தின் கீழ் தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தினை நிறுவியது.
- இதைத் தொடர்ந்து, ஐந்து மதச் சமூகங்களும் நாடு முழுவதும் சிறுபான்மையினச் சமூகங்களாக இந்திய அரசிதழில் மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளன.
- இந்த மதச் சமூகங்கள் முஸ்லிம்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் ஜோராஸ்ட்ரியர்கள் (பார்சி) ஆகியோர் ஆவர்.
- 2014 ஆம் ஆண்டில் சிறுபான்மைச் சமூகங்களாகக் கருதப்படும் மதச் சமூகங்களின் பட்டியலில் சமணர்களும் சேர்க்கப்பட்டனர்.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினமானது, "All in 4 Minority Rights" என்ற கருத்துருவினை மையமாகக் கொண்டு அனுசரிக்கப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் 30 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வின் ஒரு பகுதியாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையானது 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று மத அல்லது மொழியியல் அல்லது தேசிய அல்லது இனம் சார்ந்த சிறுபான்மையினருக்குச் சொந்தமான தனிநபர் உரிமைகள் பற்றிய ஒரு அறிக்கையை ஏற்றுக் கொண்டு வெளியிட்டது.
- சிறுபான்மையினர் உரிமைகள் தினமானது, இந்தியாவில் சிறுபான்மையினருக்கான சுதந்திரம் மற்றும் சம வாய்ப்புகளுக்கான உரிமை ஆகியவற்றினை நிலை நிறுத்தச் செய்வதோடு, அவர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது.

## சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18

- இந்தத் தினமானது, உலகெங்கிலும் உள்ள புலம்பெயர்ந்தோரின் சமூக மற்றும் பொருளாதார நிதர்சனங்கள் (உண்மை நிலவரங்கள்) குறித்த கவனத்தினை ஈர்க்கச் செய்வதற்காக ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- 1990 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையினை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்றுக் கொண்டது.

## கோவா விடுதலை தினம் - டிசம்பர் 19

- 1961 ஆம் ஆண்டில் போர்த்துகீசிய ஆட்சியிலிருந்து அம்மாநிலம் விடுதலை பெற்றதை நினைவு கூரும் வகையில் இத்தினமானது கொண்டாடப் படுகிறது.
- 1510 முதல் சுமார் 450 ஆண்டுகளாக கோவா போர்த்துகீசிய ஆட்சியின் கீழ் இருந்தது.
- 1949 ஆம் ஆண்டில் போர்ச்சுகல் நாடானது அமெரிக்க தலைமையிலான மேற்கத்திய இராணுவக் கூட்டணியான வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் ஒரு பகுதியாக மாறிய பிறகு, கோவா பகுதியும் சோவியத் எதிர்ப்புக் கூட்டணியின் ஒரு பகுதியாக இணைக்கப் பட்டது.
- கோவா, டாமன் மற்றும் டையூ ஆகிய மூன்று போர்த்துகீசியப் பிரதேசங்களை விடுவிப்பதற்காக விஜய் நடவடிக்கையானது தொடங்கப்பட்டது.
- இது இந்திய ஆயுதப்படைகளின் முதல் முப்படை ஈடுபாடு கொண்ட நடவடிக்கை என்று கூறப்படுகிறது.

## சர்வதேச மனித ஒற்றுமை தினம் - டிசம்பர் 20

- வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கையினைக் கொண்டாடும் விதமாக இந்தத் தினமானது உலகம் முழுவதும் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- சுதந்திர நாடுகளில் வறுமையினைப் பற்றியும், வறுமையைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் உறுப்பினர் நாடுகள் நிர்ணயித்துள்ள இலக்குகளை இது எடுத்துக் காட்டுகிறது.
- 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது உலக நாடுகளின் வறுமை நிலையினை எதிர்கொள்ள உதவும் ஓர் உலக ஒற்றுமை நிதியை அறிமுகப் படுத்தியது.

## ஐக்கிய நாடுகள் சபையின் அரபு மொழி தினம் – டிசம்பர் 18

- இது 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (யுனெஸ்கோ) நிறுவப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது, 1973 ஆம் ஆண்டில் அரபு மொழியை அதனுடைய ஆறாவது அதிகாரப் பூர்வ மொழியாக ஏற்றுக் கொண்ட நாளுடன் இது ஒத்துப் போகிறது.
- இது "பன்மொழி மற்றும் கலாச்சாரப் பன்முகத் தன்மையைக் கொண்டாடுவதுடன், அந்த அமைப்பு முழுவதும் அதன் ஆறு அதிகாரப் பூர்வ மொழிகளின் சமமான பயன்பாட்டை ஊக்குவிக்கவும்" முயல்கிறது.
- 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், ஐக்கிய நாடுகள் சுவாஹிலி மொழி தினம் (ஜூலை 7) ஆனது உருவாக்கப்பட்டது.
- போர்த்துகீசியம் மற்றும் சுவாஹிலி ஆகிய மொழிகள் மட்டுமே ஐக்கிய நாடுகள் சபையின் மொழி தினத்தைக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரப் பூர்வமற்ற மொழிகளாகும்.





## நல்லாட்சி வாரம் 2022

- ❖ மத்தியப் பணியாளர், பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதியத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், 2022 ஆம் ஆண்டிற்கான இந்திய நல்லாட்சி வாரத்திற்கான கொண்டாட்டங்களை (டிசம்பர் 19-25 வரை) புது டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் தொடங்கி வைத்தார்.
- ❖ முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில், "பிரஷாசன் கோன் கி ஓரே" என்ற ஐந்து நாள் அளவிலான தேசியப் பிரச்சாரத்தையும் அந்த அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்தியாவின் முன்னாள் பிரதமர், பாரத ரத்னா விருது பெற்ற மறைந்த அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் நினைவாக, நல்லாட்சி தினம் (டிசம்பர் 25) மற்றும் நல்லாட்சி வாரம் ஆகியவை கொண்டாடப் படுகிறது.

## தேசிய கணித தினம் – டிசம்பர் 22


- ❖ சீனிவாச இராமானுஜன் அவர்களின் படைப்புகளை அங்கீகரித்து அவற்றைக் கொண்டாடச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இவர் 1887 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் பிறந்தார்.
- ❖ 2012 ஆம் ஆண்டில் இந்தக் கணித மேதை பிறந்து 125 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில், அப்போதையப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களால் இந்தத் தினமானது அறிவிக்கப்பட்டது.
- ❖ 2012 ஆம் ஆண்டானது தேசிய கணித ஆண்டாகவும் அனுசரிக்கப்பட்டது.
- ❖ இவர் இளம் வயதிலேயே கணிதத்தில் விருப்பத்தை வளர்த்து, தனது 12 வயதில் முக்கோணவியலில் அதீத அறிவினைப் பெற்றார்.
- ❖ இராமானுஜன் அவர்கள் 1917 ஆம் ஆண்டில் இலண்டன் கணிதவியல் சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- அதற்கு அடுத்த ஆண்டில், நீள்வட்டத் தொகையீடுகள் மற்றும் எண்களின் கோட்பாடு குறித்த ஆராய்ச்சிக்காக அவர் மதிப்புமிக்க ராயல் சமூகத்தின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- டிரினிட்டி (திருத்துவ) கல்லூரியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியரும் இவரே ஆவார்.
- முழு அளவு கணிதப் பாடத்தில் முறையான பயிற்சி ஏதும் பெறாவிட்டாலும், அவர் மகத்தாக பணியாற்றிய பகுதிகளில் முடிவிலித் தொடர்கள், தொடர் பின்னங்கள், எண் கோட்பாடு மற்றும் கணிதப் பகுப்பாய்வு ஆகியவை அடங்கும்.
- மிகைப் பெருக்கத் தொடர்கள், ரீமான் தொடர்கள், நீள்வட்டத் தொகையீடுகள், விரி தொடர்களின் கோட்பாடு மற்றும் ஜீட்டா தொகையீடுகளின் செயல்பாட்டுச் சமன்பாடுகள் போன்ற குறிப்பிடத்தக்கப் பங்களிப்புகளையும் அவர் ஆற்றியுள்ளார்.
- ராபர்ட் கனிகெல் என்பவர் எழுதிய 'The Man Who Knew Infinity' என்ற அவரது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகமானது அவரது வாழ்க்கையையும் புகழ் நோக்கிய அவரது வாழ்க்கைப் பயணத்தையும் சித்தரிக்கிறது.
- 1729 என்பது இராமானுஜன் எண் என்று அழைக்கப்படுகிறது.
- இது இரண்டு வெவ்வேறு வழிகளில் இரண்டு கனசதுரங்களின் கூட்டுத் தொகையாக குறிப்பிடக் கூடிய மிகச் சிறிய எண்ணாகும்.
- இதன் காரணமாக, 1729 என்ற எண் ஆனது தற்போது இராமானுஜன்-ஹார்டி எண் என்று அழைக்கப்படுகிறது.




## இந்திய தேசிய விவசாயிகள் தினம் - டிசம்பர் 23

- நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு விவசாயிகள் ஆற்றும் பங்களிப்புகள் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் ஐந்தாவது பிரதமரான சௌத்ரி சரண் சிங் அவர்களின் பிறந்தநாளை நினைவு கூரும் வகையில் இந்தத் தினமானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- விவசாயிகளின் மேம்பாட்டிற்காக வேண்டி பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்திச் செயல்படுத்திய அவர், நம் நாட்டின் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எடுத்துரைத்து அதற்கானத் தீர்வையும் அளித்து அதில் பல புத்தகங்களை எழுதினார்.
- சரண் சிங் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில், அரசாங்கம் 2001 ஆம் ஆண்டில் கிசான் திவாஸ் தினத்தினைக் கொண்டாடியது.




## தேசிய நுகர்வோர் உரிமைகள் தினம் - டிசம்பர் 24

- 1986 ஆம் ஆண்டில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நுகர்வோர் பாதுகாப்பு மசோதாவானது நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதா 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் தேதியன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று அமலுக்கு வந்தது.




- இந்த நாளின் முக்கியத்துவத்தை நினைவு கூறும் வகையில் டிசம்பர் 24 ஆம் தேதி என்பது தேசிய நுகர்வோர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- இந்தச் சட்டத்தினை மேலும் மேம்படுத்துவதற்காக வேண்டி 1991, 1993 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் மேலும் பல திருத்தங்கள் செய்யப் பட்டன.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்கு மாற்றாக, 2019 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினை இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

- 2019 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமானது 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அமலுக்கு வந்தது.

## நல்லாட்சி தினம் - டிசம்பர் 25

- இது முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் பிறந்தநாளைக் குறிக்கும் நாள் ஆகும்.
- அடல் பிஹாரி வாஜ்பாய் 1924 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் தேதி இன்றைய மத்தியப் பிரதேசத்தில் உள்ள குவாலியரில் பிறந்தார்.
- இவர் முதன்முதலில் 1996 ஆம் ஆண்டில் (16 நாட்கள்) பிரதமரானார்.
- 1998-1999 ஆம் ஆண்டில், அவர் இரண்டாவது முறையாகப் பிரதமராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- 1999 ஆம் ஆண்டு அக்டோபர் 13 ஆம் தேதியன்று, அவர் மூன்றாவது முறையாக நம் நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- ஐ.நா.வில் இந்தியில் உரையாற்றிய முதல் அரசின் தலைவர் இவரேயாவார்.
- இவருக்கு "பாரத ரத்னா" விருது 2015 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதியன்று வழங்கப் பட்டது.

## வீர் பால் திவாஸ் - டிசம்பர் 26




- இந்த நாள் குரு கோவிந்த் சிங்கின் மகன்களான சாஹிப்சாதா பாபா ஜோராவர் சிங் மற்றும் பாபா ஃபதே சிங் ஆகியோரின் தியாகத்தைக் குறிக்கிறது.
- இவர்கள் பஞ்சாபின் சிர்ஹிந்தில் முகலாயப் படைகளால் கொல்லப் பட்டனர்.

## சர்வதேச தொற்றுநோய் தயார்நிலை தினம் - டிசம்பர் 27

- இது தொற்றுநோய்களின் அனைத்து நிலைகள் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் எதிர்காலத்தில் தோன்ற உள்ள பெருந்தொற்றுகளுக்கு உலகினைத் தயார்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது முதன்முதலில் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் தேதியன்று உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றினால் அனுசரிக்கப் பட்டது.

# இதரச் செய்திகள்

## காட்டு எருதுகள் - உணவு விலங்கு

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையத்தின் (FSSAI) அறிவியல் குழுவானது இமயமலை காட்டு எருதுகளை (கவரிமா) உணவு விலங்காக ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்த வகைப்படுத்துதலானது, பாரம்பரியப் பால் மற்றும் இறைச்சித் தொழில் துறையின் ஒரு அங்கமாக மாற்றுவதன் மூலம் உயர்நிலைப் பகுதிகளில் வாழும் இந்த பசு வகை விலங்குகளின் எண்ணிக்கை குறைவதைத் தடுப்பதற்கு உதவும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.
- காட்டு எருதுகள் பாரம்பரியமாக பழமையான, ஒழுங்கமைக்கப்படாத மற்றும் சிரமங்கள் நிறைந்த ஒரு பருவகால மேய்ச்சல் முறையின் மூலம் வளர்க்கப் படுகின்றன.
- 2019 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் சுமார் 58,000 காட்டு எருதுகள் உள்ளன.
- 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கால்நடைக் கணக்கெடுப்பில் பதிவானதை விட இது சுமார் 25% குறைவாகும்.
- காட்டு எருதுகளின் பாலில் 78-82% நீர், 7.5-8.5% கொழுப்பு, 4.9-5.3% புரதம், 4.5-5.0% லாக்டோஸ் மற்றும் 12.3-13.4% கொழுப்பு சாராத திடப்பொருள் உள்ளன.
- பெரும்பாலும் உள்ளூரில் உட்கொள்ளப்படும் காட்டு எருதுகளின் இறைச்சி மெலிந்த தடிமன் உடையதாக அறியப்படுகிறது.
- இதன் இறைச்சியில் 74.8% ஈரப்பதம், 21.7% புரதம், 1.5% கச்சா கொழுப்பு மற்றும் 1.2% சாம்பல் அளவு (எரிதிறன்) உள்ளன.




## சமஸ்கிருத மொழியில் வெளியாகும் முதல் அறிவியல் ஆவணப்படம்

- கோவாவில் நடைபெற்ற 53வது சர்வதேச திரைப்பட விழாவில் இந்தியன் திரைக் காட்சிப் பிரிவின் கீழ் யாணம் என்ற பெயரிடப்பட்ட 40 நிமிட ஆவணத் திரைப்படம் (non-feature) ஆனது திரையிடப்பட்டது.
- 45 நிமிடங்கள் வரை திரையாகும் இந்த ஆவணப்படத்தின் முழுக் கதை மற்றும் உரையாடல்கள் பண்டைய மொழியான சமஸ்கிருத மொழியில் உள்ளதால் இது முழுக்க முழுக்க ஒரு சமஸ்கிருத மொழியிலான திரைப்படமாகும்.

- இது முன்னாள் விண்வெளித் தலைவர் டாக்டர் K. ராதாகிருஷ்ணன் அவர்களின் சுயசரிதைப் புத்தகமான “My Odyssey: Memoirs of the Man Behind the Mangalyaan Mission” என்ற புத்தகத்தினை அடிப்படையாகக் கொண்டது.
- இந்தியாவின் கனவுத் திட்டமான செவ்வாய்க் கிரக சுற்றுக் கலன் திட்டத்தினை (மங்கள்யான்) இந்தப் படம் சித்தரிக்கிறது.





## ரஷ்யாவில் ஜாம்பி வைரஸ்




- ரஷ்யாவின் சைபீரியப் பகுதியில் காணப்படும் நிலத்தடி உறைபனியில் இருந்து சேகரிக்கப் பட்ட பண்டைய கால மாதிரிகளை ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர்.
- அவர்கள் 13 புதிய நோய்க் கிருமிகளுக்குப் புத்துயிர் அளித்து அவற்றினை வகைப் படுத்தி அவற்றினை "ஜாம்பி வைரஸ்கள்" என்று கூறுகின்றனர்.
- அவை பல ஆயிரம் வருடங்கள் உறைந்த நிலத்தில் சிக்கியிருந்தப் போதிலும் அவை தொற்றுத் திறன் கொண்டதாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.
- இந்த 13 வைரஸ்களில், பண்டோரா வைரஸ் யெடோமா என அழைக்கப்படும் பழமையான வைரசானது 48,500 ஆண்டுகள் பழமையானது என அறியப்படுகிறது.
- இந்த வைரஸ் 2013 ஆம் ஆண்டில் இதே குழுவினால் கண்டுபிடிக்கப்பட்ட 30,000 ஆண்டுகள் பழமையான வைரஸ் என்ற அதன் முந்தைய சாதனையை முறியடித்தது.

## 2022 ஆம் ஆண்டின் சிறந்த வார்த்தை





- அமெரிக்க அகராதி வெளியீட்டு நிறுவனமான மெரியம்-வெப்ஸ்டர் அதன் 2022 ஆம் ஆண்டிற்கான சொல்லாக "gaslighting" என்ற சொல்லினை அறிவித்தது.
- இந்தச் சொல்லானது, "குறிப்பாக ஒருவரின் சொந்த நலனுக்காக மற்ற ஒருவரை தவறாக வழிநடத்தும் செயல் அல்லது நடைமுறை" என வரையறுக்கப்பட்டுள்ளது.
- இணையவழி அகராதியின் தேடல்களின்படி, இந்தச் சொல்லின் மீதான ஒரு ஆர்வம் முந்தைய ஆண்டை விட 1,740% அதிகரித்துள்ளது.
- இந்தச் சொல்லானது, 80 ஆண்டுகளுக்கு முன்பு 1938 ஆம் ஆண்டில் வெளியான gas light என்ற புத்தகத்தின் மூலம் நடைமுறைக்கு வந்தது.
- இந்த நாடக நூலினை எழுதியவர் பேட்ரிக் ஹாமில்டன் என்பவர் ஆவார்

## பிரஞ்சு ரொட்டிகள்

- பிரஞ்சு (பாக்குவெட்) ரொட்டிகளுக்கு யுனெஸ்கோ அமைப்பின் பாரம்பரியப் பொருள் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.
- பாக்குவெட் என்பது மாவு, தண்ணீர், உப்பு மற்றும் ஈஸ்ட் ஆகியவற்றால் செய்யப்பட்ட நீண்ட மற்றும் மெல்லிய ரொட்டியாகும்.
- மேலும் இது பிரான்சு நாட்டில் அந்நாட்டவரின் ஒரு முக்கிய உணவாக உட்கொள்ளப் படுகிறது.
- பிரெஞ்சு அடுமனைகளின் தேசிய கூட்டமைப்பின் கருத்துப்படி பிரான்சில் ஒவ்வோர் ஆண்டும் ஆறு பில்லியனுக்கும் அதிகமான ரொட்டிகள் தயாரிக்கப் படுகின்றன.
- யுனெஸ்கோ அமைப்பின் 'மகத்தான கலாச்சாரப் பாரம்பரியம்' என்பது "வாய்வழி மரபுகள், கலைகள், சமூக நடைமுறைகள், சடங்குகள், பண்டிகை நிகழ்வுகள், இயற்கை மற்றும் பிரபஞ்சம் பற்றிய அறிவு மற்றும் நடைமுறைகள் அல்லது பாரம்பரிய கைவினைப் பொருட்களை தயாரிப்பதற்கான அறிவு மற்றும் திறன்களை உள்ளடக்கியது" ஆகும்.




## அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்குப் பெயரிடுதல்




- அந்தமான் & நிக்கோபார் ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள மக்கள் எவரும் வசிக்காத 21 தீவுகளுக்கு அரசாங்கம் பெயரிட்டுள்ளது.
- நாட்டின் மிக உயரியப் போர் முறை வீர விருதான பரம் வீர் சக்ராவைப் பெற்ற வீரர்களின் நினைவாக அந்தத் தீவுகளுக்குப் பெயரிடப்பட்டுள்ளது.
- மொத்தம் 21 தீவுகளில், 16 தீவுகள் வடக்கு மற்றும் மத்திய அந்தமான் மாவட்டத்திலும், ஐந்து தீவுகள் தெற்கு அந்தமான் பகுதியிலும் உள்ளன.
- வடக்கு மற்றும் மத்திய அந்தமானில் உள்ள 'INAN370' என்ற எண் கொண்ட முதல் மக்கள் வசிக்காத தீவிற்கு மேஜர் சோம்நாத் சர்மா அவர்களின் நினைவாகப் பெயர் சூட்டப்பட்டது.
- இனி 'INAN370' தீவானது 'சோம்நாத் த்வீப்' என்று அழைக்கப்படும்.
- இவர் முதலாவது பரம் வீர் சக்ரா விருதினைப் பெற்ற முதல் நபர் ஆவார்.


## மிக நீளமான இரட்டை அடுக்கு மேம்பாலம்

- நாக்பூர் நகர மெட்ரோ நிர்வாகமானது 3,140 மீட்டர் நீளமான இரட்டை அடுக்கு மேம்பாலத்தினை (மெட்ரோ) கட்டமைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளது.
- வார்தா சாலையில் 3.14 கிமீ நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த இரட்டை அடுக்கு மேம்பாலத்தின் வழியில் சத்ரபதி நகர், ஜெய் பிரகாஷ் நகர் மற்றும் உஜ்வல் நகர் ஆகிய மூன்று மெட்ரோ நிலையங்கள் அமைந்துள்ளன.
- இந்தத் திட்டமானது ஏற்கனவே ஆசிய சாதனைப் புத்தகம் மற்றும் இந்தியா சாதனைப் புத்தகம் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளது.



## மாண்டஸ் புயல்


- சமீபத்தில் தென்மேற்கு வங்கக் கடலில் மாண்டஸ் எனும் புயல் உருவானது.
- இந்தப் புயலிற்கு ஐக்கிய அரபு அமீரகம் பெயர் வழங்கியது.
- அரபு மொழியில், இந்தச் சொல்லிற்கு 'புதையல் பெட்டி' என்று பொருள் ஆகும் என்பதோடு, இது 'மேன்-டஸ்' என்று உச்சரிக்கப்படுகிறது.
- இப்புயலானது டிசம்பர் 09 ஆம் தேதியன்று மாமல்லபுரம் அருகே கரையைக் கடந்தது.
- கடந்த 121 ஆண்டுகளில் (1891-2021) சென்னைக்கும் புதுச்சேரிக்கும் இடையே 12 புயல்கள் கரையைக் கடந்துள்ளன.
- மாண்டஸ் இப்பகுதியில் கரையைக் கடக்கும் 13வது புயலாகும்.



## ஆக்ஸ்போர்டு அகராதியின் 2022 ஆம் ஆண்டின் சிறந்த வார்த்தை

- "Goblin mode" என்பது ஆக்ஸ்போர்டு அகராதியின் 2022 ஆம் ஆண்டின் சிறந்தச் சொல்லாக பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- பொது வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டின் முதல் ஆக்ஸ்போர்டு சொல் இதுவாகும்.
- இந்தச் சொல்லானது, "பொதுவாக சமூக விதிமுறைகள் அல்லது எதிர்பார்ப்புகளை நிராகரிக்கும் விதத்தில், சுயம் மீது ஈடுபாடுள்ள, சோம்பேறி, தூய்மையற்ற அல்லது பேராசை கொண்ட நடத்தை வகை" என்பதாகும்.
- "Metaverse" என்ற சொல் இரண்டாவது தேர்வாக அறிவிக்கப்பட்ட நிலையில், அதைத் தொடர்ந்து "#IStandWith" என்ற சொல் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## கூகுள் நிறுவனத்தின் "2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தேடல்கள்" அறிக்கை




- கூகுளின் பிரபலத் தேடல்களின் வருடாந்திரப் பட்டியல், 2022 ஆம் ஆண்டிற்கு வெளியிடப் பட்டுள்ளது.
- வருடாந்தரத் தேடுதல் பட்டியலானது ஓர் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் பிரபலமான தேடல்களைப் பட்டியலிடுகிறது.
- இந்தப் பட்டியலில் செய்திகள், பிரபலங்கள், எப்படிச் செய்ய வேண்டும், சமையல் குறிப்புகள், 'எனக்கு அருகில் உள்ள இடங்கள்' ஆகிய தேடல்கள், 'இது என்ன' ஆகியத் தேடல்கள் மற்றும் பல அதிகம் இடம் பெற்றுள்ளன.
- இந்திய நாட்டின் கிரிக்கெட் லீக் போட்டியான IPL பிரபலத் தேடல்களில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து CoWIN மற்றும் FIFA உலகக் கோப்பை ஆகியவை இடம் பெற்று உள்ளன.

## பன்சிலால்பேட்டை படிக்கிணறு

- தெலுங்கானாவின் செகந்திராபாத்தில் உள்ள பன்சிலால்பேட்டை படிக்கிணறு மற்றும் அதன் வளாக மறு சீரமைப்புத் திட்டமானது, துபாயில் நடைபெற்ற விழா ஒன்றில் மதிப்பு மிக்க மாபெரும் 5 கட்டுமானப் பணிகள் என்ற விருதைப் பெற்றது.
- பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த படிக்கிணறு, கடந்த 40 ஆண்டுகளாக ஒரு குப்பைத் தொட்டியாக மாறியது.

- கடந்த ஆண்டில், அதன் அசல் வடிவத்திற்குக் கொண்டு வருவதற்கான மீட்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.



## IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் இமயமலை மருத்துவத் தாவரங்கள்

- இமயமலையில் காணப்படும் மூன்று மருத்துவத் தாவர இனங்கள் ஆனது, சமீபத்திய மதிப்பீட்டைத் தொடர்ந்து IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- மீசோட்ரோபிஸ் பெல்லிடா 'மிக அருகி வரும் இனம்' என்றும், ஃபிரிடிலோரியா சிர்ஹோசா 'பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள இனம்' என்றும், டேக்ட்டிலோர்ஹிசா ஹட்டாகிரியா 'அருகி வரும் இனம்' என்றும் மதிப்பிடப்பட்டு உள்ளன.
- மீசோட்ரோபிஸ் பெல்லிடா இனமானது, பொதுவாக பட்வா என்று அழைக்கப் படுகிறது.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் மட்டுமே காணப்படுகிற இது ஒரு குறிப்பிட்டப் பகுதியில் மட்டுமே பரவிக் காணப்படும் நிலையான ஒரு புதர் வகைத் தாவரமாகும்.
- ஃபிரிடிலோரியா சிர்ஹோசா (இமாலய ஃபிரிடிலோரி) என்பது ஒரு நிரந்தரமாக பூக்கின்ற ஒரு வித்திலை மூலிகைத் தாவரமாகும்.
- இந்த மதிப்பீட்டுக் காலத்தில் (22 முதல் 26 ஆண்டுகள்) அவற்றின் எண்ணிக்கையில் குறைந்தது 30% குறைந்துள்ளன.
- IUCN அமைப்பின் தரவுகளின்படி, இந்தியாவில் பகுப்பாய்வு செய்யப்பட்ட 239 புதிய இனங்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இதில் 29 இனங்கள் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களாகும்.




## அங்கோர் வாட் கோவிலின் மறுசீரமைப்புப் பணி

- கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட் கோவில் வளாகமானது இந்திய அரசினால் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.
- அங்கோர் வாட் கோவில் என்பது கம்போடியாவில் உள்ள ஒரு கோவில் வளாகம் மற்றும் உலகின் மிகப்பெரிய மதம் சார்ந்த நினைவுச் சின்னங்களில் ஒன்றாகும்.
- இது முதலில் கெமர் பேரரசினால் விஷ்ணு கடவுளுக்காக உருவாக்கப்பட்ட ஒரு இந்துக் கோவிலாக கட்டமைக்கப் பட்டது.
- 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் படிப்படியாக இது புத்தக் கோவிலாக மாற்றப்பட்டது.
- இது 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் யசோதரபுராவில் கெமர் மன்னர் இரண்டாம் சூர்ய வர்மனால் கட்டமைக்கப்பட்டது.



## புதிய புவிசார் குறியீடுகள்



- அசாம் மாநிலத்தின் கமோச்சா, தெலுங்கானாவின் தந்தூர் துவரை, லடாக்கின் ராக்ட்சே கார்போ வாதுமைப் பழம் மற்றும் மகாராஷ்டிராவின் அலிபாக் வெள்ளை வெங்காயம் உட்பட ஒன்பது புதியப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப் பட்டு உள்ளது.
- கேரளாவின் வேளாண் பொருட்களுக்கு ஐந்து புவிசார் குறியீடுகள் வழங்கப் பட்டு உள்ளன.
- இத்துடன் இந்தியாவில் உள்ள புவிசார் குறியீடுகள் பெற்றப் பொருட்களின் எண்ணிக்கை 432 ஆக உயர்ந்துள்ளது.
- புவிசார் குறியீடுகள் பெற்ற பொருட்களை அதிகளவில் கொண்டுள்ள முதல் ஐந்து மாநிலங்கள் கர்நாடகா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் கேரளா ஆகியனவாகும்.
- இவற்றில் 401 இந்திய நாட்டினைப் பூர்வீகமாகக் கொண்டத் தயாரிப்புகளாக உள்ள நிலையில், அதில் 31 வெளிநாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட தயாரிப்புகளாகும்.
- கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவை புவிசார் குறியீடுகளை அதிகளவில் கொண்ட மாநிலங்களாக உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து கேரளா (35), உத்தரப் பிரதேசம் (34), மற்றும் மகாராஷ்டிரா (31) ஆகியவை உள்ளன.

## இலக்கணத்தின் மிகப் பெரிய புதிர்

- கேம்பிரிட்ஜ் அறிஞர் டாக்டர் ரிஷி ராஜ்போபட் சமஸ்கிருதத்தின் ஒரு மிகப்பெரிய புதிருக்குத் தீர்வு கண்டதாக கூறுகிறார்.
- இது கி.மு 4 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அறிஞர் பாணினி என்பவரால் எழுதப்பட்ட 'அஷ்டத்யாயி' என்ற பண்டைய நூலில் காணப்படும் இலக்கணப் பிரச்சினையாகும்.
- இது பாணினியின் இலக்கணத்தை முதல் முறையாக கணினிகளில் நுழைப்பதற்கு வழி வகுக்கும்.
- 'அஷ்டாத்யாயி' என்பது சமஸ்கிருத மொழியானது எப்படி எழுதப்பட வேண்டும் மற்றும் எப்படி பேசப்பட வேண்டும் என்பதற்கான தரநிலைகளை நிர்ணயிக்கும் ஒரு மொழியியல் நூல் ஆகும்.

## அறிவியல் கட்டுரைகளின் வெளியீடு

- உலக அறிவியல் வெளியீடுகள் மற்றும் அறிவுசார் வெளியீடுகளில் 7வது இடத்தில் இருந்த இந்தியா 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- அதிக பட்ச அறிவியல் கட்டுரைகளை வெளியிடுவதில் சீனா முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து அமெரிக்கா இடம் பெற்றுள்ளது.
- ஆண்டுதோறும் வெளிவரும் ஆய்வறிக்கைகளின் எண்ணிக்கையில் உலகளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.




## ஜாய்நகரின் மோவா தயாரிப்பு (மேற்கு வங்கம்)

- மோவா என்பது புதிய பேரீச்சம்பழம்-பனை வெல்லத்துடன் சேர்த்து செய்யப்படும் ஒரு பொரி உருண்டையாகும்.
- இது டிசம்பர் தொடக்கத்தில் இருந்து பிப்ரவரி இறுதி வரை செய்யப்படுகிறது.
- அதன் உற்பத்தியானது கொல்கத்தாவின் புறநகரில் உள்ள ஜாய்நகர் என்ற குடியேற்றத்துடன் மிகவும் பொருந்தியுள்ளது.
- இது 2015 ஆம் ஆண்டில் ஜாய்நகர் மோவா புவிசார் குறியீட்டைப் பெற்றது.
- இப்போது, இந்த அங்கீகாரத்தின் நீட்டிப்பு மேலும் 10 ஆண்டுகளுக்கு வழங்கப் பட்டு உள்ளது.
- இந்த இனிப்புத் தயாரிப்பாளர்கள் மற்றும் ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் இப்போது இந்த பொருளின் பயன்படுத்தும் காலத்தை ஐந்து நாட்களில் இருந்து இரண்டரை மாதங்கள் வரை உயர்த்துவதற்காக ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.



## உலகின் சிறந்த உணவு வகைகளின் பட்டியல்

- ❖ டேஸ்ட் அட்லஸ் அமைப்பின் ஆய்வின் படி, 2022 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த உணவு வகைகளின் பட்டியலில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- ❖ உட்பொருட்கள், உணவுகள் மற்றும் பானங்களுக்காக வாடிக்கையாளர்களிடம் மேற் கொள்ளப் பட்ட ஒரு வாக்கெடுப்பின் அடிப்படையில் இந்தத் தரவரிசை வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ இத்தாலியின் உணவு வகையானது முதலிடத்தையும், அதைத் தொடர்ந்து கிரீஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | Italy | 4.72 |
| 2 | Greece | 4.68 |
| 3 | Spain | 4.59 |
| 4 | Japan | 4.59 |
| 5 | India | 4.54 |


## வேலை செய்வதற்கான சிறந்தப் பணியிடம்

- ❖ டாடா எஃகு நிறுவனமானது 2023 ஆம் ஆண்டிற்கான 'வேலை செய்வதற்கான சிறந்தப் பணியிடம்' என்று வேலை செய்வதற்கான சிறந்தப் பணியிட நிறுவனத்தினால் சான்றளிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்நிறுவனமானது தொடர்ந்து ஆறாவது ஆண்டாக இந்த அங்கீகாரத்தைப் பெற்று உள்ளது.
- ❖ உள்ளார்ந்த மற்றும் நிலையான ஒரு நிறுவனத்தினை உருவாக்குவதற்கான அதன் முன்னெடுப்புகளை இது பிரதிபலிக்கிறது.



## காசநோய் ஆராய்ச்சி நிதி வழங்கீட்டுப் போக்குகள் 2005-2021

- சிகிச்சைப் பணிக் குழு (TAG) மற்றும் காசநோய்ப் பரவலை நிறுத்துதல் கூட்டாண்மை என்ற அமைப்பு ஆகியவை இணைந்து 2005-2021 ஆம் காலகட்டத்திற்கான காசநோய் ஆராய்ச்சி நிதி வழங்கீட்டுப் போக்குகள் என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளன.
- வரலாற்றில் முதன்முறையாக, காசநோய் குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான பணிகளுக்கு வழங்கப் படும் நிதியுதவி 2021 ஆம் ஆண்டில் உலகளவில் ஒரு பில்லியன் டாலர்களை எட்டியது.
- ஆனால், காசநோய் குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான பணிகளுக்கு வழங்கப்படும் இந்த நிதியுதவியானது, 2030 ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒரு பெருந் தொற்றாக எண்ணி அதனை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டு இலக்கை அடையத் தேவையான நிதியின் ஒரு சிறு பகுதியே ஆகும்.
- ஒவ்வொரு நாளும் சுமார் 4,400 பேர், சிகிச்சை அளிக்கக்கூடிய மற்றும் குணப்படுத்தக் கூடிய, காற்றின் மூலம் பரவும் இந்த தொற்று நோயால் தொடர்ந்து இறக்கின்றனர்.
- 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் காசநோய் தொடர்பான உயர்மட்டக் குழுவின் சந்திப்பானது ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான பணிகளுக்கு ஆண்டிற்கு 2 பில்லியன் டாலர் நிதியுதவி வழங்க வேண்டும் என்ற ஒரு இலக்கை நிர்ணயித்துள்ளது.
- காசநோய்ப் பரவலை நிறுத்துதல் கூட்டாண்மையின் ‘காசநோய்ப் பரவலை நிறுத்தச் செய்வதற்கான உலகளாவிய திட்டம் (2023–2030) ஆனது, காசநோய் குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான பணிகளுக்கான நிதித் தேவை ஆண்டிற்கு 5 பில்லியன் டாலராக உயர்ந்திருப்பதாக மதிப்பிடுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★